# தொல்காப்பியம்

## உரைவளம்

# சொல்லதிகாரம்

# பெயரியல்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

பதிப்பாசிரியர்:

ஆ. சிவலிங்கனார்

# தொல்காப்பியம்-சொல்லதிகாரம்
## (உரைவளம்)
## பெயரியல்

பதிப்பாசிரியர் :
ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
டி.டி.டி.ஐ., தரமணி, சென்னை-600 113.

தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டம் வெளியீடு 16

## Bibliographical Data


| | | |
|---|---|---|
| Title of the book | : | Tolkāppiyam-Peyarial |
| Editor | : | A. SIVALINGANAR<br>International Institute of Tami<br>Studies T.T.T.I. Tharamani,<br>Madras-600 113. |
| Publisher&Copyright | : | International Institute of Tamil<br>Studies T.T.T.I. Tharamani,<br>Madras-600 113. |
| Publication Number | : | 94 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | July 1984 |
| Paper used | : | 15·2 kg. D/Demy Royalaseema |
| Size of the book | : | 21 × 14 cms |
| Printing type used | : | 10 point |
| Number of pages | : | xv + 204 |
| Number of Copies | : | 2200 |
| Price | : | Rs. 12/- (Rupees Twelve only) |
| Printers | : | Sri Gomathy Achagam,<br>7, Chinnappa Rowther Street.<br>Triplicane, Madras-5. |
| Binding | : | Card board |
| Artist | : | Eswari |
| Subject | : | Grammar |
| Summary | : | Commentaries on<br>Tolkāppiyam. Peyariyal |

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 'தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத்திட்ட'த்தின் மூலம்இதுவரை பதினைந்து உரைவள நூல்களை வெளியிட்டிருக்கிறது. பெயரியல் உரை வளம் பதினாறாவது நூலாக வெளியிடுகின்றது.

முன்னைய உரைவள நூல்களிற் போலவே இதனகத்தும் இளம்பூரணர் முதலிய உரையாளர் உரைகளும், இக்கால அறிஞர் பெருமக்களின் உரைகள் கருத்துரைகளும், பதிப் பாசிரியர்ஆய்வுரைகளும் அடங்கியுள்ளன. டாக்டர் சி. இலக்குவ னாரின் ஆங்கில மொழி பெயர்ப்பும் பிற்கால இலக்கண நூல் களின் ஒப்புமைச் சூத்திரங்களும் கொண்டுள்ள இவ்வுரைவள நூலையும் தமிழுலகம் ஏற்றுப் போற்றும் என்னும் நம்பிக்கை யுடையேன்.

பதிப்பாசிரியர் ஆ. சிவலிங்கனாரையும்,அவர்க்கு உதவியவர் களையும் பாராட்டுகிறேன்.

எங்களை ஊக்கப்படுத்திச் செயல்பட வைக்கும் நிறுவனத் தலைவரும் தமிழகக் கல்வியமைச்சரும் ஆம் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கட்கு என்றென்றும் நன்றியுடையேன்.

அச்சிட்டுதவிய கோமதி அச்சக உரிமையாளர், திரு. சரவண குமார் அவர்கட்கும் நன்றி.

சென்னை
1-8-1984

ச. வே. சுப்பிரமணியன்

# பதிப்புரை

தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தின் பதினாறாம் நூலாகப் பெயரியல் உரைவளத்தை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிடுகின்றது.

இதனகத்து, இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், கல்லாடனார் ஆகியோர் உரைகளும்; வேண்டிய அளவில் வெள்ளைவாரணனார், ஆதித்தர் உரைகளும்; பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் குறிப்புரைகளும்: தற்கால அறிஞர்களின் கருத்துரைகளும்; பதிப்பாசிரியரின் ஆய்வுரைகளும் அடங்கியுள்ளன.

சூத்திரங்களுக்கு டாக்டர் சி. இலக்குவனாரின் ஆங்கில மொழி பெயர்ப்பும், பிற்கால இலக்கண நூல்களின் ஒப்புமைச் சூத்திரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத் துறைப் படிக்குநர் (Reader) டாக்டர் வை. இரத்தினசபாபதி அவர்கள் கலந்துரையாடியும், சென்னைப் புலவர் க. வா. சச்சிதானந்தம் அவர்கள் தேவையான நூல்கள் தந்தும் உதவி புரிந்தனர். அவர் தமக்கு நன்றி.

தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தில் துணை ஆய்வாளராகப் பணி புரியும் டாக்டர் சீதாலட்சுமியும் உதவியமைக்கு நன்றி.

உரைவள வெளியீட்டுத் திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்தி வரும் எங்கள் நிறுவன இயக்குநர், டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கட்கும், அவர்களுக்கு ஊக்கமும் வேண்டிய ஆக்கமும் அளித்து வருகிற நிறுவனத் தலைவரும், தமிழகக் கல்வியமைச்சரும் ஆம் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கட்கும் நன்றியுடையேன்.

சிறப்புற அச்சிட்ட ஸ்ரீகோமதி அச்சக உரிமையாளர் திரு. சரவணகுமார் அவர்கட்கும் நன்றியுடையேன்.

ஆ. சி.

*1-8-1984*

# பொருளடக்கம்

(எண் பக்க எண்) பக்கம்

| | |
|---|---|
| முன்னுரை | III |
| பதிப்புரை | IV |
| பொருளடக்கம் | V |
| System of Transliteration | VI |
| சுருக்க விளக்கம் | VII |
| பெயரியல்-பொருட்சுருக்கம் | VIII |
| பெயரியல்-இயல்விளக்கம் | 1 - 2 |
| சொல்லின் பொதுவிலக்கணம் | 3 - 9 |
| சொல் தன்னையும் பொருளையும் உணர்த்துதல் | 9 - 16 |
| சொல்-வெளிப்படை குறிப்பில் பொருள் உணர்த்துதல் | 16 - 24 |
| சொற்களின் வகை | 24 - 30 |
| பெயர்ச் சொற்கள் | 30 - 43 |
| உயர்திணைப் பெயர்கள் | 43 - 67 |
| உயர்திணைப் பெயர்க்குப் புறனடை | 67 - 72 |
| அஃறிணைப் பெயர்கள் | 72 - 88 |
| விரவுப் பெயர் | 88 - 105 |
| விரவுப் பெயர்க்குப் பெயரும் முறையும் தொகையும் | 106 - 112 |
| விரவுப் பெயர்ப் பாகுபாடு | 112 - 115 |
| இயற்பெயர் நான்கு | 115 - 117 |
| சினைப் பெயர் நான்கு | 118 - 119 |
| சினைமுதற் பெயர் நான்கு | 120 - 121 |
| முறைப் பெயர் இரண்டு | 122 - 124 |
| பெண்மை சுட்டிய பெயர் | 124 - 128 |
| ஆண்மை சுட்டிய பெயர் | 128 - 132 |
| பெண்மை சுட்டிய பெயர் | 132 - 145 |
| ஒருமை சுட்டிய பெயர் | 145 - 148 |
| தாம் | 148 - 149 |
| தான் | 150 - 153 |
| எல்லாம் | 153 - 160 |
| நீயிர், நீ | 160 - 168 |
| ஒருவர் | 168 - 177 |
| பெண்மகன் | 177 - 179 |
| ஆ - ஓ ஆதல் | 179 - 185 |
| செய்யுளுள் விரவுப் பெயர் | 184 - 193 |
| பயன்படுத்தப் பெற்ற நூல்கள் | 195 |
| சொல், தொடர் அகராதி | 196 - 203 |
| சூத்திர முதற்குறிப்பகராதி | 204 |

# System of Transliteration

## உயிரெழுத்துகள்—Vowels

அ—a
ஆ—ā
இ—i
ஈ—ī
உ—u
ஊ—ū
எ—e
ஏ—ē
ஐ—ai
ஒ—o
ஓ—ō
ஔ—au

## மெய்யெழுத்துகள்—Consonants

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| க்—k | ங்—ṅ | ய்—y |
| ச்—s | ஞ்—ñ | ர்—r |
| ட்—t | ண்—ṇ | ல்—l |
| த்—th | ந்—n | வ்—v |
| ப்—p | ம்—m | ழ்—ḻ |
| ற்—ṛ | ன்—ṉ | ள்—ḷ |

# சுருக்க விளக்கம்

அகம்—அகநானூறு
ஆதி—ஆதித்தர்
ஆ. மொ—ஆங்கில மொழி பெயர்ப்பு
இ.கொ—இலக்கணக் கொத்து
இடை—இடையியல்
இல—இலக்குவனார்
இல. வி—இலக்கண விளக்கம்
இ-ள்—இதன் பொருள்
இளம்—இளம்பூரணர்
இறை. கள—இறையனார் களவியல்
உ-ம்—உதாரணம்
உரி—உரியியல்
எச்ச—எச்சவியல்
எழு, எழுத்—எழுத்ததிகாரம்
எ-று—என்றவாறு
ஐங்—ஐங்குறுநூறு
கலி—கலித்தொகை
களவழி—களவழி நாற்பது
கிளவி—கிளவியாக்கம்
சிவ—சிவலிங்கனார்
சீவக—சீவகசிந்தாமணி
சுப்—சுப்பிரமணிய சாஸ்திரியார்
சூ—சூத்திரம்
செய்—செய்யுளியல்
சொல்—சொல்லதிகாரம்
திருமுருகு—திருமுருகாற்றுப்படை
தொல்—தொல்காப்பியம்
தொன்—தொன்னூல் விளக்கம்.

நச்—நச்சினார்க்கினியர்

நற்—நற்றிணை

நன்—நன்னூல்

நாலடி—நாலடியார்

நேமி—நேமிநாதம்

பி.இ.நூ.—பிற்கால இலக்கண நூல்கள்

பி.கு.—பிறகுறிப்பு

புண—புணரியல்

புறம்—புறநானூறு

பெய—பெயரியல்

பொருள்—பொருளதிகாரம்

பொருளி—பொருளியல்

முத்து—முத்து வீரியம்

விளி—விளிமரபு

வினை—வினையியல்

வீர—வீரசோழியம்

வெள்—வெள்ளை வாரணனார்

வேற்—வேற்றுமையியல்

வேற். ம—வேற்றுமை மயங்கியல்

உதாரணம் : (i) பொன்னன்—உயர்திணை ஆண்பால்
பொன்னி—உயர்திணைப் பெண்பால்
சான்றோர்—உயர்திணைப் பலர்பால்
கரியது—அஃறிணை ஒன்றன்பால்
கரியவை—அஃறிணைப் பலவின்பால்.

சாத்தன்—இப்பெயர் ஓர் ஆண்மகனுக்குவைக்கப்படும் பெயர். இது ஓர் விலங்குக்கும் வைக்கப்படும். அதனால் இன்ன திணை எனக்கூற இயலாது. எனவே இது பொதுப் பெயர் அல்லது விரவுப்பெயர் எனப்படும். இதுவே இயற் பெயர் எனவும் வழங்கப்படும். (6)

(ii) மா என்பது குதிரை, மாமரம், இலக்குமி எனப்பல பொருள் தரும். இதனை மா ஓடியது என்றால் குதிரையாக வும், மா ஒடிந்தது ஏன்றால் மரமாகவும், மாவந்தாள் என்றால் இலக்குமியாகவும் கொள்கிறோம். இது இருதிணையில் ஒரு திணையாகப் பிரிந்து ஒருபாலீல் சேர்வதாம். 'பெண் மகன்' என்னும் சொல் மகன் என்பதிலுள்ள னகர ஒற்றை நோக்க உயர்திணை ஆண்பாற் சொல் எனக் காணப்படுகிறது. ஆனால் பெண் மகளைக் குறிப்பது அது. இப்படி ஒரு திணையிலேயே ஒரு பாலிற் பிரிந்து ஒரு பாலிற் சேரும் சொற்களும் உள (7)

## உயர்திணைப் பெயர்கள்

உயர்திணைப் பெயர்களாவன: அவன் இவன் உவன் (ஆண்பால்), அவள் இவள் உவள் (பெண்பால்), அவர் இவர் உவர் (பலர்பால்) ,யான், யாம், நாம்(தன்மைப் பெயர்),யாவன் யாவள் யாவர் (வினாப் பெயர்) (8)

ஆண் மகன், நம்பி, மகன்; பெண் மகள், பெண்டாட்டி, நங்கை, மகள்; மாந்தர், மக்கள்; ஆடூஉ, மகடூஉ, அவ்வாளன்' இவ்வாளன், உவ்வாளன்; அம்மாட்டான், இம்மாட்டான், உம்மாட்டான்: அவ்வாட்டி, இவ்வாட்டி, உவ்வாட்டி, பொன்னன்னான், பொன்னன்னாள் (9)

எல்லாரும், எல்லீரும், பெண்மகன் (பெண்) (10)

சோழியன்—நிலப்பெயர், சேரமான்—குடிப்பெயர், அவை யத்தார் (குழுவின் பெயர்), வருலார்—வினையாலணையும் பெயர், வெற்பன்—உடைமைப் பெயர், கரியன்—பண்புப் பெயர், தந்தையார்—முறைப்பெயர் (பலர்பால்) பெருங்காலர்—சினை நிலைப் பெயர், அரசர்—திணை (ஒழுக்கம்) நிலைப்பெயர், பட்டி புத்திரர்—விளையாடிடத்துக் கொள்ளும் பெயர்,ஒருவர்— எண்ணுப்பெயர் (11)

எல்லாம்—தன்மை முன்னிலை படர்க்கை.

இயற்பெயர், சினைப்பெயர், சினை முதற்பெயர்— படர்க்கை.

முறைப்பெயர்—படர்க்கை

இவை இருதிணைப் பொதுப் பெயர்கள் (இயற் பெயர் என்பது முதற் பெயரெனவும வழங்கும்) (20)

இயற் பெயர், சினைப் பெயர், சினை முதற் பெயர் என்னும் மூன்றும் பெண்மை, ஆண்மை, பன்மை, ஒருமை என்னும் நான்கு வகைப்படும். (21)

பெண்மை சுட்டி வரும் பெயர்கள் அஃறிணை ஒன்றன் பாலுக்கும் உயர்திணைப் பெண்பாலுக்கும் உரியதாம்.

உ—ம்: பெண்மையியற்பெயர்—சாத்தி வந்தது, வந்தாள்.
பெண்மைச்சினைப் பெயர்—முடத்தி வந்தது, வந்தாள்.
பெண்மைச்சினை முதற்பெயர்—முடக்கொற்றி வந்தது, வந்தாள்.

ஆண்மை சுட்டி வரும் பெயர்கள் அஃறிணை ஒன்றற்கும் உயர்திண்ணை ஒருவற்கும் (ஆண்) உரியதாம்.

உ-ம்: ஆண்மையியற் பெயர்—சாத்தன் வந்தது, வந்தான்
ஆண்மைச்சினைப் பெயர்—முடவன் வந்தது, வந்தான்.
ஆண்மைச்சினை முதற்பெயர்—முடக்கொற்றன் வந்தது, வந்தான்.

பன்மை சுட்டிய பெயர்—பால்பகா அஃறிணைப் பெயர். அது அஃறிணை ஒன்றன் பால், அஃறிணைப் பலவின்பால், உயர் திணை ஆண்பால், உயர்திணைப் பெண்பால் நான்கற்கும் உரிய தாகும்.

உ—ம்: பன்மையியற்பெயர்—யானை வந்தது, யானை வந்தன,
யானை வந்தான், யானை வந்தாள்.
பன்மைச்சினைப் பெயர்—குருடு வந்தது, வந்தன,
வந்தான், வந்தாள்.
பன்மைச்சினை முதற் பெயர்—பெருங்கால்யானை வந்தது,
வந்தன, வந்தான், வந்தாள்.

ஒருமை சுட்டிய பெயர்கள் அஃறிணை ஒன்றனப்பால் உயர்திணை ஆண்பால் உயர்திணைப் பெண்பால் ஆகிய மூன்றனைக்குறிக்கும்.

உ—ம் : ஒருமையியற் பெயர்—கோதை வந்தது, வந்தான், வந்தாள்.
ஒருமைச்சினைப்பெயர்—குருடு வந்தது, வந்தான், வந்தாள்.
ஒருமைச் சினைமுதற்பெயர்—கொடும்புற மருதி வந்தது, வந்தான், வந்தாள்.

முறைப் பெயர் இரண்டு வகை, ஆண் பெண் என.

உ—ம் : தந்தை வந்தது (அஃறிணை) வந்தான் (உயர்திணை)
தாய் வந்தது, (அஃறிணை) வந்தாள் (உயர்திணை) (22—29)

தாம் என்பது தாம் வந்தார் என உயர்திணைப் பலர் பாலுக்கும் தாம் வந்தன என அஃறிணைப் பலவின் பாலுக்கும் வரும். (30)

தான் என்பது உயர்திணைஆண்பாலுக்கும்பெண்பாலுக்கும், அஃறிணை ஒன்றன் பாலுக்கும் வரும். உ-ம் : தான் வந்தான், தான் வந்தாள், தான் வந்தது. (31)

எல்லாம் என்பது எல்லாம் வந்தேம், எல்லாம் வந்தீர், எல்லாம் வந்தார் என மூவிடத்துக்கும் இருதிணைக்கும் பன்மையில் வரும் (32). இது உயர்திணையில் வரும் போது உளப்பாட்டுத்தன்மைப் பன்மையிலேயே வரும், முன்னிலை படர்க்கைப் பன்மைகளுக்குவராது·(வரின் அதுஇடவழுவமைதியாகும்.) (33)

நீயிர், நீ என்பன திணையும் பாலும் அறியப்படா; பொதுவாகவே வரும். (34) அவற்றுள் நீ ஒருமைக்கும் (35) நீயிர் பன்மைக்கும் (36) வரும்.

ஒருவர் என்பது உயர்திணை ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் உரிய பொதுப் பெயர். (37) அச்சொல் பொருளால் ஒருமையை உணர்த்தினாலும் வினையுடன் தொடரும் போது பலர்பால் வினையுடன் தான் தொடரும். உ—ம் : ஒருவர் வந்தார். ஒருவர் அவர் எனப் பெயருடனும் அவ்வாறேயாம். (38)

நீயிர், நீ, ஒருவர் என்னும் பெயர்களைத் திணைபால் பிரித்தறிய வேண்டின் சொல்லுவான் கருத்தொடு இடம் காலம் முதலிய சூழல்களை நோக்கிக் குறிப்பினாலேயே அறிதல் வேண்டும். (39)

## பெண் மகன்

இறுதியெழுத்தால் ஆண்பாலையுணர்த்திப் பொருளால் அதனினின்றும் திரிந்து பெண்பாலையுணர்த்தும் 'பெண் மகன்' என்னும் சொல் வினை கொண்டு முடியுங்கால் பெண்பாலுக் குரிய விகுதி வினையினாலேயே முடியும். உ—ம்: பெண் மகன் வந்தாள் (40)

## புறநடை

ஆன் ஆள் ஆர் ஆய் என்பனவற்றை யிறுதியாகக் கொண்ட பெயர்கள் செய்யுளில் ஆளப்படும்போது அவற்றிலுள்ள ஆ என் னும் எழுத்து ஓ என்னும் எழுத்தாக மாறுவதும் உண்டு.

உ—ம்: வில்லான்—வில்லோன்
தொடியாள்—தொடியோள்
நல்லார்—நல்லோர்
} குறுந்தொகை. 7

செப்பாதாய்—செப்பாதோய்—நற்றிணை 70 (41)

கடுவன், மூலன் என்னும் பெயர்கள் மக்களுள் ஆண்பால் களுக்கும் விலங்குகளுள் குரங்குக்கும் ஆளப்படும் பொதுப் பெயர்கள். கானை, மீளி என்பன ஆடவர்க்கும் விலங்கு (மாடு)க் கும் ஆளப்படுவன. இப்பொதுப் பெயர்கள் அகப்பொருள் தழுவிய செய்யுளில் ஆளப்படும் போது கடுவன் மூலன் போலும் சொற்கள் அஃறிணைக்கு மட்டும் ஆளப்படும்; காளை, மீளி போல்வன உயர்திணைக்கு மட்டும் ஆளப்படும். ஏன் எனின் அகப்பொருள் இலக்கணத்தில் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்னும் ஐ வகைநிலப்பகுப்பும், அவற்றிற்குரிய—அவ்வந் நிலங்களில் தோன்றிய கருப்பொருள்களின் வரையறையும் கூறப் பட்டன. கருப்பொருள்களுள் விலங்கும் ஒன்று. குரங்கு குறிஞ்சி நிலக்கருப்பொருள்கள். அதனால் குரங்கை யுணர்த்தும் கடுவன் மூலன் என்பன குறிஞ்சிநிலக்கருப் பொருட் பெயராகவே ஆளப் படும். அதனால் அவ்வை செய்யுளில் உயர்திணையைச் சுட்டாமல் அஃறிணையையே சுட்டும். (42)

அவ்வாறே ஐவகை நிலங்களுக்கும் மக்கட் பெயரை வரை யறுத்தது இலக்கணம். காளை விடலை என்பன பாலை நிலத்து

மக்கட் பெயராக வரையறுக்கப்பட்டன. அதனால் அவை அகப் பொருட் செய்யுட்களில் உயர்திணைக்கே ஆளப்படும். (43)

எனவே பொதுப் பெயர்களுட் சில அகப்பொருட் செய்யுட் களில் ஆளப்படும்போது, நிலக்கருப் பொருளாகவோ, நிலமக்க ளாகவோ வரையறைப்படா நிலையில் ஆளப்படின் பொதுப் பெயராக இருதிணைக்கும் ஆளப்படுதலும், கருப்பொருளாகப் கருதப்படும்போது அஃறிணைக்கும், நிலமக்கள் பெயராகக் கருதப்படும்போது உயர்திணைக்கும் ஆளப்படுதலும் உண்டு என்பது அறியப்படும்.

## பெண் மகன்

இறுதியெழுத்தால் ஆண்பாலையுணர்த்திப் பொருளால் அதனினின்றும் திரிந்து பெண்பாலையுணர்த்தும் 'பெண் மகன்' என்னும் சொல் வினை கொண்டு முடியுங்கால் பெண்பாலுக் குரிய விகுதி வினையினாலேயே முடியும். உ—ம்: பெண் மகன் வந்தாள் (40)

## புறநடை

ஆன் ஆள் ஆர் ஆய் என்பனவற்றை யிறுதியாகக் கொண்ட பெயர்கள் செய்யுளில் ஆளப்படும்போது அவற்றிலுள்ள ஆ என் னும் எழுத்து ஓ என்னும் எழுத்தாக மாறுவதும் உண்டு.

உ—ம்: வில்லான்—வில்லோன்
தொடியாள்—தொடியோள் } குறுந்தொகை. 7
நல்லார்—நல்லோர்

செப்பாதாய்—செப்பாதோய்—நற்றிணை 70 (41)

கடுவன், மூலன் என்னும் பெயர்கள் மக்களுள் ஆண்பால் களுக்கும் விலங்குகளுள் குரங்குக்கும் ஆளப்படும் பொதுப் பெயர்கள். காளை, மீளி என்பன ஆடவர்க்கும் விலங்கு (மாடு)க் கும் ஆளப்படுவன. இப்பொதுப் பெயர்கள் அகப்பொருள் தழுவிய செய்யுளில் ஆளப்படும் போது கடுவன் மூலன் போலும் சொற்கள் அஃறிணைக்கு மட்டும் ஆளப்படும்; காளை, மீளி போல்வன உயர்திணைக்கு மட்டும் ஆளப்படும். ஏன் எனின் அகப்பொருள் இலக்கணத்தில் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்னும் ஐ வகைநிலப்பகுப்பும், அவற்றிற்குரிய—அவ்வந் நிலங்களில் தோன்றிய கருப்பொருள்களின் வரையறையும் கூறப் பட்டன. கருப்பொருள்களுள் விலங்கும் ஒன்று. குரங்கு குறிஞ்சி நிலக்கருப்பொருள்கள். அதனால் குரங்கை யுணர்த்தும் கடுவன் மூலன் என்பன குறிஞ்சிநிலக்கருப் பொருட் பெயராகவே ஆளப் படும். அதனால் அவ்வை செய்யுளில் உயர்திணையைச் சுட்டாமல் அஃறிணையையே சுட்டும். (42)

அவ்வாறே ஐவகை நிலங்களுக்கும் மக்கட் பெயரை வரை யறுத்தது இலக்கணம். காளை விடலை என்பன பாலை நிலத்து

மக்கட் பெயராக வரையறுக்கப்பட்டன. அதனால் அவை அகப் பொருட் செய்யுட்களில் உயர்திணைக்கே ஆளப்படும். (43)

எனவே பொதுப் பெயர்களுட் சில அகப்பொருட் செய்யுட் களில் ஆளப்படும்போது, நிலக்கருப் பொருளாகவோ, நிலமக்க ளாகவோ வரையறைப்படா நிலையில் ஆளப்படின் பொதுப் பெயராக இருதிணைக்கும் ஆளப்படுதலும், கருப்பொருளாகப் கருதப்படும்போது அஃறிணைக்கும், நிலமக்கள் பெயராகக் கருதப்படும்போது உயர்திணைக்கும் ஆளப்படுதலும் உண்டு என்பது அறியப்படும்.

# தொல்காப்பியம்—சொல்லதிகாரம்

## (உரைவளம்)

## பெயரியல்

### இளம்பூரணர்

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், பெயர்ச்சொல் உணர்த்துகின்றாராகலின் இது பெயரியல் என்னும் பெயர்த்தாயிற்று.

### சேனாவரையர்

நான்கு சொல்லும் பொதுவகையான் உணர்த்திப் பொது விலக்கணமாதல் ஒப்புமையானும், வேற்றுமை பெயரோடு இயைபு உடைமையானும் பெயரிலக்கணத்திற்கும் பொது விலக்கணத்திற்கும் இடை வேற்றுமையிலக்கணம் உணர்த்தி, இனிச் சிறப்பு வகையான் நான்கு சொல்லும் உணர்த்துவான் எடுத்துக்கொண்டு, இவ்வோத்தான் அவற்றின் முதற்கண்ண தாகிய பெயரிலக்கணம் உணர்த்துகின்றார்; அதனான் இது பெயரியல் என்னும் பெயர்த்தாயிற்று.

### தெய்வச்சிலையார்

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், பெயரியல் என்னும் பெயர்த்து. இது பெயரியல் உணர்த்தினமையாற் பெற்ற பெயர்.

கிளவியாக்கம் முதலாக விளிமரபு ஈறாகத் தொடர் மொழி யிலக்கணங்கூறி, இனி, அத்தொடர் மொழிக்கு உறுப்பாகிய தனி மொழியிலக்கணம் கூறுகின்றார். அத்தனிமொழி நான்கினும் பெயர்ச்சொல் சிறந்ததாகலின் இவ்வோத்து முற்கூறப்பட்டது. மேலதனோடு இயைபும் இது.

## நச்சினார்க்கினியர்

இவ்வோத்து பெயர்க்கு இலக்கணம் உணர்த்தினமையாற் பெயரியல் என்னும் பெயர்த்தாயிற்று. இது முதல் ஐந்து சூத்திரமும் பொதுவிலக்கணங் கூறுதலின் வேற்றுமையிலக்கணத்தைச் சேர முன் வைத்தார். இச்சூத்திரம் நால்வகைச் சொற்கும் பொது இலக்கணம் கூறுகின்றது.

## கல்லாடனார்

இவ்வோத்து என்னை பெயர்த்தோவெனின், பெயர் இலக்கணம் உணர்த்தினமையின்பெயரியல் என்னும் பெயர்த்து. மேல் ஓத்தினோடு இதற்கு இயைபு என்னோ ஏ்னின், மேற் பெயர் இலக்கணம் உணர்த்தி அவ்விலக்கணம் உடைய அவ்வியற்பெயர் இவையென்று அவற்றது பகுதியுணர்த்திய எடுத்துக்கொண்டார் என்பது.

## வெள்ளை வாரணனார்

கிளவியாக்கம் முதல் விளிமரபு ஈறாக அல்வழி வேற்றுமையாகிய தொடர்மொழி இலக்கணம் கூறிய ஆசிரியர், இனி அத்தொடர்மொழிக்குறுப்பாகிய தனிமொழியிலக்கணம் கூறத் தொடங்கி முதற்கண் பெயர் இலக்கணம் உணர்த்துகின்றார். அதனால் இது பெயரியல் என்னும் பெயர்த்தாயிற்று.

## ஆதித்தர்

வாக்கிய அமைப்பு, வேற்றுமைகள், விளி பற்றி அறிவித்து ஈண்டுத் தனிப்பெயர் பற்றிக் கூறத் துணிந்தார்.

## ச. வே. சுப்பிரமணியன்

இவ்வியல் முதற்கொண்டுதான் தொல்காப்பியம் சொல்லிலக்கணம் கூறுவான் தொடங்குகின்றது. கிளவியாக்கம் முதல் விளிமரபு வரை நான்கு இயல்களில் தொடர் இலக்கணம் கூறிற்று. இவ்வியலில் சொல்லின் பொருண்மை, சொன்மை நிலைகளை விளக்கி, சொல்லின் நான்கு வகைகளைக் கூறிப் பின்பு பெயருக்கு இலக்கணம் கூறிப் பெயரின் வகைகளை விரிக்கின்றது. நன்னூல், இலக்கண விளக்கம்போன்றவை பெயரியலில் தான் வேற்றுமையுருபுகளையும் அதன் விளக்கங்களையும் தருகின்றன. இச்செய்தி பிற்கால இலக்கண நூல்கள் புறநிலை அடிப்படையில் இலக்கணம் கூறின என்பதை வலியுறுத்தும்.

சொல்லின் பொது இலக்கணம்

**152. எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே (1)**

## ஆங்கில மொழிபெயர்ப்பு.

## இலக்குவனார்.

All the words indicate objects.

## பிற்கால இலக்கண நூல்கள் :

**முத்துவீரியம்-பெயரியல்—1.**

எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே.

## இளம்பூரணர்.

என்பது சூத்திரம்.

*உரை : எல்லாச் சொல்லும்—பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் ஆகிய எல்லாச் சொல்லும், பொருள் குறித்தனவே—பொருள் குறியாது நில்லா, என்றவாறு.

## சேனாவரையர்.

இ-ள் : பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச் சொல்லும் உரிச்சொல்லும் ஆகிய எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே, பொருள் குறியாது நில்லா, எ-று.

'ஆயிருதிணையின் இசைக்கும்' (கிளவி. 1) என்றதனான் இது பெறப்படுதலின் இச்சூத்திரம் வேண்டாவெனின், அற்றன்று; சொல் இசைக்கும் பொருளாவன இவ்விரண்டு திணையுமே பிறிதில்லை யென்பதல்லது, சொல்லெல்லாம் பொருளுணர்த்துதல் [1]மாலையவே; உணர்த்தாதன இல்லை என்னும் யாப்புறவு அதனாற் பெறப்படாமையின், அசைநிலை முதலாயினவும் பொருள் குறித்து நிற்கும் என ஐயமறுத்தற்கு

---

* இவ்வுரை மட்டும் பதவுரையாக உள்ளது. பின்னர் வரும் இளம்பூரணர் உரைகள் யாவும் பொழிப்புரை களாகவுள்ளன.

1. மாலையவே—தன்மையனவே.

இச்சூத்திரம் வேண்டும் என்பது. [2]அசைநிலை முதலாயின பொருளுணர்த்துமாறு மேலே கூறிப்போந்தாம்.

முயற்கோடு, யாமைமயிர்க்கம்பலம் என்பன பொருளுணர்த் தாவால் எனின், அவை தொடர்மொழியாகலான் ஈண்டைக் கெய்தாவென்பது. அஃதேல், தொடர்மொழிதான் பொருள் குறியாது வருமோவெனின், வாரா. அவை மெய்ப்பொருள் குறிப்பனவும் பொய்ப்பொருள் குறிப்பனவும் என இருவகைப் படும். அவற்றுள் பொய்ப்பொருள் குறிப்பனவும் பொருளு ணர்த்துவனவேயாம். [3]அல்லாக்கால், இல்லோன் தலைவனாக வருந் தொடர்நிலைச் செய்யுள் பொருளுணர்த்தாமையின் அவை புலவராற் கொள்ளப்படா என்பது.

அஃதேல், இச்சூத்திரம் முதலாக ஐந்து சூத்திரத்தாற் கூறப்பட்டன பொதுவிலக்கணமாகலான், இவற்றை ஈண்டு வையாது கிளவியாக்கத்துள் வைக்கவெனின், இவை பொது விலக்கணமே எனினும், ஆண்டுக் கூறப்பட்டன வழூஉக் காத்தலும் வழூஉக் காத்தற்கு உபகாரம் உடையனவும் அன்றே; 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன' என ஐய மகற்றலும், சொற் பொருள் இனைத்துப் பாகுபடும் என்றலும்,

---

2. மேலே கூறிப்போந்தது: ''பொருள் குறித்து வாராமை யின் அசைநிலை சொல் ஆகாஎனின், ''ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல்'' (இடை. 26) என்றும், ''வியங்கோள் அசைச்சொல்'' (இடை 25) என்றும் ஓது தலான் அவையும் இடம் முதலாகிய பொருள் குறித்து வந்தன என்க. யாகா பிற பிறக்கு (இடை. 31) என்னுந் தொடக்கத்தனவோ எனின், அவையும் மூன்றிடத் திற்கும் உரியவாய்க் கட்டுரைச் சுவைபட வருதலின் பொருள் குறித்தனவேயாம். இக்கருத்தே பற்றியன்றே ஆசிரியர் ''எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே'' என்றோதுவாராயிற் றென்க''— (கிளவியாக்கம் 1. உரை)

3. இல்லோன்தலைவனாகவரும்தொடர்நிலைச்செய்யுள்;— திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை முதலிய கோவை நூல்கள். அவற்றில் இல்லோன் தலைவன் என்பவன் கிளவித்தலைவன். பாட்டுடைத் தலைவன் அல்லன். உள்ளோன் தலைவனாக வருவன இராமா யணம் போல்வன.

சொல் இனைத் தென்றலும்[4] என வழூஉக் காத்தலும், வழூஉக் காத்தற்கு உபகாரம் உடையனவும் அன்மையான் ஆண்டுணர்த் தாது, பொருள் வேறுபாடு பற்றிச் சிறப்பு வகையான் நான்கு சொல்லும் உணர்த்துங்கால் அவை உணர்த்தியல்லது உணர்த்த லாகாமையின் அவற்றை ஈண்டு உணர்த்தினார் என்பது.

பொருள் வேறுபாடு பற்றிச் சொல் உணர்த்துமாறு [5]முன்னர்க் காணப்படும்.

## தெய்வச்சிலையார்

இதனுள் இம் முதற் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், எல்லாச் சொற்கும் உரியதோர் பொது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : *உலகத்தாரான் வழங்கப்பட்ட எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன, என்றவாறு.

எனவே, பொருளின்றி வழங்கும் சொல் இல என்றவாறாம். என்னை? முயற்கோடு எனச் சொல் நிகழும் அன்றே, அதனாற் குறிக்கப்பட்ட பொருள் யாங்கது? எனின், அறியாதுகடாயினாய். முயல் என்பதற்குப் பொருண்மை காண்டி ; கோடு என்பதற்குப் பொருண்மை காண்டி ; இவை இரண்டு பொருளும் தனித்தனி உளவாதலின் இவை தனிமொழிக்கண் பொருள் குறித்து நின்றன ; தொடர்மொழியாயுழி, உள்ள பொருளோடு அதன் கண் இல்லாத பொருளை அடுத்தமையான் ஆண்டு இன்றா யிற்று அல்லது இல் பொருள் மேல் வழக்கன்று என்று கொள்க.

அஃதேல், எல்லாச் சொல்லும் பொருள் குறித்து வருமாயின், அசைநிலை, இசைநிறை, ஒரு சொல்லடுக்கு என்பன பொருள் குறித்திலவால் எனின்,பொருள் உணர்த்தும் என்னாது குறித்தன என்றமையான், அவையும் சார்ந்த பொருளைக் குறித்தன என்று கொள்க. அன்றியும் எடுத்தோத்துப் [6]பெரும்பான்மை பற்றி

---

4. என என்பதற்கு என்பன அல்லது என்னும் இவை எனப் பொருள் கொள்க.
5. முன்னர்—இனி வரும் சூத்திரங்களில்.
* பிறர் உரையாளர் தமிழ்ச் சொற்களைக் கருதிக் கூற இவர் உலகத்துள்ள மொழிகளைக் கருதிக் கூறியது ஒரு சிறப்பு.
6: ''உலகத்தாரான் வழங்கப்பட்ட எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன'' எனக் கூறியவர் பெரும்பான்மை பற்றி என்றது பொருந்தவில்லை,

என்றும் கொள்க. 'இவ்வூரார் எல்லாம் கல்வியுடையர்' என்ற வழிக் கல்லாதாரும் சிலர் உளராயினும் கற்றார் பலர் என்பது குறித்து நின்றாற் போலக் கொள்க.

[7]இன்னும் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன' என்பதற்குப் பொருள், 'எல்லாச் சொல்லும் எல்லாப் பொருளையும் குறித்து நிற்கும்' என்றவாறு. எனவே, இச் சொல் இப் பொருள் உணர்த்தும் என்னும் உரிமையில என்றவாறாம். என்னை உரிமை யிலவாகியவாறு எனின், உலகத்துப் பொருள் எல்லாவற்றையும் பாடை தோறும் தாம் அறிகுறியிட்டு ஆண்ட துணையல்லது இவ்வெழுத்தினான் இயன்ற சொல் இப் பொருண்மையுணர்த்தும் என எல்லாப் பாடைக்கும் ஒப்ப முடிந்ததோர் இலக்கணம் இன்மையான் என்க. எனவே பொருள் பற்றி வரும் பெயரெல்லாம் இடுகுறி என்பது பெறப்பட்டது. இவ்விடு குறியால் அடிப்பட்ட சொல்லோடு ஒட்டி மற்றொரு பொருட்கும் பெயராகி வருவது காரணக்குறியாம்.

## நச்சினார்க் கினியர்

என்பது சூத்திரம்.

இ-ள் : எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே—பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் ஆகிய எல்லாச் சொல்லும் பொருள் உணர்த்துதலைக் கருதியே நிற்கும்; பொருளுணர்த்துதலைக் கருதாது நிற்பன இல்லை, என்றவாறு.

[8]'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்றது, 'இவ்வாள் வெட்டுதலைக் கருதியே இருக்கும்' என்றாற்போலக்

---

7. இப் பகுதி சிறந்த உரையும் விளக்கமும் ஆகாது.
8. வாள்வெட்டுதலைக் கருதாது; ஆனால் வெட்டுதற்குக் கருவியாவது. வெட்டுதற்குக் கருவியாக இருக்கும் வாளை வெட்டுதலைக் கருதியிருப்பதாக—அதாவது வெட்டுதலைக் கருதும் கருத்தாவாகச் சொல்வது கருவியையே கருத்தாவாகச் சொல்லுதலாம். அது போலச் சொல் பொருளை உணர்த்தாது; பொருளை உணரக் கருவியாக அமைவது. இச் சூத்திரத்தில் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன எனக் கருத்தாவாகக் கூறப்பட்டுள்ளது; அதைக் கருவியைக் கருத்தாவாகக் கூறியதாகக் கொள்ளல் வேண்டும்.

கருவிக் கருத்தாவாய் நின்றது. [9]'ஆயிருதிணையின் இசைக்குமன் சொல்லே' (கிளவி.1) என்புழி இருதிணைப் பொருளையும் சொற்கள் உணர்த்தும் என்பதன்றித் தமிழ்ச் சொல் எல்லாம் ஒருதலையாகப் பொருளுணர்த்தும் என்னும் துணிபு விதி ஆண்டின்மையின், இச்சூத்திரங் கூறினார்.

தாஞ்சார்ந்த சொற்களின் பொருளையுணர்த்தியும் அச் சொற்களை அசைத்தும் நிற்றலின் அசைநிலையும் பொருள் குறித்தனவேயாம்.

சொற்கள் ஓசை நிறைந்து நின்றே பொருள் உணர்த்த வேண்டுதலின் இசை நிறையும் பொருள் உணர்த்திற்றேயாம்.

முயற்கோடு பொய்ப் பொருள் குறித்ததாம்; இல்லையென வருதலின்.

## கல்லாடனார்

இனி இம் முதற் சூத்திரம் என்னுதலிற்றோவெனின், நான்கு வகைப்பட்ட சொல்லிற்கும் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: தமிழ்ச்சொல் எல்லாம் ஒரு பொருள் உணர்த்து தலைக் கருதியே நடக்கும்; பொருளுணர்த்துதலைக் கருதாது நடப்பன இல்லை என்றவாறு.

உ—ம்: சாத்தன் கொற்றன் என அவ்வப் பெயர்கள் [10]அவ்வப்பொருள்களை உணர்த்தின. உண்டான், தின்றான் என அவ்வவ் வினைச்சொற்கள் அவ்வவ் வினையை உணர்த்தின. [11]அதுமன், உறுகால் எனவும்; சென்மதி, தவச் சேய்நாட்டார் எனவும் வரும் இவை அவ் இடையும் உரியும் அவ்வப்பெயர் வினைகளை யடுத்து நின்று ஒரு பொருளை யுணர்த்தின.

மற்று, இஃது 'ஆயிருதிணையின் இசைக்குமன சொல்லே' என்புழி அடங்கிற்றுப்பிற எனின், ஆண்டு எல்லாச் சொல்லும் ஒருதலையாகப் பொருளுணர்த்தும் என்னும் துணிபு விதியின்மை யின் ஈண்டுக் கூறினார் என்பது.

---

9. இப்பகுதி சேனாவரையரின் ''ஆயிருதிணையின்...... மேலே கூறிப் போந்தாம்'' என்னும் பகுதிக்குச் சுருக்க விளக்கம்.
10. மன், உறு, மதி—இடைச்சொற்கள். தவ—உரிச்சொல்.
11. அவ்வம்மக்களை—பாடம்.

மற்று அசைநிலை இடைச்சொற்கள் பொருள் உணர்த்தா வால்எனின், அவையும் ஒருவாற்றான் சிறுபான்மை பொருளு ணர்த்தும் என உணர்க. அல்லதூஉம் இது பெரும்பான்மை யெனினும் அமையும் என்பது.

முயற்கோடு என்னுந் தொடக்கத்தன பொருள் உணர்த் தாவால் எனின், இவை நன்மக்கள் வழக்கின்கண் பெரும் பான்மை திரிந்து முயற்கோடு இல்லை யெனப் பின்வருஞ் சொல்லோடு படுத்து நோக்க அவற்றது இன்மை விளக்க வந்த தாம்.

இனி இறிஞ், மிறிஞ் என்னுந் தொடக்கத்தன பொருள் விளக்காவால் எனின், அவை நன்மக்களது வழக்கில் இன்மையின் ஈண்டு ஆராயப்படாது என்பது.

## வெள்ளை வாரணனார்

இது, நால்வகைச் சொற்கும் பொதுவிலக்கணம் கூறுகின்றது.

இ—ள்: பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் ஆகிய எல்லாச் சொல்லும் பொருள் உணர்த்து தலைக் கருதியே நிற்கும்; பொருளுணர்த்தாது நில்லா என்றவாறு.

சொல் பொருள் குறித்தன என்றது, இவ்வாள் வெட்டியது என்றாற்போன்று கருவிக் கருத்தா வாய் நின்றது. 'ஆயிருதிணை யின் இசைக்குமன சொல்லே' என்புழி, 'இருதிணைப் பொருள் களையும் சொற்கள் உணர்த்தும்' என்பதன்றித் 'தமிழ்ச்சொல் எல்லாம் பொருள் உணர்த்தியே நிற்பன' என்னும் வரையறை ஆண்டுப் பெறப்படாமையின் அதனை இச் சூத்திரத்தால் ஆசிரியர் தெளிவு படுத்தினார். தாம்சார்ந்த சொற்களின் பொருளை யுணர்த்தியும் அச்சொற்களை அசைத்தும் நிற்றலின் அசைநிலையும் பொருள்குறித்தனவேயாம். சொற்கள் ஓசை நிறைந்து நின்றே பொருள் உணர்த்த வேண்டுதலின் இசைநிறை யும் பொருள் உணர்த்தியது எனவே கொள்ளப்படும். முயற்கோடு, யாமைமயிர்க்கம்பலம் என்றாற்போல்வனவும் பொய்ப்பொருளாகிய அவற்றின் இன்மையைக் குறித்து நின்றன வாதலின் அவையும் பொருளுணர்த்தினவேயாம்.

இது முதல் ஐந்து சூத்திரங்கள் நால்வகைச் சொற்கும் பொது விலக்கணம் கூறுதலின் தொடர்மொழி யிலக்கணமாகிய வேற்றுமை யிலக்கணத்தை யடுத்துத் தனிமொழியிலக்கணம் கூறும் பெயரியலின் முன்னர் வைக்கப்பெற்றன,

### ஆதித்தர்.

பெயர் வினை இடை உரி ஆகிய எல்லாச் சொற்களும் பொருள் தந்து நிற்பன.

மயில் - ஒன்றின்பெயர். ஆடினது-ஒன்றின் வினை. மேல்-ஏதோ ஒன்றின் மீது. சால-ஏதோ ஒன்றில் அதிகமாக—எனப் பொருள் தருவது ஓர்க.

இல்லை குதிரைக் கொம்பு—இல்லாமைப் பொருள் தருகின்றன. குடு குடு—விரைவையும், ஆ அ—அலறுதலையும், உம்ம்—வன்மத்தையும் குறித்துப் பொருள் தருதல் ஓர்க.

### சுப்பிரமணிய சாஸ்திரியார்.

'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே' (கிளவி. 1) என்ற சூத்திரம் சொல்லின் வகையை யுணர்த்திற்று. இச் சூத்திரம் அதன் இலக்கணத்தைக் கூறிற்று.

### பிற குறிப்புகள் :

பூவராகம் பிள்ளை.

''இல்லோன் தலைவனாக வரும் தொடர் நிலைச் செய்யுள்'':- இல்லோன் தலைவனாக உள்ளது கூறுதல், இல்லோன் தலைவனாக இல்லது கூறுதல் என இருவகைப்படும். நடந்த ஒரு வரலாற்றை அதற்குரிய தலைவர்களைக் கூறாமல் கற்பனையாகத் தலைவர்களை அமைத்துக் கொண்டு கூறுவது முதல் வகை. வரலாறும் கற்பனையாக அதற்குரிய தலைவர்களும் கற்பனையாக அமைத்துக்கொண்டு கூறுவது இரண்டாவது வகை. இக்காலத்துத் தோன்றும் நாவல்களில் இவ்விருவகையும் காணலாம்.

சொல் தன்னையும் பொருளையும் உணர்த்துதல்.

**153. பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலுஞ்**
**சொல்லி னாகு மென்மனார் புலவர் (2)**

(பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்).

### ஆ. மொ. இல.

The scholars say that a word can denote the nature of its object and of its form,

பி. இ. நூ.

முத்து. பெ. 2

சொல்லையும் பொருளையும் சொல்லான் உணர்தல்.

**இளம்.**

உரை : தன்னின் வேறாகிய பொருள் தெரியப்படுதலும், பொருள் அறியப்படாது சொல் தன்னையறியப் படுதலும் ஆகிய இரண்டும் சொல்லான் ஆம் என்று சொல்லுவர் புலவர், எ-று.

வரலாறு : சாத்தன் வந்தான், [1]பண்டுகாடுமன், [2]உறுகால் (நற்றிணை 300) என்பனவற்றாற் பொருள் உணர்த்தப் பட்டவாறு.

[3]'நீயென் கிளவி' (பெயரியல். 35)
'செய்தென் எச்சம்' (வினையியல் 42)
'தஞ்சக்கிளவி' (இடையியல் 18)
'கடியென் கிளவி' (உரியியல் 85)

என்பனவற்றால் பொருள் உணரப்படாது அச்சொற்றாமே உணரப் பட்டவாறு கண்டு கொள்க.

**சேனா.**

இ-ள் : தன்னின் வேறாகிய பொருள் அறியப்படுதலும் பொருளறியப் படாது அச்சொற்றானே யறியப்படுதலும் இரண்டுஞ் சொல்லானாம் என்று சொல்லுவர் புலவர், எ-று.

உ-ம் : சாத்தன் வந்தான், பண்டுகாடு மன், உறுகால் என்பனவற்றால் பொருள் உணரப்பட்டவாறும், 'நீயென் கிளவி' (பெய. 35) 'செய்தென் எச்சம்' (வினை. 42) 'தஞ்சக்கிளவி' (இடை. 18) 'கடியென் கிளவி' (உரி. 85) என்பனவற்றால் பொருள் உணரப்படாது அச்சொற்றாமே யுணரப்பட்டவாறுங் கண்டு கொள்க.

[4]'ஆயிருதிணையின் இசைக்குமன சொல்லே' (கிளவி. 1) 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (பெய. 1) 'ஈறு

---

1. பண்டு காடாக இருந்தது, இப்பொழுது அது கழிந்தது.
2. உறுகால் — மிக்க காற்று.
3. நீ, செய்து, தஞ்சம், கடி என்பன அச்சொற்களையே குறித்தன.
4. இப்பகுதி பற்றி பி.கு.வில் சிவ. விளக்கம் பார்க்க.

பெயர்க்காகும் இயற்கைய என்ப' (வேற். 8) என்புழிச் சொல் என்னுஞ் சொல்லும் பெயரென்னும்பெயரும் அறியப்படுதற்கண் சொன்மை தெரிதலாம். ஏனைச்சொல்லும் ஏனைப் பெயரும் அறியப்படுதற்கண் பொருண்மை தெரிதலாம். அதனான் ஆண்டுச் சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும் ஒருங்கு வந்தன எனப்படும். [5]அல்லாக்கால், சொல் என்னும் சொல் பொருளுணர்த்தலும் பெயர் என்னும் பெயர் இறுதியுருபு வருதலும் பெறப்படாவாம் என்பது.

மேலைச் சூத்திரத்தாற் சொற்கள் பொருளுணர்த்தும் என்பது பெறப்பட்டமையால், தானும் பிறிதும் எனப் பொருள் இரண்டு வகைப்படும் என அதனது பாகுபாடு உணர்த்தியவாறு. இதனாற்பயன் சொல் தன்னையுணர நின்றவழியும் சொல்லே யாம் என ஐயம் அறுத்தலாம்.

## தெய்.

இதுவும் சொல் இலக்கணம், உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: சொல்லினாற் குறிக்கப்பட்ட பொருளின் தன்மை ஆராய்தலும், சொல்லின் தன்மை ஆராய்தலும் சொல் தன்னானே யாகும், எ-று.

உ-ம்: நிலம் என்பது பொருளின் தன்மை ஆராய்வார்க்கு மண்ணினான் இயன்றதோர் பூதம் என்றாயிற்று. சொல்லின்

---

5. ஆயிருதிணையின் இசைக்குமன சொல்லே என்பதில் சொல் என்பது தன்னையும், உயர்திணை அஃறிணைப் பொருள்களில் வரும் சொற்களையும் சேர உணர்த்த வில்லை என்றால் சொல் என்ற தன்னை மட்டும் உணர்த்தும் என்றால் பொருளை உணர்த்தாத குறை யேற்படும். அதனால் இரண்டும் உணர்த்தியதாகக் கொள்ளவேண்டும். 'ஈறு பெயர்க்காகும்' என்பதில் பெயர் என்பது, பெயர்ச்சொற்கள் என்ற பொருளை யுணர்த்தாது தன்னையே உணர்த்தியது என்றால் பொருளுணர்த்தும் பெயர்ச்சொற்கள் உருபேற்பது போலப் 'பெயர்' என்ற இச்சொல் பெயர்க்கு என இங்கு நான்கன் உருபேற்றிருக்க இயலாது; உருபேற்றமையால் தன்னையும் பொருளையும் உணர்த்தியதாகவே கொள்ளல் வேண்டும்.

தன்மை ஆராய்வார்க்குப் [1]பெயர்ச்சொல் என்றாயிற்று. அதனான் இருபகுதிய சொல்நிலைமை என்றவாறு,

நச்.

இதுவும் அச்சொற்கள்பொருள் உணர்த்துமாறு கூறுகின்றது.

இ-ள் : பொருண்மை தெரிதலும்—சொல்லின் வேறாகிய பொருள் தன்மை அறியப்படுதலும், சொன்மை தெரிதலும்—பொருள் தன்மை அறியப்படாது அச்சொல்தன்மை அறியப்படுதலும் என்று இரண்டும், சொல்லின் ஆகும் என்மனார் புலவர்—சொல்லான் ஆம் என்று சொல்லுவர் புலவர், எ-று.

உ-ம் : சாத்தன் வந்தான், பண்டு காடுமன், உறுகால் இவை பொருள் தன்மை தெரிந்தன.

செய்தென் எச்சம் (வினை. 42)
தஞ்சக்கிளவி (இடை. 18)
வேறென்கிளவி (வினை. 25)
செய்கென்கிளவி (வினை. 7)
கடியென் கிளவி (உரி. 85)

இவை சொல்தன்மை தெரிந்தன; அச்சொற்றன்னையே யறியப்படுதலின்।

'ஈறு பெயர்க் காகும் இயற்கைய என்ப' (வேற். 8) என்றாற் போல்வன பெயர்ச் சொல்லை யுணர்த்தலின் சொற்றன்மை தெரிதலும், உருபேற்றுழிச் செயப்படு பொருள் முதலிய பொருள்களை யுணர்த்தலின் பொருண்மை தெரிதலும் உடன் நின்றனவாம். பிறவும் இவ்வாறு உடன் வருவன உணர்ந்து கொள்க.

கல்.

என்-எனின், இதுவும் அச் சொற்கள் பொருள் உணர்த்தும் வழிக் கிடந்ததோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : பொருள் தெரிய நிற்றலும் அப் பொருளை அறியப் படாது சொற்கள் தெரிய நிற்றலும் என்னும் இவையிரண்டும் சொற்கள் ஏதுவாக உளவாகும் என்று சொல்லுவர் புலவர், எ-று.

---

1. பெயர்ச்சொல் என்றாயிற்று—பாடம்.

பொருண்மை தெரிதற்கு உதாரணம் மேற்காட்டினவே. சொன்மை தெரிதற்கு உதாரணம் பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், பெயரெச்சம், வினையெச்சம், முற்றுச் சொல் என இவை அவ்வச் சொற்களையே பொருளாக உணர்த்தின எனக் சொள்க.

மற்றிதும் பொருண்மை தெரிதலேயாம் பிற வெனின், தாம் பொருண்மை யுணர்த்தும் வழிச் சொல்லென வேறுபட்டு நிற்கு மாகலின் இதனை வேறு கூறினார் என்பது.

மற்று ஒரு சொல், தன்னின் வேறாயதோர் சொல்லைப் பொருண்மையாக உணர்த்தாது 'வேறென் கிளவி' (வினை. 25) என்றாற்போல் அச்சொல் தன்னையே உணர நிற்றலும் உண்டாம் என்ன அதுவும் சொன்மை தெரிதல் என அடங்கிற்றுப் போலும்,

*மற்றும் மேல் எய்திய பொருண்மை தெரிதல் ஈண்டுக் கூறல் வேண்டா வெனின், முற்கூறியதில் பிற்கூறியது வலியுடைத்து ஆதலின் அஃது விலக்குண்ணும் என உம்மை கொடுத்தாயினும் ஓதற்பாலாவதான நன்குணர்தற் பொருட்டு உடன்ஓதினார் என வுணர்க.

## வெள்.

இது சொற்கள் பொருள் உணர்த்துமாறு கூறுகின்றது.

இ-ள் : சொல்லின் வேறாகிய பொருட்டன்மை அறியப் படுதலும் சொல்லின் தன்மை யறியப்படுதலும் அச்சொல்லினால் ஆகும் என்று சொல்லுவர் புலவர், எ-று.

உ-ம் : சாத்தன் வந்தான், பண்டுகாடுமன், உறுகால் — இவை தம்மின் வேறாகிய பொருளை யுணர்த்தின. செய்தென் எச்சம், தஞ்சக்கிளவி, வேறென்கிளவி, செய்தென்கிளவி, கடி யென்கிளவி—இவை வேறு பொருளுணர்த்தாது சொல்லாகிய தம்மையே யுணர்த்தின.

## ஆதி.

'என்மனார் புலவர்' கவிமரபாக வந்த இசைநிறை.

---

* இப்பகுதி விளக்கமாக இல்லை. பி. கு.வில் சுந்தரமூர்த்தி குறிப்புக் காண்க.

சொல் அதற்குரிய பொருளைப் பற்றியும், சொல்லின் அமைப்பு இயல்புகள் பற்றியும் அறிவித்து நிற்பதாகும்.

பொருண்மை — பொருள் இயல்பு. சொன்மை — சொல் லியல்பு. மரங்கள் என்றவுடன் மரத்தின் உரு, கிளை, இலை, காய், கனிகள் அவற்றின் செறிவு உறுதி பற்றி எண்ணுவது பொருண்மை.

மரம்—இடுகுறிப் பெயர், கள்—பன்மை விகுதி, அஃறிணைப் பன்மைப் பெயர் எனக் காண்பது 'சொன்மை'

பி. கு.

கு. சுந்தரமூர்த்தி

இந்நூற்பா (கல்லாடனார்) உரையில் இறுதிப்பகுதி பிழை பட உள்ளது. எனினும் அதன் கருத்து ஒருவாறு விளங்குகின்றது. அது வருமாறு:

''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' என்னும் நூற்பாவால், 'சொற்கள் எல்லாம் பொருளுணர்த்தும்' என்னும் கருத்துப் பெறப்பட்டு விட்டது. எனவே இந்நூற்பாவில் சொற் கள் தன்னையும் உணர்த்தும் என்று கூறுவதே அமைவுடைத் தாகும். அங்ஙனமாக இந்நூற்பாவிலும் சொற்கள் பொருளையும் உணர்த்தும் எனக் கூறுவதேன்? என்பதே ஈண்டைய வினாவா கும்.

இங்ஙனம் நாம் நினைப்பதுபோல் சொற்கள் பொருள் உணர்த்தும் என்பதை முதல் நூற்பாவிலும், சொற்கள் தன்னை யும் உணர்த்தும் என்பதை இந்நூற்பாவிலும் கூறியிருப்பின், முன்னே சொன்ன கருத்தினும் பின்னே கூறும் கருத்து வலியுடை யது ஆதலின், சொற்கள் பொருள் உணர்த்துவதைக் காட்டிலும் தன்னை உணர்த்தும் என்பதே சிறப்புடையது என்பது பட்டு மாறுபட்ட கருத்தை உண்டாக்கிவிடும். ஆதலின் ஆசிரியர் முன்னைய நூற்பாவில் பெறப்பட்ட கருத்தினையே வலியுறுத்திச் சொற்கள் பொருளையும் தன்னையும் உணர்த்துமாற்றை ஒருங்கு ஓதினார் என்பது.

முற்கூறியதிற் பிற்கூறியது வலியுடைத்து என்ற தொடர்

> ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
> பின்சாரப் பொய்யாமை நன்று

என்ற திருக்குறளில் பரிமேலழகர் உரையிலும் காணப்படு கின்றது.

## சிவலிங்கனார்

சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும் என்னுந் தொடர்க்கு மூன்று வகையில் பொருள் காண்கின்றனர் உரையாளர்கள்.

**1.** சாத்தன் என்னும் சொல்லால் ஒருவனையோ ஒரு காளை மாட்டையோ உணர்வோமானால் பொருண்மை தெரிதலாம். அச்சொல் ஒருவனைக் குறிப்பின் உயர்திணை ஆண்பாற் சொல்லாம்; காளையைக் குறிப்பின் அஃறிணை ஒன்றற்பாற் சொல்லாம்; எனவே இரண்டு திணைகளையும் குறிக்கும் பொதுச் சொல்லாக இருத்தலின் சாத்தன் என்பது விரவுப்பெயர்ச் சொல்லாம். இப்படி அச்சொல் பற்றி உணர்வது—அதாவது அது குறிக்கும் பொருள் மூலம் சொல்லின் தன்மைபற்றி உணர்வது சொன்மை தெரிதலாம். இப்படிக் கூறியவர் தெய்வச்சிலையார்.

**2.** சாத்தன் என்று சொன்ன மாத்திரத்தில் சொல்லைப் பற்றிய எண்ணமே இல்லாமல் ஒருவனையோ, காளையையோ கருதுவோமானால் அது பொருண்மை தெரிதலாம். பொருளைக் கருதாமல் சாத்தன் என்னும் சொல்லை மட்டும் கருதினால் அது சொன்மை தெரிதலாம். (சாத்தன் என்னும் சொல், நீ என்னும் சொல் என்று சொல்லும்போது சாத்தன், நீ என்னும் சொற்களை மட்டும் கருதுகிறோம்.) இப்படிச் சொல்பவர்கள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடனார் முதலியோர்.

**3.** சாத்தன் என்ற மாத்திரத்தில் ஒருவனையோ காளை மாட்டையோ உணர்வது பொருண்மை தெரிதலாம். சாத்தன் என்னும் சொல், நீ என்னும் சொல் என்னும்போது பொருளைக் கருதாமல் சாத்தன், நீ என்பனவற்றை மட்டும் கருதுவது சொன்மை தெரிதலாம். 'ஆயிரு திணையின் இசைக்குமன சொல்' என்றால் சொல் என்பதற்கு சொல் என்ற தன்னைக் கருதும்போது சொன்மை தெரிதலாகவும், பெயர்ச்சொல் முதலிய சொற்களைக் கருதும்போது பொருண்மை தெரிதலாகவும் அமைதலின் சொன்மையும் பொருண்மையும் தெரிதலாம். எனவே சொல்லானது சொன்மை தெரிதல், பொருண்மை தெரிதல், அவ்விரண்டும் தெரிதல் என்னும் மூன்று நிலைமையில் வரும். இப்படிச் சொன்னவர் சேனாவரையர்.

ஒரு சொல்லைச் சொன்ன மாத்திரத்தில் அதனால் உணர்த்தப்படும் பொருளை அறிந்த பின்னரே அப்பொருளின் தன்மையை அச்சொல்மேல் ஏற்றிச் சொல்லிலக்கணம் அறிவோம் ஆதலின், சொன்மை தெரிதல் என்பதற்குச் சொல்லிலக்கணம்

அறிதல் எனத் தெய்வச்சிலையார் கொண்டது பொருந்துவ தில்லை. ‘மல்லல்’ என்னும் சொற்குப் பொருளறியா ஒருவன் அதன் பொருள் என்ன என வினவும் போது, அவன் சொல் தெரிந்து பொருள் தெரியாதவனாவான். அதனால் அவன் சொன்மை மட்டும் தெரிந்தவனாவான். ‘வளமை’ என்னும் பொருளறிந்தவனே பொருண்மை தெரிந்தவனாவான். எனவே சொன்மைதெரிதலாவது சொல்மட்டும் தெரிதல் என்பதாமே யன்றிச் சொல்லிலக்கணம் தெரிதல் என்பதாகாது.

சாத்தன் வந்தான் என்னும் போது சாத்தன் என்பதைச் சாத்தன் என்னும் பெயருடைய ஒருவன் என உணர்வது பொருண்மை தெரிதலாம் எனினும், சொல்லின்றிப் பொருள் மட்டும் உணர்தலி ன்மையின் பொருண்மை தெரிதல் என்ப தற்குச் சொல்லோடு பொருள் தெரிதல் என்றே கொள்ளுதல் வேண்டும். அதனால் சேனாவரையர் சொன்மையும் பொருண் மையும் சேரத் தெரிதல் என மூன்றாவது கொண்டது பொருந் தாது. மூன்றாவதற்கு அவர் காட்டிய உதாரணங்களும் பொருந்தா. ‘ஆயிரு திணையில் இசைக்குமன சொல்லே’ (கிளவி. 1) என்பதில், ‘சொல்’ என்பது உயர்திணைச்சொல் அஃறிணைச் சொல் ஆகிய எல்லாச் சொற்களையும் குறிக்கும். அவ்விடத்துச் சேனாவரையர் சொல் என்பதற்குச் சொற்கள் எனப் பன்மையில் பொருள் எழுதியதும் காணலாம். எனவே சொல் என்பது பெயர், வினைச்சொற்கள் என்னும் பொருளைத் தருதலின் அது பொருண்மை தெரிதலுக்கே உரியதாம். சொல் என்பதை மட்டில் உணர்த்தவில்லை. அவ்வாறே ‘ஈறுபெயர்க் காகும்’ (வேற். 8) என்பதிலும் பெயர் என்பது தன்னை மட்டும் குறிக்காமல் பெயர்ச்சொற்கள் அனைத்தையும் குறித்தது. அதனால் பெயர் என்பது தன்னையும் பொருளையும் குறித்தலின் பொருண்மை தெரிதலுக்குரியதாம் என்க. எனவே சேனா வரையர் கூறிய ‘‘அல்லாக்கால்......பெறப்படாவாம் என்பது’’ என்னுந் தொடர் பொருளற்றதாகும்.

சொல் வெளிப்படை குறிப்பில் பொருள் உணர்த்துதல்.

**154. தெரிபு வேறு நிலையலுங் குறிப்பிற் றோன்றலு**
**மிருபாற் றென்ப பொருண்மை நிலையே. (3)**

(தெரிபு வேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்
இருபாற்று என்ப பொருண்மை நிலை ஏ)

## ஆ. மொ : இல.

They say that the knowing of the object is of two ways-directly and by suggestion.

## பி. இ. நூ :

**நேமிநாதம்.** சொல்லதிகாரம் 68

சொல்லால் தெரிதல் குறிப்பினால் தோன்றுதல் என்று
எல்லாப் பொருளும் இரண்டாகும் - மெல்லியலாய்
தொன்மொழியும் மந்திரமும் சொற்பொருள் தோன்று
தலின்
இன்மையும் உண்மையும் ஈங்கு.

**நன்னூல். 269**

ஒன்றொழி பொதுச்சொல் விகாரந் தகுதி
ஆகுபெயர் அன்மொழி வினைக்குறிப்பே
முதல்தொகை குறிப்போடு இன்ன பிறவும்
குறிப்பிற் றருமொழி அல்லன வெளிப்படை.

**இலக்கண விளக்கம். 170.**

ஆகுபெயர் வினைக்குறிப்பு அன்மொழி விகாரம்
முதல்தொகை தகுதி குறிப்போடு இன்னவும்
குறிப்பில் தருமொழி அல்லன வெளிப்படை.

**முத்து. பெ. 18.**

தொகைஒன் றொழிபொதுச் சொல்லே முதனிலை
தகுதி வினைக்குறிப்பு அன்மொழி ஆகு
பெயரே குறிப்புரை அல்லன வெளிப்படை.

**பிரயோக விவேகம் 47**

சின்மயம் சார்ந்த தத்தம் பொருளின்றிச் சிலபதங்கள்
அன்வயம் சம்பந்தம் தாற்பரி யத்தோ டநுபபத்திச்
சொன்மயம் தோன்றப் பொருள்வே றுணர்த்தல்
துடியிடையாய்
தன்மயம் சார்ந்த இலக்கணையாம் என்பர் தார்க்கிகரே.

## இளம்.

உரை : மேற்கூறப்பட்ட பொருண்மை தெரிதல், சொன் மாத்திரத்தால் விளங்கி நிற்றலும், சொன்மாத்திரத்தாற் றோன்றாது சொல்லொடு கூறிக் குறிப்பாற் றோன்றலும் என இரண்டு கூற்றையுடையது, எ—று.

வ—று : அவன், இவன், உவன்; வந்தான், சென்றான் என்புழிப் [1]பொருள் தெரிபு, வேறு நின்றன.

'ஒருவர் வந்தார்' என்புழி, ஆண்பால் பெண்பால் என்பதூஉம், உண்ணாநின்றான் கற்கறித்து 'நன்கட்டாய்' என்புழித் 'தீங்கட்டாய்' என்பதூஉம் குறிப்பிற்றோன்றின. பிறவும் அன்ன.

## சேனா.

இ—ள் : மேற்கூறப்பட்ட பொருண்மை தெரிதல் சொன் மாத்திரத்தான் விளங்கி வேறுநிற்றலும் சொன்மாத்திரத்தாற் றோன்றாது சொல்லொடு கூடிய குறிப்பாற் றோன்றலும் என இரண்டு கூற்றையுடைத்தென்று கூறுவர் ஆசிரியர், எ—று.

உ-ம் : அவன், இவன், உவன்; வந்தான், சென்றான் என்ற வழிப் பொருள் தெரிபு, வேறு நின்றன 'ஒருவர் வந்தார்' என்ற வழி ஆண்பால் பெண்பால் என்பதூஉம், சோறு உண்ணா நின்றான் 'கற்கறித்து நன்கட்டாய்' என்ற வழித் 'தீங்கட்டாய்'' என்பதூஉம் குறிப்பாற் றோன்றின. கடுத்தின்றான், தெங்கு தின்றான் எனப் பிறிதின் பெயராற் பிறிதுபொருள் தோன்றலும் குறிப்பிற் றோன்றலாம்.

[2]தின்றான் என்னுந் தொழிலோடு முதற்பொருள் இயை யாமையின் அதனோ டியையும் சினைப் பொருள் அத்தொட

---

1. பொருள் தெரிபு வேறுநின்றன—பொருண்மை தெரித லானது சொல்லின் வேறுபடநின்றது என்பதாம். பி. கு. வில் சிவ. விளக்கம் பார்க்க.
2. குறிப்பு என்பது தொடரில் உள்ள சொற்கள் உணர்த்தும் பொருளைக் கொள்ளாமல் வேறு பொருளைக் கொள்ளுமாறு அமைவது. தெங்கு தின்றான் என்பதில் தின்றான் என்னும் சொல் தன் பொருளையே தர அதன் ஆற்றலால் தெங்கு என்பது தென்னை மரத்தை யுணர்த்தாமல் அதன் காயை உணர்த்திற்றாம். அதனால் குறிப்பு என்பதன் இலக்கணம் நிரம்பவில்லை. ஆதலின் தெங்கு என்னும் முதற் பெயர் காயாகிய சினைக்கு ஆகி வருவதைக் குறிப்பு என்பது ஏலாது. அதனைக் குறிப்பிற்றோன் றியது என்பது எப்படிப் பொருந்தும் என்பது வினா. விடை : தின்னுதற்கும் தென்னை மரத்துக்கும் இயைபு

ராற்றலாற் பெறப்பட்டமையால் குறிப்பிற் றோன்றலாகா தெனின், அற்றன்று : அவ்வியையாமை சொல்லுவான் குறிப்பு உணர்தற்கு ஏதுவாவதல்லது முதற் பெயரைச் சினைப் பொருட்டாக்கும் ஆற்றலின்றாகலான் அதுவும் குறிப்பிற்றோன் றலேயாம் என்க. பிறவும் அன்ன.

[3]இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து (குறள். 879)

என்னுந் தொடர்மொழியான், ''நிலை பெற்றபின் களையலுறிற் களையலுற்றாரை அவர்தாங் கொல்வர், அதனாற்றீயாரை அவர் நிலை பெறாக் காலத்தே களைக'' என்னும் பொருள் விளங்குதலும் குறிப்பிற் றோன்றலாம். அணியிலக்க்ணங் கூறுவார் இன்னோரன்னவற்றைப் பிறிது மொழிதல் என்பதோர் அணியென்ப.

## தெய்.

மேற்சொல்லப்பட்ட இரு பகுதியினுள் பொருண்மை நிலை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: பொருண்மை நிலையானது இச்சொற்குப் பொருள் இதுஎன உணரப் [4]பல பொருளிலும் தெரிந்து வேறாகி நிற்றலும்

---

இல்லை. அவ்வியைபு இன்மையே தெங்கு என்பது மரத்தைக் குறிக்காமல் காயைக் குறித்ததற்குக் காரண மாகும் ; அவ்வியைபு இன்மை தென்னை மரத்தைக் குறிக்கும் தெங்கு என்பதைக் காய் என்ற பொருளைத் தந்து விடாது. அதற்கு அவ்வாற்றல் இல்லை. அதனால் ஆகுபெயராற் கொள்ளும் பொருளும் குறிப்பிற் கொள்வதேயாம்.

3. இதனை நச்சினார்க்கினியர் மறுப்பர். பார்க்க.
குறளின் பொருள் : களைய வேண்டுவதாய முள் மரத்தை அது செடியாய் இருக்கும் போதே களைந்து விடுக ; இல்லையேல் அது வளர்ந்து பெரிய மரமான பின் களையத் தொடங்கினால் களைபவர் (வெட்டு பவர்) கைகளை அம்மரம் களைந்து விடும். (பாழ் படுத்தும்)

4. பல பொருளிலும் தெரிந்து வேறாகி நிற்றல்—பி.கு.வில் சிவ. விளக்கம் பார்க்க.

சொற்படு பொருளன்றிச் சொல்லுவான் குறிப்பினாற் பிறிது பொருள்பட நிற்றலும் என இருபகுதியையுடைத்து என்று சொல்லுவர், எ-று.

வெளிப்படுநிலை குறிப்புநிலை எனச் சொற்பொருள் உணர்த்துமாறு இருவகை என்றமையால் இதுவும் சொல் ஆராய்ச்சியாம். அஃது எற்றாற் பெறுதும் எனின், யாதானும் ஒரு சொல்லையும் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச் சொல், உரிச்சொல் எனக் குறியிடுங்கால், அதன்பொருண்மை உணர்த்த வேண்டுதலின் பொருண்மை நிலையும் சொல் இலக் கணம் என்பது உய்த்துணர வைத்தார்.

தெரிபு வேறு நின்றன: நிலம் நீர் தீ வளி எனப் பொருள் உணர்த்துவனவும்; உண்டான், தின்றான் எனத் தொழில் உணர்த்துவனவும். குறிப்பிற்றோன்றின:-‡இவன் நெருப்பு, இவன் பசு எனக் குணம் பற்றியும், தீமை செய்தாரை 'நன்மை செய்தீர்' எனவும்; கொடுமை செய்தாரை 'வாழ்வீராக' எனவும் அப்பொருள் பயவாது [5]பிற பொருள் பயப்ப வருவன.

நச்.

இதுவுமது.

இ-ள்: பொருண்மை நிலையே—மேற்கூறப்பட்ட பொருள் தன்மை தெரிதல், தெரிபு வேறு நிலையலும்—சொன்மை மாத்தி ரத்தான் விளங்கி வேறு நிற்றலும், குறிப்பின் தோன்றலும்—சொன்மை மாத்திரத்தால் தோன்றாது சொல்லோடு கூடிய குறிப்பால் தோன்றுதலுமாகிய, இருபாற்று என்ப—இரண்டு கூற்றை உடைத்து என்று கூறுவர் ஆசிரியர், எ—று.

உ-ம்: அவன், இவன், உவன், வந்தான், சென்றான் இவை தெரிந்தன. ஒருவர் வந்தார் என்றாற் போல்வனவும் ஆகுபெய ராய் வருவனவும் குறிப்பின் தோன்றலாம்.

சேனாவரையர் காட்டிய,

---

5. பிறபொருள். எதிர்மறைப் பொருள்கள்.

‡ இவன் நெருப்பு, இவன் பசு எனக் குணம் பற்றாமைத் தீமை செய்தான், நன்றிசெய்தான் எனவும், கொடுமை செய்தாரை வாழ்வாயாக என அப்பொருள் பயவாது பிறபொருள் பயப்பவும் வருவன''—இது கரந்தைப் பதிப்புப் பாடம். சிறப்பின்று.

> இளைதாக முண்மரம் கொல்க களையுநர்
> கைகொல்லும் காழ்த்த விடத்து (குறள் 876)

என்னும் உதாரணஞ் செய்யுளாதலின், செய்யுளியலில்

> [5]சொல்லொடும் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை
> புல்லிய கிளவி எச்ச மாகும் (செய். 206)

என்னும் சூத்திரத்துள் ஆசிரியர் குறிப்பெச்சம் எனக் கூறியவாறு காண்க.

**கல்.**

என்—எனின், இதற்கும் அக்கருத்து ஒக்கும்.

இ-ள்: இச்சொல்லினது பொருள் இது எனத் [6]தெரிந்து வேறு நிற்றலும், அவ்வாறன்றிச் சொல்லுவான் குறிப்பினான் இச்சொல்லினது பொருள் இது என அறிய நிற்றலும் என இரு பகுதித்து என்று சொல்லுவர் ஆசிரியர், எ-று.

உ-ம்: [7]இடா, திடா என்பன தெரிபு வேறு நிலையல். சோறுண்ணா நின்றான் 'கற்கறித்து நன்கு அட்டாய்' என்றல் குறிப்பிற்றோன்றல்.

**வெள்.**

உ-ம்: அவன், இவன், உவன், வந்தான், சென்றான் என்புழி உயர்திணை யாண்பாற்பொருள் சொல்லின் வேறாக விளங்கித் தோன்றியது. சொல்லுவான் குறிப்பினால் 'ஒருவர் வந்தார்' என்புழி வந்தவர் ஆணோ பெண்ணோ என்பது புலப் பட நிற்றலின் குறிப்பிற் தோன்றலாம்.

**ஆதி.**

வெளிப்படையாக வேறுவேறு பொருள் சுட்டல், குறிப்பாகப் பொருள்தரல் எனப் பொருண்மை இருவகைப்படும.

---

5. பொருள்: ''கூற்றானும் குறிப்பானும் முடிக்கப்படும் இலக்கணத்தொடு பொருந்திய கிளவி, எச்சம் என்னும் உறுப்பாம்''
6. தெரிந்து—தெரிய அல்லது தெரியப்பட்டு
7. இடா—நீர் இறைக்கும் கூடை
   திடா— (மேடு) இது திடர் என வழங்கப்படும். திடா என்பது திடர் என்பதன் முன்னைய வடிவமாகலாம்,

தெரிபு—வெளிப்படை.

| | | |
|---|---|---|
| பலகை—மாம்பலகை (வேறுபொருள்) | —பல் கைகள் | |
| பந்து—விளையாடும்பந்து. | ,, | இனம் |
| வேங்கை—புலி, மரம். | ,, | வேகின்றகை |
| சிந்து—உதறு, கடல் | ,, | இசை. |

இவ்வாறு வேறுவேறு பொருள் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் தரும்.

அவர் ஆடைஅணிகலன்களுடன் விளங்கினார் (தெரிபு)

அவர் வளையல் அணிந்திருந்தார்—அவர் பெண் எனக் குறிப்பால் அறிகிறோம். அவர் மீசைக்காரர்—அவர் ஆண் எனக் குறிப்பால் அறிகிறோம். மேரி ராணி கல்லூரியில் படிப்பவர்—பெண் எனவும், லயோலாவில் படிப்பவர்—ஆண் எனவும் (இடத்தைக் கொண்டு) அறிகிறோம்.

கோழி கூவியது—கோழி—சேவல்.
கோழி முட்டையிட்டது—கோழிபெட்டை.

இவ்வாறு பெயர்கள் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருள் தந்து நிற்கும்.

இருபாற்று—(இரண்டு + பால் + து) இருவகைத்து.

**சுப்.**

இச்சூத்திரத்திற்குப் பதவுரை கூறுமிடத்து நான்கு உரைகாரர்களும் ஒருவகையாகவே கூறினர். கருத்துப் பொருள் கூறுமிடத்துக் 'குறிப்பிற்றோன்றல்' என்பதற்குச் சேனாவரையர் சந்தர்ப்பத்தினாலும், லக்ஷணா விருந்தியாலும், வ்யஞ்சனா விருத்தியாலும் தோன்றுதல் என்று பொருள் கொண்டதாகத் தோன்றுகிறது. நச்சினார்க்கினியரோ சேனாவரையர் கூறுகின்ற ஏனையவற்றை யுடன்பட்டுச் செய்யுளில் வரும் வ்யஞ்சனா விருத்தி மாத்திரம் இச்சூத்திரத்துக்கு விஷய மன்றென மறுக்கின்றார். அம் மறுப்பில் அவர் கூறியுள்ள காரணம் முழுதும் பொருந்துமா என்பது ஆராயத்தக்கது.

இச்சூத்திரம் எற்றுக்கு? ஆகுபெயர் உணர்த்திய சூத்திரப் பொருளுள் அடங்காதோ எனின், அற்றன்று. அங்குத் தெங்கு தின்றான் முதலிய தொடர்மொழிகளில் தெங்கு என்பதற்கு ஆற்றலால்உள்ள தென்னைமரம் என்றபொருளைக்கொள்ளின், அவ்வாக்கியத்திற்குப் பொருள் பொருந்தாமையின், குறிப்பால்,

அங்குத் தெங்கு என்பது சினையைக் குறித்தல் வேண்டும் என்பதை அச்சூத்திரம் உணர்த்தியது. தெங்கு போன்ற தனி மொழிக்கு ஆற்றலால் ஒரு பொருளும், குறிப்பால் மற்றொரு பொருளும் இருக்கலாம் என்பதை இச்சூத்திரம் உணர்த்திற் றென்க.

பி. சூ.

சிவ.

இச்சூத்திரத்தின் தொடரமைப்பை இரண்டு வகையில் கொண்டனர் உரையாளர்கள்.

பொருண்மைநிலை தெரிபு இருபாற்றென்ப எனக் கொண் டனர் இளம்பூரணர், சேனாவரையர்.

பொருண்மை நிலை இருபாற்றென்ப எனக் கொண்டனர் மற்றையோர்.

பொருளிலும் உதாரணங்களிலும் யாவரும் ஒத்த கருத் தினரே.

ஒருசொல் ஒரு பொருளை உணர்த்துமாயினும் அப்பொருள் அச்சொல்லினின்றும் வேறாக நின்று வெளிப்படையாக உணரு மாறு அமைதலே வேறுநிலையல் என்பதாம். யானை என்பது சொல். அது உணர்த்தும் பொருள் யானை; எனினும் யானைச் சொல்லுக்கும் யானைப்பொருளுக்கும் தொடர்பில்லை, வேறாக நிற்பது யானைப் பொருள். ஆனால் யானை என்ற சொல்லைச் சொன்ன மாத்திரத்தில் உடனே வெளிப்படையாக யானைப் பொருளை உணர்கிறோம். இக்கருத்திலேயே தெய்வச்சிலை யாரை யொழிந்த மற்றையோர் வேறுநிலையல் என்பதற்குப் பொருள் கொண்டனர்.

'தெரிபு' என்பதை எச்சமாகக் கொண்டு 'தெரிபு வேறு நிலையல்' எனச் சேர்த்து உரை கூறியவர்களுள், நச்சினார்க் கினியர் 'தெரிபு' என்பதற்கு, 'வெளிப்படையாக விளங்கி' எனவும் கல்லாடனார் 'தெரிந்து' எனவும் உரை கூறினர். தெரிந்து என் பதைத் 'தெரிய' எனக்கொண்டு 'வெளிப்படையாகத் தெரிய' எனக் கல்லாடனார் கூறினார் எனக் கொள்ளலாம்.

இச்சூத்திரத்தில் கூறப்பட்ட பொருண்மை நிலை வகை யினைத் தெரிபு நிற்றல், குறிப்பிற்றோன்றல் எனக் கூறலாம். தெரிபுநிற்றல் என்பது வெளிப்படையாகத் தெரியநிற்றலாம்,

தெரிபுநிற்றல்என்னாது 'தெரிபுவேறு நிற்றல்' என ஆசிரியர் கூறுவானேன்? வெளிப்படை என்பது குறிப்பிற்றோன்றலின் வேறுபட்டது ஆதலின் அவ்வாறு கூறினார். வெளிப்படையாகத் தெரியுமாறு குறிப்புப் பொருண்மையின் வேறாக நிற்றல் என்பது அத்தொடரின் பொருளாம்.

தெய்வச்சிலையார் 'தெரிபு வேறுநிலையயல்' என்பதற்கு, "இச்சொற்குப் பொருள் இதுவென உணரப் பல பொருளிலும் தெரிந்து வேறாகி நிற்றல்" எனப் பொருள் கூறினார். அவர் கூற்றின் கருத்தாவது: கனி என்பது ஒரு சொல்; ஒருவனிடம் கனி எடுத்துவா என்றால் அவன், காய், இலை, பூ, கனி ஆகியவை உள்ள இடம் சென்று காய், இலை, பூ ஆகியவற்றின் வேறாகி உள்ள கனியை எடுத்து வருவான். எனவே கனி என்ற சொல் காய் முதலிய பல பொருள்களின் வேறான பழத்தை உணர்த்துவதே தெரிபுவேறுநிலையயல் ஆம். 'வேறுநிற்றல்' என்பதற்குப் 'பல பொருளின் வேறாகி நிற்றல்' எனப் பொருள் கோடல் அத்துணைச் சிறப்பின்று. கனி என்ற மாத்திரத்தில் ஒருவன் பழத்தை நினைப்பானேயன்றிக் காய் இலை முதலியவற்றையும் நினைத்துப்பின் கனியைத் தனியாக நினையான். ஆதலின் தெய்வச்சிலையார் உரை அத்துணைச் சிறப்புடையதன்று.

### சொற்களின் வகை

**155. சொல்லெனப் [1]படுப பெயரே வினையென்**
**றாயிரண் டென்ப வறிந்திசி னோரே** (4)

(சொல் எனப்படுப பெயரே வினை என்று
அ இரண்டு என்ப அறிந்திசி னோர் ஏ)

**ஆ. மொ: இல.**

The linguists say that the words are said to be of two kind noun and verb.

**பி. இ. நூ:**
அடுத்த சூத்திரத்தில் காண்க.

---

1. படுவ—பாடம்

## இளம்.

உரை : சொல்லாவன பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் என இரண்டென்று சொல்லுவர் அறிவோர், எ-று.

பெயர்ச்சொற்கு இலக்கணம் வேற்றுமை ஒத்தினுட் கூறி, னார் ; வினைச் சொற்கு இலக்கணம் வினையியலுட் கூறுப [1]பிற சொல்லும் உளவாயினும் இவற்றது சிறப்பு நோக்கிப் பெயரே வினையென்று ஆயிரண்டு' என்றார்.

## சேனா.

இ-ள் : சொல்லாவன பெயர்ச் சொல்லும் வினைச் சொல் லும் என இரண்டென்று சொல்லுவர் அறிந்தோர், எ-று.

பெயர்ச் சொல்லது இலக்கணம் வேற்றுமையோத்தினுட் கூறினார் ; வினைச் சொல்லது இலக்கணம் வினையிலுட் கூறுப.

பிற சொல்லும் உளவாயினும் இவற்றது சிறப்பு நோக்கிப் 'பெயரே வினையென் றாயிரண் டென்ப' என்றார். இவற்றுள்ளும் பொருளது புடைபெயர்ச்சியாகிய தொழில் பற்றாது அப்பொருள் பற்றி வருஞ்சிறப்புடைமையாற் பெயரை முற்கூறினார்.

## தெய்.

சொன்மை நிலை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: சொல் என்று சொல்லப்படுவன பெயர்ச்சொல் வினைச்சொல் என அவ்விருவகைய என்ப ஆசிரியர், எ-று.

## நச்.

இஃது அந்நால்வகைச் சொல்லினுள் சிறந்தவற்றிற்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துகின்றது.

இ-ள் : சொல் எனப்படுப—சொல் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவன, பெயரே வினை என்று ஆ இரண்டு என்ப அறிந்திசினோரே—பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் என அவ்விரண்டு என்று கூறுவர் அறிந்தோர், எ-று.

பொருளும் பொருளினது புடைபெயர்ச்சியுமாகிய முறைமை பற்றிப் பெயரை முற்கூறினார்.

---

2. பிறசொல்—இடைச்சொல், உரிச்சொல்

**கல்.**

என்-எனின், மேற்பொருள் உணர்த்தும் எனப்பட்ட சொல்லிற்குப்பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : சொல் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவன பெயர்ச்சொல் என்றும் வினைச்சொல் என்றும் அவை இரண்டும் என்று சொல்லுப இலக்கணம் அறிந்த ஆசிரியர், எ-று.

பெயர்ச்சொல் பொருளை உணர்த்துதலின் முற்கூறப்பட்டது வினை பொருளது புடைபெயர்ச்சியாகிய தொழிலினை உணர்த்தலின் சிறப்பினவல்ல என்று பிற்கூறப்பட்டது.

என சிறப்பின்கண் வந்தது.

**வெள்.**

பெயர் என்பது பொருள். பொருளையுணர்த்துஞ் சொல் பெயர்ச்சொல் எனப்பட்டது. வினையென்பது பொருளது புடைபெயர்ச்சியாகிய தொழிற்பண்பின் காரியமாகும். வினையையுணர்த்துஞ்சொல் வினைச்சொல் எனப்பட்டது. பொருள்து புடைபெயர்ச்சியாகிய தொழில்பற்றாது அப்பொருள்பற்றி வரும் சிறப்புடைமையாற் பெயரை முற்கூறினார்.

**ஆதி.**

'என்ப அறிந்திசினோர்'—கவிமரபாய் வந்த இசைநிறை. அ இரண்டு—ஆயிரண்டு. அ—அவை. எனப்படுப—என்றுசொல்லப்படுவன; [3]பகுதிப்பொருள் விகுதி. வேற்றுமை ஏழ் என்று துண்டித்ததுபோலப் பெயர் வினைச்சொற்களை முதலில் துணித்துக் காட்டுகிறார்.

**156.** **இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு**
**மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப.** (5)

(இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப)

---

3 பகுதிப் பொருள்விகுதி என்றது எதனை? எனப்படுப என்பதில் எனப்படு + ப் + அ எனப்பிரிப்பின் அ என்னும் விகுதி பன்மைப் பொருளைத் தருதலின் பகுதிப் பொருள் விகுதியாகாது.

## ஆ. மொ: இல.

They say that the morphemes (idaiccol) and sementemes (uriecol) may appear depending upon them.

## பி. இ. நூ:

**நேமி. சொல்.** *29*

பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல்
இயற்சொல் முதல் நான்கும் எய்தும்—

**நன்.** *270*

இயற்சொல் திரிசொல் இயல்பில் பெயர்வினை
எனஇரண் டாகும் இடையுரி யடுத்து
நான்கு மாம் திசைவடசொல் அணுகாவழி

**இல.** *171* ஷ ஷ ஷ

**தொன்னூல் விளக்கம்,** வினையியல் *42*

எச்சொலும் பெயர்வினை யிடையுரி எனநான்கு.

**முத்து.** பெ. *3*

அதுதான்

பெயர்வினை யிடையுரி எனச்சொல் நான்கே.

## இளம்.

உரை: இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினையையும் சார்ந்து தோன்றும், எ—று.

சார்ந்து தோன்றும் எனவே அவற்றது சிறப்பின்மை பெறப் படும். வழக்குப் பயிற்சி நோக்கி இடைச்சொல் முற்கூறினார்.

## சேனா.

இ-ள்: இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினையையும் சார்ந்து தோன்றும், எ-று.

'அவற்றுவழி மருங்கிற் றோன்றும்' என்றாரேனும், பெயரையும் வினையையுஞ் சார்ந்து தோன்றும் இவ்விரண்டையும் அவற்றோடுதலைப் பெய்யச் சொல் நான்காம் என்பது கருத்தாகக் கொள்க. சார்ந்து தோன்றும் எனவே அவற்றது சிறப்பின்மை பெறப்படும். வழக்குப் பயிற்சி நோக்கி இடைச்சொல் முற்கூறினார்.

**தெய்.**

இதுவுமது.

இ-ள்: இடைச் சொல்லாகக் கிளக்கப்படுவனவும் உரிச் சொல்லாகக் கிளக்கப்படுவனவும் பெயர் வினைகளைச் சார்ந்த இடத்திற்றோன்றும், எ-று.

எனவே, பெயரையும் வினையையும் சாராதவழிக் [1]கூற்று நிகழாது என்றவாறாம்.

இத்துணையும் சொல்லப்பட்டது சொல்லாயிற் பொருள் குறித்து வரும் எனவும், அது பொருண்மை நிலை சொன்மை நிலையென இருவகைப்படும் எனவும், அவற்றுள் பொருண்மை நிலை வெளிப்படுநிலை குறிப்பு நிலை என இருவகைப்படும் எனவும், சொன்மை நிலை பெயர்வினை எனச் சிறப்புடைச் சொல் இரண்டும் இடை உரி எனச் சிறப்பில் சொல் இரண்டும் என நான்கு வகைப்படும் எனவும் தனிமொழிக்குப் பொதுஇலக்கணம் கூறியவாறாம்.

இவற்றுள் பொருண்மை நிலை வழக்கினும், சான்றோர் செய்யுளகத்தும் ப்யின்று வருதலானும், இவ்வழக்குத் தமிழ் நாட்டுப் பிறந்து தமிழறிவாரை நோக்குதலினாலும், இலக்கணம் இன்றியும் [2]பாகம் உணர்வார் ஆகலானும் எடுத்து ஓதாராயினார். அஃது அற்றாதல் ‘வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா, வெளிப்பட வாரா உரிச்சொல் மேன’ (உரி 2) என ஓதிய அதனானும் கொள்க.

சொன்மை நிலை இலக்கணம் இல்வழி உணர்வரிது. ஆதலான் எடுத்து ஓதப்பட்டது.

**நச்.**

இஃது இறந்தது காத்தது.

இ-ள் : இடைச் சொற் கிளவியும் உரிச் சொற் கிளவியும் அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப—இடைச் சொல்லாகிய சொல்லும் உரிச்சொல்லாகிய சொல்லும் பெயர் வினைகளிடத்துத் தாமே தோன்றுதற்கு இடமாகிய இடத்தே தோன்றும் என்று கூறுவர் ஆசிரியர், எ-று.

---

1. பேசப்படும் பேச்சு நிகழாது.
2. பாகம்—பொருள்.

**இளம்.**

[3]தாம் தோன்றுதற்கு இடமாவன அவன், அவள், உண்டான், உண்டாள், துவைத்தல், துவைக்கும் என்றாற்போல்வன.

தாம் தோன்றுதற்கு இடம் அல்லாதன மரம் மான் என்றாற் போல்வனவாகிய பெயரும், உண் தின் என்றாற் போல்வன வாகிய முதனிலைப் பெயர் தானே நிற்பனவும் என்று உணர்க.

**கல்.**

என்-எனின், இறந்தது காத்தலை நுதலிற்று.

இ-ள் : இடைச் சொல்லாகிய சொல்லும் உரிச் சொல்லாகிய சொல்லும் பெயர் வினைகட்கு இடமாகிய இடத்தே தோன்றும்; தாமாகத் தோன்றா, எ-று.

இடைச் சொல் முற்கூறிய காரணம் என்னை யெனின் [4]எழு கூற்றதாகிய வழக்குப் பயிற்சி நோக்கி யென்க.

மருங்கு என்றதனான் அவ்விடையுரிகள் பெயர் வினைகளை அடைந்து தோன்றுங்கால் தம் மருங்கினால் தோன்றுதலும் பெயரதும் வினையதும் மருங்கினால் தோன்றுதலும் என இருவகை யென்பது கொள்ளப்படும்.

[5]அதுமன், உறுகால் என்பன தம்மருங்கிற்றோன்றின. அவன் அவள் உண்டான் உண்டாள் என்பது அவற்று மருங்கிற் றோன்றின.

இத்துணையும் கூறியன நான்கு சொல்லிற்கும் பொதுவிலக் கணம்; மேற்கூறுகின்றது பெயரது இலக்கணம் என உணர்க.

---

3. பகுபத உறுப்புகளுள் பகுதி தவிர மற்றையன இடைச் சொற்கள் ஆதலின் இக் காட்டிய உதாரணங்களில் விகுதி முதலிய இடைச் சொற்கள் பகுதியைச் சார்ந்து வந்தமை காண்க.

4. எழுகூறு : திணை, பால், இடம், காலம், மரபு, செப்பு, வினா.

5. 'அதுமன்' என்பதில் மன் என்பதை நீக்கினும் அது என்னும் சொல் பொருளுடையதாய் நிற்கும். அதனால் மன் என்னும் இடைச்சொல் தன் தனித்தன்மையிலேயே அது என்பதுடன் சேர்ந்து தோன்றியது. அன்றியும் மன் என்பது அதுதான், அதுவே என்னும் பொருளில் ஆளப் படுதலும், அது என அசைநிலைப் பொருளில் ஆளப் படுதலும் ஆகிய தன் தன்மையும் உடையது. புறநிலை யில் சார்ந்தது.

சிவ.

இச்சூத்திரம் இறந்தது காத்தல் நுதலியதாக நச்சினார்க்கினியரும் கல்லாடனாரும் கூறினர். இறந்தது காத்தல் என்பது, முன்னே கூறப்பட்ட செய்தி ஒரு காரணம்பற்றிப் பின்னால் விடப்படும் நிலை தோன்றுமானால் விடாதபடி அதனை நிலைநிறுத்தலாம்.

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்னும் சூத்திரத்தில் நால்வகைச் சொற்களும் பொருள் குறித்து வருவனவே என்பது கூறப்பட்டது. அதில் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பொருள்தரும் சொல் எனப்பட்டன. ஆனால் மேற்சூத்திரத்தில் சொல் எனப்படுவன பெயரும் வினையும் என இரண்டே கூறப்பட்டன. அப்படியானால் இடையும் உரியும் சொல் எனப்படா என்பது பெறப்படும். அதனை மறுத்து இடையும் உரியும் சொல் எனவே படும் எனக் காக்கும் வகையில் இச்சூத்திரம் அமைந்தது எவ்வாறெனின் ஆசிரியரே இடைச்சொற்கிளவி உரிச்சொல்கிளவி என்று ஆண்டுள்ளவற்றான் என்னலாம்.

பெயர்ச் சொற்கள்

157 **அவற்றுள்,**
**பெயரெனப் படுபவை தெரியுங் காலை**
**யுயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு**

---

உறுகால் என்பதில் உறு என்னும் உரிச்சொல் நீங்கினும் கால் என்பது காற்று என்னும் பொருள் தரும். ஆனால் உறு சேர்ந்ததும் மிக்க காற்று என்னும் பொருளுடையதாயிற்று. இதில் உறு என்பது மிகுதி என்னும் தன் பொருளில் நின்று கால் என்பதுடன் சேர்ந்திருத்தலின் தன் மருங்கிற்றோன்றியதாம். இதுவும் புறநிலையில் சார்ந்ததே.

அவன் என்பதில் அன் என்பது விகுதியிடைச்சொல். அதனைநீக்கின் அ என்பதற்கு அவன் என்னும் பொருள் இல்லை. உண்டான் என்பதில் ஆன், ட் என்னும் விகுதி இடைநிலைகளாகிய இடைச் சொற்களை நீக்கின் உண் என்பது ஒருவன் உண்டலைச் செய்தான் என்னும் பொருள் தராது. எனவே அவன், உண்டான் என்பவற்றில் உள்ள இடைச் சொற்கள் அ, உண் என்னும் பகுதிகளைச் சார்ந்து-அதாவது அகநிலையில் சார்ந்து நிற்றலின் அவற்றுமருங்கில் தோன்றினவாம்.

மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையு
மம்மூ †வுருபின தோன்ற லாறே. (6)

(அவற்றுள்,
பெயர் எனப் படுபவை தெரியும் காலை
உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும்
அ இரு திணைக்கும் ஓர் அன்ன உரிமையும்
அ மூ உருபின தோன்றல் ஆறு ஏ)

**ஆ.மொ:இல.**

**Of them,**

**On examining, the nouns are said to be of three categories-those which belong to high class and those which belong to non—class and those which belong to both classes, in usage·**

**பி.இ.நூ:**

**நே மி. சொல்.** *29*

—பெயர்ச் சொல்

உயர்திணைப் பேர்அஃ றிணைப்பேர்ஒண் விரவுற்று
இயலும் எனவுரைப்பர் ஈங்கு.

**நன்.** *275*

இடுகுறி காரண மரபோ டாக்கம்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்று
ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே.

**இல.** *176*

பெயரெனப் படுபவை தெரியுங் காலை
இடுகுறி காரண மரபோ டாக்கம்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்று
ஏற்பவும் பொதுவுமாகிப் பாற்படப்
பொருள்புலப் படுப்பன என்மனார் புலவர்

**தொன். 53**

பெயரே வேற்றுமை பெற்று இடம்பால் திணை
காட்டித் தொழிலல காலங் காட்டா
மரபு காரணம் ஆக்கம் குறி என்று
அவைநாற் றகுதி யாகும் என்ப.

---

† வுருவின—நச். பாடம்.

முத்து பெ. 4

அவற்றுள்
பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்
ஆகும் என்மனார் அறிந்திசி னோரே

## இளம்.

உரை : மேற்கூறப்பட்ட நான்கனுள் பெயர் என்று சொல்ல படுவன உயர்திணைக்கு உரிமையாய் வருவனவும் அஃறிணைக்கு உரிமையாய் வருவனவும் இரண்டு திணைக்கும் ஒத்த உரிமைய வாய் வருவனவும் என மூன்று வேறு [1]வாய்பாட்டான் வகுத்துத் தோன்றும் நெறிக் கண், எ-று.

## சேனா.

பொருள் வேறுயாடு பற்றிச் சிறப்பு வகையான் நான்கு சொல்லும் உணர்த்துற்கு உபகாரம் உடைய பொது இலக்கணம் உணர்த்தி நிறுத்த முறையானே இனிப் பெயர்ச் சொல் உணர்த் துகின்றார்.

இ-ள்: மேற்கூறப்பட்ட நான்கனுள், பெயர் என்று சொல் லப்படுவன உயர்திணைக்குரியவாய் வருவனவும் அஃறிணைக் குரியவாய் வருவனவும் இரண்டு திணைக்கும் ஒத்த வுரிமைய வாய் வருவனவும் என மூன்று வேறுபாட்டனவாம் தோன்று நெறிக்கண், எ-று.

## தெய்.

நிறுத்த முறையானே பெயர்ச்சொற்பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேற்சொல்லப்பட்ட நான்கு சொல்லுள்ளும் பெய என்று சொல்லப்படுபவை ஆராயுங் காலத்து உயர்திணைப்

1. வாய்பாட்டன என்றிருப்பின் நன்று-

பொருட்கே [1]யுரியவாகியும் அஃறிணைப் பொருட்கே [2]யுரியவாகியும் அவ்விரு திணைக்கும் ஒத்த உரிமையவாகியும் அம்மூன்று வடிவினையுடைய தோன்றுதற்கண், எ-று.

எனவே பெயர்ச்சொல் உயர்திணைப்பெயர் அஃறிணைப் பெயர் விரவுப்பெயர் என மூவகைப்படும் என்பதூஉம், அது அவ்விருதிணைப் பொருள்களையும் உணர்த்தும் என்பதூஉம் பெறுதும். உதாரணம் தத்தம் சிறப்புச் சூத்திரத்துட் காட்டுதும்.

**நச்.**

இது நிறுத்த முறையானே பெயர்ச் சொற்குப் பெயரும் முறையும் தொகையும் கூறுகின்றது.

இ-ள்: அவற்றுள்—மேற்கூறப்பட்ட நான்கு சொல்லுள்ளும், பெயர் எனப்படுபவை தெரியுங்காலை—பெயர்ச்சொல் என்று சொல்லப்படுவனவற்றை ஆராயுங்காலை, தோன்றல் ஆறே—அவை தோன்று நெறிக்கண், உயர்திணைக்குரிமையும் - உயர்திணைக்கு உரிமையுடைமையும், அஃறிணைக்கு உரிமையும் - அஃறிணைக்கு உரிமையுடைமையும், ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்—அவ்விருதிணைக்கும் ஒத்த உரிமையுடைமையும், அம்மூஉருவின—அம்மூன்று வேறுபாட்டை உடையவாம், எ-று.

'ஓரன்ன வுரிமைய' என்றதற்கு ஒரு சொல் சொல்லுதற்கண்ணே இரண்டினையும் உணர்த்தா என்று உணர்க.

**கல்.**

என்-எனின், நிறுத்த முறையானே பெயர்ச் சொற்களது பெயரும் முறையும் தொகையும் உணர்த்தல் நுதலிற்று.

இ-ள்: மேற் சொல்லப்பட்ட நான்கு சொல்லுள்ளும் பெயர்ச்சொல் என்று சொல்லப்படுவனவற்றை ஆராயுங்காலத்து உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும் அவ்விரு திணைக்கும் ஒத்த உரிமையுடையனவும் என அம்மூன்று கூற்றன அவை தோன்று நெறிக்கண், எ-று.

அப்பெயர் பெயர்: அம்முறை முறை; அத்தொகை தொகை எனவுணர்க.

---

1, 2. உரிமையவாகியும்—பாடம்.

ஆதி.

தோன்றலாறே-பெயர்கள் தோன்று நெறியால். *எனப்படுப பகுதிப் பொருள் விகுதி-பெயர்.

158. இருதிணைப் பிரிந்த வைம்பாற் கிளவிக்கு
முரியவை யுரிய பெயர்வயி னான. (7)

(இருதிணைப் பிரிந்த ஐம்பால் கிளவிக்கும்
உரியவை உரிய பெயர்வயின் ஆன.)

ஆ. மொ: இல.

Nouns can be classified into five genders of two classes.

இளம்.

உரை: இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவியாதற்குப் பெயருள் உரியன உரியவாம், எ-று.

வ-று: அவன், பெண்மகன், சாத்தன் என னகார வீறு ஆடூஉவிற்கும் மகடூஉவிற்கும் அஃறிணை ஆண்பாற்கும் உரித்தாய் வருதலானும்; அவள் மக்கள் மகள் என ளகார வீறு மகடூஉவிற்கும் பல்லோர்க்கும் அஃறிணைப் பெண்பாற்கும் உரித்தாய் வருதலானும்; பெண்டாட்டி நம்பி எனவும், ஆடூஉ மகடூஉ எனவும் வரும் இகர வீறும் உகார வீறும் இருபாற்கும் உரியவாய் வருதலானும், வினைச் சொற் போல இன்னவீறு

* எனப்படுப—பகுதிப் பொருள் விகுதி என்றது தவறு. சூத்திரத்தில் 'எனப்படுபவை' என்றிருக்கிறது. எனப்படுபவை என்பதை எனப்படுப+வை எனப் பிரித்தல் வேண்டும். வை பன்மை விகுதி. எனப்படுப என்பதும் பன்மை காட்டுவது. எனவே எனப்படுப என்னும் பன்மைச் சொல்லோடு வை என்னும் பன்மை விகுதி சேர்ந்துளது. ஆனால் வை விகுதியின் பன்மைப் பொருள் இதில் இல்லை. ஏன் எனின், பகுதியாகவுள்ள 'எனப்படுப' என்பதே பன்மைப் பெயர். ஆதலின் வை விகுதி தனக்குரிய பொருட் சிறப்பில்லாமல் பகுதிப் பொருளிலேயே அடங்கிவிடுகின்றது. அதனால் வை விகுதி பகுதிப் பொருள் விகுதியாம்.

இன்னபாற்கு உரித்து எனப் பெயர்ச் சொல் ஈறு பற்றி உணர்த் தலாகாமையின் 'உரியவை யுரிய' என்றார். பிறவும் அன்ன.*

சேனா.

இ-ள் : இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவியாதற்குப் பெயருள் உரியன உரியவாம், எ-று.

அவன் பெண்மகன் சாத்தன் என னகரவீறு ஆடூஉவிற்கும், மகடூஉவிற்கும், அஃறிணை யாண்பாற்கும் உரித்தாய் வருத லானும், அவள் மக்கள் மகள் என ளகரவீறு மகடூஉவிற்கும், பல்லோர்க்கும் அஃறிணைப் பெண்பாற்கும் உரித்தாய் வருத லானும், பெண்டாட்டி நம்பி எனவும், ஆடூஉ மகடூஉ எனவும் இகரவீறும் ஊகார வீறும் இருபாற்கும் உரியவாய் வருதலானும் வினைச் சொற் போல இன்னவீறு இன்னபாற்கு உரித்தெனப் பெயர்ச் சொல் ஈறுபற்றி உணர்தலாகாமையின் 'உரியவையுரிய' என்றார். பிறவும் அன்ன.

பல்கும் என்றஞ்சி இன்ன பெயர் இன்னபாற் குரித்தெனக் கிளந்தோதாராயினர். அஃதேல், இவற்றது பாற்குரிமை எற்றாற் பெறுதுமோ வெனின், உரியவை என்றது வழக்கின்கட் பாலுணர்த்துதற் குரியவாய் வழங்கப்படுவன என்றவாறன்றே ; அதனான் வழக்கு நோக்கிக் கொள்ளப்படும் என்பது.

---

* இளம்பூரணர், ''வினைச் சொற்போல.........உரியவை உரிய என்றார்.''என்றதுஎதிர்மறையிலான விளக்கமே. உடன்பாட்டு நிலையில் பெயர் பால் உணர்த்தும் முறையைத் தெளிவுபடுத்தவில்லை. தன் கருத்துக்கு ஆதரவாக ஒரே ஈறு (னகர வீறு) ஒன்றுக்கு மேற்பட்ட பாலில்(ஆண்,பெண், ஒன்று) வருவதைச் சுட்டிக்காட்டி யுள்ளார். ஆனால் அப்படிப்பட்ட சொற்கள் எழுத்து நோக்கில் ஒரே ஈறுதான்: ஆனால் சொல்லியல் நிலை யில் அவை மாறுபட்டவை. ஏன்எனில் அவன் என்பது பகுபதச் சொல்; பெண்மகன் என்பது பகாபதச் சொல். எனவே இரண்டையும் ஒப்புநோக்கக் கூடாது. மேலும் பெயரில் சிறுபான்மையான சொற் களே ஈற்றால் பால் உணர்த்துவன. தொல்காப்பியர் இவைகளைக் குறிப்பிடவில்லை என்பதற்காக ஒரே ஈறு பல பாலுக்குப் பொதுவானது என்று கூற வேண்டிய தில்லை. (செ. வை. சண்முகம் இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் 14வது கருத்தரங்கு ஆய்வுக் கோவை (1982) தொகுதி 4. பக்கம் 80)

மற்றும் 'நஞ்சுண்டான் சாம்' என்பது ஒருபாற்குரிய சொல்லாயினும் நஞ்சுண்டாள்சாம், நஞ்சுண்டார் சாவர், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டன சாம் என ஏனைப் பாற்கும் உரித்தாம் அச்சொல்லென இரு பொருண்மையுணர்த்துகின்றது இச்சூத்திரம் என்றாரால் *உரையாசிரியர் எனின், நஞ்சுண்டல் சாதற்குக் காரணம் என்பான் ஒருபால் மேல் வைத்து நஞ்சுண்டான் சாம் என்றதல்லது, ஆண்டுத் தோன்றும் ஆண்மையும் ஒருமையும் சாதற்குக் காரணம் என்னும் கருத்தினன் அல்லன்; அதனாற் சொல்லுவான் கருத்தொடு கூடிய பொருளாற்றலாற் சாதல் ஏனைப் பாற்கும் ஒக்கும் எனச் சேறல் சொல்லிலக்கணத்திற் கூறப்படாமையான், ஆசிரியர்,

ஒருபாற் கிளவி யெனைப்பாற் கண்ணும்
வருவகைதானே வழக்கென மொழிப (பொருளியல். 28)

என, இப் பொருண்மை பொருளியலிற் கூறினாராகலின் இச் சூத்திரத்திற்கு அஃதுரையாதல் உரையாசிரியர் கருத்தன்றென்க. அல்லதூஉம், பார்ப்பான் கள்ளுண்ணான் என்ற வழிக் கள்ளுண்ணாமை சாதிபற்றிச் செல்வதொன்றாகலின் பார்ப்பனிக்கும் பார்ப்பார்க்கு மல்லது $பிற சாதியார்க்கும் அஃறிணைக்கும் செல்லாமையின், 'ஐம்பாற் கிளவிக்கும் உரிய' என்றல் பொருந்தாமையானும் அவர்க்கது கருத்தன்மையறிக.

**தெய்.**

இதுவும் பெயர்ச்சொற்கெல்லாம் பொது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: இருதிணையினின்றும் பிரிந்த ஐம்பாற் சொற்கும் பெயர்வயின் உரியவை உரியவாம், எ-று.

---

* இக் கருத்து இளம்பூரணத்தில் இல்லை. அதனால் உரையாசிரியர் வேறு இளம்பூரணர் வேறு என்னும் கொள்கைக்கு இதுவும் ஓர் சான்றாகும்.

$ ஐம்பாற் கிளவிக்கும் என்பதை முற்றும்மையாகக் கொண்டமையால் இவ்வாறு எழுதினார். இது தவறு. எச்ச உம்மையாகக் கொண்டு நச்சினார்க்கினியர் கூறியதே பொருந்தும்.

இதனாற் சொல்லியது [1]முன் எடுத்து ஓதப்படுகின்ற பெயர்களைப் பால்விரித்து ஓதுகின்றிலம்; பெயர்களுள் அவ்வப்பாற்குரிய பெயரைப் பாலறிகிளவியாகக் கொள்க என்றவாறு. *இதனானே பெயர்ச்சொற்கு ஈறுவரையறுக்கப்படாது என்பதூஉம் கூறினாராம்.

நச்.

இதுவும் பெயர்க்கண்ணதோர் இலக்கணம் கூறுகின்றது.

இ-ள்: பெயர்வயினான—ஒருபாற் [2]பெயரிடத்து முடிபாக வந்த வினைகள், இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்—இருதிணையினின்றும் பிரிந்த ஐம்பாற் பொருட்கும், உரியவை உரிய—தனித்தனிக் கூறாமல் தானே சென்று உணர்த்தற்கு உரியன உரியவாம், எ-று.

உம்மையால் ஐம்பாலையும் சேர உணர்த்தாது சில பாலை உணர்த்துதற்குரியன உரியவாம் என்றும் கொள்க.

உ-ம்: நஞ்சுண்டான் சாம் என்ற வழி, நஞ்சுண்டல் சாதற்குக் காரணம் என்பான் ஒருபால் மேல் வைத்துக் கூறினானாயினும், அஃது ஒழிந்த நான்குபாற்கும் சாதல் எய்தினமையை உணர்த்தினவாறு காண்க. 'பார்ப்பான் கள் உண்ணான்' என்பது ஏனைய இருபாற்கும் எய்துவித்து நின்றது.

இனிச் சேனாவரையர், "இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவியாதற்கும் பெயருள் உரியன உரியவாம்" என்று பொருள் கூறி "அவன் பெண்மகன் சாத்தன் என னகரவீறு ஆடூஉவிற்கும் மகடூஉவிற்கும் அஃறிணைப்பாற்கும் உரித்தாய் வருதலின் 'உரியவை உரிய' என்றார் என்பது இச்சூத்திரத்துக்குக் கருத்து" என்றாரால் எனின், ஆசிரியர் வினைச்சொல்லை ஈற்றான் அடங்கும் என்று கருதி ஈறுபற்றி ஓதிப் பெயர்ச்சொல்லை ஈற்றானடங்காது பல்வேறு வகையவாய் வரும் என்று

1. 159 முதல் 167 முடிய உள்ள சூத்திரங்களில் ஓதப்படுகின்ற பெயர்கள்.
* சில சொற்களில் பால் காட்டும் விகுதி உள்ளதாகக் கருதலாம் என்பதைத் தெய்வச்சிலையார் அறவே புறக்கணித்து விட்டார். (செ. வை. சண்முகம்.) இ. ப. க. தமன்றம் கருத்தரங்கு ஆய்வுக்கோவை (1982) தொகுதி 4 பக். 81.)
2. பெயர் என்றது வினையாலணையும் பெயரை.

கருதிச் சொல்லாகத் தனித்தனியே எடுத்து ஓதினராதலின், இவ்வெடுத்தோதிய சொற்களான் இவர் கூறிய பொருள் விளங்குதலின் இச்சூத்திரத்திற்கு இதுவே பொருளென்று உணர்க. அன்றியும்,

> ஒருபாற் கிளவி யெனைப்பாற் கண்ணும்
> வருவகை தானே வழக்கென மொழிப (பொருளியல் 28)

என்னும் பொருளியற் சூத்திரத்தான் 'நஞ்சுண்டான் சாம்' என்பது அடங்கும் என்று கூறல் அச்சூத்திரத்தின் கருத்து அறியாது கூறிற்றாம். என்னை? அஃது 'ஒத்த கிழவனும் கிழத்தியும்' (களவியல் 2) என்ற களவியற் சூத்திரத்திற் பான்மை கூறா வழுவை அமைத்தற்கு எழுந்த சூத்திரம் ஆதலின்.

**கல்.**

என்-எனின், இதுவும் பெயர்க்கண்ணே கிடந்ததோர் இலக்கணம் உணர்த்தல் நுதலிற்று-

இ-ள்: இருதிணையினின்றும் பிரிந்த ஐம்பாற் பொருட்கும் ஒருபாற்குரிய தொழில்கள் ஏனைப்பாற்கும் உரியவாம்; இவ்வாறு உரியவாவது எச்சொல்லிடத்தோவெனின், வினைச் சொல்லிடத்தாகாது பெயர்ச்சொல்லிடத்தேயாம், எ-று.

நஞ்சுண்டான்சாம், நஞ்சுண்டாள்சாம், நஞ்சுண்டார் சாவர், நஞ்சுண்டதுசாம், நஞ்சுண்டனசாம் என்பது.

மற்று அவ்வாண்பான்மேற் கூறற்குரிய சாதல் என்னும் வினை மற்றை நான்கு பாற்கண்ணும் தனித்தனிக் கூறாமல் சென்றதென்வுணர்க. உண்டான் என்பதனைப் படுத்தலோசையாற்[1] பெயராக்கிக் கொள்க.

பார்ப்பான் கள்ளுண்ணான் என்பது கள்ளுண்டல் அதற்கு இன்மையின் அஃறிணைப்பால் மேற்செல்லாதாயிற்று.

**வெள்.**

(இளம்பூரணர் சேனாவரையர் ஆகியோரைத் தழுவி அவர் தம் நடையிலேயே உரையெழுதினார்.)

---

1. பெயர்—வினையாலணையும் பெயர்.

**ஆதி.**

இருதிணைகளாகப் பிரிந்துள்ள ஐந்து பாற் சொற்களின்—(திணைபால்களைப் பொதுவாக அறிவிக்க) உரியனவும் உள

திணை பால்களை அறிவிப்பன விகுதிகள்.

அவன்—ன்—உயர்திணை ஆண்பால்
அவள்—ள்—உயர்திணைப் பெண்பால்
அவர்—ர்—உயர்திணைப் பலர்பால்
அது—து—அஃறிணை ஒன்றன்பால்
அவை—வை—அஃறிணைப் பலவின்பால்

நல்லான், நல்லாள், நல்லார், நல்லது, நல்லன, நல்லவை இவற்றில் விகுதி திணை பால் அறிவிப்பது காண்க.

'உரியவை உரிய' என்றமையால் அறிவிக்கும் முறைமையில்லாப் பெயரும் உண்டு என அறிகிறோம்.

| | |
|---|---|
| பல்லன்—ன்—ஆண்பால் | பல்லி—இ—பெண்பால் |
| தந்தை—ஆண்பால் | அத்தை—பெண்பால் |
| மாமன்—ஆண்பால் | மாமி—பெண்பால் |
| அன்னான்—அன்னாள் | நல்லன்—நல்லள் |
| மன்னன்—மன்னி | கள்ளன்—கள்ளி |
| நம்பி—நங்கை | சீமான்—சீமாட்டி |
| பேரன்—பேர்த்தி | பேயன்—பேய்ச்சி |

(பால் விளக்கம்: முறையோடு உற்ற பெயர்களும் உண்டு, முறைமையில்லாப் பெயர்களும் உண்டு என்பது பொருள்)

**சுப்.**

(இளம்பூரணம் நச்சினார்கினியம் இவற்றில்) உள்ள உரை சேனாவரையத்தில் முற்பகுதியில் உள்ளவாறே காணப்படுகின்றது. ஆனால் சேனாவரையரது மறுப்புரையை நன்கு நோக்குமிடத்து "நஞ்சுண்டான்சாம் என்பது ஒருபாற்குரிய சொல்லாயினும் நஞ்சுண்டாள்சாம், நஞ்சுண்டார்சாம், நஞ்சுண்டதுசாம், நஞ்சுண்டனசாம் என ஏனைப்பாற்கும் உரித்தாம் அச்சொல் என இப்பொருண்மையுணர்த்துகின்றது இச்சூத்திரம்" என்பதற்கேற்பவே இளம்பூரணத்தில் உரை இருக்க வேண்டும் என்பது பெறப்படும். அவ்வாறாயின் உரையாசிரியர் மதமும் நச்சினார்க்கினியர் மதமும் ஒன்றேயாகும்.

நச்சினார்க்கினியர் கூறிய உரையிற்கண்ட 'வினைகள்' என்னும்பதம் சூத்திரத்தில் இல்லை. அவர் வருவித்துக் கொண்

டனர். 'கிளவி' என்பதற்குப் 'பொருள்' என்று பொருள் உரைத்தனர். சந்தர்ப்பத்தை நோக்கின் வினைகள பற்றி இங்குக் கூறவேண்டுவதின்று.

முற்சூத்திரத்திற் பெயர் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் அவ்விருதிணைக்கும் உரிய என்றும், கிளவியாக்கம் ஐந்தாவதுசூத்திர முதல் ஒன்பதாவது சூத்திர முடிய னஃகா னொற்று முதலாயின பாலைத் தெரிவிக்கும் கிளவிகள் என்றும்,பதினொன்றாவது சூத்திரத்தில் ''வினையிற்றோன்றும் பாலறி கிளவியும், பெயரிற்றோன்றும் பாலறி கிளவியும், மயங்கியல் கூடா'' என்றும் கூறியிருத்தலால், வினையிற்போலப் பெயரிலும் அக்கிளவிகள் நியதியாய்ப் பாலை உணர்த்துமா என்ற ஐயம் எழ அவ்வாறு பெயரில் நியதி இன்று என்பதற்கே இச்சூத்திரம் ஆசிரியராற் கூறப்பட்டதென்க.

ஆனால் ஆசிரியர் வினைச் சொல்லை ஈற்றான் அடங்கும் என்று கருதி ஈறு பற்றி ஓதிப் பெயர்ச்சொல்லை ஈற்றான் அடங்காது பல்வேறு வகையவாய் வரும் என்று கருதிச் சொல்லாகத் தனித்தனியே எடுத்தோதினராதலின் சேனாவரையர் இச்சூத்திரத்திற்குக் கொள்ளும் பொருள்அச்சூத்திரங்களாலேயே ஊகிக்கப் பெறுவதால், அப்பொருள் கொள்ளாது வேறு பொருளை நச்சினார்க்கினியர் கூறுகின்றார். அவ்வாறு ஊகிக்கப் பெறுமாயின் அவ்விஷயத்தைத் தெளிவாய் ஆசிரியர் கூறுவது குற்றமாகாமையானும், நச்சினார்க்கினியர் கூறும்பொருள் இவ்விடத்துக்குப் பொருந்தாமையானும் சேனாவரையர் உரைத்த பொருளே ஏற்றதாம் என்பது என் கருத்து.

'ஒருபாற் கிளவி எனைப்பாற் கண்ணும், வருவகை தானே வழக்கென மொழிப' (பொருளியல் 28) என்னுஞ் சூத்திரத்திற்குச் சேனாவரையர் போலப் பொதுவாகவே நச்கினார்க்கினியரும் பொருள் கூறவேண்டும். அதனாற் பெறப்படும் பொருள் 'ஒத்த கிழவனும் கிழத்தியும்' என்ற களவியற் சூத்திரத்திற் 'பன்மை கூறா' வழுவை அமைத்தல்' என்று நச்சினார்க்கினியர் கூறினும், 'நஞ்சுண்டான்சாம்' என்பது ஒருபாற்குரிய சொல்லாயினும் நஞ்சுண்டாள்சாம், நஞ்சுண்டார் சாவர், நஞ்சுண்டது சாம் நஞ்சுண்டனசாம் என ஏனைப் பாற்கும் உரித்தாம் அச்சொல்' என்பதையும் கொள்ளுவதற்குத் தடையென்னை?

**சிவ.**

இச்சூத்திரத்திற்கு மூன்று வகையில் கருத்துரைக்கின்றனர் உரையாளர்கள்,

1. ஒரு வினையாலணையும் பெயரைச் சொல்ல அதனிடத்துள்ள வினையானது அச்சொல்லில் உள்ள பாலை மட்டுமன்றி இருதிணையிலும் பிரியும் ஏனைப் பால்களுக்கும் செல்லும். நஞ்சுண்டான்சாம் என்றால் உண்டான் என்னும் ஆண்பால் வினை, உண்டாள்சாம், உண்டார் சாவர், உண்டதுசாம், உண்டன சாம் என ஏனைப்பால்களிலும் செல்வது காணலாம். இக்கருத்தை உரையாசிரியர், நச்சினார்க்கினியர், கல்லாடனார் கூறினர்.

2. வினைச்சொற்கள் ஈற்றான் (விகுதியான்) பால் உணர்த்துதல்போல் பெயர்கள் ஈற்றான் உணர்த்துவன அல்ல ஆதலின் பொருளான் அவ்வப்பாற்கு உரிய சொற்கள் உரியவாம். னகர வீறாயினும் அவன் என்பது ஆண்பாலுக்கும், பெண்மகன் என்பது பெண்பாலுக்கும், வலியான் (கரிக்குருவி) என்பது ஒன்றன்பாலுக்கும் உரியனவாயினமை உதாரணமாம். இக்கருத்து இளம்பூரணர், சேனாவரையர் கூறினர்.

3. இச்சூத்திரத்தின் முன்சூத்திரம் பெயர்ச்சொற்கள் இருதிணைகளுக்கும் உரியன என்று கூறி, பின்னர் வரும் சூத்திரங்கள் அவ்விரு திணைகளிலும் வரும் பெயர்களின் விவரங்களையே கூறியமைதலின்—அதாவது பால் விவரம் கூறாமையின்—இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட இச்சூத்திரம் பெயர்களின் பால் பற்றியதாகும். அப்பால் அறியும் முறை பற்றியதும் ஆகும். அதனால் இச்சூத்திரக் கருத்து, ''இனிவருஞ் சூத்திரங்களில் பெயர்களின் திணை கூறப்பட்டதேயன்றிப் பால் கூறப்படவில்லையாதலின், அப்பெயர்களுள் இருதிணையினின்றும் பிரிந்து தனித்தனிப்பால்களுக்கு உரியனவாகும் பெயர்கள் உண்டு. அவற்றை அவ்வப்பால்களுக்கு உரியவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்'' என்பதாம். இது தெய்வச்சிலையார் கூறியது.

மூன்றாவது கருத்தாகிய 'நஞ்சுண்டான் சாம்' என்பதைக் கொண்ட விளக்கக் கருத்து,

ஒருபாற் கிளவி எனைப்பாற் கண்ணும்
வருவகை தானே வழக்கென் மொழிப

(பொருளியல் 28)

என்னும் பொருளியற் சூத்திரத்தில் கூறப்பட்டது என்று சேனாவரையர் மறுப்பர். அவரை நச்சினார்க்கினியர் மறுத்தார். அதற்கு அவர் இரண்டு காரணம் கூறினார்.

(1) அவன், பெண்மகன், சாத்தன் என்பன ஈற்றால் ஆண்பாலுக்குரிய னகரவீறாயினும் பொருளால்முறையே உயர்திணை

ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒன்றன்பால்களுக்குரியவான என்றாலும் ''அவன் இவன் உவன்'' என்னும் சூத்திரத்தும், ''ஆண்மை யடுத்த'' என்னும் சூத்திரத்தும், அவன் என்பதையும் பெண்மகன் என்பதையும் விதந்தே ஆசிரியர் எடுத்து ஓதிவிட்டமையால் அவற்றை இச்சூத்திரத்தில் உரியவை உரிய எனக்கூறியதாகக் கொள்வது பொருந்தாது. இயற்பெயர் என்றதில் சாத்தன் அடங்குமாதலின் அதையும் உரியவை உரிய எனக்கூறியதில் அடங்கும் எனக் கொள்வது பொருந்தாது.

(2) ''ஒருபாற்கிளவி'' எனனும் களவியற் சூத்திரம் (28) ஆசிரியர் தொல்காப்பியர், தாம் ''கிழவனும் கிழத்தியும்'' (களவியல் 2) என ஒருமையிற் கூறினாலும் பன்மைக்கும் அதாவது கிழவர், கிழத்தியர்க்கும் கொள்க என்பதற்காகக் கூறப் பட்டது. ஆதலின் அச்சூத்திரத்தில் 'நஞ்சுண்டான் சாம்' என்பது பொருந்தாது.

நச்சினார்க்கினியர் மறுப்பும் சிறப்புடையதாகவே காணக் கிடக்கின்றது.

உரையாளர் கருத்துகள் மூன்றனுள் தெய்வச்சிலையார் கருத்தே மறுக்கப்படாதது. மறுக்கப்படுவதாயின் நச்சினார்க் கினியர் கல்லாடனாரால் மறுக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவர் கள் தெய்வச்சிலையார் உரையைக் கருதவில்லை போலும். தெய்வச்சிலையாரும் உரையாசிரியர், இளம்பூரணர், சேனா வரையர் உரைகளை மறுத்தார் இல்லை. தம் உரையையே எழுதிச் சென்றார்.

உரையாசிரியர்கருத்தைச் சேனாவரையரும் சேனாவரையர் (இளம்பூரணர்) கருத்தை நச்சினார்க்கினியரும் மறுத்து விட்டமையால் மறுக்கப்படாத தெய்வச்சிலையார் கருத்தைக் காணலாம். இச்சூத்திரத்தின் பின்னர் உரைக்கப்பட்ட சூத்திரங் கள் இருதிணைப் பெயர்களைப்பால் விவரமின்றிக் கூறியுள்ளமை யால் அப்பெயர்களின் பால்களைப் பிரித்தறிதலைப் பற்றிக்கூறு கிறது இச்சூத்திரம் என்ற தெய்வச்சிலையார் கருத்தும் பொருந்த வில்லை என்னலாம். கிளவியாக்கத்தில் ஐம்பால்களுக்கும் உரிய ஈறுகள் கூறப்பட்டமையால் அவற்றைக்கொண்டு பின்னர்க்கூறப் பட்ட பெயர்களைப் பால் விவரம் அறியலாம். அவன், அவள், அவர் அது, அவை முதலாக வெளிப்படையாகவே ஆசிரியர் கூறிய வற்றுக்குக் குறிப்பால் இன்னபால் என அறிய வேண்டிய தில்லை,

இனி இச்சூத்திரக் கருத்துபற்றி என் கருத்து வருமாறு:- ஈறுபற்றி அறிய முடியாதனவும் இச்சூத்திரத்தின் பின்னர் உள்ள சூத்திரங்களிற் சொல்லப்படாதனவும் ஆனபெயர்கள் மிகவுண்டு. அவைகளும் இருதிணையில் பிரிந்துள்ள ஐம்பால்களுக்கு (—ஐம் பால்களுள் ஒவ்வொன்றற்கு) உரிய பெயர்கள் உரியவாம் என்பது. உதாரணம் :- குயின், அழன், பயின், கடான், வயான் முதலிய பெயர்கள் னகரவீறாயினும் அஃறிணை ஒன்றற்பாற் குரியனவாம் (மொழிமரபு 49). பெண்டாட்டி என்பது பெண் பாற்குக் கூறப்பட்டதேயன்றி (பெய 9) கிழத்தி, தோழி போலும் சொற்கள் கூறப்படவில்லை அவை உயர்திணைப் பெண்பாலுக் குரியனவாம். நம் ஊர்ந்து வரும் ஐ ஆகிய நங்கை பெண்பாலுக்கு கூறப்பட்டதேயன்றி (பெய. 9) விடலை என்னும் ஆண் பாலுணர்த்தும் ஐ இறுதி கூறப்படவில்லை; அதுவும், குரிசில், தோன்றல் போலும் லகரவீற்றுச் சொற்களும் வேள் எனவரும் ளகரவீற்றுச் சொல்லும் ஆண்பாலுக்குரியனவாக வரும்.

### 10 உயர்திணைப் பெயர்கள்

**159.** அவ்வழி
அவனிவ னுவனென வரூஉம் பெயரு
மவளிவ ளுவளென வரூஉம் பெயரு
மவரிவ ருவரென வரூஉம் பெயரு
மியானியா நாமென வரூஉம் பெயரு
மியாவ னியாவ ளியாவ ரென்னு
மாவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
பாலறி வந்த உயர்திணைப் பெயரே. (8)

(அவ்வழி
அவன் இவன் உவன்என வரூஉம் பெயரும்
அவள் இவள் உவள்என வரூஉம் பெயரும்
அவர் இவர் உவர் என வரூஉம் பெயரும்
யான் யாம் நாம் என வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவர் என்னும்
ஆவயின் மூன்றோடு அப் பதினைந்தும்
பால் அறி வந்த உயர்திணைப் பெயரே)

**ஆ. மொ. இல:**

Of those
The nouns which stand as 'avan', 'ivan' 'uvan'

The noun which stand as 'avaḷ' 'ivaḷ', 'uvaḷ'
The nouns which stand aa 'avar', 'ivar', 'uvar'
The nouns which stand as 'yān', 'yām', 'nām'
'yāvan', 'yāvaḷ', 'yāvar'—these three including
those fifteen are high class nouns of gender denoting
nature

பி. இ. நூ:

அன்ன பிறவும் உயர்திணை மருங்கின்' (163) என்னும் சூத்திரத்துக் காண்க.

இளம்.

உரை : மூவீற்றதாக மேற்சொல்லப்பட்ட பெயருள் அவன் என்பது முதலாக யாவர் என்பது ஈறாகச் சொல்லப்பட்ட பதினைந்தும் பால்விளங்க நிற்கும் உயர்திணைப் பெயர், எ-று.

சேனா.

இ-ள் : மூவகையாக மேற் சொல்லப்பட்ட பெயருள் அவன் என்பது முதலாக யாவர் என்பது ஈறாகச் சொல்லப்பட்ட பதினைந்தும் பால் விளங்க நிற்கும் உயர்திணைம் பெயர், எ-று.

யான், என்பது ஒருவன் ஒருத்தி என்னும் பகுதி யுணர்த்தா தாயினும், [1]அத்திணை ஒருமை யுணர்த்தலின் பாலறிவந்த பெயராம். அல்லதூஉம் பாலறிவந்த எனப் [2]பன்மைபற்றிக்கூறினார் எனினும் அமையும்.

தெய்.

நிறுத்த முறையானே உயர்திணைப் பெயராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

1. ஒருமை பன்மைகளை ஒருமைப்பால் பன்மைப்பால் என வழங்குவராதலின் இங்கு ஒருமைப்பால் என்ற கருத்தில் யான் என்பது சேரும். யாம் நாம் என்பன பன்மைப் பால் எனப்படும்.
2. பதினைந்து பெயர்களுள் 'பன்னிரண்டற்குப்பால் விளங்க, யான் யாம் நாம் என்பனவற்றிற்கு மட்டும் ஆண் பெண் பலர் என்னும் பால்கள் விளங்காமையின் பன்மைபற்றிப் பால் அறிவந்த என்றார் எனினும் ஆம் என்க,

இ-ள் : மேற் சொல்லப்பட்ட பெயரிடத்து அவன் முதலாகிய சுட்டுப் பெயர் ஒன்பதும், யான் முதலாகிய தன்மைப் பெயர் மூன்றும் யாவன் முதலாகிய வினாவின் பெயர் மூன்றும் ஆய அப்பதினைந்து பெயரும் பால் விளங்கவந்த உயர்திணைப் பெயராம், எ-று.

யான் என்பது ஒருமையுணர நின்றது.

**நச்.**

இது முறையானே உயர்திணைப்பெயரை உணர்த்துகின்றது.

இ-ள் : அவ்வழி—மூன்று கூற்றாக முற்கூறிய பெயருள் அவன் இவன் உவன் என வரூஉம் பெயரும் அவள் இவள் உவள் என வரூஉம் பெயரும் அவர் இவர் உவர் என வரூஉம் பெயரும்- அவன் என்பது முதலாகிய கட்டுப் பெயர் ஒன்பதும், யான் யாம் நாம் என வரூஉம் பெயரும் — யான் என்னும் தனித் தன்மைப் பெயர் ஒன்றும் யாம் என்னும் படர்க்கையுளப் பாட்டுத் தன்மைப் பெயர் ஒன்றும் நாம் என்னும் முன்னிலை யுளப் பாட்டுத் தன்மைப்பெயர் ஒன்றும், யாவன் யாவள் யாவர் என்னும் ஆவயின் மூன்றோடு அப்பதினைந்தும் — யாவன் முத லிய வினாப் பொருளிடத்துப் பெயர் மூன்றுமாயுள்ள அப் பதி னைந்து பெயரும், பால்அறிவந்த உயர்திணைப் பெயரே — ஒருவன் ஒருத்தி பலர் என்னும் மூன்று பாலினையும் அறிய வந்த உயர்திணைப் பெயராம், எ-று.

யான் யாம் நாம் என [3] இருபாற்கும் பொதுவேனும், குறிப் பால் உணர்ந்துழி ஒருபால் உணர்த்தியே நிற்றலின், பால் அறிய வந்த உயர்திணைப் பெயராயிற்று.

நம்பி, பெண்டாட்டி என இகர ஈறும், ஆடூஉ, மகடூஉ என ஊகார ஈறுகளும், பிற ஈறுகளும் இருபாற்கும் உரிய வாய் வருத லின் ஈறுபற்றி ஓதாது இச்சூத்திரம் முதலாகப் பெயர்பற்றி ஓதினார்-

**கல்.**

என் - எனின், நிறுத்த முறையானே உயர்திணைப் பெயர் உணர்த்தல் நுதலிற்று.

இ-ள் : அவ்வாறு மூன்று கூற்றவாய் நின்ற பெயர்களிடத்து அவன் என்பது முதலாக உவர் என்பது ஈறாக ஓதப்பட்ட சுட்டுப் பெயர் மும்மூன்று என்பதும், யான் என்னுந் தனித்தன்மைப் பெயர் ஒன்றும், யாம் என்னும் படர்க்கையுளப்பாட்டுத் தன்

மைப் பெயர் ஒன்றும், நாம் என்னும் முன்னிலையுளப்பாட்டுத் தன்மைப் பெயர் ஒன்றும், யாவன் யாவர் யாவள் என்று சொல்லப்படுகின்ற அவ்வினாவிடத்துப் பெயர் மூன்றுமாகப் பதினைந்தும் ஒருவன் ஒருத்தி எனப் பாலறிவந்த உயர்திணைப் பெயராம், எ-று.

ஆதி.

ஆய்வு : ஆண் பெண் பலர்பால்கள் உயர்திணைக்கு உரியவை. யான் யாம் நாம் எவ்வாறு பால் காட்டும்? இவை ஆண் பெண் இருபாற்கும் உரிய பொதுப் பெயர்கள். ஆண் பெண் எனப் பால் உணர்த்தவில்லை. ஆதலின், பால் ஒருமை பன்மை எனப் பொருள்கோடலே சாலும். சூத்திரம் 167 இதே பொருள் தருவது கருதத்தக்கது. பால் காட்டாதது எவ்வாறு உயர்திணையாகும்? ஒரு விளக்கம் :

3. இருபால் — ஆண்பால் பெண்பால்.

திருமணம் புரிந்தும் பிரம்மச்சாரி என்பர். இராமகிருஷ்ணர் மனைவியோடிருந்தும் சந்நியாசி. எவ்வாறு? பயில் முறையினால். அவ்வாறே நான் நீ இரண்டும் ஆண்பால் பெண்பால் காட்டாது நிற்பினும் பயில்முறையால் உயர்திணையாம். ஆகவே சூத்திரத்துக்கு 'அப்பதினைந்தும் உயர்திணையவே' என்று பொருள் காண்க. 'பாலறிவந்த' இடைப்பிறவரல். ஆண் பெண் பலர் எனப் பால் காட்டற்குரிய * நீ நீவிர் இங்கு இடம் பெறற்குரிய சொற்கள். $ ஆய்வு : ஆசிரியர் உயர் திணைப் படர்க்கை ஒருமைக்கும் அஃறிணைக்கும் உரியதாகச் சொல்லும் 'செய்யும்' வினைமுற்று உலக வழக்கில் முன்னிலைப் பன்மை வினைமுற்றாக நிற்கிறது.

சுப்.

இச்சூத்திரவுரையில் யாம் என்பது படர்க்கையுளப் பாட்டுத் தன்மைப் பெயர் என்றும், நாம் என்பது முன்னிலையுளப் பாட்டுத் தன்மைப் பெயர் என்றும் நச்சினார்க்கினியர் கூறுவது நோக்கத்தக்கது. இவ்வாறு ஆசிரியர் தொல்காப்பியனாராலும், உரையாசிரியர் சேனாவரையர் இவ்விருவராலும் கூறப்பட்டதாகத் தெரியவில்லை. நச்சினார்க்கினியர் காலத்தில் இவ்வாறு வழங்கிற்றுப் போலும்.

---

* இக்கூற்று பொருந்தாது, நீ நீவிர் விரவுப் பெயர் ஆதலின்.
$ இப்பகுதி தேவையற்றது.

160. ஆண்மை யடுத்த மகனென் கிளவியும்
பெண்மை யடுத்த மகளென் கிளவியும்
பெண்மை யடுத்த விகர விறுதியு
நம்மூர்ந்து வரூஉ மிகரவை காரமு
முறைமை சுட்டா மகனு மகளு
மாந்தர் மக்களென்னும் பெயரு
மாடூஉ மகடூஉ வாயிரு கிளவியுஞ்
சுட்டுமுத லாகிய வன்னு மானு
மவைமுத லாகிய பெண்டென் கிளவியு
மொப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ
யப்பதி னைந்து மவற்றோ ரன்ன (9)

(ஆண்மை அடுத்த மகன்என் கிளவியும்
பெண்மை அடுத்த மகள்என் கிளவியும்
பெண்மை அடுத்த இகர இறுதியும்
நம்ஊர்ந்து வரூஉம் இகர ஐகாரமும்
முறைமை சுட்டா மகனும் மகளும்
மாந்தர் மக்கள் என்னும் பெயரும்
ஆடூஉ மகடூஉ அஇரு கிளவியும்
சுட்டுமுதல் ஆகிய அன்னும் ஆனும்
அவைமுதல் ஆகிய பெண்டுஎன் கிளவியும்
ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ
அ பதின்ஐந்தும் அவற்று ஓர் அன்ன.)

ஆ. மொ: இல.

The word 'mahan' which follows 'āṇmai'
The word 'mahḷ' which follows 'peṇmaı'
The 'ikara' ending which follows 'peṇmai'
'i' and 'ai' which apppear following the root 'nam'
'mahan' and 'mahaḷ' which do not denote the relationship of son and daughter.
The nouns 'mānthar' and 'makkaḷ'
Those two nouns 'ādūu' and 'mahadūu'
'An and 'ān' which have demonstratives as initials
The female-denoting word having those (demonstratives) as initials.
Includin the comparison-denoting word—
All those fifteen are of the same nature.

## பி.இ.நூ:

அன்ன பிறவும் உயர்திணை (163) என்னும் சூத்திரத்துக் காண்க.

## இளம்.

உரை இப்பெயர் பதினைந்தும் மேற்கூறப்பட்டன போலப் பாலறியவந்த உயர்திணைப் பெயராம், எ-று.

ஆண்மகன் என்பதும் பெண்மகள் என்பதும், பெண்டாட்டி என்பதும் நம்பி என்பதும் நங்கை என்பதும், முறைமைப் பெயரல்லாத மகன் மகள் என்பனவும், மாந்தர் மக்கள் என்பனவும், ஆடூஉ மகடூஉ என்பனவும், சுட்டுமுதலாகிய அவ்வாளன் இவ்வாளன் உவ்வாளன் என்பனவும், அம்மாட்டான் இம்மாட்டான் உம்மாட்டான் என்பனவும், சுட்டு முதலாகிய அப்பெண்டு இப்பெண்டு உப்பெண்டு என்பனவும், பொன்னன்னான் பொன்னன்னாள் பொன்னன்னார் எனவரும் உவமக்கிளவியும் உயர்திணைப் பெயராம்.

## சேனா.

இ-ள் : இப்பெயர் பதினைந்தும் மேற்கூறப்பட்டன போலப் பாலறிவந்து உயர்திணைப் பெயராம், எ-று.

உ-ம் : ஆண்மையடுத்த மகன் என் கிளவி — ஆண்மகன் என்பது. ஒற்றுமை நயத்தான் [1]ஆண்மையுணர்த்துஞ் சொல்லை ஆண்மை என்றார். இது பெண்மையடுத்த என்புழியும் ஒக்கும்.

பெண்மை யடுத்த மகள் என் கிளவியும் - பெண்மையடுத்த இகர இறுதியுமாவன: பெண்மகள் பெண்டாட்டி என்பன.

நம்மூர்ந்து வரூஉம் இகரமும் ஐகாரமுமாவன :- நம்பி நங்கை என்பன. நமக்கின்னார் என்னும் பொருள்பட வருதலின் 'நம்மூர்ந்து வரூஉம்' என்றார். அவை நம் என்பது முதனிலையாக அப்பொருளுணர்த்தாவாயின், நம்மூர்ந்து வரூஉம் இகரமும் நம்மூர்ந்து வரூஉம் ஐகாரமும் எனப் பிரித்துக் கூறல் வேண்டும் என்பது.

---

1. ஆண் (என்னும் சொல்லை) அடுத்த மகன் என்ன வேண்டுவது ஆண்மை யடுத்த மகன் என்று சொல்லப் பட்டமையின் இவ்வாறு எழுதினார்.

இவை உயர் சொல்.

முறைமை சுட்டா மகனும் மகளுமாவன — முறைப் பெயரன்றி மகன் மகள் என ஆடூஉ மகடூஉ என்னுந் துணையாய் வருவன.

மாந்தர் மக்கள் என்பன — பன்மைப் பெயர்.

ஆடூஉ மகடூஉ என்பன மேற் சொல்லப்பட்டன.

சுட்டு முதலாகிய அன்னும் ஆனும் ஆவன — அவ்வாளன் இல்வாளன், உவ்வாளன், அம்மாட்டான், இம்மாட்டான் உம் மாட்டான் என்பன. இவற்றுள் ஆன்ஈறு இக்காலத்துப் பயின்று வாரா.

அவை முதலாகிய பெண்டு என்கிளவி இக்காலத்து விழுந்தன போலும். [2]'பெண்டன் கிளவி' யென்று பாடம் ஓதி அவை யாவன அவ்வாட்டி இவ்வாட்டி உவ்வாட்டி என்பாரும் உளர்.

ஒப்பொடு வரூஉம் கிளவியாவன — பொன்னன்னான் பொன்னன்னாள் என்னுந் தொடக்கத்தன.

[3]இவை மேலன போலப் பயின்று வாராமையின் அவற் றோடு ஒருங்கு வையாது வேறு கூறினார்.

**தெய்.**

இதுவுமது.

இ-ள் : ஆண்மையடுத்த மகன் என்பது முதலாக ஓதப்பட்ட பதினைந்து பெயரும் பால் விளங்க வந்த உயர்திணைப் பெயராம், எ-று.

ஆண்மையடுத்த மகன் என்பது ஆண்மகன். பெண்மை யடுத்த மகள் என்பது பெண்மகள்.

பெண்மையடுத்த இகர இறுதி — பெண்டாட்டி. இகர இறுதியையுடையது இறுதி என்றாயிற்று. இவ்வுரை நம்பி நங்கை என்பனவற்றிற்கும் ஒக்கும்.

நம்மூர்ந்து வரூஉம் இகர ஐகாரம் என்பது நம்பி, நங்கை என்பன.

---

2. பெண்டென்கிளவி (பெண்டு + என் கிளவி) பெண்டு என்னும் சொல். பெண்டன் கிளவி = (பெண்தன்னை) பெண்ணை யுணர்த்தும் சொல்.

3. இவை — இச்சூத்திரத்துட் கூறப்பட்டவை.

முறைமை சுட்டா மகனும் மகளும் என்பது முறைப் பெயரைக் குறியாது உயர்திணைப் பொருட்குப் பெயராகி மகன் மகள் என வரும்.

மாந்தர் மக்கள் என்னும் பெயராவன மாந்தர் மக்கள் எனப் பொருட் பன்மை யுணர வருவன.

ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயரும் என்பது ஆடூஉ மகடூஉ என்பன.

சுட்டு முதலாகிய அன்னும் ஆனும் ஆவது சுட்டெழுத்தை முதலாகவுடைய அன் ஆன் என்னும் சொல்லீறாகி வருவன. அது சினையிற் கூறும் முதலறி கிளவியாகிய பெயர்க்குப் பெயராயிற்று. அத்தன்மையன் அத்தன்மையான் அன்னான் அனையாள் என வருவன. ஏனைச் சுட்டோடும் ஒட்டிக் கொள்க. [4]இவை உவமை குறியாது முன்னம் சில குணத்தை யடுத்து அத்தன்மையான் எனப் பண்பு குறித்து வரும்.

அவை முதலாகிய பெண்டென் கிளவி என்பது சுட்டெழுத்தை முதலாக உடையவாகிப் பெண்மையுணர வரும் சொல். அத்தன்மையள் அத்தன்மையாள் அன்னாள் அனையாள் என்பன.

ஒப்பொடு வருஉங் கிளவி உவமிக்கப்படும் பொருளோடு [1]அடுத்து வரும் பெயர். கண்ணன்னான், கண்போல்வான், பொன்னனையான், குரங்கன், [2]குரங்கி என்பனவும் அவை. அஃதேல் அன்னார் அனையார் எனச் சுட்டு முதலாகிய பன்மை யுணர வரும் பெயர் கூறாதது என்னையெனின் அவை பெரு [3]வழக்கின அன்மையான் ஈண்டு ஓதிற்றிலராயினும் அன்ன பிற என்பதனாற் கொள்க.

நச்.

இதுவுமது.

---

4. அத்தன்மையான் — அத்தன்மை போன்றவன் எனப் பொருள்படாது அத்தன்மையுடையவன் எனப் பொருள் படும்.

1. ஒத்து—பாடம்
2. குரங்கன், பேயன்—பாடம்
3. வழக்கின்மையான்—பாடம்.

இ—ள்: ஆண்மையடுத்த மகன் என் கிளவியும்—ஆளும் தன்மையடுத்த ஆண் மகன் என்னும் சொல்லும், பெண்மை யடுத்த மகள் என் கிளவியும்—கட்புலனாயதோர் அமைதித் தன்மையடுத்த பெண் மகள் என்னும் சொல்லும், பெண்மை யடுத்த இகர இறுதியும்—கட்புலனாயதோர் அமைதித் தன்மை யடுத்த இகர வீற்றுப் பெண்டாட்டி என்னுஞ் சொல்லும், நம் ஊர்ந்து வரூஉம் இகர ஐகாரமும்—நம் என்னும் முதல் நிலையை ஊர்ந்து நமக்கு இன்னார் என வரூஉம் இகர ஐகார வீற்று நம்பி நங்கை என்னும் சொல்லும், முறைமை சுட்டா மகனும் மகளும்—முறைப் பொருண்மை கருதாத மகன் மகள் என்னுஞ் சொல்லும், மாந்தர் மக்கள் என்னும் பெயரும்—மாந்தர் மக்கள் என்னும் பன்மைச் சொல்லும், ஆடூஉ மகடூஉ ஆயிரு கிளவியும் —ஆடூஉ மகடூஉ ஆகிய அவ்விருவகைச் சொல்லும், சுட்டு முதலாகிய அன்னும் ஆனும்—சுட்டெழுத்தை முதலாகவுடைய அவ்வாளன் இவ்வாளன் உவ்வாளன் அன்னன் அனையன் என்னும் அன் ஈற்றுச் சொல்லும் அம்மாட்டான் இம்மாட்டான் உம்மாட்டான் அன்னான் அனையான் என்னும் ஆன் ஈற்றுச் சொலும், அவை முதலாகிய பெண்டு என் கிளவியும் —அச்சுட்டெழுத்தினை முதலாக உடைய அப்பெண்டு இப்பெண்டு உப்பெண்டு என்னும் சொல்லும், ஒப்பொடுவரூஉம் கிளவியொடு தொகைஇ—ஒப்புமைப் பொருள்பற்றி வரும் பொன் அன்னான் பொன் அன்னாள் பொன் அன்னார் என வருஞ் சொல்லோடு தொக்கு, அப்பதினைந்தும் அவற்றோரன்ன —அப்பதினைந்து பெயர்ச்சொல்லும் முற்கூறிய பெயர் போலப் பாலறிய வந்த உயர்திணைப் பெயராம், எ-று.

336481

ஆண்மை பெண்மை என்பனவற்றிற்கு இவ்வாறு பொருள் உரையாக்கால் கூறியது கூறலாம். இவை ஆளும் மகன் ஆண் மகன், பெண்ணாகிய மகள் பெண் மகள் என விரியும், பெண்டாட்டி—பெண்மையாள்கின்றவள். நம்பி நங்கை-உயர் சொல். மகள் என்பதுபிரியாது ஒரு சொல்லாயே நின்று பெண்மையுணர்த்திற்று,

494.8111 SIV

பெண்டன் கிளவி என்று பாடம் ஓதி அவ்வாட்டி இவ்வாட்டி உவ்வாட்டி என்பாரும் உளர்.

'ஊரார் பெண்டெனமொழிப' (ஐங்குறு. 113) 'என்னை நின், பெண்டெனப் பிறர் கூறும் பழி மாறப் பெறுகற்பின்' (கலி. 77:10-11) எனச் சான்றோர் கூறலின், 'பெண்டு' என்பதே பாடம். 'அப்பெண்டு' என்னும் சுட்டு 'கடிசொல் இல்லை' (எச்ச. 56) என்பதால் 'பெண்டு' என நின்றது.

கல்.

எள்-எனின், இதுவும் உயர்திணைப் பெயர் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: **ஆண்மை** என்னும் சொல்லை முன்னடுத்த ஆண் மகன் என்னும் பெயர்ச்சொல்லும், பெண்மைஎன்னுஞ்சொல்லை முன்னடுத்த பெண்மகள் என்னுஞ் சொல்லும், பெண்மை என்னும் சொல்லை முன்னடுத்த பெண்டாட்டி என்னும் சொல்லும், நம் என்பதை அடுத்து வருகின்ற இகர ஐகார ஈற்று நம்பி நங்கை என்னும் பெயர்ச் சொற்களும், முறைப் பொருண்மையைக் கருதாத மகன் மகள் என்னும் பெயர்ச்சொற் களும், மாந்தர் மக்கள் என்னும் பெயர்ச்சொற்களும், ஆடூஉ மகடூஉவாகிய அவ்விருவகைச் சொற்களும், [1]சுட்டெழுத்தாகிய அகரத்தை முதலாகவுடைய அவ்வாளன் இவ்வாளன் உவ்வாளன் என்னும் அன்னீற்றுப் பெயர்ச்சொல்லும், அம்மாட்டான் இம் மாட்டான் உம்மாட்டான் என்னும் ஆன்ஈற்றுப் பெயர்ச் சொல்லும், இன்னும் அச்சுட்டெழுத்தை முதலாகவுடைய அவ்வாட்டி இவ்வாட்டி உவ்வாட்டி எனப் பெண்டாட்டி என்னும் பொருண்மையுணர வரும் பெயர்ச்சொல்லும், பொன் னன்னான், பொன்னன்னாள், பொன்னன்னார் என ஒப்புமைப் பொருண்மையோடு வரும் பெயர்ச் சொல்லோடு தொக்க பதினைந்து சொல்லும் மேற் கூறிய பெயரே போலப் பாலறி வந்த உயர்திணைப் பெயராம், எ-று.

ஆதி.

உ-ம்: 1. மகன் 2. மகள் 3. செல்வி குமாரி, 4. நம்பி 5. நங்கை 6. நல்லான் வீரன் பையன் தோன்றல் பெருமான் விடலை 7. நல்லாள் மங்கை அரிவை மடந்தை மடவரல் பெருமாட்டி பிராட்டி 8. மாந்தர் 9. மக்கள் 10. **ஆண்** 11. பெண் 12. இப்படியன் இந்நிறத்தன் 13. இப்படியான் இந்நிறத்தான் இவ்வுருவன் இவ்வடிவான் 14. அம்மை அம்மாள் அவ்வைஅத்தை 15 அன்னான் அன்னாள்.

6, 7 முறைமை சுட்டாப்பெயர் என்றமையால் 1 முறைமை சுட்டுப் பெயராகக் கொள்ளலாம். மகன் போன்று அப்பன், அண்ணன், கணவன், மாமன் இவற்றையும் கருதுக. (ன் ஈறு பெற்றவை).

---

1. சுட்டெழுத்தை முதலாகவுடைய அவ்வாளன் — தெ. பொ. மீ. பதிப்புப்பாடம் இதுவே நன்று.

அவ்வாறே 2. அக்காள் அம்மாள் அம்பாள் இளையாள் மூத்தாள் (ள் ஈறு பெற்றவை)

8, 9 மாந்தர் மக்கள் பாற் பொதுமையாகும். ஆசிரியர் அவற்றைத் தனித்து உணரக் கோருகிறார் 3பாலும்,

12, 13 அவன் இவன், அவள் இவள் முந்திய சூத்திரத்தில் வந்துள்ளமையால் இங்குக் கூறப்படவில்லை

**சுப்.**

இச்சூத்திரவுரையில் 'அவைமுதலாகிய பெண்டென் கிளவி' என்பதற்கு உதாரணமாக உரையாசிரியர் அப்பெண்டு இப்பெண்டு உப்பெண்டு இவற்றைக் கூறினர். சேனாவரையர் 'பெண்டென்கிளவி இக்காலத்து விழுந்தன போலும்' என்றார். நச்சினார்க்கினியர் உரையாசிரியர் கூறிய உதாரணங்களையே கூறி, ''அப்பெண் டென்னுஞ் சுட்டு 'கடிசொல்இல்லை'(எச்ச 53) என்பதனாற் 'பெண்டு' என நின்றது' என்றார் இதனால் தொல்காப்பியர் காலத்தில் பெண்டு என்பது சுட்டோடுதான் வழங்கிற்றென்பது அவர் கொள்கையாதல் பெறப்படும்.

'பெண்டென் கிளவி' என்பதற்குப் பாடாந்தரமாகப் 'பெண்டன்கிளவி' என்று ஓதுவாருமுளர் என்று சேனாவரையர் கூறியுள்ளார். நச்சினார்க்கினியர் 'ஊரார் பெண்டெனமொழிப' 'என்னைநின்—பெண்டெனப் பிறர் கூறும் பழிமாறப் பெறு கற்பின்' எனச் சான்றோர் கூறலிற் பெண்டு என்பதே பாடம் என்றார். இம்மறுப்பு ஏற்றதாகத் தோன்றவில்லை.

தெய்வச்சிலையார் 'பெண்டென் கிளவி' என்பதற்கு அத்தன்மையள், அத்தன்மையாள், அன்னாள், அனையாள் என்பவற்றை உதாரணமாகக் கூறினர். ஆதலின் அதற்கு அள் ஆள் என்பனவே பொருளெனக் கொண்டனர் என்பது வெளிப்படை. சேனாவரையரின் பாடாந்தரத்தாற் கூறும் பொருளும் தெய்வச்சிலையார் பொருளும் ஒன்றாகலாம்.

இச்சூத்திரத்திலுள்ள 'சுட்டு முதலாகிய அன்னும் ஆனும்' என்பதனால் அவன் இவன் உவன் என்பன அடங்குமாதலான் முற்சூத்திரத்தில் அவை வேண்டா எனின், அற்றன்று; முற்சூத்திரத்தில் ஆசிரியர் சர்வநாம சப்தங்களையும் இச்சூத்திரத்தில் அன்னாள் அனையாள் போன்ற ஏனைய பெயர்களையும் உணர்த்தினர். ஆதலின் ஆண்டு அவன் இவன் உவன் என்பன வேண்டும் என்பது அமையும்.

பி. கு.

இச்சூத்திரத்துள்ளன தனியே கூறப்பட்டமைக்குப் பூவராகம் பிள்ளை கூறும் காரணம் சிறப்புடையது, வருமாறு:—

முற்சூத்திரத்திற் கூறப்பட்டவை எல்லாம் தனிமொழிகளாக நின்று உயர்திணைப் பெயராயினவை. இச்சூத்திரத்தில், ஆண்மையடுத்தமகன், பெண்மையடுத்தமகள், பெண்மையடுத்த இகர இறுதி, ஒப் பொடு வரூஉம்கிளவி இவைகள் தொடர்மொழி யாக நின்று உயர்திணைப்பொருள் உணர்த்துவன. முறைமை சுட்டாமகன், மகள் என்பன முறைமை யுணர்த்துங்கால் பொதுப் பெயர் ஆதல் உடையன. மாந்தர் மக்கள் என்பன ஆண்பால் பெண்பால் ஆகிய ஒருமை யுணர்த்தாமல் பன்மைக்கு மட்டும் வருவன. ஆடூஉ மகடூஉ என்பன ஆண்பெண் என்ற பொருளே யுடையன; உயர்திணைக்கேயுரிய சிறப்புச் சொற்களல்ல: ஆயினும் உயர்திணைக்கேயுரியவைகளாக வழங்கப்பட்டு வரு கின்றன. ''ஆடூஉவறிசொல் மகடூஉவறி சொல்'' (கிளவி. 2) என்ற சூத்திரவுரையில் ''ஆண்மகனை ஆடூஉவென்றலும் பெண் டாட்டியை மகடூஉவென்றலும் பண்டையார் வழக்கு'' என்று கூறப்பட்டிருத்தல் காண்க. அன்றியும், ஆடூஉ மகடூஉவென்பன பலர்பாலுக்கு வருதல் இல்லை. நம்பி நங்கை என்பன பொது வாக ஆண்பாலையும் பெண் பாலையும் உணர்த்தும் சொற் களல்ல. நம்பி ஆடவருள் உயர்ந்தானையும் நங்கைபெண்டிருள் உயர்ந்தாளையும் உணர்த்துவன.

இவ்வாறு இச்சூத்திரத்திற் கூறப்பட்ட பெயர்கள் முற் சூத்திரத்திற் கூறப்பட்ட பெயர்களினின்றும் வேறுபடுதலால் இவற்றை வேறுசூத்திரமாகக் கூறினார் என்றும் கொள்ளலாம்.

நம்பி நங்கை என்பன 'நம்' என்னும் பகுதியடியாக இகர விகுதியும் ஐகார விகுதியும் பெற்று, நமக்கு இன்னான், நமக்கு இன்னாள் என்னும் தொடர்பு உணர்த்தி அந்நிலையிலே உயர் வும் உணர்த்தி வரும் எனக் கொள்க.

**161. எல்லாரு மென்னும் பெயர்நிலைக் கிளவியு**
**மெல்லீரு மென்னும் பெயர்நிலைக் கிளவியும்**
**பெண்மை யடுத்த மகனென் கிளவியு**
**மன்ன வியல வென்மனார் புலவர்** (10)

(எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்

பெண்மை அடுத்த மகன்என் கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர்)

**ஆ. மொ: இல.**

The words 'ellārum' and 'ellīrum' and 'mahan' standing after 'peṇmai'— denoting word are of the same nature, say the scholars.

**பி. இ. நூ:**

'அன்ன பிறவுல் உயர்திணை' (163) என்னும் சூத்திரத்துக் காண்க.

## இளம்.

உரை: எல்லாரும் எனவும் எல்லீரும் எனவும் பெண்மகன் எனவும் வரும் மூன்றும் மேற்கூறப்பட்டன போலப் பாலறிய வந்த உயர்திணைப் பெயராம், எ-று.

[1]புறத்துப்போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண் பாலாரைப் 'பெண்மகன்' என்று வழங்குப. பிறவும் அன்ன.

## சேனா.

இ-ள்: எல்லாரும் எனவும் எல்லீரும் எனவும் பெண்மகன் எனவும் வரும் மூன்றும் மேற்கூறப்பட்டன போலப் பாலறிவந்த உயர்திணைப் பெயராம், எ-று.

புறத்துப்போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண் மகளை மாறோக்கத்தார் இக்காலத்தும் பெண்மகன் என்று வழங்குப.

எல்லாரும் எல்லீரும் என்புழிப் படர்க்கைப் பன்மையுணர்த்தும் ஆரும், முன்னிலைப் பன்மையுணர்த்தும் ஈரும் உம்மை யடுத்து வருதலானும், பெண்மகன் எனப் பால் திரிதலானும் இவற்றை வேறு கூறினார்.

---

1. இது மாறோக்கத்தார் வழக்கு என்பர் சேனாவரையரும் கல்லாடனாரும்.

**தெய்.**

இதுவுமது

இ-ள் : எல்லாரும் என்னும் பெயரும் எல்லீரும் என்னும் பெயரும், பெண்மகன் என்னும் பெயரும் பால் விளங்க வந்த உயர்திணைப் பெயராம், எ-று.

விளையாடும் பருவத்துப் பெண்மகளைப் பெண்மகன் என்றல் பண்டையோர் வழக்கு.

**நச்.**

இதுவும் உயர்திணை ஒருபாற் பெயர் உணர்த்துகின்றது.

இ-ள் : எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும் — எல்லாரும் என்று சொல்லப்படுகின்ற படர்க்கைப் பெயர்ச் சொல்லும், எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும் — எல் லீரும் என்று சொல்லப்படுகின்ற முன்னிலைப் பெயர்ச் சொல் லும், பெண்மை அடுத்த மகன் என் கிளவியும் — கட்புலனாய தோர் அமைதித் தன்மை அடுத்து நாணு வரையிறந்து புறத்து விளையாடும் பருவத்தால் பால்திரிந்த பெண்மகன் என்னும் பெயர்ச்சொல்லும், அன்னஇயல என்மனார் புலவர் — இவை மூன்றும் அவைபோலப் பால் அறியவந்த உயர்திணைப் பெயராம், எ-று.

பெண்மகன் என்பது அத்தன்மையாரை அக்காலம் அவ் வாறே வழங்கினாராயிற்று, இங்ஙனங் கூறலின்.

**கல்.**

என்-எனின், இதுவும் உயர்திணை ஒரு சார் பெயர்களை உணர்த்தல் நுதலிற்று.

இ-ள் : எல்லாரும் என்று சொல்லப்படுகின்ற படர்க்கைப் பெயர்ச் சொல்லும், எல்லீரும் என்று சொல்லப்படுகின்ற முன்னிலைப் பெயர்ச் சொல்லும், பெண்மை யென்னும் சொல்லை முன்னடுத்த பெண்மகன் என்னும் பெயர்ச் சொல் இவை மூன்றும் அவைபோலப் பாலறிய வந்த உயர்திணைப் பெயராம், எ-று.

நாணு வரை யிறந்தாள் தன்மையளாகிப் புறத்துப் போய் விளையாடும் பெண் மகளைப் 'பெண் மகன்' என்பது முற் காலத்து வழக்கம். அதனை இப்பொழுது மாறோக்கத்தார் வழங்குவர். மாறோக்கம் என்பது கொற்கை சூழ்ந்த நாடு.

ஆதி.

எல்லாரும் என்னும் பெயர்ச் சொல்லும், எல்லீரும் என்னும் பெயர்ச் சொல்லும் பெண்பாலை அடுத்த மகன் என்னும் ஆண் பாற் சொல்லும் பால் காட்டும் உயர்திணைப் பெயர்கள்.

ஆய்வு : அவர்கள் எல்லாரும் நல்லவர்கள் — எல்லாரும் படர்க்கையிடம், பால்—பொது. ஆசிரியர் பால் என்பதைத் திணை, எண் என்ற பொருளிற் கூறுகின்றார்.

ஆய்வு : பெண்மை அடுத்த மகன் என் ஆண்பாற் சொல்— பேதை பெதும்பையரைப் 'பெண் மகன்' என்று கூறுவர். மாறோக்கத்தார். இன்றும் கூறுகின்றனர் என உரையாசிரியர்கள் கூறுகின்றனர். மாறோக்கம் கொற்கை என்றும் கூறுகின்றனர். கொற்கைப் பாண்டி நாட்டில் அவ்வழக்கம் கிடையாது. இருபாலுக்கும் பொதுவாகக் குழந்தை, பிள்ளை என்ற சொற்களே கூறப்படும். ஆண் குழந்தை பெண் குழந்தை ஆண் பிள்ளை, பெண் பிள்ளை என்பர்.

சோழ நாட்டாரும் தொண்டை நாட்டாரும் பிள்ளை என்பது ஆண் எனக் குறிக்கின்றனர். பிள்ளைக் குழந்தை பிறந்தது, ஆண்குழந்தை பிறந்துள்ளது. பிள்ளையா பெண்ணா? என்று கேட்பதே இவர்கள் வழக்கம். சேரநாட்டில் குட்டி என்னும் சொல் இருபாற்கும் பொதுவாகும். இக்குட்டி — இப் பையன் அல்லது இப் பெண்.

சென்னை நகரில் மட்டும் பெண்மை யடுத்த மகன் என்கிளவி பயிலப்படுகிறது.

"இந்தப் பெட்டைப் பையன்கள் எல்லாம் இப்போ கால் சட்டை அணிகிறார்கள் ; ஆக்கி ஆடுகிறார்கள்" இவ்வாறு பேசுவது வழக்கில் உள்ளது. ஆதலின் இதன் உண்மை கண்டு உணர்க. பெண் பிள்ளை என்பது 'பெண்மை யடுத்த மகன்' என்னப்பட்டது போலும்.

சுப்.

இச்சூத்திர வுரையிற் சேனாவரையர் 'மாறோக்கத்தார் இக் காலத்தும் பெண்மகன் என்று வழங்குப' என்றார். கூத்தர் தம் உலாவிற் 'பெண் சக்கரவர்த்தி' என்று கூறியிருப்பதும் மலையாளத்தில் இப்போதும் 'பெண்ணரசு' என்று வழங்குவதும் இங்கு ஒப்பிடத்தக்கன. நச்சினார்க்கினியர் 'பெண்மகன்' என்பது அத் தன்மையாரை அக்காலம் அவ்வாறே வழங்கினாராயிற்று' என்றார். ஆதலால் நச்சினார்க்கினியர் காலத்தில் அவ்வழக்கு இறந்து விட்டது போலும்.

162. நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெய ருடைப்பெயர் பண்புகொள் பெயரே
பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே
கூடிவரு வழக்கி னாடியற் பெயரே
யின்றிவ ரென்னு மெண்ணியற் பெயரோ
டன்றி யனைத்து மவற்றியல் பினவே (11)

(நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் பெயரே
பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே
கூடிவரு வழக்கின் ஆடுஇயற் பெயரே
இன்றுஇவர் என்னும் எண்இயற் பெயரோடு
அன்றி அனைத்தும் அவற்றுஇயல் பினவே)

ஆ. மொ: இல.

The nouns formed after land, family group
The nouns formed after action, possession, nature
The nouns denoting relationship of many
The nouns denoting the names formed after limbs
The nouns denoting the many belonging to the classes
The nouns denoting the names used in plays and games
The nouns derived from numarals.
All these are of the same nature.

பி. இ. நூ:

'அன்ன பிறவும் உயர்திணை' (163) என்னும் சூத்திரத்துக் காண்க.

இளம்.

உரை: நிலப் பெயர் முதலாகச் சொல்லப் பட்டனவும் மேலன போலப் பாலறிய வந்த உயர்திணைப் பெயராம், எ-று.

நிலப் பெயர்—அருவாளன், சோழியன் என்பன.
குடிப் பெயர்—மலையமான், சேரமான் என்பன,

குழுவின் பெயர்—அவையத்தார், [1]அத்திகோசத்தார் என்பன.

வினைப் பெயர்—தச்சன், கொல்லன் என்பன.

உடைப் பெயர்—[2]அம்பர் கிழான், பேரூர் கிழான் என்பன. வெற்பன், சேர்ப்பன் என்பனவும் அவை.

பண்புகொள் பெயர்—கரியான், செய்யான் என்பன.

பல்லோர்க் குறித்த முறை நிலைப்பெயர்—தந்தையர், தாயர் என்பன.

பல்லோர்க்குறித்த சினை நிலைப் பெயர்—பெருங்காலர், பெருந்தோளர் என்பன.

பல்லோர்க் குறித்த திணை நிலைப் பெயர்—பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர், ஆயர், வேட்டுவர் என்பன.

[3]'பல்லோர்க்குறித்த' என்று விசேடித்தலான், இம்மூவகைப் பெயருள் ஒருமைப் பெயர் இரண்டு திணைக்கும் உரியவாம்.

[4]கூடிவரு வழக்கின் ஆடியற்பெயர்—பட்டி புத்திரர், சங்கிராமத்தார் என்பன.

---

1. அத்திகோசத்தார்-யானைமேல் ஏற்றும் அளவான நிதிக்குவையுடையார்.
2. அம்பர்—ஓரூர்.
3. ஒருமைப் பெயராவன : தந்தை, தாய்; பெருங்காலன், பெருங்காலள், பெருந்தோளன் பெருந்தோளி; பார்ப்பான், பார்ப்பனி, அரசன், அரசி, வணிகன், வணிகச்சி, வேளாளன், வேளாட்டி: ஆயன், ஆய்ச்சி; வேட்டுவன், வேட்டுவச்சி என இருதிணை ஆண் பெண்களுக்குக் கொள்க.
4. சேனாவரையர் உரைபார்க்க. பட்டி என்பது உச்சயினி நகர அரசன் விக்கிர மாதித்தன் அமைச்சன். அவன் சிறந்த கூரிய மதியினன். அவன் மக்கள் பட்டிபுத்திரர். விளையாடுங்காலத்தில் இருசாரரும் தங்களுள் உத்தி பிரிக்குங்காலத்தில் ஏதேனும் ஒரு குழுப் பெயரை வைத்துக் கொள்வர். அப்பெயர் தம் ஆற்றலைப் புலப்படுத்துவதாக அமையும். சங்கிராமத்தார் என்பது சங்கிராமம் என்னும் ஊரினர் என்பதாம். அவ்வூரினர் சிறந்த செயல் செய்து (வீர முதலியவற்றால்) உயர்ந்தமைபற்றி அவ்வூரின் பெயரைத் தம் குழுவுக்கு அமைத்துக் கூறுதல் வழக்காகியது.

இன்றிவர் என்னும் எண்ணியற் பெயர்—ஒருவர், இருவர், மூவர், முப்பத்து மூவர் என்பன.

'இன்றிவர்' என்பது 'இத்துணையர்' என்னும் பொருட்டுப் போலும்.

**சேனா.**

இ-ள் : நிலப்பெயர் முதலாகச் சொல்லப்பட்டனவும் மேலன போலப் பாலறிவந்த உயர்திணைப் பெயராம், எ-று.

உ-ம் : நிலப்பெயர்—அருவாளன், சோழியன் என்பன.
குடிப்பெயர்—மலையமான், சேரமான் என்பன.

குழுவின் பெயர்—அவையத்தார் அத்திகோசத்தார் என்பன.

வினைப்யெயர்[5] — வருவார் செல்வார் என்பன. தச்சன், கொல்லன் என்பனவும் அவை.

உடைப்பெயர்—அம்பர்கிழான், பேரூர்கிழான் என்பன. வெற்பன், சேர்ப்பன் என்பனவும் அவை.

பண்புகொள்பெயர்—கரியான், செய்யான் என்பன.

பல்லோர்க்குறித்த முறைநிலைப் பெயர்—தந்தையர் தாயர் என்பன.

பல்லோர்க்குறித்த சினைநிலைப் பெயர் — பெருங் காலர், பெருந்தோளர் என்பன.

பல்லோர்க்குறித்த திணைநிலைப் பெயர் — பார்ப் பார், அரசர், வணிகர், வேளாளர், ஆயர், வேட்டுவர் என்பன.

'பல்லோர்க்குறித்த'வென்று விசேடித்தலான், இம் மூவகைப் பெயருள் ஒருமைப் பெயர் இரண்டு திணைக்கும் உரியவாம்.

கூடிவருவழக்கின் ஆடியற் பெயர் — பட்டி புத்திரர், கங்கை மாத்திரர் என்பன. இவை ஆடல் குறித்து இளையார் பகுதிபடக் கூடியவழி யல்லது வழங்கப்படாமையின் குழுவின் பெயரின் வேறாயின. அக்குழுவின் பெயர் ஒரு துறைக்கண் உரிமைபூண்ட பல்லோர்மேல் எக்காலத்தும் நிகழ்வன.

---

5 வினைப்பெயர் — வினையாலணையும் பெயர் எனக் கொண்டு வருவார், செல்வார் என உதாரணம் காட்டி னர். வினை காரணமாக வரும் பெயர் தச்சன், கொல் லன் என்பன,

இன்றிவரென்னும் எண்ணியற் பெயராவன — ஒருவர், இருவர், முப்பத்து மூவர் என்பன.

இன்றிவரென்பது இத்துணையர் என்னும் பொருட்டுப் போலும். எண்ணாகிய இயல்பு பற்றிப் பொருளுணர்த்துதலான் 'எண்ணியற்பெயர்' என்றார்.

ஒரு நிமித்தம் பற்றிச் சேறலின் பல்பெயர் [6]ஒரு பெயராக அடக்கப்பட்டமையான், நிலப்பெயர் முதலாயினவற்றை வேறு கூறினார். அஃதேல் 'ஒப்பொடுவரூஉங்கிளவியும்' (பெய. 9) அன்னதாகலின் இவற்றோடு வைக்கற்பாற்றுஎனின், அற்றேனும் வழக்குப் பயிற்சியின்மையான் அவற்றோடு வைத்தார் என்க.

## தெய்.

இதுவுமது.

இ-ள் : நிலப்பெயர் முதலாக ஓதப்பட்ட அனைத்தும் பால் விளங்கவந்த உயர்திணைப் பெயராம், எ-று.

உ-ம்: நிலப்பெயராவது இடத்தினாற் பெற்ற பெயர். அது சோணாட்டான், சோணாட்டாள் சோணாட்டார் எனவும் மதுரையான், மதுரையாள், மதுரையார் எனவும் வரும்.

[7]குடிப் பெயராவது குடியினானாய பெயர். அவையாவன— சேரலன், சோழன், பாண்டியன் என்பன. 'இன்னும் வந்தது கொண்டு வாராதது முடித்தல்' என்பதனால் குலத்தினானாகிய பெயருங் கொள்க. அவையாவன : அந்தணன், அந்தணி, அந்தணர் என்பன. அஃதேல், பாம்பு, நாய், மணி என்பனவும்

---

6 தொகுதிப் பெயராக

7. கரந்தைத்தமிழ்ச்சங்கப்பதிப்பில் காணப்படுவது: "குடிப் பெயராவது குலத்தினான் ஆகிய பெயர். அந்தணன், அந்தணி, அந்தணர் என்பன. அஃதேல்பாம்பு நாய் மணி என்பனவும் அந்தணர்கள் என வருமால் எனின், அவ்வாறு வருவன நூலகத்து ஆளுதல்வேண்டி ஆசிரியர் இட்டதோர் குறி என்று கொள்ளினல்லது, 'பாம்பைப் பிடித்தான்' என்னும் பொருட்கண் அந்தணனைப்பிடித் தான் என்றவழிப் பொருள் புலப்படாமையின் அது வழக்கன்றென மறுக்க. 'வந்தது கொண்டு வாராதது முடித்தல்' என்பதனால் குடியிற்கு (அருகிய ?) பெய ராவன சேரன், சோழன், பாண்டியன் என்பன."

அந்தணர் அரசர் என வருமால் எனின், அவ்வாறு வருவன அந் நூலகத்து ஆளுதல் வேண்டி ஆசிரியன் இட்டதோர் குறி என்று கொள்ளினல்லது பாம்பைப் பிடித்தான் என்னும் பொருட்கண் அந்தணனைப் பிடித்தான் என்றவழி அப்பொருள் புலப்படாமை யின் அது வழக்கன்றென மறுக்க.

குழுவின் பெயராவது பலர்கூடின கூட்டத்தாற் பெற்ற பெயர். பலர், அவையத்தார் என்பன. பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க.

வினைப் பெயராவது உண்டவன், உண்டவள், உண்டவர் எனவரும்.

உடைப்பெயராவது உடைமையாற் பெற்றபெயர். அவை நிலமும் பொருளும் கருவியும் பற்றி வரும். [8]குட்டுவன் பூழியன் என்பனகுட்ட நாட்டையும் பூழி நாட்டையும் உடையன்என்னும் பொருள்பட வந்தன. முடியான், குழையான், குழையாள், குழையார் என்பன பொருள்பற்றி வந்தன. வேலான், வில்லி என்பன கருவிபற்றி வந்தன.

பண்புகொள் பெயராவது பண்பினாற் பெற்ற பெயர். கரியான், நெடியான், நல்லான், தீயான், நல்லாள், தீயார் என வரும்.

பல்லோர்க்குறித்த முறை நிலைப் பெயராவது தாயர், தாய் மார், தந்தையர், தந்தைமார் என்பன.

இது முதலாகிய நான்கு பெயரும் இருதிணைக்கும் பொது வாகி வருதலின் 'பல்லோர்க்குறித்த' என்றார். அஃதேல், அஃறிணைக் கண்ணும் [9]''கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்ப்ப இன்னே வருவர் தாயர்'' (முல்லைப்பாட்டு 15, 16) என

---

8 குட்டுவன் பூழியன் என்பன உடைப்பெயராகக் கூற படுதல் போலச் சோணாட்டான் முதலியவற்றையும் உடைப்பெயராகக் கூறலாம். அவ்வாறே குட்டுவன் பூழியன் என்பனவற்றை நிலப்பெயராகவும் கூறலாம்.

9. தாயர் என்பது உயர்திணைப் பன்மைக்கேயுரியது. இன்னே வருவர் தாயர் எனப் பசுக்கள் தாயர் எனக் கூறப்பட்டனவே எனின், ஆண்டு உயர்த்துச் சொல்லு தற்கண் வந்தது என்பது கருத்து. 'தாய்' என்பதே உயர் திணைக்கும் அஃறிணைக்கும் பொது. தாயர் என்பது உயர்திணைக்கேயுரியது.

வந்ததால் எனின், ஆண்டு உயர்த்துச் சொல்லுதற்கண் வந்தது. அதற்கு இலக்கணம் 'செய்யுள் மருங்கினும். (எச்ச, 61) என்னும் புறனடைச் சூத்திரத்தாற் கொள்ளப்படும்.

பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயராவது திணை பற்றி வரும் பன்மைப் பெயர். 'குறிஞ்சிக் கண்ணியர் குவளை பூண்டு, வெற்பராடும் வெற்புச்சேர் இருக்கை' என்ற வழி உயர்திணைப் [10]பெயராகிப் பன்மை குறித்து வந்தது. வெற்பன், மலையன், நாடன் என ஒருமை குறித்து வருவன உளவால் எனின், அவை அந்நிலத்துத் தலைமகனைக் குறிக்கின் உடைப்பெயராம். அந் நிலத்துள்ள மாந்தரைக் குறிக்கின் இரு திணைக்கும் பொதுவாம். வெட்சியார் கரந்தையார் என்பனவும் அவை. வெட்சியான், கரந்தையான் என வாராதோவெனின், அவ்வாறு வழக்குவரின் அத்திரளின் உள்ளான் என்னும் பொருள்படவரினல்லது நிரை கோடல், நிரை மீட்டல், [11]எடுத்து விடுத்தல் என்பன ஒருவ னாற் செய்யப்படாமையானும், வெட்சியாள், கரந்தையாள் எனப் பெண்பால் உணரவரும் வழக்கின்மையானும் திணையாற் பெறும் பெயர் பன்மை குறித்து வருதல் பெரும்பான்மை என்று கொள்க. சிறுபான்மை ஒருமை குறித்துவரின், அன்னபிறவாற் கொள்ளப்படும்.

கூடிவருவழக்கின் ஆடியற் பெயராவது கூடியியலும் வழக் கின் வழங்கும் இயற்பெயர் என்றவாறு. இயற்பெயராவது ஒரு பொருட்கு இடுகுறியாகிய பெயர். அஃது இருதிணைக்கும் உரித்தாகலின் விரவுப் பெயரென வேறெடுத்து ஓதினார். ஈண்டு அப்பெயருடையார் பலரைஒரு வினையாற்சொல்லுங் காலத்துச் சொல் தொகுத்துக் கூற வேண்டுதலின் ஈண்டு ஓதப்பட்டது. [1]சாத்தன் என்னும் பெயருடையார் இருவர் மூவர் சேர வந்த வழிச் சாத்தன் வந்தான், சாத்தன் வந்தான் எனத் தனித்தனிக் கூறின் பொருள் வேற்றுமை யுணர்த்தாது. ஒரு பொருளை இரு காற் சொன்னாற் போலப் படும். ஆண்டுச் சாத்தன்மார் வந்தார், சாத்திமார் வந்தார் எனக் கூறுதல் வேண்டுதலானும் அப்பொருள் உயர் திணை ஆதலானும் ஈண்டு ஓதப்பட்டது.

இன்றிவ ரென்னும் எண்ணியற் பெயராவது இத்துணையர் என எண்ணினான் இயன்ற பெயர். ஒருத்தி, ஒருவன், இருவர், மூவர் என்பன.

---

10. பொருளாகிய—பாடம் 11. தடுத்து விடுத்தல்—பாடம்

1. சாத்தர் — பாடம்

நச்.

இதுவுமது.

இ-ள்:- நிலப் பெயர் — ஒருவன் தான் பிறந்த நிலத்தினால் பெற்ற பெயர்களும்,

குடிப் பெயர் — ஒருவன்தான் பிறந்த குடியினால் பெற்ற பெயர்களும்,

குழுவின் பெயர் — தாம் திரண்டு ஒருதுறைக்கண் உரிமை பூண்ட பல்லோர் மேல் எக்காலத்தும் நிகழும் பெயர்களும்,

வினைப் பெயர் — தாம் செய்யும் தொழிலினால் பெற்ற பெயர்களும்,

உடைப் பெயர் — தன் உடைமையால் பெற்ற பெயர்களும்,

பண்புகொள் பெயரே—தனது ஓர் பண்பினால் பெற்ற பெயர்களும்,

பல்லோர்க் குறித்த முறை நிலைப் பெயரே — பல்லோரைக் கருதின தமது முறைமையால் பெற்ற பெயர்களும்,

பல்லோர்க் குறித்த சினை நிலைப் பெயரே — பல்லோரைக் கருதின சினை நிலைமையால் பெற்ற பெயர்களும்,

பல்லோர்க்குறித்த திணை நிலைப்பெயரே—பல்லோரைக் கருதின குறிஞ்சி முதலிய ஐந்திணை நிலைமையால் பெற்ற பெயர்களும்,

கூடிவரு வழக்கின் ஆடுஇயல் பெயரே—இளந்துணை மகார் தம்மிற்கூடி விளையாடல் குறித்த பொழுதைக்குத் தாமே படைத்திட்டுக் கொண்ட பெயர்களும்,

இன்றிவர் என்னும் எண் இயல் பெயரொடு—இத்துணையர் எனத் தமது வரையறை உணரநின்ற எண்ணாகிய இயல்புபற்றிப் பொருள் உணர்த்தும் பெயருடனே,

அன்றியனைத்தும் அவற்று இயல்பினவே—அவ்வனைத்துப் பெயர்களும் மேற்கூறிய பெயர்கள் போலப் பாலறிவந்த உயர் திணைப் பெயராம், எ—று.

உ-ம் : அருவாளன், சோழியன் எனவும்:

சேரமான், மலையமான், பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர் எனவும்:

அவையத்தார், அத்திகோசத்தார், †வணிக கிராமத்தார் மாகத்தார் எனவும்;

வருவார், செல்வார், தச்சர், கொல்லர், தட்டார், வண்ணார் எனவும்;

அம்பர் கிழான், பேரூர் கிழான், குட்டுவன், பூழியன், வில்லவன், வெற்பன், சேர்ப்பன் எனவும்;

கரியான், கரியாள், செய்யான், செய்யாள் எனவும்;
தந்தையர், தாயர் எனவும்;
பெருங்காலர், பெருந்தோளர், அலை காதர் எனவும்;

குறவர், இறவுளர், வேட்டுவர், ஆயர்,பொதுவர், நுளையர், திமிலர், பரதவர், களமர், உழவர், எயினர், மறவர் எனவும்;

பட்டி புத்திரர், கங்கை மாத்திரர் எனவும்:
ஒருவர், இருவர், முப்பத்து மூவர் எனவும்;

அருவாட்டி, சோழிச்சி, மலையாட்டிச்சி, பார்ப்பனி, அரசி, வாணிச்சி, வெள்ளாட்டிச்சி, கொல்லச்சி, தட்டாத்தி, வண்ணாத்தி, அம்பருடைச்சி, பேரூர் கிழத்தி எனவும் வரும்.

மகடூஉப் பெயர்கள், டகர ஒற்று இரட்டியும், இச்சுப் பெற்றும், தகர ஒற்று இரட்டியும், இரண்டு இடை நிலை எழுத்துக்களைப் பெற்றும் பெறாதும் வருமாறு உணர்க. இவை இங்ஙனம் இடைநிலை எழுத்துக்களும் பெற்றுப் பால் உணர்த்துதற்கு உரிய இகரமும் பெற்று நிற்கும் என்பது, 'சொல்வரைந்தறியப் பிரித்தனர் காட்டல்' (எச்ச. 67) என்னும் அதிகாரப் புறனடையாற் கொள்க.

**கல்.**

என்-எனின், இது உயர்திணை ஒருசார்ப் பெயர்களை உணர்த்தல் நுதலிற்று.

இ-ள்: அருவாளன் சோழியன் என்றாற்போல ஒருவன் தான் பிறந்த நிலத்தினாற் பெற்ற பெயர்களும், மலையமான் சேரமான் பார்ப்பான் அரசன் என்றாற் போல அவன் தன் பிறந்த குடியாற் பெற்ற பெயர்களும், அவையத்தார் அத்திகோசத்தார் வணிககிராமத்தார் என்றாற் போலத்

† சாசனங்களில் மணிக்கிராமத்தார் என்று வணிகர் குழுவுக்குக் காணப்படும் வழக்கு இத்துடன் ஒப்பு நோக்கத் தக்கது—சுப்.

தாம்திரண்ட திரட்சியினாற் பெற்ற பெயர்களும், உண்டார் என்றாற்போல அவன் தான் செய்யும் தொழிலாற் பெற்ற பெயர்களும், அம்பர்கிழாஅன் அம்பருடையான் என்றாற்போல அவன் தனது உடைமையாற் பெற்ற பெயர்களும், கரியான் செய்யான் என்றாற்போலத் தனது பண்பினால் பெற்ற பெயர்களும், தந்தையர் தாயர் என்றாற்போலப் பல்லோரைக் கருதின தமது முறையால் பெற்ற பெயர்களும், பெருங்காலர் பெருந்தாளர் பெருங்கண்ணர் என்றாற்போலப் பல்லோரைக் கருதின தமது சினை நிலைமையாற் பெற்ற பெயர்களும், குறவர் ஆயர் வேட்டுவர் என்றாற்போலப் பல்லோரைக் கருதின குறிஞ்சி முதலிய திணைகளாற் பெற்ற பெயர்களும், இளந்துணைமகார் தம்மிற் கூடிவரும் வழக்கின்கண் அவர் தமது விளையாட்டு வகையான் தாமே தமக்கு அப்போதைக்குப் பட்டி புத்திரர் கங்கைமாத்திரர் என்றாற்போலப் படைத்திட்டுக் கொண்ட பெயர்களும், ஒருவர் இருவர் மூவர் நால்வர் என்றாற்போல இத்துணையர் எனத் தமது வரையறையுணர நிற்கும் எண்ணியல்பினாற் பெற்ற பெயர்களும் மேற்கூறிய பெயர்கள்போலப் பாலறிவந்த உயர்திணைப் பெயராம், எ-று.

**ஆதி.**

நிலப் பெயர் — நகரத்தான், பட்டிக்காட்டான், ஊரான்.
குடிப்பெயர் — அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்.
குழுவின் பெயர் — சபையினர், கட்சியார், மன்றத்தார்,
வினைப் பெயர் — நெசவாளர், வலைஞர், ஓதுவார்.
உடைப் பெயர் — பணக்காரன், நிலக்கிழார், சமீன்தார்.
பண்பு கொள் பெயர் — நல்லார், தீயர், குறியன், நெடியன்.

பல்லோர் முறைப் பெயர் — பெற்றோர், மாமியார், உடன்பிறந்தார்.

பல்லோர் சினை நிலைப் பெயர் — வயிற்றர், மூக்கர், தலையர், குடுமியர்.

வழக்கின் ஆடு இயற்பெயர் — நாட்டியக்காரர், நாடகக்காரர், வாய்ப்பாட்டுக்காரர், சதுரங்கக்காரர்.

எண்ணியல் பெயர் — இருவர், மூவர், ஐவர், பதின்மர், அறுபத்து மூவர்.

இவை போன்றவையெல்லாம் உயர்திணைப் பெயர்களே.

இன்றிவர் என்னும் — இத்தனை பேர் இவர் என்னும் எண்ணுப் பெயரும். அன்றியனைத்தும் — அன்ன பிறவும்.

ஆய்வு : அவற்றியல்பே — 159 ஆம் சூத்திரத்தில், 'பாலறி வந்த உயர்திணைப் பெயர்' என்று கூறிப் பின் தொடர்ந்த யாவற்றிலும் 'அன்ன இயல்பே' என்று கூறி வந்தார். ஆயினும் அங்குப் பால் விளக்கம் இல்லை. எண், திணைகள் பற்றியே விளக்கமாயின. இங்கும் (162) திணையே விளக்கமாகிறது ஆதலின் பால் அறிவந்த — ஆண் பெண் பால் காட்டும் உயர் திணை என்று பொருள் கோடலே சிறப்புடையது.

## பி. கு.

**பூவராகம்பிள்ளை** (சேனாவரையத்துக்கு)

திணைநிலைப் பெயர் என்றது பார்ப்பார் முதலிய சாதிப் பெயரும், ஆயர் முதலிய திணைப் பெயருமாகக் கொண்டார். இவை ஒருமை குறிந்தவழி பொதுப் பெயர். சீவக சிந்தாமணி பதுமையாரிலம்பகத்தில் (செய். 122 இல்) பாம்பு வகைகளைப் பற்றிக் கூறுமிடத்தில் அந்தணன் அரசன் முதலிய நான்கு சாதிப் பெயரும் கூறப்பட்டன. அதனால் அந்நான்கு பெயரும் ஒருமை குறித்தவழிப் பொதுப் பெயராதல் பெறப்படும். ஆயன் வேட்டுவன் என்பன ஒருமையில் அஃறிணை யுணர்த்துதல் வந்த வழிக் காண்டல் வேண்டும். வேட்டுவன் என்பது ஒருபுழு என்றும் ஒரு குளவி என்றும் கூறுவர். அங்ஙனமாயின் வேட்டுவன் என்பது ஒருமையில் அஃறிணை உணர்த்திப் பொதுப் பெயராகும்.

உயர்திணைப் பெயர்க்குப் புறனடை

**163. அன்ன பிறவு முயர்திணை மருங்கிற்**
**பன்மையு மொருமையும் பாலறி வந்த**
**வென்ன பெயரு மத்திணை யவ்வே** (12)

(அன்ன பிறவும் உயர்திணை மருங்கின்
பன்மையும் ஒருமையும் பால் அறி வந்த
என்ன பெயரும் அத் திணை யவே)

## ஆ. மொ: இல.

Such others, denoting plural and singular genders (numbers) of high class, belonging to the same class High

## பி. இ. நூ.

(சூ. 159 முதல் 163 வரை)

ஒட்டுப்பேர் எண்ணியற்பேர் ஒண்ணிலப் பேர்—இட்டிடை யாய்
கூடியற்பேர் காலம் குலம் தொழிலின்பேர் மகடூஉ

**ஆடூஉ உயர்திணைப்பேர் ஆம்.**

பகரு முறைசினைப் பல்லோர் நம்மூர்ந்த
இகர ஐகார இறுதி — இகரமிறும்
சாதிப் பெண்பேர் மாந்தர் மக்களும் தன்மையுடன்
ஆதி உயர்திணைப் பேராம்

**நன்** *286*

வினையின் பெயரே படர்க்கை வினையால்
அணையும் பெயரே யாண்டு மாகும்

**இல.** *188*

ஷ ஷ ஷ

**நேமி. சொல்.** *30, 31*

சுட்டே வினா ஒப்பே பண்பே தொகு னளர

**நன். 276**

அவற்றுள்
கிளை எண் குழூஉ முதல் பல்பொருள் திணை தேம்
ஊர்வான் அகம்புறம் முதலநிலன் யாண்டு
இருது மதிநாள் ஆதிக் காலம்
தோள்குழல் மார்பு கண் காது முதலுறுப்பு
அளவு அறிவு ஒப்பு வடிவு நிறம் கதி
சாதி குடி சிறப் பாதிப் பல்குணம்
ஓதல் ஈதல் ஆதிப் பல்வினை
இவையடை சுட்டு வினாப்பிற மற்றோடு
உற்ற னவ்வீறு நம்பி ஆடூஉ
விடலை கோவேள் குரிசில் தோன்றல்
இன்னை ஆண்பெய ராகும் என்ப.

**இல. 177** ஷ ஷ ஷ

**முத்து: பெ. 19, 20**

னகார விறுதி குடிநிலம் குழூஉ வினை
திணைநிலை சினைநிலை பண்புகொள் பெயரே
எண்ணுப் பெயரொடு சுட்டு வினாப்பெயர்
உயர்திணை ஆண்பாற் படர்க்கைப் பெயரே.

கோவேள் விடலை குரிசில் தோன்றல்
ஆடூஉ நம்பியும் அதன்பால என்மனார்.

**நன். 277**

கிளைமுத லாகக் கிளந்த பொருள்களுள்
ளவ்வொற் றிகரக் கேற்ற வீற்றவும்
தோழி செவிலி மகடூஉ நங்கை
தையலோ டின்னன பெண்பாற் பெயரே.

**இல. 178.** ஷை ஷை ஷை

**முத்து. பெ.** *21, 22*

உரைத்த குடிமுதல் உற்ற ளகார
ஈற்றவும் இகர இறுதிக் கிளவியும்
அத்திணைப் பெண்பாற் படர்க்கை யாகும்

தையல் மகடூஉ நங்கை செவிலி
தோழியும் அதன்பால என்மனார் புலவர்

**நன்.** *278*

கிளந்த கிளைமுதல் உற்ற ரவ் வீற்றவும்
கள்ளென் ஈற்றின் ஏற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி யாகும்.

**இல.** *179* ஷை ஷை ஷை

**தொன்.** *79*

பலர்பால் ரல்வும் கள்ளும் ஈறுமே.

**முத்து. பெ.** *23*

குடிமுத லாகக் குறித்தவற் றிறுதி
ரகாரைப் பெயரும் மாரைக் கிளவியும்
உயர்திணைப் பலர்பால் படர்க்கைப் பெயரே.

## இளம்.

உரை: மேற்சொல்லப்பட்ட பெயர் போல்வன பிறவும் உயர்திணைக்கட் பன்மையும் ஒருமையுமாகிய பாலறிவந்த எல்லாப் பெயரும் உயர்திணைப் பெயராம், எ-று.

அன்னபிறவும் ஆவன: ஏனாதி, காவிதி, எட்டி, வாயிலான், பூயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான், பிறன், பிறள், பிறர், மற்றையான், மற்றையாள், மற்றையார் என்னுந் தொடக்கத்தன.

சேனா.

இ—ள்: மேற்சொல்லப்பட்ட பெயர்போல்வன பிறவும்உயர் திணைக்கண் பன்மையும் ஒருமையுமாகிய பாலறி வந்த எல்லாப் பெயரும் உயர்திணைப் பெயராம், எ-று.

'பாலறி வந்த' என்னாது ஒருமைப்பால் உணர்த்துவனவும் அடங்குதற்குப், 'பன்மையும் ஒருமையும் பாலறிவந்த' என்றார்.

அன்ன பிறவுமாவன : ஏனாதி, காவிதி, எட்டி, வாயிலான், பூயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான், பிறன், பிறள், பிறர், மற்றையான், மற்றையாள், மற்றையார் என்னுந் தொடக் கத்தன.

தெய்.

உயர்திணைப் பெயர் புறனடை வகையான் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : மேல் எடுத்து ஓதப்பட்டன போல்வன பிறவும் உயர்திணைப்பொருளிடத்து ஒருமை பன்மை எனப் பால் விளங்க வரும் எல்லாப் பெயரும் உயர்திணையிடத்த, எ-று.

உ-ம்: பெண்டிர் பெண்டுகள் என்பனவும், அத்தன்மையர் அத்தன்மையார் என்பனவும், ஏனாதி அமைச்சன் படைத்தலை வன் எனச் சிறப்புப் பற்றி வரும் பெயரும், நாயன் நாச்சி எனத் தலைமை பற்றி வரும் பெயரும், அடியான் அடியாள் என இழிவு பற்றி வரும் பெயரும், ஆசிரியன் புலவன் எனக் கல்விபற்றி வரும் பெயரும், குழலள் குழலாள் இடையாள் தோளாள் என உறுப்புப் பற்றி வரும் பெயரும், ஆதிரையான் ஓணத்தான் வேனிலான் எனக் காலம் பற்றி வரும் பெயரும், பிறன் பிறள் பிறர் நுமன் நுமள் நுமர் தமன் தமள் தமர் என்பனவும், பிறவும் உயர்திணைப் பொருட்கேயுரியவாகி வரும் பெயரெல்லாம் இதுவே ஓத்தாகக் கொள்க.

நச்.

இஃது உயர்திணைப் பெயர்க்குப் புறனடை கூறுகின்றது.

இ-ள் : அன்ன பிறவும் — மேற்கூறிய பெயர் போல்வன பிற வுமாயுள்ள, உயர்திணை மருங்கில் பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த என்ன பெயரும் — உயர்திணைக்கண் பன்மை யும் ஒருமையுமாகிய பால்களைஅறியவந்த எல்லாப் பெயர்களும், அத்திணையவ்வே — அவ்வுயர்திணைப் பெயராம், எ-று.

உ-ம்; அன்னள், அனையாள், அவ்வாட்டி, ஏனாதி, காவிதி, எட்டி, வாயிலான், பூயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான், பெண்டிர், பெண்டுகள், அடியான், அடியாள், அடியார், வேனிலான், பிறன், பிறள், பிறர், மற்றையான், மற்றையாள், மற்றையார் என்னுந் தொடக்கத்தன எனக் கொள்க. இன்னும்,

'எல்லேம் பிரியற்கெஞ் சுற்றமொ டொருங்கே'
'வல்லேம் இருந்தேமே வாய்ந்தமன் றிதுவென'
'இருவேமும் வல்லேம் இருவர்நம் படர்தீர'

*என்னும் பெயர்களும் கொள்க.

**கல்.**

என்-எனின், இதுவும் உயர்திணைப் பெயர்க்குப் புறனடை யுணர்த்தல் நுதலிற்று,

இ-ள் : மேற்கூறிய அத்தன்மைய பிறவுமாயுள்ள உயர் திணையிடத்துப் பன்மையும் ஒருமையுமாகிய பால்களை அறிய வந்த எல்லாப்பெயர்களும் அவ்வுயர்திணைக்குரிய பெயர்களாம், எ-று.

உ-ம்: ஏனாதி, வாயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான், பிறன், பிறள், பிறர், தமன், தமள், தமர், நுமன், நுமள், நுமர், மற்றையான், மற்றையாள், மற்றையார் என வரும். பிறவும் அன்ன.

**வெள்.**

ஆண்பால் பெண்பால் பலர்பால் என்னும் முப்பாலறிவந்த என்னாது 'பன்மையும் ஒருமையும் பாலறி வந்த' என்றார்; யான்என்பது முதலிய ஒருமைப்பால் உணர்த்தும் பெயர்களும் அடங்குதற்கு.

அன்ன பிறவுமாவன ஏனாதி, காவிதி, எட்டி, வாயிலான், பூயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான், பிறன், பிறள், பிறர், மற்றையான், மற்றையாள், மற்றையார், எல்லேம், வல்லேம், இருவேம் என்னுந் தொடக்கத்தன.

---

* எல்லேம், வல்லேம், இருவேம்—பெயர்கள். எல்லாரு மாகிய யாங்கள், வன்மையுடையேமாகிய யாங்கள், இருவராகிய யாங்கள் என்னும் பொருளன,

ஆதி.

முன் சொன்னவை போன்ற பிறபெயர்களும், உயர்திணையில் ஒருமை பன்மையுமாக ஆண் பெண் பால் பகுப்புற்ற, எல்லாமும் உயர்திணைப் பெயர்களாம்.

அன்ன பிறவும்: தலைவன், தலைவி, அமைச்சர், காவலன், புரவலர், சேவகி, தாதி, ஆசிரியர், ஆசிரியை-இவையெல்லாம் உயர்திணை.

இவை ஒருமை பன்மை காட்டி நிற்கும்; ஆண் பெண் பலர் எனப் பால்காட்டும்.

சிவ.

பொருள் : அன்ன பிறவும் மேற் சூத்திரங்களிற் கூறப்பட்ட பெயர்கள் போல்வனவாகிய பிறவும்—அதாவது னகர ளகர ரகர ஈறுகள் பற்றிச் சொல்லப்பட்டன போல் வரும் அவ்வீற்றுப் பிற பெயர்களும் என்றவாறு, உதாரணம் பிறன்: பிறள், பிறர், மற்றையான், மற்றையாள், மற்றையார் என்பன போல்வன. உயர்திணை...என்ன பெயரும்—உயர்திணையிடத்து ஒருமை பன்மைப் பால்களில்வரும் எத்தகைய பெயர்களும்; உதாரணம் வேள் வேளிர், கோ, எட்டி,காவிதி, தினை (தொகைமரபு 12. இளம் உரை) போல்வன. அத்திணைய—அவ்வுயர்திணைப் பெயர்களாம்.

"அன்ன பிறவும் என்னும் சுட்டு 'நிலப் பெயர் குடிப் பெயர்' என்னும் சூத்திரத்தைக் குறித்ததாயின் இச்சூத்திரம் பலர் பாலுக்கே கூறப்பட்டதாகும். ஏன் எனின் நிலப் பெயர் முதலியன பலர்க்கும் பொதுவான தொகுதிப் பெயர். அதனால் அவன் அவள் என்பன போல் ஒருவனையே ஒருத்தியையே குறிப்பனவல்ல. ஒருவன ஒருத்தியாகிய ஒருமையையும் தழுவுவதற்காகப் 'பன்மையும் ஒருமையும் பாலறிவந்த' என்றார்" என்பது உரையாளர் குறிப்பு.

அஃறிணைப் பெயர்கள்

**164.** **அதுவிது வுதுவென வரூஉம் பெயரு**
**[1]மவைமுத லாகிய வாய்தப் பெயரு**

---

1. அவை முதலாகிய என்பது அது இது உது என்னும் அவைகளுக்கு முதலாகவுள்ள அ இ உ என்பனவற்றைச் சுட்டும்.

மவையிவை யுவையென வரூஉம் பெயரு
[2]மவைமுத லாகிய வகரப் பெயரு
மியாதுயா யாவை யென்னும் பெயரு
மாவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
பாலறி வந்த வஃறிணைப் பெயரே (13)

(அதுஇது உதுஎன வரூஉம் பெயரும்
அவைமுதல் ஆகிய ஆய்தப் பெயரும்
அவைஇவை உவைஎன வரூஉம் பெயரும்
அவைமுதல் ஆகிய வகரப் பெயரும்
யாதுயா யாவை என்னும் பெயரும்
ஆவயின் மூன்றோடு அப் பதி னைந்தும்
பால்அறி வந்த அஃறிணைப் பெயரே)

## ஆ. மொ: இல.

The nouns which stand as 'athu', 'ithu', 'uthu' the nouns having 'āythams' formed after those (demonstratives) standing as initials the nouns which stand as 'avai' 'ivai' 'uvai' the nouns having 'V' formed after those (demonstratives)
Including the nouns 'yāthu', 'yā', 'yāvai'-these fifteen belong to the gender of non-class nouns.

## பி. இ. நூ:

'அன்னபிறவும்' (167) என்னும் சூத்திரத்துக் காண்க.

## இளம்.

உரை: நிறுத்த முறையானே உயர்திணைப் பெயர் உணர்த்தி, அஃறிணைப் பெயர் உணர்த்துகின்றார், எ-று.

அது இது உது என வரும் சுட்டு முதற் பெயரும், அச்சுட்டுப் பெயர்க்கு முதலாகிய சுட்டு முதலாக ஆய்தத்தொடு கூடி அஃது இஃது உஃது என வரும் பெயரும், அவை இவை உவை எனவரும் பெயரும், சுட்டு முதலாக அவ் இவ் உவ் என வரும் வகர வீற்றுப் பெயரும், யாது, யா, யாவை என்னும் வினாப் பெயரும் என

2. அவை முதலாகிய என்பது அவை இவை உவை என்னும் அவைகளுக்கு முதலாகிய அ இ உ என்பனவற்றைச் சுட்டும்,

அப்பதினைந்தும், பால் விளங்க வரும் அஃறிணைப் பெயராம், எ-று.

சுட்டு முதலாகிய ஆய்தப் பெயரும், அவை முதலாகிய வகர வீற்றுப் பெயரும் [1]அவ்வையல்லது இன்மையின் இவ்வாறு கூறினார்.

## சேனா.

நிறுத்தமுறையானே உயர்திணைப் பெயர் உணர்த்தி இனியஃறிணைப் பெயர் உணர்த்துகின்றார்.

இ-ள் ; அது இது உது என வரூஉம் பெயரும், அப்பெயர்க்கு முதலாகிய சுட்டே முதலாக ஆயத்தத்தொடு கூடிய அஃது இஃது உஃது என வரூஉம் பெயரும், அவை இவை உவை என வரூஉம் பெயரும், அச்சுட்டே முதலாக அவ் இவ் உவ் என வரூஉம் வகர வீற்றுப் பெயரும், யாது, யா, யாவை என்னும் வினாப் பெயரும் என இப் பதினைந்து பெயரும், பால் விளங்க வரும் அஃறிணைப் பெயராம், எ-று.

சுட்டு முதலாகிய ஆய்தப் பெயரும், அவை முதலாகிய வகர வீற்றுப் பெயரும் அவையல்ல தின்மையின் அவ்வாறு கூறினார்.

## தெய்.

நிறுத்த முறையானே அஃறிணைப் பெயராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: அது முதலாக ஓதப்பட்ட பதினைந்து பெயரும் பாலறிய வந்த அஃறிணைப் பெயராம், எ-று.

உ-ம்: அது இது உது, அஃது இஃது உஃது, அவை இவை உவை, அவ் இவ் உவ், யாது, யா, யாவை என வரும்.

## நச்.

இது முறையானே அஃறிணைப் பெயர் கூறுகின்றது.

இ-ள்: அது இது உது என வரூஉம் பெயரும்—அது இது உது என்று சொல்லப்பட்டு வரும் சுட்டு முதற்பெயர்களும்,

---

1. அவை என்பது அஃது, இஃது உஃது, அவ், இவ், உவ் என்பனவற்றை. சுட்டு முதலாகிய ஆய்தப் பெயர் அவை முதலாகிய வகரப் பெயர் என்று இவ்வாறு.

அவை முதல் ஆகிய ஆய்தப் பெயரும்—அப்பெயர்க்கு முதல் ஆகிய சுட்டெழுத்தே தமக்கு முதலாக ஆய்தத்தொடு கூடி அஃது இஃது உஃது என்று சொல்ல வரும் ஆய்தத்தொடர் மொழிக் குற்றுகர வீற்றுப் பெயர்களும், அவை இவை உவை என வரூஉம் பெயரும்—அவை இவை உவையென வருஞ் சுட்டு முதற் பெயர்களும், அவை முதலாகிய வகரப் பெயரும்—அப் பெயர்க்கு முதலாகிய சுட்டெழுத்தே தமக்கு முதலாக வகர வொற்றோடு கூடி அவ் இவ் உவ் என்று சொல்லப்படும் வகர வீற்றுப் பெயர்களும், யாது யா யாவை என்னும் ஆவயின் மூன்றொடு அப்பதினைந்து பெயரும்—யாது யா யாவை என்று சொல்லப்படுகின்ற அவ்வினாப் பொருளிடத்து மூன்று பெயர் களோடுங்கூடிய அப்பதினைந்து பெயர்களும், பால் அறிவந்த அஃறிணைப் பெயரே—ஒருமை பன்மைப்பால் அறிய வந்த அஃறிணைப் பெயராம், எ-று.

**கல்.**

என்-எனின், நிறுத்த முறையானே அஃறிணைப் பெயரா மாறு உணர்த்தல் நுதலிற்று.

இ-உ: அது இது உது என்று சொல்லப்படுகின்ற சுட்டுமுதற் பெயர்களும், சுட்டெழுத்தினை முதலாகவுடைய அஃது இஃது உஃது என்னும் ஆறு தொடர்மொழிக் குற்றியலுகரப் பெயர் களும், அவை இவை உவை என்று சொல்ல வருகின்ற சுட்டு முதற் பெயர்களும், அச்சுட்டெழுத்தினை முதலாகவுடைய அவ் இவ் உவ் என்னும் வகரவீற்றுப் பெயர்களும், யாது யா யாவை என்று சொல்ல வருகினற அவ்வினாப் பொருளிடத்து வரும் மூன்று பெயருமாக வரூஉம் பதினைந்து பெயர்களும்- ஒருமை பன்மைப்பால் அறிய வந்த அஃறிணைப் பெயராம், எ-று.

**ஆதி.**

அ வயின் மூன்றொடு—சுட்டில் மூன்று மூன்றாக வந்தவற் றோடு வினாவின் வந்த மூன்றுங்கூடி.

ஆய்வு: அவ் இவ் உவ் எனப் பெயர்காண்பது பொருத்த மற்றது. 'யாது யாவை யா' போல அது அவை அ என்றே கொள்ளுதல் வேண்டும்.

ஆசிரியர் வ் ஈற்று மொழியாக அவ் இவ் உவ் தெவ் என நான்கு கூறுவர். (மொழிமரபு. 48) முறையாகப் பிரித்துப் பார்ப்பின் அ இ உ என்பதே அறம் ஆகும். தெவ் ஒன்றே வ் ஈற்று மொழியாகும்.

அவ் இவ் உவ் கண்டவர் எவ் யாவ் காணாததும் ஏனோ?

165. பல்ல பலசில வென்னும் பெயரு
முள்ள வில்ல வென்னும் பெயரும்
வினைப் பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரு
மினைத்தெனக் கிளக்கு மெண்ணுக்குறிப் பெயரு
மொப்பி னாகிய பெயர்நிலை யுளப்பட
வப்பா லொன்பது மவற்றோ ரன்ன (14)

(பல்ல பலசில என்னும் பெயரும்
உள்ள இல்ல என்னும் பெயரும்
வினைப் பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரும்
இனைத்து எனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்
ஒப்பின் ஆகிய பெயர்நிலை உளப்பட
அப்பால் ஒன்பதும் அவற்று ஓர் அன்ன)

**ஆ. மொ: இல.**

The nouns 'palla', 'pala', 'sila'
The nouns 'uḷḷa', 'illa',
The nouns of verbs and those of quality (nature)
The nouns denoting numerical totals
Including the nouns of comparison
All these nine are of the same nature

**பி. இ. நூ:**

அன்னபிறவும் (167) என்னும் சூத்திரத்துக் காண்க.

## இளம்.

உரை : பல்ல என்பது முதலாகக் கூறப்பட்ட ஒன்பது பெயரும் மேற்கூறிய அஃறிணைப் பெயர்போலப் பால் உணர்த்தி நிற்கும், எ-று.

பல்ல பல சில உள்ள இல்ல என்னும் ஐந்தும் தம்மை யுணர்த்தி நின்றன.

[1] வினைப் பெயர்க்கிளவியாவது: வருவ செல்வ என்பன.
பண்புகொள்பெயர்: கரியது, கரிய என்பன.
எண்ணுக்குறிப்பெயர்: ஒன்று, பத்து என்பன.
ஒப்பினாகிய பெயர்: பொன்னன்னது, பொன்னன்ன என்பன.

1. வினைப் பெயர்க்கிளவி—வினையாலணையும் பெயர்ச் சொல்.

## சேனா.

இ—ள் : பல்ல வென்பது முதலாகக் கூறப்பட்ட ஒன்பது பெயரும் மேற்கூறப்பட்ட அஃறிணைப் பெயர்போலப் பால் உணர நிற்கும், எ-று.

பல்ல பல சில உள்ள இல்ல என்னும் ஐந்து பெயரும் தம்மை யுணர்த்தி நின்றன. அல்லன பொருளுணர்த்தி நின்றன.

உ-ம் : வினைப் பெயர்க்கிளவியாவன: வருவது செல்வது என்பன. பண்புகொள் பெயராவன: கரியது செய்யது என்பன. இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக் குறிப்பெயர்; ஒன்று நூறு என எண் பற்றி எண்ணப்படும் பொருள்மேல் நின்றன. ஒப்பி னாகிய பெயர்நிலை யாவன: பொன்னன்னது பொன்னன்னவை என்பன.

முன்னையவைபோலப் 'பல்ல' முதலாயின வழக்கின்கட் பயின்று வாராமையின் வேறு கூறினார். பல சில என்பன பயின்ற வாயினும் பல்ல இல்ல உள்ள என்பனவற்றோடு ஒப்புமையுடையவாகலின் இவற்றொடு கூறினார்.

## தெய்.

இதுவுமது.

பல்ல பல சில என்னும் பெயராவன: பல்ல பல சில என்பன.

உள்ள இல்ல என்னும் பெயராவன: உள்ள இல்ல என்பன.

வினைப்பெயர்க் கிளவியாவது வினையானாகும் பெயர். வந்தது உழுதது என்பன வினையினாற் பொருட்குப் பெயராகி வந்தன.

பண்புகொள் பெயராவது பண்பினைக் கொண்டபெயர். கரியது, காரி, வெள்ளை எனப்பண்பினைக்கொண்ட பொருட்குப் பெயராயின.

இனைத்து எனக்கிளக்கும் எண்ணுக்குறிப் பெயராவது இத்துணையென வரையறுத்து உணர்த்தும் எண்ணுக்குறிப் பெயராம். அவை எண்ணப்படும் பொருள்மேல் வருவனவும் எண்ணுப்பெயராம், எண்ணின் பெயரும் எண்ணுப்பெயராம். 'நீ தந்த காணம் ஆயிரம்' என்றவழி எண்ணப்பட்ட பொருள்மேல் வந்தது. 'நாலிரண்டெட்டு' என்றவழி எண்ணின்மேல் வந்தது.

ஒப்பினாகிய பெயர்நிலை என்பது ஒப்புப்பற்றி வருவது. பொன்போல்வது, பொன்னனையது, யானைப்போலி என்பன.

அப்பால் ஒன்பதும் அவற்றோரன்ன என்பது அக்கூற்று ஒன்பது பெயரும் அஃறிணைப் பாலறி சொல்லாம் என்றவாறு.

நச்.

இதுவும் அஃறிணை ஒருசார்ப் பெயர்களைக் கூறுகின்றது.

இ-ள்: பல்ல பலசில என்னும் பெயரும்—பல்ல பல சில என்று சொல்லப்படுகின்ற பெயர்களும், உள்ளஇல்லஎன்னும்பெயரும்—உள்ள இல்ல என்று சொல்லப்படுகின்ற பெயர்களும், வினைப் பெயர்க்கிளவியும்—வருவது வருவன என்றாற்போலும் வினைப் பெயராகிய சொற்களும், பண்புகொள்பெயரும்—கரியது கரியன என்றாற்போலும் பண்பினைக்கொண்ட பெயர்களும், இனைத்து எனக்கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்—ஒன்று பத்து நூறு என்றாற்போலச் சொல்லப்படுகின்ற இத்துணை என வரையறை யுணர்த்தி எண்ணப்படும் பொருள்மேல் நிற்கும் பெயர்களும், ஒப்பின் ஆகிய பெயர்நிலை யுளப்பட—பொன்னன்னது பொன்னன்ன என்றாற்போல உவமத்தினால் பெற்றபெயர்ச் சொல் உட்பட, அப்பால் ஒன்பதும் அவற்றோரன்ன—அக்கூற்று ஒன்பதும் மேற்கூறிய பெயர்போலப் பால் அறிய வந்த அஃறிணைப் பெயர்களாம், எ-று.

கல்.

என்-எனின், இதுவும் அஃறிணை ஒருசார்ப் பெயர்களை நுதலிற்று.

இ-ள்: பல்ல பல சில என்று சொல்லப்படுகின்ற பெயர்களும், உள்ள இல்ல என்னும் பெயர்களும், உண்டது உண்டன என்றாற் போல வரும் வினைப்பெயர்களும், கரியது கரியன என்றாற் போல வரும் பண்பினைக் கொண்ட பெயர்ச்சொற்களும், ஒன்று பத்து நூறு ஆயிரம் என்றாற்போலச் சொல்லப்படுகின்ற இத் துணையென வரையறையுணர்த்தும் எண்ணுக்குறிப்பாற் பெற்ற பெயர்ச் சொற்களும், பொன்னன்னது பொன்னன்ன என்றாற் போல உவமத்தினாற் பெற்ற பெயர்ச் சொற்களும், உட்பட்ட அக்கூற்றொன்பதும் மேற்கூறிய பெயர்போலப் பால் அறியவரும் அஃறிணைப் பெயர்களாம், எ-று.

பி. கு.

பூவராகம் பிள்ளை.

*பல்ல, பல, சில, உள்ள, இல்ல என்ற சொற்களைக் கூறியவர் சில்ல, உள, இல என்ற சொற்களையும் கூறியிருச்க லாம். அங்ஙனம் சேர்க்காமையினால் அவை ஆசிரியர் காலத்தில் வழக்குப் பயிற்சி இல்லாதவை என்று கொள்ளுதல் வேண்டும். அல்லது அவற்றைத் தன்னின முடித்தல் என்பதனால் அடக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

166. கள்ளொடு சிவணு மவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே (15)

(கள்ளொடு சிவணும் அ இயற்பெயரே
கொள்வழி உடைய பலஅறி சொற்குஏ)

ஆ. மொ : இல.

Those neuter nouns joining 'kaḷ', belong to the words denoting neuter plural.

பி. இ. நூ :

'அன்ன பிறவும்' (167) என்னுஞ் சூத்திரத்துட் காண்க.

இளம்.

உரை : கள் என்னும் ஈற்றோடு பொருந்தும் [1]அஃறிணை யியற் பெயராவன : ஆ நாய் குதிரை கழுதை தெங்கு பலா மலை கடல் என்னுந் தொடக்கத்தன. இச்சாதிப் பெயர் ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் நிற்றலின் இயற் பெயர் என்றார். இவை கள் என்னும் ஈற்றவாய் ஆக்கள் குதிரைகள் என நின்றவழிப் பன்மை விளக்கலின் பலவறி சொல்லாயினவாறு கண்டு கொள்க, எ-று.

---

* இல, உள என்பனவற்றைப் பலவிடங்களில் ஆசிரியர் ஆளுதலின் அவர்காலத்து அவை வழக்குப்பயிற்சியில்லன என்பதினும் தன்னின முடித்தலால் அடக்குதலே நன்று. சில்ல என்பது அருகிய வழக்காகலாம்—சிவ.

1. அஃறிணையியற்பெயர் — அஃறிணைப் பொதுப்பெயர், பால் பகா அஃறிணைப் பெயர்.

**சேனா.**

இ-ள் : கள் என்னும் ஈற்றொடு பொருந்தும் அஃறிணை யியற்பெயர் கள்ளீற்றொடு பொருந்துதற்கண் பலவறி சொல்லாம், எ-று.

அஃறிணை யியற்பெயராவன : ஆ நாய் குதிரை கழுதை தெங்கு பலா மலை கடல் என்னுந் தொடக்கத்துச் சாதிப்பெயர். ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் நிற்றலின் 'இயற்பெயர்' என்றார்.

உ-ம் : இவை, 'கள்' என்னும் ஈற்றவாய், ஆக்கள், குதிரைகள் என நின்றவழிப் பன்மை விளக்கலின் பலவறி சொல்லாயின வாறு கண்டுகொள்க.

அஃறிணை யியற்பெயர் எனவே [2]பாலறிபெயரேயன்றி அஃறிணைப் பொதுப்பெயரும் உள என்பது பெற்றாம். [3]பாற்குரிமை சுட்டாது அஃறிணைக்குரிமை சுட்டிய 'அவ்வியற்பெயர்' என்றார்.

**தெய்.**

இதுவுமது.

இ-ள்: கள் என்னும் சொல்லோடு சிவணிய அவ்வஃறிணைப் பொருள்மேல் வரும் இயற்பெயர் பலவறி சொற்குக் கொள்ளும் இடனுடைய, எ-று.

என்றமையாற் சிவணாத இயற்பெயர் பால் விளங்காது என்றவாறாம். ஆக்கள் தெங்குகள் எனவரும்.

**நச்.**

இதுவும் அஃறிணையியற்பெயர் கூறுகின்றது.

இ—ள் : கள்ளொடு சிவணும் அவ் இயற்பெயரே—கள் என்னும் வாய்ப்பாட்டோடு பொருந்தும் அவ்வஃறிணையியற்

---

2. பாலறிபெயர்—இறுதி எழுத்தான் ஒருமைப் பன்மைப் பாலறியும் பெயர். அது—துவ்வீற்றால் ஒன்றன்பால், அவை—வ்வையீற்றால் பலவின்பால்.

3. அஃறிணைப் பொதுப்பெயர் பாலைக் குறியாமையின் பாற்குரிமை சுட்டாது என்றும், திணையையே குறித்தலின் திணைக்குரிமை சுட்டியது என்றும் கூறினார் சேனாவரையர்.

பெயர்கள், பலவறிசொற்குக் கொள்வழி யுடைய—பலவற்றை யறிஞ்சொல் ஆதற்குக் கொள்ளும் இடம் உடைய, எ-று.

உ-ம்: ஆ நாய் குதிரை ஒட்டகம் புலி புல்வாய் தெங்கு பலா மலை கடல் என்னுந் தொடக்கத்துச் சாதிப்பெயர் இருபாற்கும் பொதுவாய் நின்றன. கள்ளொடு சிவணி ஆக்கள் குதிரைகள் கடல்கள் மலைகள் எனப் பன்மை விளக்கி நின்றன.

'வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினும்' (யாப். விரு. 67 உரை மேற்.) எனவும், 'பிறந்தவர்கள் எல்லாம் அவாப் பெரியர் ஆகி' (சீவக. 2622) எனவும், 'கற்றனங்கள் யாமுமுடன் கற்பனகள் எல்லாம் (சீவக. 1795) எனவும், 'எங்கள் வினை யாலிறைவன் வீடியவஞ் ஞான்றே' (சீவக. 1793) எனவும் 'கள்' ஈறு பலரை உணர்த்தி நின்றனவால் எனின், [4]இவற்றுள் பலரை உணர்த்துதற்கு ஓதிய ஈறுகளே பலரை உணர்த்தி நின்றன. 'கள்' என்பது இசை நிறைத்து நின்றது எனப்படும். அவ்வீறுகளை ஒழியத் தாமே பலரை உணர்த்துவன உளவேற் 'கடி சொல் இல்லை காலத்துப் படினே' (எச்ச. 56) என்றதனாற் கொள்க. அஃது இக்காலத்துப் 'பெண்டுகள்' என்றாற்போல வருவனபோலும்.

கல்.

என்—எனின், இதுவும் பாலறிய வரும் அஃறிணை ஒரு சார்ப் பெயர்களை யுணர்த்தல் நுதலிற்று.

இ—ள்: கள் என்னும் வாய்பாட்டோடு பொருந்தும் அவ்வஃறிணை யியற்பெயர்கள் பலவறி சொல்லாதற்குக் கொள்ளும் இடம் உடைய, எ—று.

கள்ளொடு சிவனின் இயற் பெயர் பலவறி சொல்லாகக் கொள்ளும் இடமுடைய எனவே, கள்ளொடு சிவணாத பெயர் கள் பலவறி சொல்லாகக் கொள்வப்படாது ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் நிற்கும் என்றவாறு.

உ—ம்: நாய்கள், ஆக்கள் எனப் பன்மையுணர நின்றன. நாய், ஆ எனக் கள்ளொடு சிவணாமையிற் பொதுவாய் நின்றன எனக் கொள்க.

---

4. வேந்தர், பிறந்தவர், கற்றனம், எம் (யாம்) என்பனவே ரகர மகர வீறுகளால் பன்மையுணர்த்தின. அவற்றில் வந்த கள் இசை நிறைக்க வந்தது ஆதலின் உயர்திணையில் கள் ஈறு வந்ததாகக் கொள்ளற்க.

**167.** **அன்ன பிறவு மஃறிணை மருங்கிற்**
**பன்மையு மொருமையும் பாலறி வந்த**
**வென்ன பெயரு மத்திணை யவ்வே.** (*16*)

(அன்ன பிறவும் அஃறிணை மருங்கின்
பன்மையும் ஒருமையும் பால் அறி வந்த
என்ன பெயரும் அத்திணையவே.)

## ஆ. மொ: இல.

Such others belonging to non-class, denotiug plural and singular, are of the same class.

## பி. இ. நூ:

**நேமி. சொ.** *22*

ஆதியினிற் சுட்டாம் உகர ஐகாரப்பேர்
ஓதிய எண்ணின்பேர் உவமைப்பேர்—தீதிலாச்
சாதிப்பேர் சார்ந்த வினாவுறுப்பின்பேர் தலத்தோர்
ஓதிய அஃறிணைக்காம் உற்று.

**நன்.** *279, 280*

வினாச் சுட்டுடனும் வேறும் ஆம் பொருள்
ஆதி உறுதுச் சுட்டு அணை ஆய்தம்
ஒன்றன்எண் இன்னன ஒன்றன் பெயரே.

முன்னர் அவ்வொடு வருவை யவ்வும்
சுட்டிறு வவ்வும் கள்ளிறு மொழியும்
ஒன்றல் எண்ணும் உள்ள இல்ல
பல்ல சில்ல உளஇல பலசில
இன்னவும் பலவின் பெயரா கும்மே.

**இல.** *180, 181*

வினாவும் சுட்டும் சுட்டுமுதல் ஆய்தமும்
பொருள்முதல் ஆறும் தொடரும் துவ்வீறு
ஒன்றென்எண் இன்னன ஒன்றன் பெயரே.

முன்னர் அவ்வோடு வருவை அவ்வும்
சுட்டிறு வவ்வும் கள்ளிறு மொழியும்
ஒன்றல் எண்ணும் உள்ள இல்ல
பல்ல சில்ல உளஇல பலசில
என்பவும் பிறவும் பலவின் பெயரே.

**தொன். 80**

ஒன்று துவ்வுறின் அ ன ஐயும்
பலவின்பால் ஈறும் கள்ளீறு மற்றவை
அன்றியும் இருமைக்கு அஃறிணைப் பொதுவே.

**முத்து. பெ. 24, 25, 26**

துவ்விறு சுட்டொடு சுட்டணை ஆய்தமும்
யாதும் ஒன்றும் அஃறிணை ஒன்றன்
பால்படர்க் கைப்பெயர் என்மனார் புலவர்.

வகார இறுதியும் வையிறுதி மொழியும்
கள்ளென் இறுதியும் கணக்கும் பிறவும்
அத்திணைப் பலவின் படர்க்கைப் பெயரே.

பல்ல பலசில என்னும் பெயரும்
உள்ள இல்ல உளஇல என்னும்
பெயரும் அத்திணைப் பலவின் மேன.

## இளம்.

உரை : மேற்கூறப்பட்ட பெயர் போல்வன பிறவும் அஃறிணைக்கண் பன்மையும் ஒருமையுமாகிய பால் விளங்க வந்த எல்லாப் பெயரும் அத்திணைக்கு உரிய, எ-று.

அன்ன பிறவும் என்றதனாற் பெறுவன : பிறிது, பிற, மற்றையது, மற்றையவை, பல்லவை, சில்லவை, உள்ளது, இல்லது, உள்ளன, இல்லன என்னுந் தொடக்கத்தன.

## சேனா.

இ-ள் : மேற்கூறப்பட்ட பெயர் போல்வன பிறவும், அஃறிணைக்கண் பன்மையும் ஒருமையுமாகிய பால் விளங்கவந்த எல்லாப் பெயரும் அத்திணைக்குரிய, எ—று.

அன்ன பிறவும் என்றதனாற் கொள்ளப்படுவன : பிறிது, பிற; மற்றையது. மற்றையன; பல்லவை, சில்லவை; உள்ளது, இல்லது; உள்ளன, இல்லன என்னுந் தொடக்கத்தன.

## தெய்.

அஃறிணைப் பெயர்க்கெல்லாம் புறநடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : மேற் சொல்லப்பட்டன போல்வன பிறவுமாகி அஃறிணைப் பொருட்கண் பன்மையும் ஒருமையுமாகிப் பால் விளங்க வந்த எல்லாப் பெயரும் அஃறிணையிடத்த எ-று.

உ-ம் : உள்ளது, இல்லது, பிறிது, பிற, அத்தன்மையது, அத்தன்மைய. இவையும் இவை போல்வன பிறவும்.

**நச்.**

இஃது அஃறிணைப் பெயர்க்குப் புறனடை கூறுகின்றது.

இ-ள் : அன்ன பிறவும் அஃறிணை மருங்கில்—முற்கூறிய பெயர் போல்வன பிறவுமாகிய அஃறிணைக்கண், பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த—பன்மையும் ஒருமையுமாகிய பால் விளங்க வந்த, என்ன், பெயரும் அஃறிணையல்வே—எல்லாப் பெயரும் அவ்வஃறிணைக்குரிய பெயராம் எ—று.

உ-ம் : பிறிது, பிற; அனையது, அனையன; மற்றையது, மற்றையன; பல்லவை, சில்லவை; உள்ளது, இல்லது; உள்ளன, இல்லன; அன்னது, அன்னன எனவரும். நிலம், நீர், தீ, வளி, ஆகாயம், உண்டல், தின்றல், கருமை, செம்மை என்பனவும் அப்பாற்படும்.

**கல்.**

என்-எனின், இஃது அஃறிணைப் பெயர்க்குப் புறனடை யுணர்த்தல் நுதலிற்று.

இ-ள் : அத்தன்மையன பிறவுமாகிய அஃறிணையிடத்துப் பன்மையும் ஒருமையுமாகிய பால்களை அறியவந்த எல்லாப் பெயர்களும் அவ்வஃறிணைக்குரிய பெயர்களாம், எ—று.

உ-ம் : ஆ நாய் கழுதை ஒட்டகம் புலி புல்வாய் எனச்சாதி பற்றி வருவன எல்லாம் கொள்க. நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்பன அவற்றின்பாற்படும். உண்டல், தின்றல் எனப் பால் காட்டாத தொழிற் பெயரும், கருமை செம்மை எனப் பால் காட்டாத பண்புப் பெயரும், மற்றும் அவற்றுள் பாலேபடும் எனக் கொள்க. மற்றையது, மற்றையன, பிறிது, பிற என்பனவும் கொள்க. பிறவும் அன்ன.

**சிவ.**

அன்ன பிறவும் என்பதற்குப் பிறிது, பிற, மற்றையது, மற்றையன, மற்றையவை என்பனவற்றையும், பன்மையும் ஒரு

மையும் பாலறிவந்த என்ன கிளவியும் என்பதற்கு நிலம் நீர் முதலியவற்றையும், உண்டல் முதலிய தொழிற்பெயர்களையும், செம்மை முதலிய பண்புப் பெயர்களையும் கொள்க.

**168. தெரிநிலை யுடைய வஃறிணை யியற்பெய**
**ரொருமையும் பன்மையும் வினையொடு வரினே (17)**

(தெரிநிலை உடைய அஃறிணை இயற் பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரின் ஏ)

## ஆ. மொ: இல.

The neuter nouns with out 'Kaḷ' suffix indicate the number of singular or plural when followed by verbs.

## பி. இ. நூ:

நன். *281*
*பால்பகா அஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய.*

இல. *182* ஷ ஷ

தொன். *80*.
*அன்றியும் இருமைக்கு அஃறிணைப் பொதுவே.*

## இளம்.

உரை : கள்ளொடு சிவணாத அஃறிணை யியற் பெயர் ஒருமையும் பன்மையும் விளங்கு நிலையுடைய, அதற்கேற்ற வினையொடு தொடர்ந்தவழி, எ-று.

ஆவந்தது, ஆவந்தன; குதிரை வந்தது, குதிரை வந்தன என ஏற்ற வினையாற் பால்விளங்கியவாறு கண்டு கொள்க.

## சேனா.

இ-ள் : கள்ளொடு சிவணாத அஃறிணை யியற் பெயர் ஒருமையும் பன்மையும் விளங்குதலையுடைய, அதற்கு ஏற்ற வினையொடு தொடர்ந்த வழி, எ-று.

உ-ம் : ஆவந்தது, ஆவந்தன; குதிரை வந்தது, குதிரை வந்தன என வினையாற் பால் விளக்கியவாறு கண்டுகொள்க.

* இஃது அஃறிணைப் பெயர் இலக்கணமாயினும், பொதுப் பெயர் வினையொடு வந்து பால் விளங்குதல் ஒப்புமை நோக்கி

* இப்பகுதி விளக்கத்தைப் பி. கு வில் காண்க.

ஈண்டு வைத்தார் என்பது. அஃதேல் 'கள்ளொடு இவணும்' (பெய. 15) என்பதனையும் ஈண்டு வைக்க எனின், 'இயற்பெயர் முன்னர் ஆரைக்கிளவி' (இடை. 22) போலக் கள் என்பது அஃறிணையியற் பெயர்க்கு ஈறாய் ஒன்றுபட்டு நிற்றலின், வினையானன்றிப் பெயர்தாமே பன்மை யுணர்த்தியவாம்; அதனால் அதனைப் பாலறிவந்த பெயர் உணர்த்தும் அதிகாரத்து வைத்தார்.

**தெய்.**

மேற் பால் விளங்குவன கூறினார். இனிப் பால் விளங்காத அஃறிணை யியற்பெயர் பாலுணர்த்துமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : அஃறிணைப் பொருள்மேல் வரும் இயற்பெயர் ஒருமையும் பன்மையும் தெரிநிலையுடையவாம் வினையொடு வரின், எ-று. அல்லது பால் விளங்கா என்றவாறு.

உயர்திணைப் பொருள்மேல் விரவிவரும் இயற் பெயர் ஒருமையும் பன்மையும் தோன்ற நிற்றலின் வேறு ஓதப்பட்டது. இவை பொருளும் உறுப்பும் பண்பும் தொழிலும் இடமும் காலமும் பற்றி வரும்.

உ-ம் ; ஆ தெங்கு என்பன பொருள். இலை, பூ என்பன உறுப்பு. கருமை வட்டம் என்பன பண்பு. உண்டல் ஓடல் என்பன தொழில். அகம் புறம் என்பன இடம். யாண்டு திங்கள் என்பன காலம். ஆ வந்தது என்ற வழி ஒன்று என்பதூஉம் வந்தன என்ற வழிப் பல என்பதூஉம் உணர்த்தியவாறும், இவ் விரு வீற்றிற்கும் பொதுவாகி நின்றவாறும் கண்டு கொள்க. பிறவும் அன்ன.

**நச்.**

இஃது அஃறிணையியற் பெயர் பால் உணர்த்துமாறு கூறுகின்றது.

இ-ள் : அஃறிணை யியற் பெயர் — கள்ளொடு சிவணாத அஃறிணை இருபாற்கும் உரிய பெயர், ஒருமையும் பன்மையும் தெரிநிலையுடைய — ஒருமைப் பாலும் பன்மைப் பாலும் விளங்கும் நிலைமையுடைய, வினையொடுவரினே — அதற்கு ஏற்ற வினையோடு தொடர்ந்தவழி, எ-று.

உ-ம் : ஆ வந்தது, ஆ வந்தன; யானை வந்தது, யானை வந்தன; குதிரை வந்தது, குதிரை வந்தன என வரும்.

கள்ளொடு சிவணிய இயற்பெயரை வேறு கூறினார், வினை யானன்றிப் பெயர் தாமே பன்மை விளக்கலின்.

**கல்.**

என்-எனின், மேற்புறனடையுள் பால் அறிய வருவனவற் றோடு ஒன்றாக ஓத்தப்பட்ட இயற்பெயர்கள் பாலறிய வருமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள் : அஃறிணையிடத்து ஒருமையும் பன்மையுமாகிய பால்கள் எப்பொழுது தெரிவதெனின் பால்காட்டும் வினை யொடு வரும் பொழுது, எ-று.

உ-ம் : ஆவந்தது, ஆவந்தன எனவும் வினையால் பாலறிய வந்தவாறு கண்டு கொள்க.

**வெள்.**

'கள்ளொடு சிவணும்' என முறை கூறிய அடை மொழியின்றி, 'அஃறிணையியற் பெயர்' எனக் கூறவே கள் ளொடு சிவணாத அஃறிணை யியற்பெயர் என்பது புலனாம். அஃறிணையியற் பெயர் வினையொடு வரின் ஒருமையும் பன்மை யும் தெரிநிலையுடைய என இயையும். தெரிநிலை — பால் விளங்கும் நிலை.

ஆவந்தது, ஆ வந்தன.

யானை வந்தது, யானை வந்தன.

மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன.

என ஏற்ற வினையால் ஒருமையும் பன்மையும் விளங்கியவாறு கண்டு கொள்க. வினையொடு வரினும் என்றாராயினும் ஆ ஒன்று, ஆ பல என முடிக்குஞ் சொல்லாகிய பெயராற் பாலறியப் படுதலும் கொள்க.

**சிவ.**

அஃறிணையியற் பெயர் (பால்பகா அஃறிணைப் பெயர்) ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவானது. அப்பொதுமை நீக்கி ஒன்றனைச் சார்த்த வேண்டுமானால் அதனுடன் 'கள்' என்னும் விகுதி சேர்த்தால் பன்மைக்காகி விடும். ஆ, ஆக்கள் எனக் காணலாம். இக் கருத்துடைது ''கள்ளொடு சிவணும்'' என்னும் சூத்திரம். அவ்வஃறிணையியற்பெயர் இன்னொரு வகையிலும் ஒருமை பன்மைக் குரியதாகும். அதாவது வினை முடிபொடு

வரின் ஆகும். ஆ வந்தது, ஆ வந்தன எனக் காணலாம். இக் கருத்துடையது ''தெரிநிலையுடைய அஃறிணையியற் பெயர்'' என்னும் இச்சூத்திரம். இவை இரண்டு சூத்திரங்களும் அஃறிணை யியற்பெயர் ஒருமை பன்மைகள உணர்த்துமாறு யாங்ஙனம் என்பது பற்றியே கூறலின் இரண்டையும்சேரவைத்தல்வேண்டும். ஆனால் இவற்றுக்கிடையில் ''அன்ன பிறவும்'' என்னும் புறனடைச் சூத்திரம் வைக்கப்பட்டுள்ளது. ஏன் என்பது வினா.

இச்சூத்திரத்தையடுத்துள்ள சூத்திரம் பொதுப் பெயர் வினையொடு கூடிப் பால் உணர்த்துமாறு கூறுவதாதலின், வினை யொடு கூடிப் பால் உணர்த்தும் அஃறிணைப் பொதுப்பெயர் இலக்கணத்தைக் கூறும் இச்சூத்திரத்தைச் சேர வைத்தார் ஆசிரியர்.

அப்படியாயின் மீண்டும் ஒரு வினா எழும். 'கள்ளொடு சிவணும்' என்னும் சூத்திரமும் அஃறிணையியற் பெயரின் பாற் பொதுமை நீக்குமாறு கூறுவதாகலின் இச் சூத்திரத்தோடு சேர வைத்திருக்கலாமே என்பது அவ்வினா.

அதற்குவிடை : அஃறிணையியற் பெயர் கள்ளொடு சேர்ந்து பன்மையுணர்த்தும் போதும் பெயராகவே நிற்பது. தனிப் பெயர் நிலையிலேயே (தொடர்மொழியில் இல்லாமல்) பன்மையை யுணர்த்துவது. 'இருதிணைச் சொற்கும்' என்னும் சூத்திரம் பொதுப் பெயர்கள் தொடர் மொழியில் ஒருமை பன்மை விளக்கும் என்பது பற்றியது. தனிப் பெயர் நிலையில் பொதுமை நீங்கிப் பன்மையுணர்த்தும் இயற்பெயர் பற்றிய காரணத்தால் தனிப் பெயர்கள் பற்றிச் சொல்லி வந்த 'அது இது உது', பல்ல பலசில' என்னும் பெயர்கள் பற்றிய சூத்திரங்களையடுத்துக் 'கள்ளொடு சிவணும்' என்னும் சூத்திரம் வைத்தார். இது 'கள்ளொடு சிவணும்' என்பதற்கும் 'தெரிநிலையுடைய' என்ப தற்கும் இடையில் தனிப் பெயர்களைப் பற்றியதான் புறனடைச் சூத்திரம் 'அன்ன பிறவும்'என்பதை அமைத்தற்குக் காரணமாம்.

### விரவுப் பெயர்

**169.** **இருதிணைச் சொற்கு மோரன்ன வுரிமையின்**
**திரிபுவேறு படூஉ மெல்லாப் பெயரு**
**நினையுங் காலைத் தத்த மரபின்**
**வினையொ டல்லது பாறெரி பிலவே** (18)

(இருதிணைச் சொற்கும் ஓர் அன்ன உரிமையின்
திரிபு வேறு படூஉம் எல்லாப் பெயரும்

நினையுங் காலைத் தம்தம் மரபின்
வினையொடு அல்லது பால்தெரிபு இலஎ)

ஆ. மொ: இல.

On examination it is found that
all the words which are common to both
classes and which change in their senses
in accordance with the context
indicate their genders by means of verbs they have.

பி. இ. நூ:

நேமி. சொ. 36

பாங்கார் பெயர்வினை கொண்டன்றிப் பால்தோன்றா
வாங்கு விரவுப்பேர் அஃறிணைப்பேர்—ஓங்கிய
கள்ளொடு வந்தால் இருதிணைக்கும் பன்மைப்பால்
ஒள்ளிழையாய் தோன்றலும் உண்டு.

நன். 359

பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்
மேல்வரும் சிறப்புப் பெயர்வினை தாமே.

இல. 333

பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்
மேல்வருஞ் சிறப்புக் பெயர்வினைக் குறிப்பே.

இளம்.

உரை : இருதிணைச் சொல்லாதற்கும் ஒத்த உரிமையவாக லின் உயர்திணைக்கட் சென்றுழி உயர்திணைப் பெயராயும், அஃறிணைக்கட் சென்றுழி அஃறிணைப் பெயராயும் வேறுபடு பெயரெல்லாம் ஆராயுங்கால் [1]தத்தம் மரபின் வினையொடு இயைந்தல்லது திணை விளங்கி நில்லா, எ-று.

வ-று: சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது; முடவன் வந்தான், முடவன் வந்தது எனக் கொள்க.

---

1. தத்தமரபின் வினை—தத்தம் மரபொடு பால்காட்டும் விகுதியொடு கூடிய வினை

**சேனா.**

இ-ள்: இருதிணைச் சொல்லாதற்கும் ஒத்த உரிமையாதலின் உயர்திணைக்கட் சென்றுழி உயர்திணைப் பெயராயும் அஃறிணைக்கட் சென்றுழி அஃறிணைப் பெயராயும் வேறுபடும் விரவுப்பெயரெல்லாம், ஆராயுங்கால் தத்தம் மரபின் வினையோ டியைந்தல்லது திணை விளங்க நில்லா, எ-று.

'வினையோ டல்லது' எனவே திணைக்கேற்றவற்றான் ஈறுவேறுபடாது ஒரீற்றவாய் நிற்றலின் [2]பெயர்தாமே நின்றும் 'தத்த மரபின்' என்றதனாற் [3]பொதுவினையோடு வந்தும் திணை விளக்கா என்பது பெறப்படும்.

இனி அவை தத்தமரபின் வினையொடு பால் விளக்குமாறு: சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது; முடவன் வந்தான், முடவன் வந்தது என வந்தவாறு கண்டு கொள்க.

தத்தமரபின் வினையாவன உயர்திணைக்கும் அஃறிணைக் கும் உரிய பதினோரீற்றுப் படர்க்கை வினை. [4]'எல்லாப் பெயரும்' என்பதனை, 'ஆறுபோயினார் எல்லாரும் கூறை கோட்பட்டார்' என்பது போலக் கொள்க. இருதிணைக்கும் பொதுவாகிய சொல் வினையாற் பொதுமை நீங்கி ஒருதிணைச் சொல்லாம் என்பது கருத்தாகலின் ஈண்டுப் பால் எனப்பட்டது திணையேயாம்.

---

2. பெயர் தாமே நின்றும் — பெயர்தாமே தனித்து நின்றாலும்
3. பொதுவினையொடு வந்தும் — பொதுவினையொடு வந்தாலும். சாத்தன் எனத்தனித்து வரின் திணை விளங்காமையும், சாத்தன் வரும் எனச் செய்யும் என் வாய்ப்பாட்டு வரும் என்னும் பொதுவினையோடு வரினும் விளங்காமையும் காண்க.
4. எல்லாப் பெயரும் திணை வினையினால் திணை விளங்கும் என்றாராயினும், முன்னிலைப்பெயர் நீ, நீயிர் என்பன வினையினாலும் திணைவிளங்க மாட்டா ஆதலின், முன்னிலைப் பெயர் தவிர மற்றைய பெயர் களைக் கொள்ளுதல்வேண்டும். எதுபோல்எனின் வழிப் போயினார் எல்லாம் தம் ஆடை பறிக்கப்பட்டார் என்றால் வழிப்போம் தெய்வம் ஒழிந்த மக்களையே கொள்ளுதல் போல் என்க.

சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல் என்பதனால் 'தத்தம் மரபின் வினையோ டல்லது பால் தெரிபில' என்றா ரேனும், சாத்தன் ஒருவன், சாத்தன் ஒன்று எனத் தத்தம் மரபின் பெயரொடு வந்து பால் விளக்குதலும் கொள்க.

**தெய்.**

நிறுத்த முறையானே இருதிணைக்கும் உரிய பெயர் இலக் கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : உயர்திணைப் பெயர்ச்சொல் அஃறிணைப் பெயர்ச் சொல் என இருதிணைச் சொற்கும் ஒத்த உரிமையினின் றும் திரிந்து பொருள் வேறுபடும் எல்லாப் பெயரும் ஆராயுங் காலத்துத் தத்தமக் கேற்ற வினையோடே கூடியல்லது பால் விளங்குதல் இல, எ—று.

உ—ம் : பால் எனவே திணையும் அடங்கும். அவையாவன இயற்பெயர் முதலாக முன் எடுத்து ஓதுகின்ற பெயர். அவற்றுள் சாத்தன் என்னும் பெயர் உயர்திணை ஆண்பாற்கும் அஃறிணை ஆண்பாற்கும் இடுகுறியாகி வழங்குமாதலின் அது, வந்தான் என்பதனோடு தொடர்பு பட்டுழி உயர்திணை யெனவும், வந்தது என்பதனோடு தொடர் பட்டுழி அஃறிணை யெனவும் நின்றவாறு கண்டு கொள்க. பிறவும் அன்ன. [5]இச்சூத்திரம் எதிரது நோக்கிற்று.

**நச்.**

இது நிறுத்த முறையானே விரவுப் பெயர் கூறுகின்றது.

இ—ள் : இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமையின்— இருதிணைச்சொற்கும் ஒத்த உரிமைய வாதலின், திரிபு வேறு படூஉம் எல்லாப் பெயரும்—உயர்திணைக்கண் சென்றுழி உயர்திணைப் பெயராயும் அஃறிணைக்கண் சென்றுழி அஃறிணைப் பெயராயும் வேறு படூஉம்விரவுப் பெயர் எல்லாம்,

---

5. அடுத்த சூத்திரம், செய்யும் என்னும் முற்று பால் தெரிதற்கேற்ற வினைநிலைப்பட்டுவரின் பொதுப் பெயர்களும் திணை விளங்கும் என்னும் கருத்தைக் கொண்டதாதலின் எதிரது நோக்கிற்றாம். (இரண்டு சூத்திரங்களும் தத்தமரபின் வினையால் திணை விளக்குவன)

நினையுங்காலை—ஆராயுங்காலத்து, தத்தம் மரபின் வினையொடு அல்லது பால் தெரிபு இலவே—அவ்வத்திணையை உணர்த்துதற்கு உரியமுறையினை உடைய வினைச்சொல்லோடு இயைந்தல்லது திணை விளங்க நில்லா, எ-று.

உ-ம் : சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது; முடவன் வந்தான், முடவன் வந்தது எனவரும்.

நினையுங்காலை என்றதனால், சாத்தன் ஒருவன், சாத்தன் ஒன்று எனப் பெயரோடு வந்து பால் விளக்கலும் கொள்க. இன்னும் இதனானே, முற்கூறிய அஃறிணையியற் பெயர்களும் ஆ ஒன்று, ஆபல எனப் பெயரால் பால் அறியப்படுதலுங் கொள்க. இன்னும் இதனானே முலையெழுந்தது, மோவாய் எழுந்தது என்றாற் போல்வன தன் சினை வினையால்[6]பால் தெரியாமையும் கொள்க.

**கல்.**

என்-எனின், நிறுத்தமுறையானே விரவுப் பெயராமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள்: இருதிணைப் பொருட்கும் ஒன்று போன்ற உரிமை காரணமாக அவ்வத்திணைக்கண் செலவு வரவு உடைத்தாய் உயர்திணைக்கண் சென்றகாலத்து உயர்திணைப் பெயராயும் அஃறிணைக்கண் சென்றகாலத்து அஃறிணைப் பெயராயும் வேறுபடுகின்ற விரவுப் பெயர்கள் எல்லாம் ஆராயுங்காலத்து அவ்வத்திணையே யுணர்த்துதற்குரிய முறைமையினையுடைய வினைச்சொற்களான் அல்லது திணைதெரிதல் இல, எ-று.

உ-ம்: சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது எனவரும்.

வினையானே யன்றித் தத்தம் மரபிற் பெயராலும் திணையறியப்படும் என்பது.

உ-ம் : சாத்தன் ஒருவன், சாத்தன் ஒன்று எனவரும்.

இன்னும் அவ்விலேசானே மேற்கூறிய அஃறிணையுடைய பெயர்களும் வினையானேயன்றிப் பெயரானும் பால் அறியப்படும் எனக் கொள்க. ஆஒன்று, ஆபல எனவரும்.

**பி.கு.**

**செ. வை. சண்முகம்**

விரவுத்திணைக்குரிய பெயர்கள் 'தத்தம் மரபின் வினையோ டல்லாமல் பாலைக் காட்டாது' என்று பொதுவாகத்தான் குறிப்பிட்டுள்ளார்.

---

6. பால் என்றது ஒருமை பன்மைப்பால்களை,

இளம்பூரணர் சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது, முடவன் வந்தான், முடவன் வந்தது என்ற உதாரணங்களைக் காட்டுவதன் மூலம் படர்க்கை வினைமுற்றே தெளிவான பாலை உணர்த்தும் என்ற கருத்தைப் பெறவைத்து விட்டார். ஆனால் சேனாவரையரோ, 'தத்தம் மரபின் வினையான் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் உரிய பதினோரீற்றுப் படர்க்கை வினை' என்று கூறிப் படர்க்கை வினை பகுதியே பாலை உணர்த்துகிறது என்பதைத் தெளிவுபடுத்தி விட்டார். மேலும் அந்த விகுதிகள் என்னென்ன என்பதை

இருதிணை மருங்கின் ஐம்பா லறிய
ஈற்றுநின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே (கிளவி-10)

என்ற சூத்திரத்தை நினைவு படுத்தவே 'பதினோரீற்றுப் படர்க்கை வினை' என்று குறிப்பிட்டார். இதன்மூலம் சேனாவரையர் உரையாசிரியர் கடமையாகிய மூல ஆசிரியர் கருத்தை விளக்குதல் அல்லது தெளிவு படுத்தல் என்பதில் வெற்றி பெற்றுள்ளார் என்று நாம் கூறலாம். இதனால்தான் நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாருங்கூட இப்படிப்பட்ட விளக்கத்தைத் தரவில்லை போலும்.

சாத்தன் என்பது எதைக் குறிக்கிறது என்பதைப் பேசுவோன் உணர்ந்தால்தான் அதற்குரிய சரியான படர்க்கை வினை விகுதியைப் பயன்படுத்த முடியும். எனவே பேசுவோனுக்கு விரவுப் பெயராயினும் அதன் பால் பற்றிய அறிவில் ஐயமிருக்க இடம் இல்லை. கேட்போன் சாத்தன் என்ற சொல் உயர்திணையிலும் அஃறிணையிலும் வரும் என்பதால் என்ன பால் என்பதையுணர்ந்து கொள்ள முடியாது. எனவே பேசுவோன் பயன்படுத்தும் வினைமுற்று விகுதியிலிருந்து விரவுப் பெயரின் பாலைத் தெரிந்து கொள்கிறான். எனவே இந்த சூத்திரம் கேட்போன் நோக்கில் எழுதப்பட்டது. 'இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்' (பெய. 7) என்ற சூத்திரம் பேசுவோன் நோக்கில் இருந்து எழுதப்பட்டது என்று உணர்ந்து கொள்ள வேண்டும். (விரவுப் பெயர்கள் பால் உணர்த்தும் முறை, மொழியியல் 5, 3. பக். 2, 3. 1982).

170 நிகழூஉ நின்ற *பால்வரை கிளவியி
னுயர்திணை யொருமை தோன்றலு முரித்தே
வன்ன மரபின் வினைவயி னான. (19)

(நிகழூஉ நின்ற பால்வரை கிளவியின்
உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே
அன்ன மரபின் வினைவயின் ஆன)

ஆ. மொ: இல.

The word which excludes epieene and in!icates present tense may indicate the singular of high class when such verbe occurs.

## இளம்.

உரை: நிகழ்காலம் பற்றி வரும் பால்வரை கிளவியால் உயர்திணை ஒருமைப்பால் தோன்றுதனும் உரித்து, அவ் வொருமைப்பால் தோன்றுதற்கேற்ற வினையிடத்து, எ-று.

பால்வரை கிளவி என்பது செய்யும் என்னும் முற்றுக் சொல்லை.

சாத்தன் [1]யாழ் எழூஉம், சாத்தி சாந்து அரைக்கும் என்ற வழி, யாழ் எழுதலும், சாந்து அரைத்தலும் அஃறிணைக்கு ஏலாது ஒருவற்கும் ஒருத்திக்கும் ஏற்றலின், உயர்திணை ஒருமைப் பால் விளங்கியவாறு கண்டு கொள்க. 'நிகழூஉ நின்ற' என்பது நிகழா நின்ற என்றவாறு.

## சேனா.

இ-ள்: நிகழ்காலம் பற்றி வரும் பலர்வரை கிளவியான் உயர்திணை யொருமைப்பால் தோன்றலும் உரித்து, அவ்வொரு மைப்பால் தோன்றுதற்கேற்ற வினையிடத்து, எ-று.

---

* பலர்வரை கிளவி—பாடம் (சேனா, தெய்) பால்வரை கிளவி—பலர்பாலை நீக்கிய கிளவி.

1. யாழ்எழூஉம்—யாழ் இசைஎழுப்பும். எழூஉம்—பிற வினை. இங்கு வினையை மட்டும் குறிப்பிடாது அது ஏற்று வரும் பெயரையும் சேர்த்துப் பேசுவது பெயரும் வினையும் சேர்ந்தே பால் உணர்த்துகிறதோ என்ற ஐயம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது---செ. வை. சண்முகம்.

[2]'பலர்வரை கிளவி' என்றது செய்யுமென்னும் முற்றுச் சொல்லை.

உ-ம்: சாத்தன் யாழ்எழூஉம், சாத்தி சாந்தரைக்கும் என்ற வழி யாழ்எழூஉதலும்சாந்தரைத்தலுமாகிய வினை அஃறிணைக் கேலாது ஒருவற்கும் ஒருத்திக்கும் ஏற்றலின் [3]உயர்திணை யொருமைப்பால் விளங்கியவாறு கண்டு கொள்க.

[4]நிகழூஉ நின்ற தொழிலையுணர்த்துஞ் சொல்லை ஒற்றுமை நயத்தான் 'நிகழூஉ நின்ற பலர்வரை கிளவி' என்றார். 'நிகழூஉ நின்ற' என்றது நிகழா நின்ற என்றவாறு [5]நடத்தல், கிடத்தல் முதலாகிய பிற தொழில் பற்றிவரும் பலர்வரை கிளவியான் உயர்திணையொருமை தோன்றாமையின் 'அன்னமரபின் வினை வயின்' என்றார். [6]தோன்றலும் உரித்து' என்னும் எதிர்மறை யும்மையான், அன்னமரபின் வினைக்கண் தோன்றாமையும் உரித்து என்னாது பலர்வரை கிளவியாற்றோன்றாமையும் உரித் தென்று கொள்க.

---

2. பலர்பாலை ஒழித்து ஏனை நாற்பாலையும் உணர்த்தும் சொல். அது செய்யும் என்னும் வாய்பாட்டு வினை முற்றுச் சொல்.
3. உயர்திணை ஒருமைப்பால்—ஆண்பால், பெண்பால்.
4. நிகழூஉநின்ற கிளவி என்றால் நிகழ்ந்து கொண்டிருக் கின்ற சொல் எனப்படும். இதன் கருத்து சொல்லே நிகழ்ந்து கொண்டிருக்கிறதாக அமையும். சொல் நிகழ்ந்து கொண்டிராது. சொல்லால் உணர்த்தப்படும் தொழில்தான் நிகழ்ந்து கொண்டிருக்கும். ஆசிரியர் சொல்லே நிகழ்ந்து கொண்டிருப்பதுபோல் கூறியதன் காரணம் தொழிலுக்கும் சொல்லுக்கும் உள்ள ஒற்றுமை பற்றியென்க.
5. நடக்கும் கிடக்கும் என்பனவும் பலர்வரை கிளவி யாயினும், சாத்தன் நடக்கும் சாத்தி கிடக்கும் என வரின் திணைவிளங்காது ஆதலின் உயர்திணை ஆண் பெண் விளங்குதற்கு ஏற்றவினைவரல்வேண்டும்என்பார் 'அன்ன மரபின் வினை' என்றார்.
6. 'அன்னமரபின் வினைவயின் தோனறலும் உரித்து' என்னும் தொடரை நோக்கத் தோன்றலும் என்னும் உம்மை எதிர்மறையில் வருமானால், 'அன்னமரபின் வினைவயின் தோன்றாமையும் உரித்து' என்றுகொள்ள நேரும். அங்ஙனம் கொள்ளல்கூடாது.ஏன்எனின் அன்ன மரபின் வினை என்பது சிறப்பு வினையாகும். சிறப்பு

‡அஃதேல், யாழ் எழூஉதலும் சாந்தரைத்தலும் முதலாகிய தொழில்வேறுபாடுபற்றி வரும் முன்னிலை வினையானும் வியங்கோளானும் இருவகையெச்சத்தானும் எல்லாம் உயர்திணைப் பால் தோன்றுதலால் 'பலர் வரை கிளவியின்' என வரைந்து கூறல் பொருந்தாது எனின், அற்றன்று; 'முன்னஞ் சேர்த்தி முறையின் உணர்தல்' (பெய. 38) என முன்னிலைப் பெயராற் பாலுணருமாறு முன்னர் உணர்த்தப்படுதலானும், அன்னமரபின் வினைபற்றி வரும் வியங்கோள் ஏவற்பொருண்மைத்தாகலின் ஏயதுணர்ந்து செய்யும் உயர்திணை சுட்டியல்லது பெரும்பான்மையும் வாராமையான் ஆண்டன்ன மரபின் வினையாற் பால் உணர்தல் ஒருதலையன்றாகலானும், பெயரெச்சத்திற்கு முடிவாகிய பெயரும் வினையெச்சமும் சிறுபான்மை பொது வினைகொண்ட வழியல்லது தத்தமரபின் வினை (பெய. 18) கொண்டவழி அவ்வினையே பால் விளர்கலான் ஆண்டு எச்சம் பால் விளக்கல் வேண்டாமையானும், அவையொழித்துப் பால் வரை கிளவியே விதந்து கூறினார்.

இருவகை யெச்சத்தானும் வியங்கோளானும் சிறுபான்மை உயர்திணைப்பால் தோன்றல் ஒன்றென முடித்தல் என்பதனால் கொள்க.

[7]நிகழ் காலத்துப் பிற சொல்லை நீக்குதற்குப் 'பலர் வரை கிளவி' என்றார்; [8]பன்மை விரவுப் பெயரை நீக்குதற்கு 'நிகழூஉ நின்ற' என்றார்.

---

வினையால் உயர்திணை ஒருமை தோன்றும் என்று விட்டபின்னர் அதனால் தோன்றாமையும் ஆம் என்று கூறல் தவறாகும். சிறப்புவினை தோன்றவே செய்விக்கும். ஆனால் தோன்றலும் என்பதன் எதிர்மறை சொல்லியாக வேண்டுமே எனின், பிற பலர்வரை கிளவியால் தோன்றாமையும் உரித்து எனக்கொள்ளல் வேண்டும். உண்ணும், ஓடும் முதலிய செய்யும் என கிளவிகளால் தோன்றாமை காண்க.

‡ இப்பகுதிக்குப் பி.கு.வில் பூவராகம் பிள்ளை விளக்கம் பார்க்க.

7. இங்குச் சேனாவரையர், ஆநின்று, கின்று, கிறு என்ற இடைநிலை பெற்ற சொற்களைக் கருதி இவ்வாறு கூறினர். ஆநின்று, கின்று, கிறு என்ற இடைநிலை பெற்ற சொற்கள் பழைய சொற்களல்ல என்பது துணியப்படுமாயின் இவ்வாக்கியம் வேண்டாததாகும்—பூவராகம்பிள்ளை.

7, 8. இவற்றுக்குப் பி. கு. வில் சுந்தர மூர்த்தி விளக்கம் பார்க்க.

மேல் விரவுப் பெயர் 'தத்த மரபின் வினையோ டல்லது பால் தெரிபில' (பெய. 18) என்றார்; இனி அவ்வாறன்றிப் பொது வினையானும் பால் தெரிய நில்கும் என்பது உணர்த்திய வாறு.

அஃதேல், சாத்தன் புற்றின்னும், சாத்தி கன்றீனும் எனச் செய்யும் என்னுஞ் சொல்லான் அஃறிணைப் பாலும் தோன்று தலின், அது கூறாராயிற் றென்னையெனின், எழூஉதலும் அரைத் தலும் அஃறிணைக்கு என்னும் இயைபில்லாதவாறு போலப் [9]புற்றின்றல் உயர்திணைக்கு எவ்வாற்றானும் இயைபின்றெனப் படாமையானும், கன்றீனும் என்புழி ஈனும் என்னும் வினை யானன்றிக் கன்றுஎன்னும் சார்பான் அஃறிணைப்பால் தோன்று தலானும், [10]ஒருமை வினையான் ஒரோவழி அஃறிணைப்பால் தோன்றினும் அது சிறுபான்மையாகலானும் கூறாராயினார் என்பது.

## தெய்.

மேலதற்கு ஓர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: தத்தம் மரபினாற் பாலுணர வரூஉம் வினைச் சொல்லானன்றி நிகழ்காலத்தை யுணர நின்ற பலரை வரைந்த செய்யும் என்னும் முற்றுச் சொல்லானும் உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்து; அப்பால் தெரிய வரும் தொழிலின்கண், எ-று.

[11]'நிகழூஉ நின்ற' என்பதனைப் பெயரெச்சமாகவும், 'பலர் வரை கிளவி' என்பதனை வினைத் தொகையாகவும் கொள்க. உம்மை எச்சவும்மையாகலான், அஃறிணை யொருமை தோன்ற லும் உரித்து என்று கொள்க.

உ-ம்: சாத்தன் யாழ்எழூஉம், சாத்தி சாந்தரைக்கும் என்ற வழி உயர்திணை யென்பது பெறப்பட்டது. சாத்தன்

---

9. புல்-புல்லரிசி எனவும் படும். புற்றிள்றான் என்றால் புல்லரிசிச் சோறு தின்றான் எனப்பட்டு உயர்திணை யைக் காட்டும். நச். விளக்கம் பார்க்க.
10. ஒருமை வினையான் என்பது ஒரோவினையான் என் றிருப்பின் பொருத்தமாகும்-பூவாரகம்பிள்ளை.
11. நிகழூஉ நின்ற கிளவி — பெயரெச்சத் தொடர்
பலர்வரை கிளவி — வினைத்தொகைத் தொடர்

புல்மேயும், சாத்தி புல்மேயும் என்ற வழி அஃறிணை யென்பது பெறப்பட்டது.

நச்.

இஃது அவ் விரவுப் பெயர் விரவு வினையானும் திணை அறியுப்படும் என்கின்றது.

இ-ள் : நிகழூஉ நின்ற பலர் வரை கிளவியின் — நிகழ் காலமே பற்றி வரும் செய்யும் என்னும் முற்றுச் சொல்லான், உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே — உயர்திணை ஒருமைப்பால் தோன்றலும் உரித்து, அன்ன மரபின் வினைவயி னான — அவ்வொருமைப்பால் தோன்றுதற்கு ஏற்ற வினை யிடத்து, எ-று.

உ-ம் : சாத்தன் யாழ்எழூஉம், குழல் ஊதும், பாடும் எனவும், சாத்தி சாந்தரைக்கும், பூத்தொடுக்கும் எனவும் வரும்.

இனி ஒன்றென முடித்தல் என்பதனான் வியங்கோளானும் உயர்திணையொருமை தோன்றலும் கொள்க.

உ-ம் : சாத்தன் யாழ்எழூஉக, சாத்தி சாந்தரைக்க என வரும்.

சாத்தன் புல்தின்னும், சாத்தி கன்றீனும் என அஃறிணையும் வருமால் எனின், சாத்தன் புல் தின்னும் என்பது, புல்லரிசிச் சோற்றைத் தின்னும் என்று உயர்திணைக்கும் ஏற்றலின் அஃறிணைக்கே அஃது ஆகாமையின் அது கொள்ளார். சாத்தி கன்று ஈனும் என்பது,கன்றுஎன்னும் சார்பான் அஃறிணைதோன்றிற்று; அதனால் கொள்ளார்.

கல்.

என்—எனின், அவ்விரவுப்பெயர் தத்தமரபின் வினையா னன்றி, விரவு வினையானும் திணையறியப்படும் என எய்தி யதன் மேற் சிறப்பு விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள் : நிகழ்காலத்தை யுடைத்தாய் நின்ற பலரையுணர்த் தாது என்று வரைந்தோதப்பட்ட செய்யும் என்னும் சொல் காரணமாக அவ்விரவுப்பெயர் உயர்திணையொருமைப் பால் என்பது தோன்ற நிற்றலும் உரித்து; யாண்டுமோஎனின்,அன்று; அத்தன்மைத்தான முறைமையினையுடைய சில செய்யும் என்னும் வினைச் சொல்விடத்து, எ-று.

உ-ம்: சாத்தன் யாழெழூஉம், குழலூதும், பாடும் எனவும், சாத்தி சாந்தரைக்கும், பூத்தொடுக்கும் எனவும் வரும்.

சாத்தனொடுங் கிடக்கும் என்பன, அன்ன மரபின் வினை யன்மையின் திணை தெரியாவாயின.

இனி வினையியலுள் வியங்கோளின் பின்னர்ச் செய்யும் என்பதனை இயைபின்றி வைத்து ஆராய்ந்ததனான் வியங்கோள் வினையினாலும் உயர்திணை யொருமை தோன்றும் என்றும் கொள்ளப்படும்.

உ-ம்: சாத்தன் யாழ்எழூஉக, குழலூதுக எனவரும். இத் துணையும் கூறியது விரவுப் பெயரது பொதுவிலக்கணம் என வுணர்க.

## வெள்.

இது விரவுப்பெயர் தத்தமரபின் வினையல்லாத விரவு வினையாலும் திணையறியப்படும் என்கின்றது.

இ-ள்: நிகழ்காலம் பற்றிவரும் பலர்வரை கிளவியால் உயர் திணையொருமைப்பால் தோன்றுதலும் உரித்து, அவ்வொருமைப் பால் தோன்றுதற்கேற்ற வினையின்கண், எ-று.

நிகழூஉ நின்ற—நிகழா நின்ற.

'நிகழூஉ நின்ற பலர்வரை கிளவி' என்றது, படர்க்கை யிடத்துப் பலர்பாலை நீக்கி ஏனை நான்குபாற்கும் பொதுவாய் நிகழ்காலம் உணர்த்திவரும் செய்யும் என்னும் முற்றினை. ''பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை யவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச் செய்யும் என்னும் கிளவியொடு கொள்ளா'' (வினை. 30) எனவரும் வினையியற் சூத்திரத்து 'நிகழுங் காலத்துச் செய்யும் என் கிளவி' என்றதும் அது.

உ-ம்; சாத்தன் யாழ்எழூஉம், சாத்தி சாந்தரைக்கும் என்றவழி, சாத்தன், சாத்தி என்னும் பொதுப் பெயரும், யாழ் எழூஉதலும் சாந்தரைத்தலும் ஆகிய வினையும் சொல்லமைப் பால் இருதிணைக்கும் பொதுவாயினும், முறையே யாழ் வாசித் தலும் சந்தனத்தை அரைத்தலும் என்னும் சிறப்பு வினையாகிய பொருளமைப்பால் உயர்திணை யாணும் பெண்ணுமாகிய ஒருமைப்பால் விளங்கியவாறு காண்க.

'தோன்றலும் உரித்தே' என்னும் எதிர்மறை யும்மையால், பலர்வரை கிளவியால் உயர்திணையொருமை தோன்றாமையும் உரித்து என்பது கொள்ளப்படும். இருதிணைக்கும் பொதுவாகிய நடத்தல் கிடத்தல் முதலாகிய பொதுவினை பற்றிவரும் பலர் வரை கிளவியாகிய செய்யும் என்னும் முற்றால் உயர்திணை

யொருமை தோன்றாமையின் 'அன்ன மரபின் வினைவயினான' என அது தோன்றும்மிடம் இதுவென வரைந்தோதினார்.

ஆதி.

நிகழ்காலம் பற்றி இன்ன பால் எனச் சுட்டாத, செய்யும் என்னும் வாய்பாட்டு வினையால் உயர்திணை ஒருமைப் பெயர் தோன்றுவதும் உண்டு. அது மரபு தழுவிய வினையோடு வரும்.

விளக்கம் : பால் வரை கிளவி—இன்ன பால் என்று காட்டா வினைச் சொல், அது செய்யும் என்னும் வினை. நிகழூஉ நின்ற—நிகழ் காலத்தைக் குறித்து நிற்கிற. 'முந்நிலைக் காலமும்...... நிகழுங் காலத்துப் பொதுச் சொல்' (வினை 43)என்று 'செய்யும்' வினையைக் கூறினாா ஆசிரியர். உயர்திணைப் படர்க்கை ஒருமைப் பெயரில் மரபு தழுவிய செய்யும் என்னும் வாய்பாட்டு வினை வரும்.

அவன் அதிகாலையில் துயில் எழும்.
அவள் இனிமையாகக் குழல் ஊதும்.

அவன் எழுகிறான், அவள் குழல் ஊதுகிறாள் என்னும் நிகழ் கால வினைமுற்று அவர்களின் இயல்பை காட்டத் 'துயில் எழும் 'குழல் ஊதும்' எனச் செய்யும் என்னும் வாய்பாட்டால் கூறப் பட்டன.

இது படர்க்கை ஒருமைக்கே செல்லுபடியாகும். உயர்திணைப் படர்க்கைப் பன்மை, தன்மை முன்னிலையில் வரக் கூடாது.

அவர்கள் திருமணத்துக்கு வரும் — பிழை நான் கூட்டத் துக்கு வரும் — பிழை. நீ கடைக்குப் போகும் — பிழை.

| | |
|---|---|
| நீர் அதை அவ்வாறு செய்யும்<br>நீர் இதனை வைத்துக் கொள்ளும்<br>போய் வாரும் | } முன்னிலை |

இலக்கியத்திலும் இவ்வாறே வரக் காண்கிறோம்.

'சிலம்புள கொள்ளும்'—கொள்ளும் என்னும் வினைக்கு நீர் தோன்றா எழுவாய்.

பி. கு.

பூவராகம் பிள்ள்ளை. (சேனாவரையம்)

''அஃதேல் யாழ் எழூஉதலும்...பொருந்தாது எனின்'':-

அன்ன மரபின் வினையாக வரும் செய்யுமென் முற்று உயர் திணையொருமை யுணர்த்தும் என்றது என்னை? அவ்வினையடி யாக வரும் முன்னிலைவினை, வியங்கோள் வினை, பெயரெச்சம் வினையெச்சம் (இவைகள் பொது வினைகள்) இவைகளும் உயர் திணையொருமை யுணர்த்துமே. இவற்றை விலக்கியது பொருந்தாது என்பது கருத்து. (புகழ் என்ற வினையடியாகப் பிறந்த புகழ்ந்தாய், புகழ்க, புகழ்ந்த, புகழ்ந்து என்ற சொற்கள் அஃறிணையுணர்த்தாமல் உயர்திணைக்கேயுரியவாதல் காண்க).

முன்னிலை வினை பொதுவினையாயினும், இடத்திற் கேற்பச் சொல்வான் குறிப்பினால் ஒருதிணையைப் பிரித்துணர்த் தும். வியம்—ஏவல், வியங்கோள்வினை—ஏவற்பொருளைஉணர்த் தும் வினைச் சொல். ஏவியதை யுணர்ந்து செய்யும் தன்மை பெரும்பாலும் உயர்திணைக்கேயுள்ளது. ஆதலால்இவ்விரண்டும் அன்ன மரபின் வினையாற் பாலுணர்த்துதல் வேண்டா. பெய ரெச்சத்திற்கும் வினையெச்சத்திற்கும் முடிக்குஞ் சொல்லாக வருகின்ற பெயரும் வினையும்போல் விளக்குதற்குரியன. அவ் வெச்சங்கள் பால் விளக்குதற்குரியன வல்ல. பெயரெச்சத்திற்கு முடிபாகிய பெயர் பொதுவினை கொண்ட வழியும் (வந்த சாத்தன் உண்ணும்) வினையெச்சம் பொதுவினை கொண்ட வழியும் (வந்து உண்ணும்) அவ்வினைகள் பால் விளக்கா. அவ் விடத்து எச்சங்களும் பால் விளக்கா. அங்ஙனமன்றிச் சிறப்பு வினை வருமாயின் அவ்வினையே பால் விளக்கும். அதனால் பெயரெச்ச வினையெச்சங்களை எடுத்துக் கூறல் வேண்டா. அதனால் எஞ்சிய செய்யும் என் முற்றை மட்டும் எடுத்துக் கூறி னார் என்றார் சேனாவரையர்.

முன்னிலை வினைபற்றிக் கூறுமிடம் சிறிது பொருத்தம் இல் லாமல் இருக்கிறது. தடை கூறப்பட்ட பகுதியில் ‘‘முன்னிலை வினையானும் வியங்கோளானும்’’என்று முன்னிலைவினையைக் கூறினார். விடைகூறப்பட்ட பகுதியில் ‘‘முன்னஞ் சேர்த்திமுறை யின்உணர்தல்’’ என்று ‘முன்னிலைப் பெயராற் பாலுணரு மாறு முன்னுணர்த்தப் படுதலானும்’ என்று பெயரைக் கூறி னார். இங்குப் பெயரும் வினையுமாக மாறுபாடுள்ளது. முன் னிலை வினை சொல்வான் குறிப்பாற் பாலுணர்த்தும் என்று ஆசிரியர் விதி கூறவில்லை. ‘‘இன்ன பெயரே இவையெனல் வேண்டின், முன்னஞ் சேர்த்தி முறையின் உணர்தல்’’ என்ற சூத்திரத்தால் முன்னிலைப் பெயர் சொல்வான் குறிப்பாற் பாலுணர்த்தும் என்று கூறினர். முன்னிலைப் பெயர் குறிப்பாற் பாலுணர்த்தும் எனவே, முன்னிலை வினையும் குறிப்பாற்

பாலுணர்த்தும் என்பது பெறப்படுதலால் முன்னிலைப் பெயர் விதியை எடுத்துக் கூறினர் எனக் கொள்ளலாம்.

**கு. சுந்தரமூர்த்தி** (சேனாவரையம்)

செய்யும் என்னும் சொல்லை விளக்க 'நிகழூஉ நின்ற' 'பலர் வரை கிளவி' என்ற இரு தொடர்கள் கூறப்படுகின்றன. இவற்றுள் ஒன்றே அமையும் எனின், அற்றன்று. நிகழூஉ நின்ற என்பது நிகழ்காலத்தை யுணரநின்ற என்று பொருள்படும். எனவே நிகழூஉ நின்ற கிளவி என்று மட்டும் கூறின் நிகழ் காலத்தை உணர்த்தி வரும் இம்முறையே யன்றி ஆ நின்று, கின்று என்பன போன்ற இடைநிலைகளையும் குறித்துவிடும். ஆதலின் இவற்றை நீக்குதற்கு ஆசிரியர் 'பலர் வரை கிளவி' என்ற சொல்லையும் சேர்த்துக் கூறினார்.

அற்றேல், 'பலர் வரை கிளவி' என்ற தொடரே இம்முற்றை யுணர்த்த அமையும் 'நிகழூஉ நின்ற' என்ற தொடர் வேண்டாமே எனின், அதுவும் பொருத்தமின்று. 'பலர் வரை கிளவி' (பலர் பாலில் வாராத சொல்) என்று மட்டும் கூறின், அது பன்மை சுட்டிய பெயரையும் குறிக்கும். ஆதலின் 'நிகழூஉ நின்ற' என்ற தொடரும் இன்றியமையாததேயாம் என்பது.

**செ. வை. சண்முகம்**

செய்யும் என்னும் முற்றேயன்றி முன்னிலைவினை முற்றும் வியங்கோள் வினைமுற்றும் இருவகை யெச்சங்களும் உயர் திணை யொருமையைத் தோற்றுவிக்கும் என்னும் கருத்தினர் செ. வை. சண்முகம். ஆசிரியர் தொல்காப்பியர் செய்யும் என்னும் முற்றுமட்டும் கூறியது குறைபாடே எனக் கொள்வர் அவர். அக்குறையை யுணர்ந்த சேனாவரையர் ஆசிரியரைக் காக்கு முகத்தான் அமைதி கூறினாராகவும் அவர் கூறிய அமைதி ஏற்புடைத் தாகாது என்றும் கூறினார். அவர் கூறியன வருமாறு :—

"செய்யும் என்ற வினைமுற்றே பால் காட்டுகிறது என்று சொன்னாலும் உண்மையில் பாலை உணர்த்துவது வினைப் பகுதி அல்லது அத்தொழில் மட்டுமே. எனவே அந்த வினைகள் எந்த வினை விகுதிகளை ஏற்று வந்தாலும் பால் உணர்த்தும்; அல்லது செய்யும் என்ற வாய்பாடு போல பிற விரவு வினைக் குரிய ஈறுகளை ஏற்றுவந்தாலும் பால் உணர்த்த முடியும். அப் படியானால் செய்யும் என்னும் வாய்பாடு மட்டும் குறிப்பிட்டது பொருந்தாதல்லவா?"

இக் கேள்வியைக் கேட்டு, அதற்கு முன்னரே சேனாவரையர் கூறியுள்ள "யாழ் எழூஉதலும் சாந்தரைத்தலும்" என்று தொடங்கி "ஒன்றென முடித்தல் என்பதனாற் கொள்க" என்பது வரையிலுள்ள அமைதிகளுக்கு மறுப்பும் கூறினார். அம்மறுப்பு வருமாறு :—

(1) முன்னிலைப் பெயரால் பால் உணர்வது வேறொரு சூத்திரத்தில் (பெய. 39) குறிப்பிட்டிருக்கிறார் என்பது முதல் வாதம்.

> இன்ன பெயரே யிவையெனல் வேண்டின்
> முன்னஞ் சேர்த்தி முறையின் உணர்தல் (பெய. 39)

என்று விரவுப் பெயர்களை விளக்கும்போது காணப்படும் சூத்திரமே யிது. இதனால் முன்னிலைப் பெயர்களால் பால் உணர்ந்து கொள்ள முடியும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டு விட்டதாகச் சேனாவரையர் கருதுகிறார். ஆனால் இந்த சூத்திர உரையில், சொல்லும் சூழலால் பால் உணர்ந்து கொள்ளப்படுவதாகவே சேனாவரையர் உள்ளிட்ட எல்லா வுரையாசிரியர்களும் கொண்டுள்ளார்கள். சேனாவரையரே,

> "ஒரு சாத்தன், ஒருவனானும் ஒருத்தியானும் பலரானும் ஒன்றானும் பலவானும் தன்னுழைச் சென்றவழி 'நீ வந்தாய், நீயிர் வந்தீர்' என்னுமன்றே? ஆண்டு அது கேட்டான் இவன் என்னபால் கருதிக்கூறினான் என்பது உணரும்"

என்று முன்னிலைப்பெயர்கள் பால் உணர்த்துவது பற்றி விளக்கியுள்ளார். இங்கு பேச்சு நடக்கும் சூழலால் பால் தெரிந்து கொள்கிறோமேதவிர வினைச்சொல்லால் பால் தெரிந்து கொள்ளவில்லை. 'சாத்தி சாந்து அரை' என்று ஏவல் வாக்கியமாகச் சொன்னால் பெண்பாலாக இருக்கும். எனவே இரண்டுக்கும் வேறுபாடு இருக்கிறது என்பது சேனாவரையருக்கும் தெரியாமல் இருந்திருக்காது. விவாதத்துக்காக அதுபற்றித் தொல்காப்பியர் வேறொரு இடத்தில் சொல்லியிருக்கிறார் என்று சொல்லிக் கேள்வி கேட்டான் வாயை அடைத்துவிட்டார்.

(2) வியங்கோள் பெரும்பான்மையும் உயர்திணையில் அல்லாமல் வாராது என்னும்போது அது அவருடைய விருப்பம் சார்ந்த கருத்து என்பது புலப்பட்டுவிடுகிறது. சாத்தன் வாழ்க என்ற வாக்கியத்தில் உயர்திணையில்தான் வியங்கோள் வரும் என்ற கருத்தால் சாத்தன் என்பது ஆண்பால் என்று உணர்ந்து

கொள்ளலாம் என்பது சேனாவரையரின் இரண்டாவது வாதம். அப்படியானால் இங்கும் வினைச்சொல் காரணமாக இல்லை என்பதை யுணரலாம். அந்த நிலையில் இந்த சூத்திரத்தின் முக்கியமான கருத்துக்கு மாறாக முன்னிலைப் பற்றிய சூத்திரம் அமைந்துவிடுகிறது. வியங்கோள் சிறுபான்மை அஃறிணையிலும் வரலாம் என்ற கருத்துப்படிப் பார்த்தால் 'வாழ்க' போன்ற பொது வினையால் பால் தெரிந்துகொள்ள முடியாமல் போகும். ஆனால் 'சாத்தன் யாழ் எழுப்புக,சாத்தி சாந்து அரைக்க' என்ற வியங்கோள் வாக்கியங்கள் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாக இருந்தாலும் எழுப்பு, அரை என்ற வினைகள் குறிப்பிடும் தொழிலால் உயர்திணையில் ஆண்பால் பெண்பால் என்று நாம் அறிந்து கொள்ள முடியும். எனவே சேனாவரையரின் வியங்கோள் பற்றிய எதிர்வாதம் பொருந்துவதாக இல்லை.

(3) 'பெயரெச்சம் கொண்டு முடியும் பெயரும், வினையெச்சமும் இன்னொரு வினையைக் கொண்டு முடியலாம். அப்போது அவை தத்தம் வினை கொண்ட வழி அவ்வினையே பால் விளக்கி விடும். எனவே எச்சங்கள் பால் விளக்கவேண்டியதில்லை' என்பதே சேனாவரையரின் மூன்றாவது வாதம். 'வந்த சாத்தன் ஓடி வந்தான், சாத்தன் வந்து ஓடினான்' என்ற உதாரணங்கள் சேனாவரையர் கருத்தை மெய்ப்பிக்கின்றன. ஆனால் இப்படிப்பட்ட வாக்கியங்கள் பொதுவினை கொண்டு முடிந்தால் — அதாவது 'வந்த சாத்தான் ஓடும், சாத்தன் வந்து நிற்கும்' என்பன போன்று பொதுவினையால் முடிந்தால் பால் தெரிந்து கொள்ள முடியாமல் போய்விடும். ஆனால் அவையே, 'அன்ன வினை மரபின்' கொண்டால் பொதுவினை வந்தாலும் விரவுப் பெயரின் பாலைத் தெரிந்து கொள்ள முடியும்.

உ-ம் : யாழ் எழுப்பிய சாத்தன் வரும்
சாந்து அரைத்த சாத்தி வரும்
சாத்தன் யாழ் எழுப்பி வரும்
சாத்தி சாந்து அரைத்து வரும்

எனவே சேனாவரையர் மறுப்பு ஈரெச்சத்தைப் பொறுத்தவரையில் ஒரு பாதியே உண்மை; எப்போதும் பொருந்தாது. இங்குத் தொல்காப்பியர் 'அன்னமரபின் வினை'யால் பால் உணர்த்துவது பற்றிப் பேசுவதால் பொதுவினை எதுவானாலும் — அதாவது செய்யும் என்னும் முற்று, முன்னிலை, வியங்கோள், ஈரெச்சங்கள் ஆகிய அனைத்துமே பால் உணர்த்தும் என்று கொள்வதே மிகவும் பொருந்தும். ஆனால் தொல்காப்பியர் செய்யும்

என்ற ஒன்றை மட்டுந்தானே குறிப்பிடுகிறார். எனவே ஏனை யவை சிறுபான்மை என்று சொல்லி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள வேண்டியதில்லை. (விரவுப் பெயர்கள் பால் உணர்த் தும் முறை, மொழியியல் 5, 3 : பக். 12-17. 1982)

உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்து என்பதால் அஃறிணை ஒருமை தோன்றுவதும் உண்டு என்று தெய்வச் சிலையார் காட்டிய 'சாத்தன் புல் மேயும், சாத்தி புல் மேயும்' உதாரணங்களையேற்றுத் தொல்காப்பியரின் இலக்கண வரை யறையும் உரையாளர்களின் உரைக்கருத்துக்களையும் கொண்டு, பின்வரும் முடிவுக்கு வந்தவராய்ப் புதியதாகத் தம் கருத்தொன் றும் காட்டுவர் சண்முகம். அவர் கூறியன வருமாறு :—

"விரவுப் பெயர்கள் செய்யும் என்னும் வாய்பாட்டுப் பொதுவினையால் உயர்திணை யொருமைப்பால் அறிந்து கொள்ளக் கூடிய வினைகள் உண்டு என்று தொல்காப்பியர் குறிப்பிட்டார். உரையாசிரியர்கள் விளக்கத்தால் முன்னிலை வினை, வியங்கோள், ஈரெச்சம் போன்றவற்றாலும் உயர் திணை யொருமைப்பால் அறிந்து கொள்ள முடியும் என்றும், சில வினைகளால் அஃறிணைப் பாலும் அறிந்து கொள்ள இய லும் என்றும் பெறப்பட்டன. மேலும் உரையாசிரியர்கள் தந்த விளக்கத்தால் வினை உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொது வாக இருந்தாலும் சார்பாக வரும் பெயராலும் விரவுப் பெயரின் சரியான பாலை அறிந்துகொள்ள முடியும் என்று நாம் பொது மைப் படுத்தலாம். இவைகளோடு தொல்காப்பியரும் உரை யாசிரியர்களும் குறிப்பிடாத முறைகளும் இருக்கின்றன என்ப தும் குறிப்பிடத் தக்கது.

விரவுப் பெயர்கள் ஏற்றுவரும் பெயரடையாலும் அல்லது குறிப்பெச்சத்தோடு வரும் பெயராலும் பால் தெரிந்துகொள்ள முடியும்.

கொம்புடைய சாத்தன் வரும்
கையுடைய சாத்தன் வரும்

என்ற உதாரணங்களில் முன்னது அஃறிணை யொருமைஎன்றும், பின்னது உயர்திணை ஆண்பால் என்றும் தெரிந்து கொள்ள லாம்" (விரவுப் பெயர்கள்பால் உணர்த்துமுறை பக். 22,23)

விரவுப் பெயர்க்குப் பெயரும் முறையும் தொகையும்.

**171. இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே**
**முறைப்பெயர்க் கிளவி தாமே தானே**
**யெல்லா *நீயிர் நீயெனக் கிளந்து**
**சொல்லிய வல்ல பிறவு மாஅங்**
**கன்னவை தோன்றி னவற்றொடுங் கொளலே** (*20*)

(இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
எல்லாம் நீயிர் நீஎனக் கிளந்து
சொல்லிய அல்ல பிறவும் ஆஅங்கு
அன்னவை தோன்றின் அவற்றொடுங் கொளல்ஏ)

## ஆ. மொ: இல.

The nouns of arbitrary nature, the nouns derived from limbs, the nouns derived from limb and main, the nouns denoting relationship, 'thām' 'thān', 'ellām', 'n̲īyir' 'n̲ī'—all these and such others when appeering may be taken as of the same nature.

## பி. இ. நூ:

**நேமி. சொ.** *33, 34*

இயற்பேர் சினைப்பேர் சினைமுதற் பேரென்று
மயக்கிலா மூன்றனையும் வைத்துக்—கயற்கண்ணாய்
பெண்ஆணே பன்மை ஒருமையொடு பேர்த்துறழ
நண்ணும் விரவுப்பேர் நன்கு.

தந்தைதாய் என்பனவும் சார்ந்த முறைமையால்
வந்தமகன் மகளோடு ஆங்கவையும்—முந்திய
தாம்தானும் நீநீயிர் என்பனவும் தாழ்குழலாய்
ஆய்ந்த விரவுப்பே ராம்.

**முத்து. பெ.** *27*

சினைப்பெயர் முதற்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர் தன்மை முன்னிலைப் பெயரே
எல்லாம் பொதுப்பெயர் என்மனார் புலவர்.

---

* நீரே—தெய். பாடம்.

## இளம்.

இதுகாறும் விரவுப்பெயர் பால்தெரிய நிற்குமாறு உணர்த்தி, இனி, அவை தம்மை யுணர்த்துவான் எடுத்துக் கொண்டார்.

உரை: இயற்பெயர் முதலாக நீ என்பது ஈறாக எடுத்துச் சொல்லப்பட்டனவும் அன்ன பிறவும் ஆண்டு வருமாயிற் சொல்லப்பட்டவற்றோடு கூட்டுக, எ-று.

வ-று: இயற்பெயராவன—சாத்தன் கொற்றன் என்னும் [1]இரண்டு பெயர்.

சினைப் பெயராவன—பெருங்காலன், முடவன் என்பன.

சினைமுதற் பெயராவன—[2]சீத்தலைச் சாத்தன், கொடும்புறமருதி எனச் சினைப்பெயரோடு தொடர்ந்து வரும் முதற் பெயர்.

முறைப்பெயராவன—தந்தை தாய் என முறை பற்றி முறையுடைய பொருள்மேல் வருவன.

அல்லன ஐந்தும் தம்மையுணர்த்தி நின்றனவாதலின் தாம் என்பது முதலாகிய சொல்லேயாம்.

அன்னபிறவும் என்பதனால் மக, குழவி என்பனவும் கொள்க.

குழவியு மகவு மாயிரண் டல்லன
கிழவ வல்ல மக்கட் கண்ணே (மரபியல் 23)

என்று உயர்திணைக்கும் எய்துவித்தார்.

## சேனா.

விரவுப்பெயர் பால்தெரிய நிற்குமாறுணர்த்தி, இனி அவை தம்மை யுணர்த்துவான் எடுத்துக்கொண்டார்.

---

1. இடுபெயர் என்றிருப்பதே நன்று. சேனாவரையரும் இடுபெயர் என்றே கொண்டார். இரண்டு எனின் இரண்டுக்கு மேல் இயற்பெயர் இல்லையென்பதாகிக் குற்றம் வரும். இடுபெயர்—இடப்பட்ட பெயர்—இடு குறிப்பெயர்.
2. சீத்ததலை—சீ பிடித்த தலை. குளித்தலை, செந்தலை என்பன போலச் சீத்தலை என்பதை ஊராகக் கொள்ளின் இவ்வுதாரணம் பொருந்தாது.

இ-ள்: இயற்பெயர் முதலாக நீ என்பதீறாக எடுத்துச் சொல்லப்பட்டனவல்லாத அன்னபிறவும் ஆண்டு வருமாயிற் சொல்லப்பட்டவற்றோடுங் கூட்டுக, எ-று.

உ-ம்: இயற்பெயராவன—சாத்தன் கொற்றன் என வழங்குதற் பயத்தவாய் நிமித்தமின்றிப் பொருளே பற்றிவரும் இடுபெயர். [3]இயற்பெயர் எனினும் விரவுப் பெயர் எனினும் ஒக்குமாயின் அவற்றுள் [4]ஒரு சாரனவற்றிற்கு அப்பெயர் கொடுத்த தென்னையெனின், அவற்றது சிறப்பு நோக்கி அப் பெயர் கொடுத்தார்; பாணியும்தாளமும் ஒரு பொருளவாயினும் இசைநூலார் தாளத்துள் ஒருசாரனவற்றிற்குப் பாணியென்னும் பெயர் கொடுத்தாற் போலவென்பது.

சினைப்பெயராவன—பெருங்காலன், முடவன்என அச்சினை யுடைமையாகிய நிமித்தம் பற்றி முதல் மேல் வரும்பெயர்.

சினைமுதற் பெயராவன—சீத்தலைச்சாத்தன், கொடும்புற மருதிஎனச் சினைப்பெயரோடு தொடர்ந்து வரும் முதற்பெயர். சாத்தன், மருதி என்னும் முதற்பெயர் சினைப்பெயரோடு தொடர்ந்தல்லது பொருளுணர்த்தாமையிற் சினைமுதற் பெயராயின.

முறைப்பெயராவன—தந்தை தாய் என முறைபற்றி முறை யுடைய பொருள்மேல் வருவன. முறையாவது பிறவியான் ஒருவ னொடு ஒருவற்குவரும் இயைபு.

அல்லன ஐந்துந் தம்மையுணர்த்தி நின்றவாகலான் தாம் என்பது முதலாகிய சொல்லேயாம்.

பிறவும் என்றதனான் மக, குழவி போல்வன கொள்க.

இவற்றை உயர்திணைப் பெயர் என்றாரால் உரையாசிரியர் எனின், மரபியலுள்,

---

3. 'இயற்பெயர் எனினும் விரவுப்பெயர் எனினும் ஒக்கும்' என்பது பொருத்தம் இல்லை. இயற்பெயர்—காரணம் இன்றி வழங்குதற் பொருட்டுஇடப்படும் பெயர். விரவுப் பெயர்களாகிய சினைபெயரும் சினைமுதற் பெயரும் காரணம் பற்றி வழங்குதற்கு இடப்படும் பெயர்கள். எனவே இயற்பெயராவன என்று இயற்பெயர்க்குக் கூறப்பட்ட இலக்கணம் சினை, சினைமுதல் பெயர் களுக்குப் பொருந்தாமை காண்க.

4. ஒருசாரன—முதற்பெயர்கள். முதற்பெயர் இயற்பெயர் என்றே ஆசிரியரால் ஆளப்படும்.

[5] மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்
அவையு மன்ன வப்பா லான (மரபியல் 14) எனவும்,

[6] குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை (மர. 19) எனவும் அவை அஃறிணைக் காதல் கூறி,

[7] குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை
கிழவ வல்ல மக்கட் கண்ணே (மர. 23)

என உயர்திணைக்கும் ஓதிவைத்தார் ஆகலின், அவை விரவுப் பெயரேயாம். அதனான் அது போலியுரை யென்க.

[8] ஒரு நிமித்தத்தான் இரண்டு திணைப் பொருளும் உணர்த்துதலின் விரவுப்பெயர் பொருள்தோறும் நிமித்த வேறுபாடுடைய பலபொருள் ஒரு சொல் அன்மை யறிக.

## தெய்.

மேற்சொல்லப்பட்ட இருதிணைக்கும் உரிய சொல் பாகுபடு மாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : இயற்பெயர் முதலாக எடுத்து ஓதப்பட்டனவும் எடுத்தோதப் படாத அத்தன்மைய பிறவும் இருதிணைப் பொருண்மையும் உணரத் தோன்றின், அவ்விருதிணையோடுங் கொள்க, எ-று. ஒருதிணை மேற்கொள்ளற்க என்றவாறாயிற்று.

---

5. "மக, பிள்ளை, பறழ், பார்ப்பு என்னும் பெயர்களும் அக் குரங்கு என்னும் விலங்கின் குட்டிக்கு ஆகும்" என்பது பொருள். இதில் குரங்கின் குட்டி மக என்னும் சொல்லால் குறிக்கப்படும் என்றது காண்க.
6. குழவி என்னும் சொல்லை யானையும் பெறும்.
7. குழவி, மக என்னும் இரண்டே மக்கட்குரிய இளமைப் பெயர்கள்.
8. விரவுப் பெயர் (திணைப் பொதுப்பெயர்) வழங்கற்பாடு பற்றியதான ஒரே காரணத்தால் வழங்கப்பட்டு வருவது. பல பொருள் ஒரு சொல் என்பது இடம்நோக்கி வெவ்வேறு காரணத்தால் வழங்கப்பட்டு வருவது. பலபொருள் ஒரு சொல்லின் வேறுபாடு தெரியவேண்டி விரவுப் பெயருக்குப் பல்பொருள் ஒரு சொல் எனப் பெயரிட்டாள்வர்—செ.வை. சண்முகம். (விரவுத்திணை மொழியியல் பக். 39. 1983)

இயற்பெயராவது ஒரு பொருட்கு இடுகுறியாகி வழங்கும் பெயர். மேற்சினைப்பெயர் கூறுகின்றாராதலின் இதனை முதற் பெயர் என்று கொள்க.

[1]சினைப் பெயராவது உறுப்பின் பெயர்.

சினைமுதற் பெயராவது சினையையும் முதலையும் உணர்த்தும் பெயர்.

முறைப் பெயரர்வது பிறப்பு முறை பற்றி வரும் பெயர்.
தாம், எல்லாம், நீர் என்பன பன்மையுணர்த்தும் பெயர்.
தான், நீ என்பன ஒருமையுணர்த்தும் பெயர்.

அன்னபிறவும் ஆவன பிராயம் பற்றி வரும் பெயரும், இடம் பற்றி வரும் பெயரும், தொழில்பற்றி வரும் பெயரும் பிறவும்.

நச்.

இது விரவுப்பெயர்க்குப் பெயரும் முறையும் தொகையும் கூறுகின்றது.

இ-ள்: இயற்பெயர்—சாத்தன் கொற்றன் என வழங்குதற் பயத்தவாய் நிமித்தம் இன்றிப் பொருள்பற்றி வரும் இயற் பெயர், சினைப்பெயர்—பெருங்காலன், முடவன் என்ற சினை யுடைமையாகிய நிமித்தம் பற்றி முதல் மேல் வரும் பெயர், சினைமுதற் பெயரே—சீத்தலைச் சாத்தன் கொடும்புறமருதி எனச் சினைப்பெயரோடு தொடர்ந்து அல்லது பொருளுணர்த் தாது வரும் இயற்பெயராகிய முதற்பெயர், முறைப் பெயர்க் கிளவி—தந்தை தாய் எனப் பிறவியான் ஒருவரோடு ஒருவற்கு வரும் இயைபு பற்றி வரும் பெயராய் முறையுடைப் பொருள் மேல் வரும் பெயர், தாமே தானே எல்லாம் நீயிர் நீ எனக் கிளந்து சொல்லியவற்றொடு—தாம் தான் எல்லாம் நீயிர் நீ என்று தொல்லாசிரியராலே விதந்து ஓதப்பட்டவற்றோடே, அல்ல அன்னவை பிறவும் ஆங்குத் தோன்றின் கொளஎல்— எடுத்து ஓதாதனவாய் அவை போல்வன பிறவும் அவ்விரவுத லிடத்தே தோன்றுமாயின் அவற்றையும் கொள்க, எ-று.

---

1. சினைப் பெயராவது சினை (உறுப்பின்) காரணமாக வரும் பெயர் என ஏனையுரையாளர் கொள்ளத் தெய்வச்சிலையார் மட்டும் சினை (உறுப்பு)ப் பெய ரென்றே கொண்டார். சினைப்பெயர் என வருமிடம் எங்கும் இவ்வாறே கொண்டார்.

அன்னபிற ஆவன மக, குழவி போல்வனவும், காடன், காடி, நாடன், நாடி, தரையன், திரையன், மலையன் போல்வனவும், 'முதியாள்' எனப் பிராயம்பற்றி வருவனவும், சுமையன் எனத் தொழில் பற்றி வருவனவும் பிறவுமாம்.

**கல்.**

என்-எனின், விரவுப் பெயர்க்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: இருதிணைக்கண்ணும் வாளாது இயன்று வருதலான் இயற்பெயர் எனவும், ஓர் சினைக் காரணத்தாற் பெற்றமையிற் சினைப்பெயர் எனவும், சினையோடு தொடர்ந்த முதலையுணர்த்தினமையிற் சினை முதற்பெயர் எனவும், முறைமையாற் பெற்றமையின் முறைப்பெயராகிய சொல்லெனவும், ஓர் காரணம் இன்மையின் வாளாது தான் எனவும், எல்லாம் எனவும், நீயிர் எனவும், நீ எனவும் ஆசிரியனால் விதந்தோதப்பட்டனவல்லாத பிறவுமாகிய பெயர்களிடத்து இருதிணையிலும் விரவும் அத்தன்மையன தோன்றுமாயின் அவற்றோடுங்கூட ஆசிரியன் விதந்தோதின பெயர்களை விரவுப் பெயராம் எனக் கொள்க, எ-று.

அப்பெயர் பெயர்; அம்முறை முறை; அத்தொகை தொகை என்பதாம்.

இயற்பெயர் முதலாக முறைப்பெயர் ஈறாக ஓதினவெல்லாம் பலவெனினும் $ ஞாபக வகையான் ஒன்றெனப் பட்டன.

பிறவும் என்றதனாற் கொள்வன யாவையெனின், குறவன் இறவுளன் குன்றுவன் எனவும், காடன் காடி எனவும், நாடன்

---

$ இயற்பெயர்கள், சினைப் பெயர்கள், சினை முதற் பெயர்கள், முறைப் பெயர்கள் எனப் பன்மையாற் கூறல் வேண்டும். ஏன் எனின் அவை உயர்திணை அஃறிணை ஆகிய இரு திணைப் பெயர்கள். அவ்வாறன்றி இயற்பெயர் சினைப் பெயர், சினை முதற் பெயர், முறைப் பெயர் என ஒருமையாற் கூறினார். அவ்வாறு ஒருமையாற் கூறினாலும் ஞாபகத்தால் (நினைவு படுத்துவதால்) பன்மையாகக் கொள்ளல் வேண்டும்.
ஞாபகத்தான் ஒன்றெனப்பட்டன - ஞாபகம் (படுத்துதல்) என்னும் உத்தியால் என்று (ஒருமையாற்) எனக் கூறப்பட்டன. அதாவது இயற்பெயர் முதலியவாக ஒருமையாற் கூறப்பட்டாலும் ஞாபகமாகப் பன்மையாகவே கொள்ளல் வேண்டும் என்பதாம்.

நாடி எனவும், துறைவன் சேர்ப்பன் தரையன் திரையன் எனவும், ஒருமைத் திணைப் பெயராய் வருவனவும், ஆண் பெண் என்பனவும் பிறவும் இன்னோரன்னவும் போலும்.

ஆதி.

இயற்பெயர் — தடியன், சுந்தரம், மணி
சினைப் பெயர் — முடவன், நொண்டி, செவிடன்
சினை முதற்பெயர் — பல் இல்லாக்கிழம், சுழித்தலைச் சோம்பேறி, நரைமயிர்க் கள்ளன்.

* தாம் தான் எல்லாம் நீ நீவிர் என்னும் இச்சொற்களும். இங்கு சொல்லப்படா இவைபோன்ற பிறவும் இருதிணைக்கும் உரிய விரவுப் பெயராகக் கொள்க.

பிற என்பது தாய் சேய் குட்டி பிள்ளை போன்ற சொற்கள் இவை இருதிணையிலும் உலக வழக்கில் பயிலப் பெறும்.

இப்பசு இக்கன்றின் தாய் — அஃறிணை
இக்கன்று இப்பசுவின் சேய் — அஃறிணை
அந்தக் குட்டி எங்கு சென்றாள் — உயர்திணை
அது அந்த குதிரைக் குட்டி — அஃறிணை
இது இவன் பெற்ற பிள்ளை — உயர்திணை
இது அந்த மாட்டுப் பிள்ளை — அஃறிணை
தாம் : அவர்கள்தாம், அவைகள்தாம்
தான் - அவன்தான், அதுதான்
எல்லாம், அவர்கள் எல்லாம், அவைகள் எல்லாம்
நீ, நீவிர் — ஆண் பெண் இரண்டுக்கும் பொது.

விரவுப்பெயர்ப் பாகுபாடு

172. அவற்றுள்
நான்கே யியற்பெயர் நான்கே சினைப்பெயர்
நான்கென மொழிமனார் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி யிரண்டா கும்மே
ஏனைப் பெயரே தத்தம் மரபின (21)

(அவற்றுள்
நான்கே இயற்பெயர் நான்கே சினைப்பெயர்
நான்குஎன மொழிமனார் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி இரண்டு ஆகுமே
ஏனைப்பெயரே தம்தம் மரபின)

---

* முறைப் பெயர் பற்றிக் குறிப்பிடவில்லை ஆதித்தர்

ஆ. மொ: இல.

Of those
Four are nouns of arbitrary nature; four nouns of limb; four nouns of limb and main; two nouns of relationships; and all the rest indicate their nature—so say the linguists.

பி. இ. நூ:

நன். 282.

முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும்
சினைமுதற் பெயரொரு நான்கும் முறை யிரண்டும்
தன்மை நான்கும் முன்னிலை யைந்தும்
எல்லாந் தாந்தான் இன்னன பொதுப்பெயர்.

இல. 183 ஷை ஷை

முத்து. பெ. 28

சினைப்பெயர் நான்கே சினைமுதற் பெயரொரு
நான்கே யியற்பெயர் நான்கே முறைப்பெயர்
ஓரிரண் டென்மனார் உணர்ந்திசி னோரே.

இளம்.

உரை: மேற்கூறிய விரவுப் பெயருள் இயற்பெயரும் சினைப் பெயரும் சினைமுதற் பெயரும் ஓரோவொன்று நான்காம்; முறைப்பெயர் இரண்டாம்; ஒழிந்த ஐந்து பெயரும் தத்தம் இலக்கணத்தனவாம், எ-று.

[1] தத்தம் இலக்கணம் என்றது, அவை ஒரொன்றாகி நிற்கும் என்றவாறாம். தனிப்பெயர் ஐந்தும் விரவுப்பெயர் பதினான்கும் ஆக விரவுப்பெயர் பத்தொன்பது என்றவாறாம்.

சேனா.

இ-ள்: மேற்கூறிய விரவுப் பெயருள் இயற்பெயரும் சினைப் பெயரும் சினை முதற்பெயரும்ஒரொன்று நன்னான்காம்;முறைப்

---

1. தத்தம் இலக்கணத்—தாம் என்பதுமுதல் நீ என்பது வரை உள்ள சொற்கள் அனைத்துக்கும் உரிய ஒரு பொது இலக்கணத்தனவல்ல; தனித்தனி இலக்கணத்தன என்றவாறு ஒரொன்றாகி நிற்கும்—ஒன்றொன்றாக—தனித்தனி நிற்கும்.

பெயர் இரண்டாம்; ஒழிந்தன ஐந்து பெயரும் தத்தம் இலக்கணத்தனவாம், எ-று.

'தத்தம் இலக்கணத்தன' என்றது பொதுவிலக்கணத்தன வல்ல சிறப்பிலக்கணத்தனவேயாம் என்றவாறு. எனவே, அவை ஒரொன்றாகி நிற்கும் என்றவாறாம். ஈண்டுத் 'தத்தம்' என்பது [2]அந்நிகரன வெனப் பொதுமை சுட்டாது, [3]ஒரொன்றாய் நின்ற பெயரைச் சுட்டி நின்றது. தனிப்பெயர் ஐந்தும் விரவுப்பெயர் பதினான்குமாகப் பத்தொன்பது என்றவாறாம்.

கூறப்பட்ட பெயரது பாகுபாடாகிய ஒரு பொருள் நுதலுதல் பற்றி ஒரு சூத்திரமாயிற்று. [4]நான்காய் விரிதலும் இரண்டாய் விரிதலுந் தாமேயாதலுமாகிய பொருள் வேற்றுமையான் மூன்று சூத்திரம் எனினும் அமையும்.

## தெய்.

மேற்சொல்லப்பட்ட பெயர் விரிவகையான் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேற்சொல்லப்பட்டவற்றுள் இயற்பெயர் நான்கு வகைப்படும்; சினைப்பெயர் நான்கு வகைப்படும்; சினைமுதற் பெயர் நான்கு வகைப்படும்; முறைப்பெயர் இரண்டு வகைப் படும்; ஏனைய பெயர் ஓதிய வாய்பாட்டன, எ-று.

## நச்.

இது தொகுத்தனவற்றை விரிக்கின்றது.

இ-ள்: அவற்றுள்—முற்கூறிய விரவுப் பெயருள், நான்கே இயற்பெயர்—இயற்பெயர் நான்கு வகைப்படும், நான்கே

---

2. அந்நிகரன—இயற்பெயர் முதலியன போலப் பல வகையன.
3. ஒரொன்றாய் நின்றபெயர்—தாம், தான் எனத் தனித் தனி நின்ற பெயர்.
4. நான்காய் விரிவன—இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர். இரண்டாய்விரிவது—முறைப்பெயர். (தாய், தந்தை = பெண், ஆண்) மூன்று சூத்திரமாமாறு (1) அவற்றுள், நான்கே இயற்பெயர்...சினைமுதற் பெயரோ (2) முறைப்பெயர்க் கிளவி இரண்டாகும்மே. (3) ஏனைப் பெயரே தத்த மரபின.

சினைப்பெயர்—சினைப்பெயர் நான்கு வகைப்படும், நான்கு சினை முதற்பெயரே—சினை முதற்பெயர் நான்கு வகைப்படும், முறைப்பெயர்க்கிளவி இரண்டாகும்மே—முறைப் பெயராகிய சொல் இரண்டு வகைப்படும், ஏனைப் பெயரே தத்தம் மரபின—ஒழிந்த ஐந்துபெயரும் பொருண்மை சுட்டாது ஒரோவொன்றாய் நின்ற பெயரைச் சுட்டி நிற்கும் இலக்கணத்தன, என மொழி மனார்—என்று கூறுவர் ஆசிரியர், எ-று.

**கல்.**

என்-எனின், மேல் தொகுத்தோதின விரவுப்பெயர்களை விரித்தோதுதல் நுதலிற்று.

இ-ள்: மேல் ஓதப்பட்டவற்றுள் இயற்பெயர் எனப்பட்டது நான்கு வகைப்படும்; சினைப்பெயர் எனப்பட்டது நான்குவகைப் படும்; சினைமுதற் பெயரினையும் நான்கு வகைப்படும் என்று கூறுவர் ஆசிரியர்; முறைப்பெயர்க்கிளவி எனப்பட்டது இரண்டு வகைப்படும்; இவ்வாறு இவை வகைப்பட்டமையின் ஏனையவும் அவ்வகைப் படுங்கொல் என்று ஐயுறின், அவ்வகைப்படாது ஒழிந்த பெயர்கள் ஐந்தும் அவ்வோதிய வாய்பாடேயாகும் மரபினையுடைய, எ-று.

மேல் தொகையான் ஒன்பது எனப்பட்ட விரவுப்பெயர் இவ் விரிநிலையால் பத்தொன்பதாயின எனக் கொள்க.

**வெள்.**

'தத்தம் மரபின' என்றது பலபெயர்களைக் குறித்த தொகுதிப் பெயராகாது ஒரொன்றாய் நின்ற தம்மைக் குறித்து வழங்கும் தனிப்பெயர்களாம் என்றவாறு. தொகுதிப்பெயர் பதினான்கும் தனிப்பெயர் ஐந்துமாக விரவுப்பெயர் பத்தொன் பது என்பதாம்.

இயற்பெயர் நான்கு

†173. **அவைதாம்**
**பெண்மை யியற்பெய ராண்மை யியற்பெயர்**
**பன்மை யியற்பெய ரொருமை யியற்பெயரென்**
**றந்நான் கென்ப வியற்பெயர் நிலையே** (22)

† இச்சூத்திரமுதல் 'பெண்மை முறைப்பெயர்' என்னும் சூத்திரம்வரை யுள்ளவற்றிற்குச் சேர்த்து உரை எழுதினர் இளம்பூரணரும் சேனாவரையரும் ஆதலின் 'பெண்மை முறைப்பெயர்' என்னும் சூத்திரத்தில் இருவர் உரைகளும் காண்க.

(அவைதாம்,
பெண்மை இயற்பெயர் ஆண்மை இயற்பெயர்
பன்மை இயற்பெயர் ஒருமை இயற்பெயர் என்று
அநான்கு என்ப இயற்பெயர் நிலைஏ)

ஆ. மொ: இல.

These are—
The nouns of arbitrary nature are of four kinds, which are termed as feminine maseuline, plural and singular nouns.

பி. இ. நூ:
நன். *283.*

ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின்
ஆம் அந் நான்மைகள்

இல. *184.* ஷை ஷை

முத்து. பெ. *30*

ஆண்மை யியற்பெயர் பெண்மை யியற்பெயர்
ஒருமை யியற்பெயர் பன்மை யியற்பெயர்
அந்நான் காகும் இயற்பெயர் மொழியே.

இளம்.

(பெண்மை முறைப்பெயர் (25) என்னும் சூத்திரத்துக் காண்க)

சேனா.

('பெண்மை முறைப்பெயர்' என்னும் சூத்திரத்துக் காண்க.)

தெய்.

நிறுத்தமுறையானே இயற்பெயர் நான்கும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேற்சொல்லப்பட்ட இயற்பெயரது நிலைமையாவது இருதிணைக்கண்ணும் பெண்மைப் பொருண்மையைக் குறித்த இயற்பெயரும், ஆண்மைப் பொருண்மையைக் குறித்த இயற்பெயரும், பன்மைப் பொருண்மையைக் குறித்த இயற்பெயரும், ஒருமைப் பொருண்மையைக் குறித்த இயற்பெயரும் என அந் நான்கும், எ-று.

பன்மை யியற்பெயர் என்றாராயினும் உயர்திணைப்பன்மை யியற்பெயர் பால் தோன்றலின் அஃதொழித்து ஏனையது கொள்ளப்படும். அவ்வாறாதல் வருகின்ற சூத்திரங்களானும் விளங்கும். இவ்வுரை வருகின்ற சூத்திரங்கட்கும் ஒக்கும்.

உ-ம்: பெண்மை குறித்தபெயர் சாத்தி. ஆண்மை குறித்த பெயர் சாத்தன். ஒருமை குறித்த பெயர் கோதை. பன்மை குறித்தபெயர் யானை பிறவும் அன்ன.

நச்.

இஃது இயற்பெயர் நான்கு என்றவற்றின் பெயரும் முறையும் கூறுகின்றது.

இ-ள்: அவைதாம்—அவ்வாறு பகுக்கப்பட்டனதாம் யாவையெனின், இயற்பெயர் நிலையே—இயற்பெயரது நிலைமையை, பெண்மை இயற்பெயர் ஆண்மை இயற்பெயர் பன்மை இயற்பெயர் ஒருமை இயற்பெயர் என்று அந்நான்கு என்ப—பெண்மை இயற்பெயரும் ஆண்மை இயற்பெயரும் பன்மை இயற்பெயரும் ஒருமை இயற்பெயரும் என்று கூறப்பட்ட அந்நான்கும் என்று சொல்லுவர் ஆசிரியர், எ-று.

கல்.

என்-எனின், மேல் இயற்பெயர் நான்கு என்றமையின் அவற்றது பெயரும் முறையும் உணர்த்தல் நுதலிற்று,

இ-ள்: அவ்வாறு வகுக்கப்பட்டனதாம் யாவை எனின் பெண்மை இயற்பெயரும் ஆண்மை இயற்பெயரும் பன்மை இயற்பெயரும் ஒருமை இயற்பெயரும் என்று சொல்லப்பட்ட அந் நான்கும் என்ப இயற்பெயரது நிலைமையை, எ-று.

ஆதி.

| | | |
|---|---|---|
| உ-ம்: | கள்ளி<br>சுந்தரி<br>கள்ளன்<br>சுந்தரன் | மாடு—மக்கள்<br>பொதுப் பெயர் |
| | வல்லிகள்<br>செல்வங்கள்<br>வள்ளி<br>செல்வம் | உயர்திணை<br>அஃறிணைப் பொது |

சினைப் பெயர் நான்கு

**174. பெண்மைச் சினைப்பெய ராண்மைச் சினைப்பெயர்
பன்மைச் சினைப்பெய ரொருமைச் சினைப்பெயரென்
றந்நான் கென்ப சினைப்பெயா நிலையே** (23

(பெண்மைச் சினைப்பெயர் ஆண்மைச் சினைப்பெயர்
பன்மைச் சினைப் பெயர்ஒருமைச்சினைப் பெயர் என்று
அ நான்கு என்ப சினைப்பெயர் நிலைஏ)

**ஆ. மொ: இல.**

The nouns of limbs are of four kinds-
feminine, masculine, plural and singular.

**பி. இ. நூ:**

**நன். 283**

ஆண்மை பெண்மை...ஆம் அந்நான்மைகள்.

**இல, 184.** ஷை ஷை

**முத்து. பெ 30.**

ஆண்மைச் சினைப் பெயர் பெண்மைச் சினைப்பெயர்
ஒருமைச் சினைப்பெயர் பன்மைச் சினைப்பெயர்
அந்நான் கென்ப சினைப் பெயர்க் கிளவி.

**இளம்.**

('பெண்மைமுறைப் பெயர்' என்னும் சூத்திரத்துக் காண்க.)

**சேனா.**

('பெண்மை முறைப்பெயர்' என்னும் சூத்திரத்துக்காண்க)

**தெய்.**

சினைப் பெயர் நான்கும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : மேற் சொல்லப்பட்ட சினைப் பெயரது நிலைமை யாவது பெண்மைப் பொருண்மைக்கண் வரும் சினைப் பெயர், ஆண்மைப் பொருண்மைக்கண் வரும் சினைப் பெயர், பன்மைப் பொருண்மைக்கண் வரும் சினைப் பெயர், ஒருமைப் பொருண் மைக்கண் வரும் சினைப் பெயர் என அந்நான்கும், எ-று.

உ-ம் : முலை என்பது பெண்மை குறித்து நின்றது. [1]மோவாய் என்பது ஆண்மை குறித்து நின்றது. கை என்பது ஒருமை குறித்து நின்றது. தலை என்பது பன்மை குறித்து நின்றது.

நச்.

இது சினைப் பெயர் நான்கு என்றவற்றின் பெயரும் முறையும் கூறுகின்றது.

இ-ள் : சினைப் பெயர் நிலை—சினைப் பெயரது நிலைமையை, பெண்மைச் சினைப் பெயர் ஆண்மைச் சினைப் பெயர் பன்மைச் சினைப் பெயர் ஒருமைச் சினைப் பெயர் என்று அந் நான்கு என்ப—பெண்மைச் சினைப் பெயரும் ஆண்மைச் சினைப் பெயரும் பன்மைச் சினைப் பெயரும் ஒருமைச் சினைப் பெயரும் என்று கூறப்பட்ட அந்நான்கும் என்று சொல்லுவர் ஆசிரியர், எ-று.

கல்.

என்-எனின், சினைப்பெயர் நான்கு என்றமையின் அவற்றது பெயரும் முறையும் உணர்த்தல் நுதலிற்று.

இ-ள் : பெண்மைச் சினைப் பெயரும் ஆண்மைச் சினைப் பெயரும் பன்மைச் சினைப் பெயரும் ஒருமைச் சினைப் பெயரும் எனப்பட்ட அந்நான்கும் என்று சொல்லுப சினைப் பெயரது நிலைமையை, எ-று.

வெள்.

உ-ம் : முடத்தி, முடவன், நெடுங்கழுத்தல், கண்ணிலி எனவரும். முடம், கழுத்தின் நீட்சி, கண்ணின் குருட்டுத்தன்மை முதலியன சினையது விகாரம் ஆதலின் சினையாயின.

ஆதி.

உ-ம் : குருடி, குருடன், முடங்கன், நொண்டி இவை மக்கட்கும் மாக்கட்கும் பொது. சினையைக் குறிப்பன.

---

1. மோவாய்-தாடி(தாடி வளரும் உறுப்பு மோவாய் எனப் பட்டது) தாடி ஆண்பாலுக்குரியது.

சினை முதற் பெயர் நான்கு

175, பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
யாண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே
யொருமை சுட்டிய சினைமுதற் பெயரென்
றந்நான் கென்ப சினைமுதற் பெயரே (24)

(பெண்மை சுட்டிய சினைமுதற் பெயர்ஏ
ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயர் ஏ
பன்மை சுட்டிய சினைமுதற் பெயர் ஏ
ஒருமை சுட்டிய சினைமுதற் பெயர் என்று
அ நான்கு என்ப சினைமுதற் பெயர் ஏ)

**ஆ. மொ: இல.**

The nouns of limb and main are of four kinds - feminine, masculine, plural and singular.

**பி. இ. நூ.**

**நன். 283**

ஆண்மை.........ஆம் அந்நான்மைகள்

**இல. 184**

ஷை ஷை ஷை

**முத்து: பெ. 31**

ஆண்மைச் சினைமுதல் பெண்மைச் சினைமுதல்
ஒருமைச் சினைமுதல் பன்மைச் சினைமுதல்
எனநான் காகும் சினைமுதற் கிளவி

**இளம்.**

('பெண்மை முறைம் பெயர்' என்னுஞ்சூத்திரத்துக் காண்க.)

**சேனா.**

('பெண்மை முறைப் பெயர்' என்னுஞ் சூத்திரத்துக்காண்க.)

**தெய்.**

சினை முதற் பெயர் நான்கும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : பெண்மை சுட்டிக் சினை முதற் பெயர் முதலாகிய நான்கும் சினைமுதற் பெயராவன, எ—று.

ஈண்டுச் சினை முதற் பெயர் என்றமையான் முதலைக் குறித்த பெயரும் சினையைக் குறித்த பெயரும்அன்றி முதலையும் சினையையும் குறித்த பெயர் என்று கொள்ளப்படும்.

உ-ம் : முடத்தி என்பது பெண்மையைக் குறித்தது. முடவன் என்பது ஆண்மையைக் குறித்தது. செவியிலி என்பது ஒருமையைக் குறித்தது. [1]தூங்கல் என்பது பன்மைக் குறித்தது.

**நச்.**

இது சினைமுதற் பெயர் நான்கு என்றவற்றின் பெயரும் முறையும் கூறுகின்றது.

இ-ள் : சினை முதற் பெயரே — சினை முதற் பெயரது நிலைமையை, பெண்மை சுட்டிய சினை முதற்பெயரே ஆண்மை சுட்டிய சினை முதற் பெயரே பன்மை சுட்டிய சினை முதற் பெயரே ஒருமை சுட்டிய சினை முதற் பெயர் என்று அந்நான்கு என்ப — பெண்மை சுட்டிய சினை முதற் பெயரும் ஆண்மை சுட்டிய சினை முதற் பெயரும் பன்மை சுட்டிய சினை முதற் பெயரும் ஒருமை சுட்டிய சினை முதற் பெயரும் என்று கூறப் பட்ட அந்நான்கும் என்று சொல்லுவர் ஆசிரியர் எ-று.

**கல்.**

என்-எனின், சினை முதற் பெயரும் நான்கு என்றமையின் அவற்றது பெயரும் முறையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : பெண்மை சுட்டிய சினை முதற் பெயரும், ஆண்மை சுட்டிய சினை முதற் பெயரும், பன்மை சுட்டிய சினை முதற் பெயரும், ஒருமை சுட்டிய சினை முதற் பெயரும் எனப்பட்ட அந்நான்கும் என்று சொல்லும் சினை முதற் பெயர், எ-று.

**வெள்.**

உ-ம் : முடக்கொற்றி, முடக்கொற்றன், பெருங்கால் யானை, கொடும்புற மருதி என வரும்.

**ஆதி.**

உ-ம் : குருட்டுச் சாத்தி, குருட்டுச் சாத்தன், குருட்டுக் கிழங்கள், செவிட்டுச் சாத்தன்.

இவை நான்கும் விரவுப் பெயர்கள் முதலைக் குறிக்கும்.

---

1. தூங்கல் — சோம்பி, யானை.

முறைப் பெயர் இரண்டு

176. பெண்மை முறைப்பெய ராண்மை முறைப்பெயரென்
றாயிரண் டென்ப முறைப்பெயர் நிலையே (25)

(பெண்மை முறைப்பெயர் ஆண்மை முறைப்பெயர் என்று
அ இரண்டு என்ப முறைப்பெயர் நிலை ஏ)

**ஆ. மொ: இல.**

The nouns of relationship are said to be two—feminine and masculine.

**பி. இ. நூ :**

**நன்.** *283*

.........ஆண் பெண் முறைப்பெயர்.

**இல.** *184*

.........ஆண்பெண் அவற்றான்
முறைப்பெயர் இரண்டாம் என்மனார் புலவர்.

**முத்து. பெ.** *32*

ஆண்மை முறைப்பெயர் பெண்மை முறைப்பெயர்
எனவிரு திறத்தவாம் முறைப்பெயர்க் கிளவி

**இளம்.**

(''அவை தாம், பெண்மை'', ''பெண்மைச் சினைப்பெயர்'', ''பெண்மைசுட்டிய'' ''பெண்மை முறைப்பெயர்'' இந் நான்கு சூத்திரங்களுக்கும் சேர்த்து எழுதிய உரை)

உரை: இவை இயற்பெயர் முதலாகிய நான்கன் விரி பதினான்கும் இது என உணர்த்தியவாறு.

இவற்றுக்கு உதாரணம் முன்னர்க் காட்டுதும்.

**சேனா.**

(''அவை தாம், பெண்மை'', ''பெண்மைச்சினைப் பெயர்'', ''பெண்மை சுட்டிய'', ''பெண்மை முறைப் பெயர்'' இந்நான்கு சூத்திரங்கட்கும் சேர்த்து எழுதிய உரை)

இயற் பெயர் முதலிய நான்கன் விரியாகிய பதினான்கும் இவையெனவுணர்த்தியவாறு.

இவற்றிற் குதாரணம் முன்னர்க் காட்டுதும்.

இயற்பெயர் முதல் மூன்றும் ஓரொன்று நான்காய் விரிதலும், முறைப் பெயர் இரண்டாதலும், மேலைச் சூத்திரத் தாற் பெறப்பட்டமையான், அந்நான்கும் இரண்டுமாவன இவை யென்பது இச்சூத்திரங்கட்குக் கருத்தாகக் கொள்சு.

இவ்வாறு இடர்ப்படாது [1]தொகைச் சொற்களைப் பயனிலையாகக் கொள்ளவே, இச்சூத்திரங்களான் அவையின்ன வென்றலும் இத்துணைய வென்றலும் பெறப்படும் ஆகலின் மேலைச் சூத்திரம் வேண்டாவெனின், அற்றன்று; இவற்றான் விரவுப் பெயர் பத்தொன்பது என்னும் வரையறை பெறப் படாமையானும், வகுத்துக் கூறல் [2]தந்திர வுத்தி யாகலானும் அது வேண்டும் என்பது.

## தெய்.

முறைப்பெயர் இரண்டும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : பெண்மைப் பொருண்மையைச் சுட்டிய முறைப் பெயரும், ஆண்மைப் பொருண்மையைச் சுட்டிய முறைப் பெயரும் என முறைப் பெயர் இரண்டாவன, எ—று.

உ—ம் : தாய் என்பது பெண்மை குறித்தது. தந்தை என்பது ஆண்மை குறித்தது. பிறவு மன்ன.

## நச்.

இது முறைப்பெயர் இரண்டு என்றவற்றின் பெயரும் முறை யும் கூறுகின்றது.

---

1. அந்நான்கு (22, 23, 24)என்பனவற்றையும், ஆயிரண்டு (25) என்பதையும் பயனிலையாகக் கொண்டால்—அதாவது இயற்பெயர்நிலை, (22) சினப் பெயர் நிலை (23) சினை முதற் பெயர் (24) முறைப் பெயர்நிலை (25) என்பனவற்றுக்குப் பயனிலையாகக் கொண்டால், இயற்பெயர் முதலியனவும் அவற்றின் தொகைகளும் பெறப்படும். எனவே "அவற்றுள் நான்கே இயற் பெயர்" (21) என்னும் சூத்திரம் வேண்டா இது தடை.
2. தந்திரவுத்தி—இலக்கண நூலில் கையாளப்படும் உத்தி.

இ-ள் : முறைப் பெயர் நிலையே—முறைப் பெயரது நிலைமையை, பெண்மை முறைப்பெயர் ஆண்மை முறைப் பெயர் என்று ஆயிரண்டு என்ப—பெண்மை முறைப் பெயரும் ஆண்மை முறைப் பெயரும் என்று கூறப்பட்ட அவ்விரண்டும்என்று கூறுவர் ஆசிரியர், எ-று.

**கல்.**

என்-எனின், முறைப் பெயரும் இரண்டு வகைப்படும் என்றமையின் அவற்றது பெயரும் முறையும் உணர்த்தல் நுதலிற்று.

இ-ள் : பெண்மை முறைப் பெயரும் ஆண்மை முறைப் பெயரும் எனப்பட்ட அவ்விரண்டும் என்று சொல்லுப முறைப் பெயரது நிலைமையை, எ-று.

**வெள்.**

உ-ம் ; தாய், தந்தை.

**ஆதி.**

உ-ம் : தாய்-தந்தை, தம்பி-தங்கை.

இம்முறை மாட்டினத்திலும் மக்கள் வழங்குவர்.

**பி. கு.**

செ. வை. சண்முகம்.

முறைப் பெயரில் தொல்காப்பியர் ஆண் பெண் என்ற இரண்டு பாகுபாடே குறிப்பிட்டுப் பன்மை, சிறப்பாகப் பலர் பால் விகுதி ஏற்று வருவதைத்தனியே உயர்திணைப் பெயர்களின் பட்டியலோடு சேர்த்துக் கூறியுள்ளார். முறைப்பெயர்கள் அடிப்படையில் உயர்திணைப் பெயர்கள் என்பது இதனால் தெளிவாகிறது. (விரவுத் திணை, மொழியியல் பக். 21. 1983)

பெண்மை சுட்டிய பெயர்.

**177. பெண்மை சுட்டிய வெல்லாப் பெயரு**
**மொன்றற்கு மொருத்திக்கு மொன்றிய நிலையே (26)**

(பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலை ஏ)

**ஆ. மொ. இல.**

All the nouns which Indicate feminine gender belong to singular of neuter or of feminine (high class)

பி. இ. நூ:

முத்து. பெ. 34.

மகடூஉக் குறித்த எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே

நன். 284.

அவற்றுள்
ஒன்றே இருதிணைத் தன்பால் ஏற்கும்.

இல. 185 ஷை ஷை

முத்து. பெ. 32

ஒன்றே இருதிணைத் தன்பால் ஏற்கும்.

## இளம்.

மேற்கூறிய பதினான்கு பெயரும் இருதிணையும் பற்றிப்பால் உணர்த்துமாறு உணர்த்திய எடுத்துக் கொண்டார்.

அவை பெண்மைப் பெயர் நான்கும் ஆண்மைப் பெயர் நான்கும் பன்மைப் பெயர் மூன்றும் ஒருமைப் பெயர் மூன்றும் ஆம்.

உரை ; பெண்மை பற்றி வரும் நான்குப் பெயரும் அஃறிணைப் பெண் ஒன்றற்கும் உயர்திணை ஒருத்திக்கும் உரிய, எ-று.

அந்நான்கும் ஆவன: பெண்மையியற் பெயரும், பெண்மைச் சினைப் பெயரும் பெண்மைச் சினை முதற் பெயரும், பெண்மை முறைப் பெயரும் என்பன.

வ-று , சாத்தி வந்தது, சாத்தி வந்தாள் எனவும்: முடத்தி வந்தது, முடத்தி வந்தாள் எனவும்; முடக்கொற்றிவந்தது, முடக் கொற்றி வந்தாள் எனவும்; தாய் வந்தது, தாய் வந்தாள் எனவும் அவ்வம் முறையானே அஃறிணைப் பெண் ஒன்றற்கும் உயர்திணைப் பெண் ஒருத்திக்கும் வந்தவாறு கண்டு கொள்க. பிறவும் அன்ன.

## சேனா.

மேற்கூறிய பதினான்குப் பெயரும் இருதிணையும் பற்றிப் பாலுணர்த்திய வெடுத்துக் கொண்டார். அவை பெண்மைப் பெயர் நான்கும், ஆண்மைப் பெயர் நான்கும், பன்மைப் பெயர் மூன்றும், ஒருமைப் பெயர் மூன்றுமாம்.

இ-ள் : பெண்மை பற்றி வரும் நான்கு பெயரும் அஃறிணைப் பெண் ஒன்றற்கும் உயர்திணை யொருத்திக்கும் உரிய, எ-று.

அந்நான்குமாவன : பெண்மையியற் பெயரும், பெண்மைச் சினைப் பெயரும், பெண்மைச் சினை முதற் பெயரும், பெண்மை முறைப் பெயருமேயாம்.

உ-ம்: சாத்தி வந்தது, சாத்தி வந்தாள் எனவும்; முடத்தி வந்தது, முடத்தி வந்தாள் எனவும்; முடக்கொற்றி வந்தது, முடக்கொற்றி வந்தாள் எனவும்; தாய் வந்தது, தாய் வந்தாள் எனவும் அவை முறையானே அஃறிணைப் பெண்மைக்கும் உயர் திணைப் பெண்மைக்கும் உரியவாய் வந்தவாறு கண்டு கொள்க. முடம் என்பது சினையது விகாரம் ஆகலிற் சினையாயிற்று.

[1]ஒன்றற்கும் எனப் பொதுப்படக் கூறினாரேனும், பெண்மை சுட்டிய பெயர் என்றமையான் அஃறிணைப்பெண் என்றேயாம். இஃது ''ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்'' (பெய. 27) என் புழியும் ஒக்கும். ஒன்றிய நிலையுடையவற்றை 'ஒன்றிய நிலை' என்றார்.

## தெய்.

பெண்மைப் பெயர் திணை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: பெண்மை குறித்த எல்லாப் பெயரும் அஃறிணைப் பெண்பாலாகிய ஒன்றற்கும், உயாதிணைப் பெண்பாற்கும் ஒத்த நிலைமைய, எ-று.

மேல், ''நினையுங் காலைத் தத்த மரபின், வினையோ டல்லது பால்தெரி பிலவே'' (பெய. 18) என்றமையான், இவை யும் உயர்திணை வினை கொண்ட வழி உயர்திணையெனவும், அஃறிணை வினை கொண்ட வழி அஃறிணையெனவும் கொள்க. இவ்வுரை வருகின்ற சூத்திரங்கட்கும் ஒக்கும்.

உ-ம்: சாத்தி வந்தது, முலை எழுந்தது, முடத்தி வந்தது, தாய் வந்தது என்ற வழி அஃறிணைப் பொருண்மை உணர்த்தின.

---

1. ஒன்று என்றது அஃறிணை ஆண் பெண் என்ற இரண் டையும் குறிக்கும். பெண்மை சுட்டிய பெயர் எனப் பெண்மை மட்டும் குறிப்பிடப்பட்டமையால் இங்கு ஒன்று என்றது அஃறிணைப் பெண் என்றே கொள்ளல் வேண்டும்.

சாத்தி வந்தாள், முலையெழுந்தாள், முடத்தி வந்தாள், தாய் வந்தாள் என்றவழி உயர்திணைப் பொருள் உணர்த்தின.

அஃதேல் முலை எழுந்தது எனத் தன்வினையான்வரின் அஃறிணைப் பொருளேயாம்பிறவெனின், முலை என்பது இரு திணைப் பொருட்கும் உள்ளதோர் உறுப்பாகலின் ஆண்டுத் திணை தெரியாமற் பொதுப்பட நிற்கும்; அது முதல்வினை யோடு முடியினல்லது திணை விளங்காது என்ம.

**நச்.**

இது பெண்மைப் பெயரெல்லாம் தொகுத்துத் திணைக்கு உரிமை கூறுகின்றது.

இ-ள்: பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்—பெண்மை இயற்பெயரும் பெண்மைச் சினைப் பெயரும் பெண்மைச் சினை முதற் பெயரும் பெண்மை முறைப்பெயரும், ஒன்றற்கும் ஒருத்திக் கும் ஒன்றிய நிலையே—அஃறிணைப் பெண் ஒன்றற்கும் உயர் திணை ஒருத்திக்கும் பொருந்திய நிலைமையை உடையனவாம், எ-று.

உ-ம்: சாத்தி வந்தது, சாத்தி வந்தாள்; முடத்தி வந்தது, முடத்தி வந்தாள்; முடக்கொற்றி வந்தது, முடக்கொற்றி வந்தாள்: தாய் வந்தது, தாய் வந்தாள் எனவரும். முடம் சினை யாகிய காலை யுணர்த்திற்று.

'ஆய்' என்பதும் அது. [1]'யாய்' என்பது தன்மையோடு ஒட்டுதலின் முறைப்பெயர் எனினும் உயர்திணையாம்,

**கல்.**

என்-எனின், மேல் விரித்தவற்றுள் பெண்மைப்பெயர் எல்லா வற்றையும் தொகுத்துத் திணைக்கு உரியவாமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள் : மேல் விரித்தோதியவற்றுள் பெண்மையைக் கருதின எல்லாப் பெயரும் அஃறிணையுள் பெண் ஒன்றற்கும் உயர் திணையுள் ஒருத்திக்கும் நிற்றல் பொருந்தின எ-று.

---

1, யாய்—என்தாய் (ஞாய்—நின் தாய். தாய்—தன்தாய்) தன்மைப்பெயர் உயர்திணைக்கேயுரியது. அது என்தாய் எனத் தன் பெயர்ப் பொருளில் வரும் (தன்மையோடு ஒட்டும்) யாம் என்பது உயர்திணையாம் ஆதலின் அங்கு ஆய்தாய் என்பன உதாரணமாகுமேயன்றி'யாய்' என்பது உதாரணம் ஆகாது எள்பது கருத்து.

பெண்மை சுட்டிய பெயர் பெண்மையியற் பெயர் எனவும், பெண்மைச் சினைப் பெயர் எனவும், பெண்மைச் சினை முதற் பெயர் எனவும், பெண்மை முறைப் பெயர் எனவும் நான்கு வகைப்படும்.

உ-ம் : பெண்மையியற் பெயர் : சாத்தி வந்தது, சாத்தி வந்தாள் என வரும்.

பெண்மைச் சினைப் பெயர் : முடத்தி வந்தது, முடத்தி வந்தாள் என வரும். [2]குறளி என்பதும் அப் பாற் படும்.

பெண்மைச் சினை முதற் பெயர் : முடக்கொற்றி வந்தது, முடக்கொற்றி வந்தாள் என வரும்.

பெண்மை முறைப் பெயர் : தாய் வந்தது, தாய் வந்தாள் என வரும். ஆய் என்பதும் அது. யாய் என்பதோவெனின், தன்மையோடு அடுத்மையான் முரைப் பெயரேனும் உயர்திணை யெனப்படும்.

ஆதி.*

இயற்பெயர் சினைப் பெயர் சினை முதற் பெயர்களாகப் பெண்பாலுக்குரிய எல்லாப் பெயர்களும் அஃறிணை உயர்திணை ஒருமையாகிய ஒன்றுக்கும் ஒருத்திக்கும் பொருந்தி நிற்பன.

சுந்தரி (பசு) வந்து விட்டது — அஃறிணையியற் பெயர்
சுந்தரி வந்து விட்டாள் — உயர்திணையியற் பெயர்
குருடி (பசு) வந்து விட்டது — அஃறிணைச் சினைப் பெயர்.
குருடி அதோ போகிறாள். உயர்திணைப் பெயர்.
அக்கிழம் வேலைக்கு ஆகாது — அஃறிணை முதற் பெயர்.

அக்கிழம் வீண் வம்பு பேசுகிறது — உயர்திணை முதற் பெயர்.

ஆண்மை சுட்டிய பெயர்.

178. **ஆண்மை சுட்டிய வெல்லாப் பெயரு**
**மொன்றற்கு மொருவற்கு மொன்றிய நிலையே** (27)

---

2. குறளி — குள்ளமானவள்.

* இவர் பெண்மை முறைப் பெயரை விட்டு விட்டதன் காரணம் புலப்பட வில்லை. ஆண்மை சுட்டிய பெயர் பெயர்களிலும் ஆண்மை முறைப் பெயரை விட்டே சென்றுள்ளார்.

(ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலைஏ)

ஆ. மொ: இல.

All the nouns which indicate masculine gender belong to singular of neuter or of masculine (high class).

முத்து. பெ. 35

ஆடூஉக் குறித்த எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே.

நன். 284.

அவற்றுள்
ஒன்றே இருதிணைத் தன்பால் ஏற்கும்.

இல. 185 ஷை ஷை

முத்து: பெ. 33 ஷை ஷை

இனம்.

இதுவும் மேற் சூத்திரத்தோடு இயைபு.

*உரை: ஆண்மை பற்றி வரும் நான்கு பெயரும், அஃறிணை ஆண் ஒன்றற்கும், உயர்திணை ஒருவனுக்கும் உரிய, எ-று.

ஆண்மை பற்றி வரும் நான்கு பெயராவன: ஆண்மையியற் பெயரும், ஆண்மைச் சினைப்பெயரும், ஆண்மைச் சினைமுதற் பெயரும், ஆண்மை முறைப் பெயரும் என்பன.

வ-று: சாத்தன் வந்தது, சாத்தன் லந்தான் எனவும்; முடவன் வந்தது, முடவன் வந்தான் எனவும்; முடக்கொற்றன் வந்தது, முடக்கொற்றன் வந்தான் எனவும்; தந்தை வந்தது, தந்தை வந்தான் எனவும் அவை முறையான அஃறிணையொன்றற்கும், உயர்திணை ஆண்பாற்கும் உரியவாய் வந்தவாறு கண்டு கொள்க. பிறவும் அன்ன.

---

* இப்பகுதி முன்னைய பதிப்புகளில் இல்லையேனும் இருந்து விடுபட்டிருக்க வேண்டும் என்று தெரிதலின் இப்பதிப்பில் சேர்க்கப் பட்டுள்ளது — கழகப் பதிப்பு. (1973)

சேனா.

இ-ள்: ஆண்மைபற்றி வரும் நான்கு பெயரும், அஃறிணை ஆண் ஒன்றற்கும், உயர்திணை ஒருவனுக்கும் உரிய, எ-று.

அந்நான்குமாவன: ஆண்மையியற் பெயரும், ஆண்மைச் சினைப் பெயரும், ஆண்மைச் சினைமுதற் பெயரும், ஆண்மை முறைப்பெயருமேயாம்.

உ-ம்: சாத்தன் வந்தது, சாத்தன் வந்தான் எனவும்; முடவன் வந்தது, முடவன் வந்தான் எனவும்; முடக்கொற்றன் வந்தது, முடக்கொற்றன் வந்தான் எனவும்; தந்தை வந்தது, தந்தை வந்தான் எனவும் அவை முறையானே அஃறிணை ஆண் ஒன்றற் கும், உயர்திணை ஆண்பாற்கும் உரியவாய் வந்தவாறு கண்டு கொள்க. [1] பிறவும் அன்ன.

தெய்.

ஆண்மைப் பெயர் திணை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ஆண்மை குறித்த பெயரெல்லாம் அஃறிணையாண் பாலாகிய ஒன்றற்கும், உயர்திணை ஆண்பாலிற்கும் ஒத்த நிலைமைய, எ-து.

உ-ம்: சாத்தன் வந்தான், மோவாய் எழுந்தான், முடவன் வந்தான், தந்தைவந்தான் என்ற வழி உயர்திணையாயின. சாத்தன் வந்தது, முடவன் வந்தது, தந்தை வந்தது எனவும்; [1]"குன்றியன்ன கண்ண குரூஉ மயிர் பின்றாள் வெள்ளெலி மோவாய் ஏற்றை" எனவும் [2]"முட்புற விறவின் மோவாய் ஏற்றை" எனவும் அஃறிணைப் பொருண்மை யுணர்த்தின.

---

1. இது தேவையற்றது. பிற சூத்திரங்களில் காணப்பட வில்லை.

1. பொருள்: குன்றிமணி போலும் கண்ணுடையனவாகிய, நிறமுள்ள மயிரினையும், பின்னங்காலையும் உடைய தாடியையுடைய ஆண்வெள்ளெலி. மோவாய் ஏற்றை வெள்ளெலி என்க.

2, பொருள்; புறத்தே முள்ளையுடைய இறால் மீன்களின் தாடியையுடைய ஆண்.

நச்.

இஃது ஆண்மைப்பெயர் எல்லாந்தொகுத்துத் திணைக்குரிமை கூறுகின்றது.

இ-ள்: ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்—ஆண்மை இயற்பெயரும் ஆண்மைச்சினைப்பெயரும்ஆண்மைச்சினைமுதற் பெயரும் ஆண்மை முறைப்பெயரும், ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே—அஃறிணை ஆண் ஒன்றற்கும் உயர்திணை ஒருவற்கும் பொருந்திய நிலைமையினை யுடையனவாம், எ-று.

உ-ம்: சாத்தன் வந்தது, சாத்தன் வந்தான்; முடவன் வந்தது, முடவன் வந்தான்: முடக்கொற்றன் வந்தது முடக்கொற்றன் வந்தான்; தந்தை வந்தது, தந்தை வந்தான் என வரும்.

நுந்தை என்பதும் அது. [3]எந்தை என்பது தன்மையொடு ஒட்டுதலின் உயர்திணையாம்.

கல்.

என்-எனின், ஆண்மைப்பெயர் எல்லாவற்றையுந் தொகுத்துத் திணைக்குரியவாமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள்: ஆண்மையைக்கருதின பெயர்கள் எல்லாம் அஃறிணையுள் ஆண் ஒன்றற்கும் உயர்திணையுள் ஒருவற்கும் நிற்றல் பொருந்தின, எ-று.

அவை ஆண்மையியற்பெயர் எனவும், ஆண்மைச் சினைப் பெயர் எனவும், ஆண்மைச்சினை முதற்பெயர் எனவும், ஆண்மை முறைப்பெயர் எனவும் நான்கு வகைப்படும்.

உ-ம்: ஆண்மை யியற்பெயர்: சாத்தன் வந்தது, சாத்தன் வந்தான் எனவரும்.

ஆண்மைச் சினைப்பெயர்: முடவன் வந்தது, முடவன் வந்தான் எனவரும்.

ஆண்மைச் சினைமுதற்பெயர் : முடக்கொற்றன் வந்தது, முடக்கொற்றன் வந்தான் எனவரும்.

---

3. என் + தந்தை = எந்தை. 'என்' என்னும் தன்மைப்பெயர் உயர் திணைக்குரியது. ஆதலின் அதனுடன் ஒட்டிவந்த எந்தை என்பது இங்கு உதாரணமாகக் காட்டப் படலாகாது, நும் + தந்தை = நுந்தை; காட்டிப்படலாம்.

ஆண்மை முறைப்பெயர்: தந்தை வந்தது, தந்தை வந்தான் எனவரும். நுந்தை என்பதும் அது.

எந்தை என்பது தன்மையடுத்தமையின் உயர்திணைப் பெயராம்.

## ஆதி.

இயல் சினை முதற்பெயர்களில் ஆண்பாலுக்குரிய எல்லாப் பெயர்களும் அஃறிணை ஒருமைக்கும் உயர்திணை ஒருமைக்கும் பொருந்தும்.

மொட்டையன் (காளை) வந்துளது—அஃறிணையியல்.
மொட்டையன் வந்துளான்—உயர்திணையியல்.
வயிறன் (மாடு) வந்தது—சினை—அஃறிணை
வயிறன் வந்துவிட்டான்—சினை – உயர்திணை

*நொண்டிக்கால் பெரியவர் (மாடு) வந்துளது—அஃறிணை முதல்.

நொண்டிக்கால் பெரியவச் வந்துளார்—உயர்திணை முதல்

பன்மை சுட்டிய பெயர்

179. பன்மை சுட்டிய வெல்லாப் பெயரு
மொன்றே பலவே யொருவ ரென்னு
மென்றிப் பாற்கு மோரன் னவ்வே (28)

(பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றே பலவே ஒருவர் என்னும்
என்று இப்பாற்கும் ஓர் அன்ன ஏ)

## ஆ. மொ: இல.

All the nouns which denote plural may belong to neuter singular, neuter plural, or high class singular

---

* நொண்டிக்காற் கண்ணன் என்பதுபோல்வன காட்டலே நன்று. நொண்டிக்காற் பெரியவர் என்று ஒருவனுக்குப் பெயர் இடுதல் இல்லை. நொண்டிக்கால்கண்ணன் வருகிறேன் என்பதுண்டு. நொண்டிக்காற் பெரியவர் வருகிறேன் எனத் தன் பெயரைக் கூறுதல் இல்லை.

பி. இ. நூ.

இல. 186.

பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றே பலவே ஒருவர் என்னும்
என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே

முத்து. பெ. 36.

பன்மையைக் குறித்த பெயரெல் லாமும்
ஒன்று பலவொரு மைக்கும் உரிய.

## இளம்.

உரை : பன்மைசுட்டிய மூன்றுபெயரும், அஃறிணை ஒருமையும், அத்திணைப் பன்மையும், உயர்திணை ஒருமையும் எனச் சொல்லப்பட்ட மூன்று பாற்கும் உரிய, எ-று.

அவையாவன : பன்மையியற பெயர், பன்மைச் சினைப் பெயர், பன்மைச் சினை முதற்பெயர் என்பனவாம்.

வ-று : யானை வந்தது, யானை வந்தன, யானை வந்தான், யானை வந்தாள் எனவும்; நெடுங்கழுத்தல் வந்தது, நெடுங் கழுத்தல் வந்தன, நெடுங்கழுத்தல் வந்தான், நெடுங் கழுத்தல் வந்தாள் எனவும்; பெருங்கால் யானை வந்தது, பெருங்கால் யானை வந்தன, பெருங்கால் யானை வந்தான், பெருங்கால் யானை வந்தாள் எனவும் முறையானே அஃறிணை ஒருமைக்கும், அஃறிணைப் பன்மைக்கும், [1] உயர்திணை ஒருமைக்கும் உரியவாய் வந்தவாறு கண்டுகொள்க.

## சேனா.

இ-ள் : பன்மை சுட்டி வரும் மூன்று பெயரும் அஃறிணை ஒருமையும், அத்திணைப் பன்மையும், உயர்திணை ஒருமையும் எனச் சொல்லப்பட்ட மூன்றுபாற்கும் உரிய, எ-று.

அம் மூன்றுமாவன : பன்மையியற் பெயரும், பன்மைச் சினைப் பெயரும், பன்மைச் சினை முதற் பெயரும்ஆம்.

உ-ம் : யானை வந்தது, யானை வந்தன, யானை வந்தான், யானை வந்தர்ள் எனவும்; நெடுங் கழுத்தல் வந்தது,

---

1. உயர்திணை ஒருமை — ஆண்பால், பெண்பால்

நெடுங் கழுத்தல் வந்தன, நெடுங் கழுத்தல் வந்தான், நெடுங் கழுத்தல் வந்தாள் எனவும்; பெருங்கால் யானை வந்தது, பெருங் கால் யானை வந்தன, பெருங்கால் யானை வந்தான், பெருங் கால் யானை வந்தாள் எனவும் அவை முறையானே அஃறிணை ஒருமைக்கும், அஃறிணைப் பன்மைக்கும், உயர்திணை ஒருமைக் கும் உரியவாய் வந்தவாறு கண்டு கொள்க.

[2] பன்மைக்கேயன்றி ஒருமைக்கும் உரியவாய் வருவன வற்றைப் பன்மைப் பெயர் என்றது என்னையெனின்‘ நன்று சொன்னாய்; பெண்மைப் பெயர் முதலாயினவும் பிற பெயரால் உணர்த்தப்படாத பெண்மை முதலாயினவற்றையும் உணர்த்தலான் அன்றே அப் பெயரவாயின. என்னை? பெண்மை முதலாயின பிற பெயரால் உணர்த்தப்படுமாயின், அப்பெண்மை முதலாயினவற்றான் அப்பெயர் வரைந்து சுட்ட லாகாமையின். பன்மைப் பெயர் ஒருமை உணர்த்துமாயினும், பிறவாற்றான் உணர்த்தப்படாத பன்மையை ஒருகால் உணர்த் தலின் அப்பன்மையான் அவை வரைந்து சுட்டப்படுதலின் அப் பெயரவாயின. அற்றேனும், பன்மை சுட்டிய பெயர் என்ற மையாற் பன்மையே உணர்த்தல் வேண்டும் எனின், அற்றன்று; இயைபின்மை நீக்கலும் பிறிதின் இயைபு நீக்கலும் என விசே டித்தல் இருவகைத்து. வெண்குடைப் பெருவிறல் என்றவழிச் செங்குடை முதலியவற்றோடு இயைபு நீக்காது வெண்குடை யோடு இயைபு இன்மை மாத்திரை நீக்கி வெண்குடையான் என்பதுபட நிற்றலின் அஃது இயைபின்மை நீக்கலாம். கருங் குவளை என்றவழிச் செம்மை முதாலயினவற்றோடு இயைபு நீக்கலின் இது பிறிதின் இயைபு நீக்கலாம். பன்மை சுட்டிய பெயர் என்பது வெண்குடைப் பெருவிறல் என்பது போல ஒருமையியைபு நீக்காது பன்மை சுட்டுதலோடு இயைபின்மை மாத்திரை நீக்கிப் பன்மை சுட்டும் என்பது பட நின்றது. அதனான் விசேடிக்குங்கால் பிறிதின் இயைபு நீக்கல் ஒருதலை யன்றென்க.

[3]அஃறிணை யொருமையும் அத்திணைப் பன்மையும் உயர் திணையொருமையுமாகிய பலவற்றையும் உணர்த்தலாற்பன்மை

---

2. பன்மை சுட்டிய பெயர் — பன்மைப் பெயர் — யாளை என்பது ஆண், பெண், ஒன்று, பல என நான்கு பாலைச் சுட்டி வருது. பி.கு.வில் சிவ. விளக்கம் பார்க்க.
3. இளம்பூரணர் உரையால் விளங்காமையின் உரை யாசிரியர் இளம்பூரணர் அல்லர் என்னலாம். பின்னர் வந்த கல்லாடனார் இக்கருத்தினர்.

சுட்டிய பெயர் என்பாரும் உளர். அஃது உரையாசிரியர் கருத் தன்மை அவ்வுரையான் விளங்கும்.

என்றிப்பாற்கும் என்னும் உம்மை இம்மூன்று பாற்கும் என்பதுபட நிற்றலின் முற்றும்மை.

## தெய்.

பன்மை குறித்த பெயர் திணை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : பன்மை குறித்த பெயர் எல்லாம் அஃறிணை ஒருமை பன்மைக்கும், உயர்திணை ஆண்பால் பெண்பாற்கும் ஒத்த நிலைமைய, எ-று.

உ-ம் : யானை வந்தது, தலை முடிந்தது, தூங்கல் வந்தது என அஃறிணை ஒருமையாயின. யானை வந்தன, தலை முடிந் தன தூங்கல் வந்தன இவை அஃறிணைப்பன்மை உணர்த்தின. யானை வந்தான், தலை முடிந்தான், தூங்கல் வந்தான் என உயர்திணை ஆண்பாலாயின. யானை வந்தாள், தலை முடித் தாள், தூங்கல் வந்தாள் என உயர்திணைப் பெண்பால் ஆயின.

## நச்.

இஃது பன்மைப் பெயர் எல்லாந் தொகுத்துத் திணைக்கு உரிமை கூறுகின்றது.

இ-ள் : பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்—பன்மையியற் பெயரும் பன்மைச் சினைப் பெயரும் பன்மைச் சினை முதற் பெயரும், ஒன்றே பலவே ஒருவர் என்னும் என்றிப் பாற்கும் ஓரன்னவ்வே—அஃறிணை ஒருமையும் அத்திணைப் பன்மையும் உயர்திணை ஒருமையும் என்று சொல்லப்படும் அம்மூன்று பாற்கும் ஒருதன்மைய,எ-று,

ஒன்று என்பதனை அஃறிணை ஆண் ஒன்றனையும் பெண் ஒன்றனையும் ஒருவர் என்பதனை உயர்திணை ஆண் ஒருமையும் பெண் ஒருமையுமாகக் கொள்க.

உ-ம்: யானை வந்தது, யானை வந்தன, யானை வந்தான், யானை வந்தாள்; நெடுங்கழுத்தல் வந்தது, வந்தன, வந்தான், வந்தாள்; பெருங்கால் யானை வந்தது, வந்தன, வந்தான், வந்தாள் என வரும்.

'வெண்குடைப் பெருவிறல்' என்பது, 'செங்குடை' முதலிய வற்றோடு இயைபு நீக்காது, 'வெண்குடை'யோடு இயைபு இன்மை மாத்திரை நீக்கி நின்றாற் போலப் 'பன்மை சுட்டிய' என்பதும் ஒருமையியைபு நீக்காது பன்மை சுட்டுதலோடு இயைபு

இன்மை மாத்திரை நீக்கி நின்றது. இஃது, இயைபு இன்மை நீக்க லாம். கருங்குவளை என்பது செம்மை முதலியவற்றோடு இயைபு நீக்குதலின் பிறிதின் இயைபு நீக்கலாம். எனவே விசேடித்தல் இருவகை ஆயின †

**கல்.**

என்-எனின், பன்மைப் பெயர் எல்லாவற்றையும் தொகுத் துத் திணைக்கு உரியவாமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள்: பன்மையைக் கருதிய எல்லாப் பெயர்களும் அஃறிணைக்கண் ஒன்றும் பலவும் உயர்திணைக்கண் ஆண்பாலும் பெண்பாலும் என்று சொல்லப்படும் நான்கு பாற்கும் ஒரு தன்மைய, எ—று.

பன்மை சுட்டிய பெயர் பன்மை இயற்பெயரும், பன்மைச் சினைப்பெயரும், பன்மைச்சினைமுதற் பெயரும் என மூன்று என்று உணரப்படும்.

ஈண்டுப் பன்மை என்றது இருதிணைப் பன்மையும் அன்று: பலபால் மேலும் வருதலின் பன்மை என்றாராகக் கொள்க.

உ-ம்: பன்மையியற் பெயர்: யானை வந்தது, யானை வந்தன, யானை வந்தான், யானை வந்தாள் என வரும்.

பன்மைச்சினைப் பெயர்: நெடுங் கழுத்தல் வந் தது, வந்தன, வந்தான், வந்தாள் என வரும்.

பன்மைச் சினைமுதற் பெயர்: பெருங்கால் யானை வந்தது, வந்தன, வந்தான், வந்தாள் என வரும்.

ஈண்டு ஒன்றே என்றதனை அஃறிணை ஆண் ஒன்றினையும் பெண் ஒன்றினையுமாகக் கொள்க. பன்மைக்கும் அஃதொக் கும். [1] உயிரில் ஒன்றும் பலவும் கொள்ளற்க. ஒருவர் என்ப தனை உயர்திணை இருபால் மேலும் கொள்க.

---

† இதன் பின்னர் உள்ள பாடம்: 'எனவே, பல பால்களை யும் உணர்த்தி நிற்றலின் பன்மை சுட்டிய என்றார் என்று உரையாசிரியர் கூறியதே சேனாவரையர்க்கும் கருத்தாயிற்று'

1 உயிரில்லாத பொருள்களில் ஒன்றும் பலவும் கொள் ளற்க. ஏன் எனின் வருதல் போலும் தொழிலுக்கு அவை உரியவல்ல. மேலும் மண் மரம் என ஆண் பெண் பால்களுக்குப் பெயர் வைப்பதில்லை.

வென்.

இது பன்மை சுட்டிய பெயர் இருதிணைக்கண்ணும் பால் உணர்த்துமாறு கூறுகின்றது.

இ-ள் : பன்மை சுட்டி வரும் இயற்பெயர், சினைப் பெயர், சினை முதற் பெயர் என்னும் மூன்று பெயரும் அஃறிணை ஒருமையும் அத்திணைப் பன்மையும் உயர்திணை ஆண் பெண் என்னும் ஒருமையும் ஆகிய இப்பால்களுக்கும் ஒத்த நிலைமைய, எ-று.

என்று என்றது அஃறிணை ஆண் ஒருமை பெண் ஒருமை யினை. ஒருவர் என்றது உயர்திணை ஆண் ஒருமை பெண் ஒருமையினை.

உ-ம் : யானை வந்தது, யானை வந்தன, யானை வந்தான், யானை வந்தாள் எனவும்; நெடுங்கழுத்தல் வந்தது, நெடுங் கழுத்தல் வந்தன, நெடுங்கழுத்தல் வந்தான், நெடுங்கழுத்தல் வந்தாள் எனவும்; பெருங்கால் யானை வந்தது, பெருங்கால் யானை வந்தன. பெருங்கால் யானை வந்தான், பெருங்கால் யானை வந்தாள் எனவும் முறையே பன்மையியற் பெயர், பன்மைச் சினைப் பெயர், பன்மைச் சினை முதற்பெயர் மூன்றும் அஃறிணை ஒருமைக்கும் அஃறிணைப் பன்மைக்கும் உயர்திணை ஆண் ஒருமை பெண்ணொருமைக்கும் உரியவாய், வந்தமை காண்க............

இனி, பன்மை சுட்டிய பெயர் என்பதற்கு இருதிணையிலும் பன்மைப் பாலைச் சுட்டி வரும் பொதுப் பெயர் என்பதே பொருளாகும். இதுவே தொல்காப்பியனார் கருத்தென்பது "தாமென்கிளவி பன்மைக் குரித்தே" (பெய. 30) எனவும், "ஏனைக்கிளவி பன்மைக்குரித்தே" (பெய. 36) எனவும் வரும் சூத்திரங்களில் உயர் திணைப்பலர் பாற்கும் அஃறிணைப் பலவின் பாற்கும் பொதுவாகிய நிலையினைப் 'பன்மை' எனற சொல் லால் ஆசிரியர் சுட்டுதலால் நன்கு புலனாகும். இங்ஙனம் பன்மை சுட்டிய பொதுப் பெயர்கள் தமக்குரிய இருதிணைப் பன்மையை யும் சுட்டி வழங்குதலே முறையாகவும் அவற்றுள் ஒருசார் பெயர்கள், அஃறிணையில் ஒன்றன்பால் பலவின்பால் உயர் திணையில் ஆண் ஒருமை பெண் ஒருமையாகிய இந்நான்கு பால்களையுல் குறித்து வருதல் உண்டு என்பார்,

ஒன்றே பலவே ஒருவர் என்னும்
என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே

எனச் சூத்திரம் செய்தார் தொல்காப்பியனார். இதன்கண் 'என்றிப்பாற்கும்' என்ற எச்சவும்மையால் பன்மை சுட்டிய பெயர் தனக்குரிய இருதிணைப் பன்மையையும் ஏற்று வருதலை ஆசிரியர் தழீஇக் கூறினராதல் வேண்டும். இவ்வுண்மை "தன்பாலேற்றலை உம்மையாற் றழீஇயினார்" என வரும் சிவஞான முனிவர் உரைக் குறிப்பினால் இனிது புலனாதல் காண்க.

உ-ம் : தாம் வந்தார், தாம் வந்தன எனப் பன்மைப் பொது பெயர் உயர்திணைப் பன்மையும் அஃறிணைப் பன்மையும் உணர்த்தி நின்றன.

## ஆதி.

இயல் சினை சினைமுதற் பெயர்களான எல்லாப் பன்மைப் பெயர்களும் அஃறிணை ஒருமை பன்மை உயர்திணையின் ஒருமை ஆகிய இம்முன்றுக்கும் இயைந்து நிற்பனவாம்.

மரம் பழுத்தன — அஃறிணை — பன்மை
மரம் பழுத்தது — அஃறிணை — ஒருமை
அட, மரம், இங்கு வா — உயர்திணை ஒருமை

அஃறிணை ஒருமை உயர்திணை ஒருமை ஆகிய விரவுப் பெயர் — அஃறிணையில் பன்மையாகவும் நிற்கிறது.

யானை வந்தான் — உயர்திணை ஒருமை
யானை வந்தது — அஃறிணை ஒருமை
யானை வந்தன — அஃறிணைப் பன்மை
போண்டா எங்கே போகிறான் — உயர்திணை ஒருமை
போண்டா சூடாக இருக்கிறது — அஃறிணை ஒருமை
போண்டா இரண்டும் விலை என்ன — அஃறிணைப் பன்மை

## சுப்.

இச்சூத்திரவுரையிற் சேனாவரையர் "இயைபின்மை நீக்கலும் பிறிதினியையு நீக்கலும் என விசேடித்தல் இருவகைத்து... பன்மைசுட்டிய பெயரென்பது வெண்குடைப் பெருவிறல் என்பது போல ஒருமையியைபு நீக்காது பன்மை சுட்டுதலோடு இயைபின்மை மாத்திரை நீக்கிப் பன்மை சுட்டும் என்பது படநின்றது" என்று கூறினர். இவ்வாறே நச்சினார்க்கினியரும் கொண்டனர். இவ்விருவரையும் நன்னூல் விருத்தியுரைகாரர் 'ஒன்றே யிருதிணைத் தன்பால்ஏற்கும்" (நன். 284) என்னுஞ்சூத்திரவுரையில் மறுத்துப் பன்மை சுட்டிய பெயர் என்றது பல பாலையும் சுட்டி நிற்றலிற் பிறிதினியைபு நீக்கிய விசேடணம் என்று கூறியுள்ளார். ஆனால், தொல்காப்பியத்தில், "பெண்மையியற் பெயர்

ஆண்மையியற் பெயர், பன்மையியற் பெயர், ஒருமையியற்பெயர் என்று, அந்நான்கென்ப இயற்பெயர் நிலையே'' (பெய 22) முதலிய மூன்று சூத்திரங்களைநோக்குமிடத்து, ஆண்மைஇயற்பெயர் பெண்மையியற்பெயர், பன்மையியற் பெயர், ஒருமையியற் பெயர் என்பனவற்றிற்கு, ஆண்மையைக் குறிக்க வுரிமையுள்ள இயற்பெயர், பெண்மையைக் குறிக்க வுரிமையுள்ள இயற் பெயர் பன்மையைக் குறிக்க வுரிமையுள்ள இயற்பெயர், ஒருமையைக் குறிக்க வுரிமையுள்ள இயற்பெயர் என்று சேனாவரையர் போற் பொருள் கொள்வது எளிதாயிருக்கு மென்று தோன்றகின்றன. அவ்வாறாயின் அவரது கூற்றில் யாதொரு குற்றமும் இல்லை. ஆண்மையியற் பெயர் பெண்மையியற்பெயர் ஒருமையியற்பெயர் இம்மூன்றுக்கும் அவ்வாறு பொருள்கொண்டு பன்மையியற் பெயர்க்கு மாத்திரம் பல பாலையும் சுட்டி நிற்கும் இயற்பெயர் என்று மாறுபட்டுப் பொருள் கொள்வதில் பெரும் பயனின்று. பன்மை என்னும் சொல்லுக்கு இயற்கைப் பொருளை விட்டு வேறு பொருளைக் கற்பிப்பதில் கௌரவமும் உண்டு. அன்றியுய் எவ்விடத்தும் விசேடணம் பிறிதின் இயைபை நீக்குவதன்றி, இயைபின்மையை நீக்காதென்று நாட்டக் கூடுமாயின் அவ்விருத்தியுரைகாரர் கூறுமாறே ஒருவாறு கூறலாம். ஆனால் அவரே 'செஞ்ஞாயிறு' முதலியவற்றில் தன்னியைபின்மை நீக்கலைக் கொண்டுள்ளனர். ஆதலின் சேனாவரையர் கூற்று ஆசிரியர் தொல்காப்பியனார் சூத்திரப் போக்குக்கு இனிது பொருந்தும்.

நச்சினார்க்கினியத்தில் இச்சூத்திரவுரையின் இறுதியில் உள்ள, ''எனவே விசேடித்தல் இருவகையாயின......சேனாவரையர்க்குங் கருத்தாயிற்று'' என்ற சொற்றொடர் நன்னூல் விருத்தியுரை படித்த மாணவனால் ஏட்டிற் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும் என்று தோன்றுகிறது. இச்சொற்றொடர் பொருளமைதிக்குப் பொருந்தாது. இச்சொற்றொடரிற் 'பல பால்களையும்' என்றவிடத்துப் 'பன்மைப்பாலை' என்றிருப்பின் அப்போது பொருளமைதிக்குப் பொருந்தும்.

**பி. கு.**

**சங்கர நமச்சிவாயர்**

''ஆசிரியர் தொல்காப்பியர்,
பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றே பலவே ஒருவர் என்னும்
என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே,

எனப் பன்மைப் பொதுப் பெயர்கள் ஐம்பாலுள் உயர்திணைப் பன்மைப்யாலொழிய ஏனை நாற்பாலினையும் ஏற்கும் என்றாராலோவெனின், செஞ்ஞாயிறு என்றாற்போலத் தன்னொடு இயைபுஇன்மை நீக்கிய விசேடணதான் விசேடிக்கப்பட்டனவன்றிச் செந்தாமரை என்றாற்போலப் பிறிதொடு இயைபு நீக்கிய விசேடணத்தான் விசேடிக்கப்பட்டனவாகி ஆண்மைப் பொதுப் பெயர் பெண்மைப் பொதுப் பெயர் என்றும், ஒருமைப் பொதுப் பெயர் பன்மைப் பொதுப்பெயர் என்றும் இனச்சுட்டுளவாய் வருதலின், இவற்றுட் பன்மைப் பொதுப் பெயர் பன்மையை யொழிதலும் ஒருமையை யேற்றலும் பொருந்தாவென்பது கருதி, மறுத்தல் என்னும் மதம்படத் ''தன்பால் ஏற்கும்'' என இவ்வாசிரியர் (பவணந்தியார்) கூறினார் போலும். பன்மைப் பொதுப் பெயருட் பன்மையென்பது பிறிதோடியைபு நீக்கிய விசேடணம் அன்று எனத் தோன்றியவாறே விசேட விலக்கணஞ் சிதைத்து இடர்ப்பட்டு உரை கூறுவாரும் உளர். அதனைத் தோன்றக் கூறிற் பெருகும் அவ்வாசிரியர் கூறியவாறே பன்மைப் பொதுப் பெயர்க்கு யானை வந்தது, யானை வந்தன, யானை வந்தான், யானை வந்தாள் என உதாரணங் காட்டினாருளராலோவெனின், யானையென்னும் பால்பகா அஃறிணைப் பெயர்க்குக் கள் விகுதியின்மையின் அஃறிணை ஒருமைக்கே சிறந்ததாய் அதன் பன்மைக்கண்ணும் விரவி ஆகுபெயராய் உயர்திணை ஆண் ஒருமை பெண் ஒருமையினும் விரவுமாதலின், ''முதற் பெயர்'' (நன். 283) என்னுஞ் சூத்திரத்து 'இன்னன' என்றமையான் அமைந்ததன்றிப் பன்மைப் பொதுப் பெயராகா வென்று உணர்க.*

**சிவஞானமுனிவர்**

இனி ஆசிரியர் தொல்காப்பியர் 'பன்மை சுட்டிய பெயர் என்றது பலபாலையும் சுட்டி நிற்றலின் பிறிதின் இயைபு நீக்கிய விசேடணம் அடுத்து நின்றது என்பார்,

> பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்
> ஒன்றே பலவே ஒருவர் என்னும்
> என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே

எனக் கூறித் தன்பால் ஏற்றவை உம்மையாற் றழீஇயினார்.

---

* (நன்னூல் '':அவற்றுள், ஒன்றே யிருதிணைத் தன்பால் ஏற்கும்'' (284) என்னும் சூத்திர உரை)

அவ்வாசிரியர் கருத்தறியாது பன்மைப்பொதுப்பெயருள் பன்மை என்பது பிறிதொடு இயைபு நீக்கிய விசேடணம் அன்று எனத் தோன்றியவாறே விசேடண இலக்கணம் சிதைத்து இடர்ப்பட்டு உரை கூறுவாரும் உளர். அதனைத்தோன்றச்கூறின் பெருகும். அவ்வாசிரியர் கூறியவாறே பன்மைப் பொதுப் பெயர்க்கு உதாரணம் யானை வந்தது, யானை வந்தன, யானை வந்தான், யானை வந்தாள் என வருமாறும், இங்ஙனம் யானையென்னும் பால்பகா அஃறிணைப் பெயர்க்குக் கள்விகுதியின்மையின் அஃறிணை ஒருமைக்கே சிறந்ததாய் அதன் பன்மைக் கண்ணும் விரவி ஆகுபெயராய் உயர்திணை ஆண் ஒருமை பெண் ஒருமையினும் விரவி வருமாறும் காண்க.

பலபாலையும் சுட்டிநிற்றலின் பன்மை சுட்டியபெயர் எனின் ஆண்மை சுட்டிய பெயர் முதலியனவும் பலபாலையும் சுட்டி நிற்றலின் அவற்றையும் பன்மை சுட்டிய பெயர் எனல் வேண்டுமால் எனின், அது பொருந்தாது. நான்கு பாலும் சுட்டி நிற்கும் தன்னை நோக்க ஏனை மூன்று பாலும் இரண்டு பாலும் சுட்டி நிற்கும் பெயர்கள் சின்மை சுட்டிய பெயர் எனப்படுவனவல்லது பன்மை சுட்டிய பெயர் எனப்படாவாகலான் என்க.

அற்றேல் அவற்றைச் சின்மை சுட்டிய பெயர் எனவே அமையும் பிறவெனின், அவற்றுள் ஆண்மை சுட்டுதல் முதலிய பகுப்பு உண்மையின் அவற்றைப் பகுத்துக்கூற வேண்டுதலான் அமையா என்க. இக்கருத்தே பற்றியன்றே, பஃறொடை வெண்பா என்றாற்போல ஏனையவற்றையும் பஃறொடை வெண்பா எனச்கூறாததூஉம், பகுப்புண்மையின் சிஃறொடை வெண்பா என்றொழியாததூஉம், பஃறாழிசைக்கொச்சகம் என்றதனை நோக்கி அதில் குறைந்ததனைப் பகுப்பின்மையான் சிஃறாழிசைக் கொச்சகம் என்றே போந்ததூஉம் என்க.

இனி இவ்வாறன்றி ஆணொருமை பெண்ணொருமை அஃறிணை யொருமை என்ற மூன்றும் ஒருமைப்பால் என ஒன்றாய் அடங்குதலின் பல பால்களையும் சுட்டி நின்றனவல்லவாகலான் அம்மூன்று ஒருமையும் சுட்டிய பெயர்களை ஒருமை சுட்டிய பெயர் எனவும், இஃது ஒருமையும் பன்மையும் என்னும் இருபால் சுட்டி நிற்றலான் பன்மை சுட்டிய பெயர் எனவும் கொள்ளினும் இழுக்காது. (நன்னூல். 284. உரை)

சிவ.

பெண்மை சுட்டிய பெயர் என்பது உயர்திணைப் பெண் அஃறிணைப்பெண் இரண்டையும் குறிக்கும். ஆண்மை சுட்டிய

பெயர் என்பது உயர்திணை ஆண் அஃறிணை ஆண் இரண்டையும் குறிக்கும். ஒருமை சுட்டிய பெயர் என்பது உயர்திணையில் உள்ள ஆண் ஒருமை பெண் ஒருமையையும் அஃறிணை ஒன்றனையும் குறிக்கும். அவ்வாறே பன்மை சுட்டிய பெயர் என்பது உயர்திணைப் பன்மையையும் (பலர்பாலையும்) அஃறிணைப் பன்மையையும் (பலவின்பாலையும்) குறிக்கும். ஆனால் இச் சூத்திரத்தில் பன்மை சுட்டிய பெயர் என்பது உயர்திணைப் பலர் பாலைக் குறிக்கவில்லை. அஃறிணைப் பலவின் பாலையே குறித்தது. இருதிணைக்கும் உரியவாகச் சொல்லப் பட்டு வரும் பெண்மை சுட்டிய பெயர் முதலியவற்றில் பன்மை சுட்டிய பெயர் என்பது மட்டும் உயர்திணைப்பன்மையைவிட்டு அஃறிணைப் பன்மையை குறிக்கின்றது.

அஃறிணைப் பன்மைப்பெயர் என்பது பால்பகா அஃறிணைப் பெயராகும். யானை என்ற மாத்திரத்தில் ஓர் யானையைக் கருதாமல் யானைகளைக் கருதுதலின் (இனத்தைக் கருதுதலின்) யானை என்றது பன்மைப் பெயராம். அதனால் அது பன்மை சுட்டிய பெயராகும்.

அப்பன்மை சுட்டிய பெயர் உயர்திணை ஆண், பெண், அஃறிணை ஒன்று, பல ஆகிய நான்கு பால்களுக்கும்உரியதாகும். உ-ம்: யானை வந்தான், யானை வந்தாள், யானை வந்தது, யானை வந்தன. (இப்படியே சினைப் பெயர், சினை முதற் பெயர்களுக்கும் கொள்க. நெடுங்கழுத்தல், பெருங்கால் யானை என்பனவும் பால்பகா அஃறிணைப் பெயர்கள்)

இதுவரை கூறப்பட்டது சூத்திரப் பொருள். இனித் தடை விடை வருமாறு.

பன்மை சுட்டிய பெயர் என்பது பால்பகா அஃறிணைப் பெயரை யுணர்த்தும் என்றால் யானை என்பது ஒருமைக்கும் (ஒன்றன்பாலுக்கும்) உரியதாய் நிற்றலின் அதனைப் பன்மை சுட்டிய பெயர் எனக் கூறலாமா என்பது தடை.

விடை: சாத்தன் என்பதை ஆண்மை சுட்டிய பெயர் என்கிறோம், ஆண்மை சுட்டலின். அதனை வேறு பெயரால் (பெண்மை முதலியவற்றால்) கூற இயலாது. அப் பெயரானே கூறல் வேண்டும். சாத்தி என்பதனைப் பெண்மை சுட்டிய பெயர் என்கிறோம், பெண்மை சுட்டலின். அதனை வேறு பெயரால் (ஆண்மை முதலியவற்றால்) கூற இயலாது, அப்பெயரானே கூறல் வேண்டும். சாத்தன் அல்லது சாத்தி என்பது ஒருமையில் வருவதால் அதனை ஒருமை சுட்டிய பெயர் என்கிறோம்.

அதனை வேறு பெயரால் (பன்மைப் பெயரால்) கூற இயலாது; அப்பெயரானே கூறல் வேண்டும். அவை போல யானை என்பதை எப் பெயரால் கூறல் தகும் எனின்—ஒருமைநோக்கிஒருமை சுட்டிய பெயர் என்பதா யானைகள் எனும் பன்மை நோக்கிப் பன்மை சுட்டிய பெயர் என்பதா எனின், எப்பெயரால் கூறினும் மற்றொன்றற்கு மாறுபடும். ஆயினும் ஏதேனும் ஒரு பெயரால் கூற வேண்டும். ஒருமை பன்மை ஆகிய இரண்டு பால்களையும் சுட்டும் அப்பெயரை ஒருமை சுட்டிய பெயர் என்பதினும் பன்மை சுட்டிய பெயர் என்பதே சிறக்கும். அதனால் பன்மையை உணர்த்தும் அச்சொல்லைப் பன்மை சுட்டிய பெயர் என்றே கூறல் வேண்டும். இதுவே 'பன்மை சுட்டிய பெயர்' எனக் கூறியதன் காரணம் ஆம்.

தடை : பெயர்க் காரணம் எதுவாயினும் பன்மை சுட்டிய என்னும் அடைமொழி (விசேடணம்) ஒருமை சுட்டுதலை நீக்கும். யானை என்பதைப் பன்மை சுட்டிய பெயர் எனின், யானைகள் என்னும் பொருள் தருமேயன்றி, யானை என்னும் ஒருமையைத் தராது. அதனால் அவ் வடைமொழி ஒருமையை நீக்கியதாகும். ஒருமைக்கும் உரிய பெயரைப் பன்மை சுட்டிய என்னும் அடைமொழி கொடுத்துக் கூறுதல் பொருந்தாது.

விடை : ஒரு பொருளுக்கு (சொல்லுக்கு) இரண்டு வகையில் அடைமொழிகள் வரும். ஒரு பொருளுக்குக் கொடுக்கப்பட்ட அடைமொழியானது, அப் பொருளுக்குத் தன் போலவே தொடர்பு கொள்ளும் பிறிது ஒன்றை நீக்க வருவது ஒன்று. இதைப் பிறிதின் இயைபு நீக்கிய விசேடணம் என்பர். குவளை என்பது ஒரு பொருள். இது நிறம் காரணமாகக் கருங்குவளை செங்குவளை என இரு வகைப்படும். கருமை நிறத் தொடர்பால் (இயைபால்) கருங்குவளை என்றும், செம்மை நிறத் தொடர்பால் செங்குவளை என்றும் வழங்கப்படும். எனவே, கருமை செம்மை என்பன குவளைக்கு விசேடணங்கள். கருங்குவளை என்று சொன்னால் கருமை என்னும் விசேடணம், குவளைக்குச் செம்மையும் இயைபுடையது ஆதலின் அச் செம்மையை நீக்கியது. அதனால் கருமை என்பது குவளைக்குள்ள பிறிதின் இயைபை நீககிய விசேடணம் எனப்படும்.

ஒரு பொருளுக்குக் கொடுக்ககப்பட்ட அடைமொழி அப் பொருளுடன் இயைந்திருப்பதை மட்டும் தெரிவிப்பது. இது இயைபுண்மை விசேடணம் என்னலாம். இவ்விடேசணம் எதன் இயைபையும் நீக்காது, தன் தொடர்பை மட்டும் காட்டும். இது இரண்டாவது வகையான விசேடணம்.

அரசன் கொற்றக்குடைக்கீழ் இருந்து ஆள்பவன் என்பர். அவன்குடை வெண்குடை எனப்படும். இக்குடையொடு தொடர்புடைய நிறம் வெண்மை என்பது. அரசன் குடையை வெண்குடை என்பதல்லது செங்குடை கருங்குடை என்னும் வழக்கில்லை. அதனால் வெண்குடை என்றே கூறப்படும். இதில் உள்ள வெண்மை என்பது குடைக்குரிய இயைபை மட்டும் காட்டும். அக்குடைக்குச் செம்மை கருமை என்னும் நிறம் கூறப்படாமையால் அக்குடையுடன் இயையும் பிறநிறங்களின் இயைபை நீக்க வேண்டியதில்லை; ஆதலின் வெண்குடை என்பதன் வெண்மை இயைபுண்மை விசேடணம் எனப்படும். இவ்வியைபுண்மை விசேடணத்தை இயைபின்மை நீக்கிய விசேடணம் என்றனர். ஏன்?

முதல்வகை விசேடணத்தை இயைபு நீக்கிய விசேடணம் என்றமையால் — அதாவது ஒருபொருளோடு பிறிதொரு பொருளுக்குள்ளதொடர்பைநீக்கிய விசேடணம்என்றமையால்— பிறிதின் இயைபு நீக்கிய விசேடணம் என்றமையால்—விசேடணம் என்பது, இயைபு நீக்கும் தன்மையது எனப்பெறப்படுகின்றது. அப்படியானால் வெண் குடை என்பதில் வெண்மை என்னும் விசேடணம் எதை நீக்கும் என்ற வினா எழும். அதற்கு விடையாக இயைபு இன்மையை நீக்கும் என்பது போதரும். ஆதலின் இயைபுண்மை விசேடணத்தை இயைபின்மை நீக்கிய விசேடணம் என்றனர்.

இவ்விருவகை விசேடணங்களுள் பன்மை சுட்டிய பெயர் என்பதன் விசேடணம் தன்னோடியையின்மை நீக்கிய விசேடணமாம். பன்மை சுட்டிய பெயர் என்றதனால் ஒருமை சுட்டிய பெயர் என்பது நீக்கப்படல் வேண்டும். யானை என்பதைப் பன்மை சுட்டிய பெயர் என்னும் போது ஒருமை சுட்டிய பெயராக யானை கூறப்படாததால் ஒருமைசுட்டுதலை நீக்கும் நிலை, 'பன்மை சுட்டிய' என்னும் விசேடணத்துக்கில்லை; பன்மை சுட்டுதலை மாத்திரம் குறித்து நிற்கிறது. அதனால் இயைபின்மை நீக்கிய விசேடணமாகும் அது.

இனிப் 'பன்மை சுட்டிய பெயர்' எனக் கூறப்பட்டதன் காரணத்தைப் பின்வருமாறு கூறுவாரும் உளர்.

அஃறிணை ஒன்றன்பால், அஃறிணைப் பலவின் பால், உயர் திணை ஆண்பால், உயர்திணைப் பெண் பால் என்னும் பல பால்களுக்கும் வருதலின் பால்பகா அஃறிணை 'பன்மை சுட்டிய பெயர்' எனப்பட்டது.

பன்மை சுட்டிய பெயர் நான்கு பால்களைச் சுட்டி வருகின்றது. ஒருமை சுட்டிய பெயர் ஆண், பெண், ஒன்று என்னும் மூன்று பால்களையும், ஆண்மை சுட்டிய பெயர் உயர்திணை ஆண் அஃறிணை ஆண் என்னும் இரண்டினையும், பெண்மை சுட்டிய பெயர் உயர்திணைப் பெண் அஃறிணைப் பெண் என்னும் இரண்டினையும் சுட்டி வருகின்றன. எனவே, இம்மூன்றையும் நோக்க நான்கு சுட்டி வருப் பெயர் பன்மை சுட்டிய பெயர் எனப்பட்டது என்பது அவர் கருத்து.

மூன்றும் இரண்டும் சுட்டும் பெயர்கள் சின்மை சுட்டிய பெயர் எனக் கூறப்பட்டிருந்தால் நான்கைச் சுட்டும் பெயர் பன்மை சுட்டிய பெயர் எனப்பட்டது எண்ணலாம். அவ்வாறு கூறப்படாமையின், சின்மை சுட்டுதலை விலக்காமையின் பன்மை சுட்டிய பெயர் என்பது இயைபின்மை நீக்கிய விசேடண மாகும்.

இதுவரை கூறியவற்றிலிருந்து இச்சூத்திரத்தில் பன்மை சுட்டிய பெயர் என்பது (1) உயர்திணைப் பன்மை அஃறிணைப் பன்மை என்னும் இரண்டனுள் அஃறிணைப் பன்மையை மட்டில் குறிக்கும் என்றும் (2) அதுவும் பால் பகா அஃறிணையாக இருந்து பன்மையைக் குறிக்கும் என்றும், (3) பால் பகா அஃறிணைப் பெயர் ஒன்றன்பாற்கும் பலவின்பாற்கும் பொது வாயினும் ஒன்றன் பாலை விட்டுப் பலவின் பாலையே குறிக்கும் என்றும் (4) அவ்வாறு குறிப்பினும் 'பன்மை சுட்டிய' என்னும் அடைமொழி பிறிது ஒன்றையும் நீக்காமையின் பன்மை சுட்டு தலாகிய இயைபு மட்டில் காட்டி நிற்றலின் இயைபின்மை நீக்கிய விசேடணம் என்றும் (5) அப்பன்மை சுட்டிய பெயரே அஃறிணை ஒன்றன் பால் பலவின் பாலுக்கும் உயர்திணை ஆண்பால் பெண்பாலுக்கும் வழங்கும் என்றும் அறியலாம். உ—ம்: யானை வந்தது, வந்தன, வந்தான், வந்தாள்.

ஒருமை சுட்டிய பெயர்

**180.** **ஒருமை சுட்டிய வெல்லாப் பெயரு**
**மொன்றற்கு மொருவர்க்கு மொன்றிய நிலையே** (29)

(ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவர்க்கும் ஒன்றிய நிலை ஏ)

## ஆ. மொ: இல.

**All the nouns which denote singular belong to neuter singular and high class singular.**

## பி. இ. நூ:

**முத்து. பெ. 37**

ஒருமையைக் குறித்த ஒருமுப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவர்க்கும் உரிய வாகும்.

## இளம்.

உரை : ஒருமை சுட்டி வரும் மூன்று பெயரும் அஃறிணை ஒருமைக்கும் உயர்திணை ஒருமைக்கும் உரிய, எ-று.

அம்மூன்றுமாவன : ஒருமையியற்பெயர், ஒருமைச் சினைப் பெயர், ஒருமைச் சினைமுதற் பெயரும் ஆம்.

வ-று : கோதை வந்தது, கோதை வந்தான், கோதை வந்தாள் எனவும்; செவியிலி வந்தது, செவியிலி வந்தான், செவியிலி வந்தாள் எனவும், கொடும்புற மருதி வந்தது, கொடும் புற மருதி வந்தான்; கொடும்புற மருதி வந்தாள் எனவும் முறையே அஃறிணை ஒருமைக்கும் உயர்திணை ஒருமைக்கும் உரியவாய வந்தவாறு கண்டு கொள்க.

## சேனா.

இ-ள் ; ஒருமை சுட்டி வரும் மூன்று பெயரும், அஃறிணை ஒருமைக்கும் உயர்திணை ஒருமைக்கும் உரிய, எ-று.

அம்மூன்றுமாவன ஒருமை யியற்பெயரும், ஒருமைச் சினைப் பெயரும், ஒருமைச் சினை முதற் பெயருமாம்.

உ-ம் : கோதை வந்தது, கோதை வந்தான், கோதை வந் தாள் எனவும்; செவியிலி வந்தது, செவியிலி வந்தான், செவியிலி வந்தாள் எனவும்; கொடும்புற மருதி வந்தது, கொடும்புற மருதி வந்தான், கொடும்புற மருதி வந்தாள் எனவும் அவை முறை யானே அஃறிணை ஒருமைக்கும் உயர்திணை ஒருமைக்கும் வந்த வந்தவாறு கண்டு கொள்க.

பெண்மைப் பெயரும் ஆண்மைப்பெயரும் ஒருமை உணர்த்து மாயினும், இவைபெண்மை ஆண்மையென்னும் வேறுபாடுணர்த் தாது ஒருமையுணர்த்தலான், இவற்றை ஒருமைப் பெயர் என் றார்.

**தெய்.**

ஒருமை குறித்த பெயர் திணை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : ஒருமையைக் குறித்த எல்லாப் பெயரும் அஃறிணை ஒருமைக்கும் உயர்திணை ஆண்பாற்கும் பெண்பாற்கும் ஒத்த நிலைமைய. எ-று.

உ-ம் : கோதை வந்தது: கையிழந்தது, செவியிலி வந்தது, என அஃறிணை ஒருமையுணர்த்தின. கோதை வந்தாள், கையிழந்தாள், செவியிலி வந்தாள் என உயர்திணைப் பெண் பாலாயின. கோதை வந்தான், கையிழந்தான், செவியிலி வந் தான் என உயர்திணை ஆண்பால் உணர்த்தின. கையிழந்தன என அஃறிணைப் பன்மையும் உணர்த்துமால் எனின் ,அவ்வாறு வருவன சினை வினையுங் காட்டும். திரிபின்றிவரும் உதாரணம் வந்தவழிக் கண்டு கொள்க.

**நச்.**

இஃது ஒருமைப்பெயர் எல்லாவற்றையுந் தொகுத்துத் திணைக்கு உரிமை கூறுகின்றது.

இ-ள்: ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்—ஒருமையைக் கருதி வரும் ஒருமையியற்பெயரும் ஒருமைச்சினைப்பெயரும் ஒருமைச்சினை முதற்பெயரும், ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே—அஃறிணை ஒருமைக்கும் உயர்திணை ஒருமைக்கும் பொருந்திய நிலைமையை உடையனவாம், எ-று.

உ-ம்: கோதை வந்தது—வந்தான்—வந்தாள்; செவியிலி வந்தது—வந்தான்—வந்தாள்; கொடும்புறமருதி வந்தது—வந் தான்—வந்தாள் என்வரும்!

பெண்மைப் பெயரும் ஆண்மைப் பெயரும் ஒருமையும் உணர்ததுமாயினும், இவை பெண்மை ஆண்மை என்னும் வேறுபாடு உணர்த்தாத ஒருமை உணர்த்தலின் இவற்றை 'ஒருமைப் பெயர்' என்றார்.

**கல்.**

என்-எனின், ஒருமைப்பெயர் எல்லாவற்றையும் தொகுத்துத் திணைக்குரியவாமா றுணர்த்தல் நுதலிற்று.

இ-ள்: ஒருமையைக் கருதின எல்லாப் பெயரும் அஃறிணை யுள் ஒன்றற்கும உயர்திணையுள் ஒருவர்க்கும் நிற்றல் பொருந்தின, எ-று.

ஒருமைப்பெயர் ஒருமை யியற்பெயரும், ஒருமைச் சினைப் பெயரும், ஒருமைச் சினை முதற்பெயரும் என மூன்று வகைப் படும்.

உ-ம்: ஒருமை யியற்பெயர்: கோதை வந்தது, வந்தான், வந் தாள் எனவரும்.

ஒருமைச் சினைப்பெயர்: செவியிலி வந்தது, வந்தான், வந்தாள் எனவரும்.

ஒருமைச் சினைமுதற் பெயர்: கொடும்புற மருதி வந்தது, வந்தான், வந்தாள் எனவரும்.

## ஆதி.

ஆண்பால் குறித்த (இயல் சினை முதல்) பெயர்கள் எல்லாம் அஃறிணை ஒருமைக்கும் உயர்திணை ஒருமைக்கும் பொருந்தும்.

கொம்பன் வந்துவிட்டான்—உயர்திணை
கொம்பன் வந்துவிட்டது—அஃறிணை
மயிலை வந்திருக்கிறாள்—உயர்திணை
மயிலை வண்டியில் போனது—அஃறிணை
கோதை வந்தான்—உயர்திணை
கோதை வந்தாள்—உயர்திணை
கோதை அணிந்து நின்றார்—அஃறிணை

### தாம்.

181. தாமென் கிளவி பன்மைக் குரித்தே. (30)

(தாம்என் கிளவி பன்மைக்கு உரித்து ஏ).

## ஆ. மொ: இல.

The word 'thām' belongs to plural.

## பி. இ. நூ.

முத்து. பெ. 38
தாம் எனும் ஒரு பெயர் பன்மைக் குரிய.

## இளம்.

இச் சூத்திரம் என்னுதலிற்றோவெனின், தத்தம் மரபின (பெய. 21) எனப்பட்ட பெயர் இருபாற்கும் உரியவாய் வரு மாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை : தாம் என்னும் பெயர் இருதிணைக்கும் பன்மைப் பாற்கு உரித்து, எ-று.

வ-று : தாம் வந்தார், தாம் வந்தன என வரும்.

## சேனா.

தத்தமரபின (பெய. 21) எனப்பட்ட பெயர் பாற்குரிய வாய் வருமா றுணர்த்துகின்றார்:

இ-ள் : தாம் என்னும் பெயர் இருதிணைக்கண்ணும் பன்மைப்பாற்கு உரித்து, எ-று.

உ-ம் : தாம் வந்தார், தாம் வந்தன எனவரும்.

## தெய்.

தாம் என்னும் சொல் திணை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : தாம் என்பது இருதிணைப் பன்மைக்கும் உரித்து, எ-று.

உ-ம் : தாம் வந்தார் என உயர்திணையாயிற்று. தாம் வந்தன என அஃறிணை யாயிற்று.

## நச்.

இது தாம் என்னும் பெயர் இருதிணைக்கும் உரித்தாமாறு உணர்த்துகின்றது.

இ-ள் : தாம் என் கிளவி பன்மைக்கு உரித்தே — தாம் என்னும் பெயர் இருதிணைக்கண்ணும் பன்மைப்பாற்கு உரித்து, எ-று.

உ-ம் : தாம் வந்தார், தாம் வந்தன என வரும்.

## கல்.

என்-எனின், தாம் என்பது திணைக்குரித்தாமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள் : தாம் என்பது இருதிணைப் பன்மைக்கும் உரித்து, எ-று.

உ-ம் : தாம் வந்தார், தாம் வந்தன என வரும்.

வாளாது பன்மை என்றமையின் ஆண் பன்மையும் பெண் பன்மையும் எனக் கொள்க.

ஆதி.

உ-ம் : * அவர்கள்தாம் செய்தனர் — உயர்திணைப் பன்மை.
அவைகள்தாம் பறந்தன — அஃறிணைப் பன்மை.

தான்.

182. தானென் கிளவி யொருமைக் குரித்தே. (31)

(தான் என் கிளவி ஒருமைக்கு உரித்து ஏ)

ஆ. மொ: இல.

The word 'thān' belongs to singular.

பி.இ.நூ:

முத்து. பெ. 39.

தான் எனும் ஒரு பெயர் ஒருமைக் குரிய.

இளம்.

உரை : தான் என்னும் பெயர் இருதிணைக்கண்ணும் ஒருமைப் பாற்கு உரித்து, எ-று.

வ-று : தான் வந்தான், தான் வந்தாள், தான் வந்தது என வரும்.

சேனா.

இ-ள் : தான் என்னும் பெயர் இருதிணைக்கண்ணும் ஒருமைப்பாற்கு உரித்து, எ-று.

உ-ம் : தான் வந்தான், தான் வந்தாள், தான் வந்தது என வரும்.

தெய்.

தான் என்னும் சொல் திணை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : தான் என்னுஞ் சொல் இருதிணைக்கண்ணும் ஒருமைக்கு உரித்து, எ-று.

---

* அவர்கள்தாம் செய்தனர் என்றால் பிறர் செய்திலர் அவர்களே செய்தனர் என்னும் பொருள்பட்டுத் தாம் எள்பது இடைச்சொல்லாகும். அதனால் தாம் செய்தனர் என்பதே பொருந்தும், அவைகள்தாம் என்பதும் பொருந்தாது.—சிவ,

உ-ம் : தான் வந்தான், தான் வந்தாள் என உயர்திணை ஒருமை உணர்த்திற்று. தான் வந்தது என அஃறிணை ஒருமை உணர்த்திற்று.

**நச்.**

இது தான் என்பது இருதிணைக்கும் உரித்தாமாறு கூறுகின்றது.

இ—ள் : தான் என் கிளவி ஒருமைக்கு உரித்தே—தான் என்னும் பெயர் இருதிணைக் கண்ணும் ஒருமைப்பாற்கு உரித்து, எ-று.

உ-ம் : தான் வந்தான், தான் வந்தாள், தான் வந்தது என வரும்.

**கல்.**

என்-எனின், தான் என்னும் சொல் திணைக் குரித்தாமாறுணர்த்தல் நுதலிற்று.

இ-ள் : தான் என்னும் சொல் இருதிணை ஒருமைக்கும் உரித்து எ-று.

உ.ம் : தான் வந்தது, தான் வந்தான், தான் வந்தாள் என வரும்,

வாளாதே ஒருமை என்றமையின் பெண்பால் மேலும் ஆண்பால் மேலும் கொள்க.

**ஆதி.**

தான் என்னும் சொல் ஒருமையோடு வருவது.

§உ-ம் ; அவன் தான் நன்கு பேசுவான்—உயர்திணை.
அவள் தான் நன்கு பாடுவாள்—உயர்திணை.
அது தான் நல்லது—அஃறிணை;

**பி. கு.**

**செ. வை. சண்முகம்.**

தான் தாம் இரண்டும் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் உரித்து என்று மட்டுமே கூறியுள்ளார். அப்படியானால் பல

---

§ இவ்வுதாரணங்களில் தான் என்பது தெளிவுப்பொருளில் வந்தது. (அவன் பேசுவான்—அவனே தான் தன்கு நன்கு பேசுவான்) ஆதலின் இடைச் சொல்லாகும். பெயர்ச் சொல்லாகாது. உரையாளர் காட்டிய உதாரணங்களே நல்லன—சிவ.

பொருள் ஒரு சொல்லாகக் கருதவேண்டுமா என்ற சந்தேகம் வருகிறது. எல்லா உரையாசிரியர்களும் இந்த முறையிலேயே உரையெழுதியுள்ளார்கள். ஆயினும் இந்த சொற்களைப் பல பொருள் ஒரு சொல் என்று கூற முடியாது. இவை திணைபால் பாகுபாட்டுக்குள் அடங்கி ஒன்றுக்கு மேற்பட்டனவற்றிற்குப் பொதுவாய் வருவன. யார் என்ற சொல் உயர்திணை மூன்று பாலுக்கும் பொதுவாக வருவதுபோல எண் அடிப்படையில் இரண்டு திணையிலும் ஒருமைக்கும் பன்மைக்கும் வருவனஇவை. இரண்டுதிணையிலும் வருவதால் விரவுப் பெயராகக் கருதப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பல பொருள் ஒரு சொல்லாகக் கொள்ள முடியாது. ஏன்எனில் இவை இரண்டு திணையிலும் வரும்போது பொருள் மாறுபடுவதில்லை. அப்படியே பல்பொருள் ஒரு சொல்லாகவும் கருதமுடியாது. ஏன்எனில் எல்லா இடத்திலும் படர்க்கைப் பன்மைப் பதிலீட்டுப் பெயர் என்றும், படர்க்கைப் பன்மைப் பதிலீட்டுப் பெயர் என்றும் பொதுப் பொருளேயுடையன, (விரவுத்திணை, மொழியியல், பக் 41, 42. 1983)

சு. நடராசன்

இந்த இரண்டு பெயர்களும் (தாம், தான்), தன்மை, முன்னிலையில் உள்ள நான், நாம், நீ, நீர் என்பனவற்றுக்கு இணையாக ஆண், பெண், பாலற்ற படர்க்கைப் பெயர்களாக முன்பு இருந்தன போலும். தொல்காப்பியர், 'தாமென் கிளவி பன்மைக் குரித்தே' 'தானென் கிளவி ஒருமைக் குரித்தே' என்று கூறும் பொழுது இந்த நிலையைத் தான் குறிப்பிடுகிறார். இந்த சூத்திரத்திற்கு விளக்கம் கூறிய உரையாசிரியர்கள் தாம் வந்தார், தாம் வந்தன, தான் வந்தான், தான் வந்தாள், தான் வந்தது'' என்று இருதினை ஐம்பால் வினைகளுடன் வரும் படர்க்கைப் பெயராகவே காட்டியுள்ளனர். ஆனால் இந்த ஆட்சி இப்பொழுது இல்லை. இக்கால இலக்கியத்தில் இந்த சொற்களுக்கு மூன்று நிலைகள் இருக்கின்றன. (1) எதிரொலிப் பெயர் (2) அசைச் சொல் (3) அசைப் பெயர்

எதிரொலிப் பெயராக வரும் பொழுது எல்லா வேற்றுமைகளிலும் வரும். எழுவாயாக வரும் போது 'ஏ' அசை ஏற்று வரும். அவன் தானே செய்தான், குகன் தன்னை அறிமுகப் படுத்தினான், தன்னால் உதவ முடியும், தன்னொடு தங்க வேண்டும், தனக்கு இராமன் நட்பு வேண்டும் என்று கூறினான் என்று எல்லா வேற்றுமை யுருபுகளும் ஏற்று வரும்.

அசை நிலையாக வரும் போது தேற்றப் பொருளில் வருகிறது, கூட வரும் பெயருக்கு அழுத்தம் கொடுக்கிறது. பெயர்ச்

சொல் அல்லவாதலின் வேற்றுமை ஏற்காது. கூட வரும் பெயர் தான் வேற்றுமை ஏற்கும் — அவனைத்தான் பார்த்தேன், அவனோடு தான் போனேன், அவனுக்குத்தான் கொடுப்பேன் என்று வரும்.

மூன்றாவதாக அமைந்த அசைப் பெயர் அதிகமாக ஆட்சி கிடையாது. இந்த நிலையில் அசையாக நின்று இணைந்த பெயருக்கு அழுத்தம் கொடுப்பதுடன், இவைகளே வேற்றுமை உருபையும் ஏற்றும் அழுத்தம் அதிகமாகக் கொடுக்கின்றன. "ஒருமகள் தன்னையுடையேன்" (பெரியாழ்வார்) "தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னை" (மாணிக்க வாசகர்) சாதாரண இலக்கியத்தில் இவைகள், 'ஒருமகனைத்தான் உடையேன்' என்றும், 'தந்தது உன்னைத்தான் கொண்டது என்னைத்தான்' என்றும் வர வேண்டும். ஆனால் சிறந்த இலக்கிய கர்த்தாக்கள் இவைகளை அசைப் பெயர்களாகவே மாற்றியுள்ளனர். (இலக்கணத்தில் புதிய சிந்தனைகள் (பக். 43, 44) தேவி பிரஸ், தூத்துக்குடி ஆண்டு?)

எல்லாம்

**183. எல்லா மென்னும் பெயர்நிலைக் கிளவி**
**பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே** (32)

(எல்லாம் என்னும் பெயர்நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்து ஆகும் ஏ)

**ஆ. மொ: இல.**

The word 'ellām' stands where plural sense is intended to be denoted.

**பி. இ. நூ:**

**முத்து. பெ. 40**

எல்லாம் என்பது இருதிணைப் பன்மைப்
பெயரொடு நிலையும் பெற்றித் தாகும்.

**இளம்.**

உரை :- எல்லாம் என்னும் பெயர் இரண்டு திணைக் கண்ணும் பன்மை குறித்து வரும், எ-று.

---

1. இச்சூத்திரத்தையும் அடுத்த சூத்திரத்தையும் ஒரே சூத்திரமாகக் கொள்வர் தெய்வச்சிலையார்.

வழி என்பது இடம்.

வ-று : எல்லாம் வந்தேம், எல்லாம் லந்தீர், எல்லாம் வந்தார், எல்லாம் வந்தன என வரும்.

## சேனா.

இ-ள் : எல்லாம் என்னும் பெயர் இரண்டு திணைக்கண்ணும் பன்மை குறித்து வரும், எ-று.

வழி என்றது இடம். பொருள் சொல் நிகழ்தற்கிடமாகலிற் பல் பொருளைப் பல்வழி என்றார்.

உ-ம்; எல்லாம் வந்தேம், எல்லாம் வந்தீர், எல்லாம் வந்தார் எல்லாம் வந்தன எனவரும்.

எல்லாம் என்னும் பெயர் இரண்டு திணைக்கண்ணும்பன்மை குறித்து வரும் என்னாது 'பல்வழி' என்றது, 'மேனியெல்லாம் பசலையாயிற்று' என ஒரு பொருளின் பலவிடங்குறித்து நிற்றலு முடைத்தென்பதூஉம் கோடற்குப் போலும். [1]அஃது எஞ்சாப் பொருட்டாய் வருவதோர் உரிச்சொல் என்பாரும் உளர்.

## தெய்.

(இச்சூத்திரத்தையும் அடுத்த சூத்திரத்தையும் ஒரு சூத்திர மாகக் கொள்வர். ஆதலின் அடுத்த சூத்திரத்து இவர் உரை காண்க.

## நச்.

இஃது எல்லாம் என்பது திணைக்கு உரித்தாமாறு கூறு கின்றது.

இ-ள்: எல்லாம் என்னும் பெயர் நிலைக்கிளவி—எல்லாம் என்னும் பெயராகிய நிலைமையையுடைய சொல், பல்வழி நுதலிய நிலைத்து ஆகும்மே—இருதிணைக் கண்ணும் பன்மை இடத்தைக் கருதின நிலைமைத்தாய் வரும், எ-று.

உ-ம்: எல்லாம் வந்தேம், வந்தீர், வந்தார், வந்தன என வரும்.

'மேனியெல்லாம் பசலையாயிற்று' என்பது எஞ்சாப் பொருட்டு ஆயதோர் உரிச்சொல்.

---

1. அஃது—மேனியெல்லாம் என்பதில் உள்ள எல்லாம் என்பது. பின்னர் வந்த நச்சினார்க்கினியரும் உரிச் சொல் என்றே கொண்டனர்.

கல்.

என்-எனின், எல்லாம் என்னும் சொல் திணைக்கு உரித்தா மாறு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள்: எல்லாம் என்று சொல்லப்படும்பெயராகியநிலைமையை யுடைய சொல் இருதிணைப் பன்மையிடத்தையும் கருதிய நிலைமைத்தாகும், எ-று,

உ-ம், எல்லாம் வந்தார், எல்லாம் வந்தீர், எல்லாம் வந்தன, எல்லாம் வந்தேம் எனவரும்.

வாளா பன்மை என்றமையின் இரண்டிடத்தும் ஆண்பன்மை யும் பெண் பன்மையும் கொள்க.

வென்.

இ-ள்: எல்லாம் என்னும் பெயர் இருதிணைக்கண்ணும் பன்மை குறித்து வரும், எ-று,

வழி என்றது இடம். பல்வழி ஈண்டுப் பன்மை என்னும் பொருளிற் பயின்றது. சொல் நிகழ்ச்சிக்குப்பொருள்இடமாகலின் பன்மைப் பொருளைப் பல்வழி எனக்குறித்தார் ஆசிரியர்.

உ-ம்: எல்லாம் வந்தேம், எல்லாம் வந்தீர், எல்லாம் வந் தார், எல்லாம் வந்தன எனவரும்.

எல்லாம் என்னும் சொல் 'மேனியெல்லாம் பசலையாயிற்று' என ஒரு பொருளின் பலவிடங்குறித்து நிற்றலையும் தழீஇக் கோடற்குப் பல்வழி நுதலிய நிலைத்தாகும் என்றார் எனவும், எல்லாம் என்னும் சொல் எஞ்சாமைப் பொருளில் வருவதோர் உரிச்சொல் எனவும் கூறுவாரும் உளர்.

ஆதி.

எல்லாம் என்னும் சொல் இருதிணையிலும் பன்மையோடு வரும்.

| | | |
|---|---|---|
| உ-ம்: | நாங்கள் எல்லாம் வந்தோம் — பன்மை | |
| | அவர்கள் எல்லாம் வந்தார்கள் ,, | |
| | நீங்கள் எல்லாம் வந்தீர்கள் ,, | |
| | உடம்பு எல்லாம் புண் ,, | அஃறிணை |

**184.** **தன்னு ளுறுத்த பன்மைக் கல்ல**
**துயர்திணை மருங்கி னாக்க மில்லை** (33)

(தன்னுள் உறுத்த பன்மைக்கு அல்லது
உயர்திணை மருங்கின் ஆக்கம் இல்லை)

ஆ. மொ: இல.

When denoting high class it ('ellām') belongs to the fiirst peresn only

## இளம்.

உரை; எல்லாம் என்னும் சொல் உயர்திணைக்கு ஆங்கால் தன்மைப் பன்மைக்கல்லது முன்னிலைப்பன்மைக்கும் படர்க்கைப் பன்மைக்கும் ஆகாது, எ-று.

'ஆக்கமில்லை' எனவே சிறுபான்மை வரப்பெறும்.

## சேனா.

இ-ள்: எல்லாம் என்னும்சொல் உயர்திணைக்காங்கால், தன்மைப் பன்மைக்கல்லது முன்னிலைப்பன்மைக்கும் படர்க்கைப் பன்மைக்கும் ஆகாது, எ-று.

[1] "நெறிதாழ் இருங்கூந்தல் நின்பெண்டிர் எல்லாம்" (கலித். 97) எனப் படர்க்கைக் கண்ணும் வந்ததால் எனின், எழுத்ததிகாரத்துள் "உயர்திணையாயின் நம்மிடை வருமே" (உருபி. 18) எனத் தன்மைக்கேற்ற சாரியை கூறினமையானும், ஈண்டு நியமித்தலானும் அஃது இடவழு வமைதியாம் என்பது.

தன்மைச் சொல் அஃறிணைக் கின்மையின், எல்லாம் என்பது பொதுமையிற் பிரிந்து தன்னுள்ளுறுத்த பன்மைக்கண் வந்துழி உயர்திணையீற்றுப் பெயர் எனப்படினும், இருதிணைப் பன்மையும் உணர்த்துதற்கு ஏற்றுப் பொதுப் பிரியாது நின்றவழி விரவுப் பெயர் ஆதற்கு இழுக்கு இன்மையறிக.

எல்லாப் பார்ப்பாரும், எல்லாச் சான்றாரும் எனப் படர்க்கைக் கண் வருதலும் கோடற்குத் தன்னுள்ளுறுத்த பன்மைக் காங்கால் உயர்திணை மருங்கின் அல்லாது ஆகாதென 'மொழி

---

1. இளம்பூரணர் உரை சேனாவரையர் உரை இரண்டும் ஒரே தொடர் அமைப்புடையன. அதனால் உரையாசிரியர் மொழி மாற்றியுரைத்தார் என்றது இளம்பூரணர் உரையையன்று, உரையாசிரியர் உரையையே என்க; இதுபற்றி, சுந்தரமூர்த்தி கூறுவது வருமாறு— "இளம்பூரணர் உரை இந்நூற்பாவிற்கு இல்லை. சேனாவரையர் உரையேயுளது. சேனாவரையர் இளம்பூரணர் உரையை எடுத்து மறுப்பதன் மூலம் இதற்கு

மாற்றி உரைத்தாரால் உரையாசிரியர் எனின், படர்க்கைக்கண் வருதல் இடவழுவமைதி என்றவழிப் படும் இழுக்கின்மையானும் ''தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவி'' (கிளவி. 43) எனவும், ''யான் யாம் நாம் என வரூஉம் பெயர்'' (பெய. 8) எனவும் பிறாண்டும் ஓதியவற்றால் தன்மைச் சொல் அஃறிணைக்கின்மை பெறப்படுதலின் ஈண்டுக் கூறல் வேண்டாமையானும், எழுத்ததி காரத்துள் ''உயர்திணையாயின் நம்மிடை வருமே'' (உருபி. 18) எனத் தன்மைக்குரிய சாரியையே கூறலானும் அது போலியுரை என்க.

ஈண்டு ஆக்கம் பெருக்கம். 'பெருக்கம் இல்லை' எனவே சிறு பான்மை ஏனையிடத்திற்கும் உரித்தாம் [2]என்பாரும் உளர்.

## தெய்.

(எல்லாம் என்னும் பெயர்நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே
தன்னுள் உறுத்த பன்மைக் கல்லது
உயர்திணை மருங்கின் ஆக்கம் இல்லை)

எல்லாம் எனனுஞ் சொல் திணை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: எல்லாம் என்னும் பெயர் இருதிணைக்கண்ணும் பன்மை குறித்த நிலைமைத்து; அஃது உயர்திணைக்கண் உளப் பாட்டுத் தன்மைக்கண் அல்லது, முன்னிலை படர்க்கையின் ஆகுதல் இல்லை, எ—று.

உ-ம்: எல்லாம் வந்தன, எல்லாம் வந்தீர் என்றவழி அஃறிணைப் படர்க்கையினும் முன்னிலையினும் வந்தது. எல்லாம் வந்தேம் என்றவழி உயர்திணை ஆயிற்று.

---

இளம்பூரணர் கூறிய உரை வேறாகும் எனத்தெரிகிறது. அவர் கருத்தின்படி இளம்பூரணர் உரை வருமாறு: எல்லாம் என்னும் சொல் தன்மைப் பன்மைக்கு வரும் பொழுது உயர்திணைக்கு மட்டுமே வரும் என்பது''. இவர் உரையாசிரியரும் இளம்பூரணரும் ஒருவரே எனக் கொண்டு இவ்வாறு எழுதினார். பல சூத்திரங்களில் இளம்பூரணர் உரையும் சேனாவரையர் உரையும் ஒரே தொடர் அமைப்புடையன காணலாம்.

2. இளம்பூரணர், பின்வந்த நச்சினார்க்கினியர்.

அஃதேல், ''நெறிதாழ் இருங்கூந்தல் நின் பெண்டிர் எல்லாம்'' (கலி. 97) என உயர்திணைப் படர்க்கையினும், ''நீயி எல்லாம் விளையாடப் போதுமின்'' என முன்னிலையிலும் வருமால் எனின், அவை இலக்கண வழக்கல்ல.

'நின் பெண்டிர் எல்லாரும்' என்னும் சொல் எல்லாம் எனவும், 'நீங்கள் எல்லீரும்' என்பது எல்லாம் எனவும் மரூஉ வழக்காகி வந்தன. [3]மரூஉ வழக்கு நீக்கப்படாது என்பது எழுத்ததிகாரத்து மொழிப்புணர்ச்சிக் கூறுகின்றுழி, மரூஉ முடிபு எனஎடுத்தோதினமையாற் கொள்ளப்படும். இலக்கண வழக்காயின் வரும் குற்றம் என்னையெனின், ஈண்டு விலக்கினமையானும், உயர் திணைக்கண் எல்லாரும் எல்லீரும் என எடுத்தோதி ஆண்டுத் தன்மைப்பெயர் ஓதாமையானும், எழுத்ததிகாரத்துள் எல்லாம் என்னும் பெயர்க்கு வற்றுச் சாரியை விதித்து ''உயர்திணையாயின் நம்மிடை வரும்'' (உருபி. 18) என ஆண்டும் உளப் பாட்டுத் தன்மைக்கேற்ற சாரியை வரும் என விதித்தமையானும், இப்பெயர்உயர் திணைக்கண் உளப்பாட்டுத் தன்மைக்கே உரித்து என்பது இவ்வாசிரியர் கருத்தென்று கொள்க. இதனைச் செய்யுள் மருங்கினும் (எச்ச 67) என்னும் அதிகாரப் புறனடையாற் பிறநூல் முடிபு எனத் தழீஇக் கோடலுமாம்.

நச்.

இஃது எய்தியதுஒரு மருங்கின் மறுக்கின்றது.

இ—ள்: தன் உள்ளுறுத்த பன்மைக்கு அல்லது ஆக்கம் இல்லை— எல்லாம் என்னும்சொல் உயர்திணைக் கண் வருங்கால் தன்மைப் பன்மைக்கல்லது பெரும்பான்மை வாராது, எ-று.

எனவே, சிறுபான்மை முன்னிலைப்பன்மைக்கும் படர்க்கைப் பன்மைக்கும் வருமாயிற்று.

---

3. தொகைமரபு 30, உயிர் மயங்கியல் 48, 49, புள்ளி மய்ங்கியல் 60 ஆம் சூத்திரங்களில் மரூஉ முடிபுகள் கூறப்பட்டுள்ளன.

[4] உ-ம் : ''கண்டனிர் எல்லாம் கதுமென வந்தாங்கே
பண்டறி யாதீர் போல நோக்குதிர்'' (கலி. 40)

''ஊடினீர் எல்லாம் உருவிலான் தன்னாணை
கூடுமின் என்று குயில் சாற்ற'' (சிலப். 8 இறுதி)

என முன்னிலைக் கண்ணும்,

''நெறிதாழ் இருங்கூந்தல் நின்பெண்டிர் எல்லாம்
சிறுபாக ராக'' (கலி. 97)

எனப் படர்க்கைக் கண்ணும் வந்தன.

**கல்.**

என்-எனின், எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ-ள் : மூன்றிடத்தும் இருதிணை மேலும் சென்றமையின் தன்மையிடத்து அஃறிணைக் கண் ஆகாது என்றமையான், எல்லாம் என்னும் சொல், சொல்லுவான் தனை உள்ளுறுத்து அஃது அஃறிணை மொழி கூறாமையின் அஃறிணைத் தன்மைப் பன்மைக்கு உயர்திணை யிடத்தல்லது அஃறிணையிடத்து ஆகுதல் இல்லை, எ-று.

உயர்திணை மருங்குன் அல்லது என மொழி மாற்றிக் கொள்க.

உ-ம் : எல்லாம் உண்டும் என்பது.

மற்று இஃது அஃறிணை மொழி கூறாமையின் அஃறிணைத் தன்மை இல்லை என்பது பெறுதும் ஆகவின் இதுகூறல் வேண்டா எனின், மேல் 'பல்வழி நுதலிய நிலைத்தாகும்' (32) என அதற்கு விதி சென்றமையின் அது விலக்கல் வேண்டும் என்பது.

---

4. பொருள் : ''என்னைக் கண்ட நீங்கள் எல்லாம் கடுக வந்து அவ்வூரிடத்து என்னைப் பண்டுஅறியாதீர்போலப் பாரா நின்றீர்''

''உலகில் ஒருவனும் ஒருத்தியுமாய் உள்ளோரில் ஊடினவர்களே ! நீயிர் எல்லாம், மன்மதன் தரும் ஆணையிது : கூடி மகிழ்மின் என்று குயிற்கூட்டம் பறை சாற்ற''

''கருமணல் தங்கியது போலும் கரிய கூந்தலையுடைய நின் பெண்டிர் எல்லாரும்.........யானை மீது ஏற மாட்டாத சிறுமையுடைய பாகராக.''

மற்று 'எல்லாம் உண்டும்' என்ற தன்மைக்கண் வருகின்ற வரவினை உயர்திணைப் பெயராக வேறு ஓதற்பாற்று எனின், எல்லாம் என்பது போல உயர்திணைக்கே யுரித்தானது முன்னிலைக் கண்ணும் படர்க்கைக் கண்ணும் விரவா நிற்றலின் ஈண்டேயோத இன்னுழி வரவின்றி உயர்திணைப் பெயராம் என்றவாறு.

**சுப்.**

இச்சூத்திர வுரையிற்சேனாவரையர் "எல்லாப் பார்ப்பாரும் எல்லாச் சான்றோரும் எனப் படர்க்கைக் கண் வருதலும் கோடற்குத், தன்னுள் ளுறுத்த பன்மைக் காங்கால், உயர்திணை மருங்கின் அல்லது ஆகாது என மொழி மாற்றியுரைத்தாரால் உரையாசிரியர் எனின்......அஃது போலியுரை யென்க" என்றார் இளம்பூரணம் நமச்சிவாயமுதலியாா பதிப்பின் உரையில் சேனா வரையர் கொடுத்துள்ள பொருளே காண்கிறது. சேனாவரையர் மறுப்பை நோக்கின் "தன்னுள் ளுறுத்த பன்மைக் காங்கால், உயர்திணை மருங்கின் அல்லது ஆகாது" என்றே இளம்பூரணத் தில் இருத்தல் வேண்டும் எனத் தோற்றுகின்றது.

நீயிர், நீ

**185.** **நீயிர் நீயென வரூஉங் கிளவி**
**பாறெரி பிலவே யுடன்மொழிப் பொருள** (34)

(நீயிர் நீயென வரூஉம் கிளவி
பால் தெரிபு இலவே உடன்மொழிப் பொருள)

**ஆ. மொ: இல.**

The words '**n̲ῑyir**' and '**n̲ῑ**' without being able to denote classes, belong to both classes.

**பி. இ. நூ:**

**முத்து. பெ.** *41*,

நீயிர் நீபால் தெளிவிலவாம் என்ப

**இளம்.**

உரை : நீயிர் நீ என்னும் இரண்டு பெயர்ச் சொல்லும் திணைப் பகுதி தெரிய நில்லா, இருதிணையும் உடன் தோன்றும் பொருள; எ-று.

நீயிர் வந்தீர், நீ வந்தாய் என இருதிணைக்கும் பொதுவாய் நின்றவாறு கண்டு கொள்க.

## சேனா.

இ-ள் : நீயிர் நீ என்னும் இரண்டு பெயர்ச் சொல்லும் திணைப்பகுதி தெரிய நில்லா: இருதிணையும் உடன்தோன்றும் பொருள, எ-று.

'உடன்மொழிப் பொருள' என்றது, இருதிணைப் பொருளும் ஒருங்குவரத் தோன்றும் என்றவாறு; பிரித்து ஒருதிணைவிளக்கா என்றவாறு.

உ-ம்: நீயிர் வந்தீர், நீ வந்தாய் என இருதிணைக்கும் பொதுவாய் நின்றவாறு கண்டு கொள்க.

இருதிணைக்கும் உரிய பெயரெல்லாம் [1]தத்த மரபின் வினையொடு வந்து திணை விளக்குமன்றே? இவற்றிற்கு அன்ன வினையின்மையின் ஒருவாற்றானுந் திணை விளக்காமையின் 'பால் தெரி பிலவேயுடன் மொழிப்பொருள்' என்றார்.

## தெய்.

நீயிர் நீ என்னும் பெயர்க்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: நீயிர் நீ என்னும் பெயர் திணையும் பாலும் விளங்க நில்லா; இருதிணையையும் உடன் உணர்த்தும் பொருண்மையுடைய, எ-று.

திணையுணர்த்துமோர் சொல்லின்மையின் பால் எனவே திணையும் அடங்கும்.

## நச்.

இது நீயிர் நீ என்பனவற்றைத் திணைக்கு உரிமை கூறுகின்றது.

இ-ள்: நீயிர் நீ என வருஉங்கிளவி—நீயிர் எனவும் நீ எனவும் வரும் பெயர்ச் சொற்கள், பால் தெரிபு இலவே உடன் மொழிப் பொருள—திணைப்பகுதி தெரிய நில்லா இருதிணைப் பொருளும் ஒருங்கு தோன்றுதலைப் பொருண்மையாகவுடைய, எ—று.

---

1. உயர்திணைக்கும் அஃறிணைக்கும் உரிய பதினோரீற்றுப் படர்க்கை வினை.

உ-ம்: நீயிர் வந்தீர், நீ வந்தாய் என வினையானும் திணை தெரியாமை காண்க. இவற்றிற்குத் தத்தம் மரபின் வினை இன்று.

கல்.

என்-எனின், நீயிர் நீ என்பனவற்றைத் திணைக்கு உரித்தா மாறு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள்: நீயிர் எனவும் நீ எனவும் வரூஉம் சொற்கள் திணை தெரிபில, உயர்திணையாயும் அஃறிணையாயும் உடன் உணர்த் தலைப் பொருண்மையாக வுடைய, எ—று.

மற்றுத் திணை தெரியாமையின் அன்றே விரவுப் பெய ராயது? இது சொல்ல வேண்டுமோ எனின், மேல் விரவுப் பெயர் களைத் "தத்தம் வினையோ டல்லது பால் தெரிபிலவே" (பெய. 18) என்றமையின் இவையும், தத்தம் மரபின் திணை யான் உணரற்பாடு சென்றமை க்ண்டு இவை முன்னிலைப் பெய ராகலின் இவற்றுக்கு வரும் முன்னிலை வினையும் விரவாவாக லான் எய்தியது விலக்குதற்குக் கூறினார் என்பது.

உ-ம்: நீயிர் வந்தீர், நீ வந்தாய் என்பன; திணை கண்டு கொள்க.

ஆதி.

நீயிர் நீ இரு சொற்களும் பால்காட்டா; ஆண் பெண் இரண்டுக்கும் ஒருங்கே அமைந்து பொருள் தருவன.

உ-ம்: தம்பி நீ என்ன செய்தாய்—ஆண்
தங்காய் நீ படித்தாயா? —பெண்
அம்மா நீர் எங்கு செல்கிறீர் —பெண்
அண்ணா நீர் இங்கு வாரும் —ஆண்

***186. அவற்றுள்**
**நீயென் கிளவி யொருமைக் குரித்தே** (35)

(அவற்றுள்
நீ என் கிளவி ஒருமைக்கு உரித்து ஏ)

---

* இதனையும் அடுத்த சூத்திரத்தையும் ஒரு சூத்திரமாகக் கொள்வர் தெய்வச்சிலையார்.

ஆ. மொ: இல.

Of these
The word 'n̲ī' belongs to singular

பி. இ. நூ:

முத்து. பெ. 42

அவற்றுள்
நீயெள் கிளவி ஒருமைக் குரிய

இளம்,

உரை : மேற்சொல்லப்பட்ட இரண்டு பெயருள் நீ என்னும் பெயர் ஒருமைக்கு உரித்து, எ-று

ஒருமையாவது: ஒருவன் ஒருத்தி ஒன்று என்பனவற்றிற் கெல்லாம் பொதுவாகிய ஒருமை.

நீ வந்தாய் எனக் கண்டுகொள்க.

சேனா.

இ-ள்: மேற்சொல்லப்பட்ட இரண்டு பெயருள் நீ என்னும் பெயர் ஒருமைக்கு உரித்து, எ-று.

ஒருமையாவது: ஒருவன் ஒருத்தி ஒன்று என்பனவற்றிற் கெல்லாம் பொதுவாகிய ஒருமை.

உ-ம் : நீ வந்தாய் என வந்தவாறு கண்டு கொள்க.

தெய்.

(உரை அடுத்த சூத்திரத்தில் காண்க.)

நச்.

இது நீ என்பது பாற்கு உரித்தாமாறு கூறுகின்றது.

இ-ள்: அவற்றுள் நீஎன் கிளவி ஒருமைக்கு உரித்தே—முற் கூறிய இரண்டு பெயருள் நீ என்னும் பெயர் ஒருவன் ஒருத்தி ஒன்று என்பனவற்றிற் கெல்லாம் பொதுவாகிய ஒருமைக்கு உரித்தாம், எ-று.

உ-ம்: நீ வந்தாய் எனவரும்.

கல்.

என்-எனின், நீ என்னும் சொல் பாற்கு உரித்தாமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள் : இவ்விரண்டனுள்ளும் நீ என்னும் சொல் இருதிணை முன்னிலை ஒருமைக் குரித்தாம், எ-று.

உ-ம்: நீ வந்தாய் என வரும்.

இது இருபாற்கும் உரித்தாயவாறு கண்டு கொள்க. அஃறிணைக்கண்ணும் பெண் ஒருமைக்கண்ணும் ஆண் ஒருமைக் கண்ணும் கொள்க.

**187. ஏனைக்கிளவி பன்மைக் குரித்தே** (36)
(ஏனைக்கிளவி பன்மைக்கு உரித்து ஏ)

**ஆ. மொ: இல.**
The other (n̲īyir) belongs to plural

**பி. இ. நூ:**

**முத்து. பெ. 43.**
நீயிர் எனும்பெயர் பன்மையொடு நிலையும்

**நன். 285.**
தன்மை யான்நான் யாம்நாம் முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ
அல்லன படர்க்கை எல்லாம் எனல்பொது

**இல. 187.** ஷை ஷை

**நன். 287.**
தான்யாள் நான்நீ ஒருமை பன்மைதாம்
யாம் நாம் எலாம் எலீர் நீயிர் நீர் நீவிர்

**இல. 189.** ஷை ஷை

**இளம்.**

உரை : நீயிர் என்னும் பெயர் பன்மைக்கு உரித்து, எ-று.

பன்மையாவது பல்லோர்க்கும் பலவற்றிற்கும் பொதுவாகிய பன்மை. நீயிர் வந்தீர் எனக் கண்டுகொள்க.

**சேனா.**

இ-ள் : நீயிர் என்னும் பெயர் பன்மைக்கு உரித்து, எ-று.

பன்மையாவது பல்லோர்க்கும் பலவற்றிற்கும் பொது வாகிய பன்மை.

உ-ம் : நீயிர் வந்தீர் என வந்தவாறு கண்டு கொள்க,

'எல்லாம் நீயிர் நீ' (பெய. 20) என வோதியவா றன்றி, ஒருமைபன்மை யென்னும் முறைபற்றி யீண்டு நீ என்பதனைமுற் கூறினார். அன்றி, முந்து மொழிந்ததன் தலை தடுமாற்றம் என்னும் தந்திரவுத்தி எனினும் அமையும்.

நீயிர் நீ என இருதிணை ஐம்பாலுள் ஒன்றனை வரைந் துணர்த்தலாயினும், ஒருமை பன்மை யென்னும் பொருள் வேறு பாடுடையவென வரையறைப் படுவழி, வரையறுத்தவாறு.

## தெய்.

(அவற்றுள்
நீயென் கிளவி ஒருமைக் குரித்தே
ஏனைக் கிளவி பன்மைக் குரித்தே)

மேலதற்கோர் புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : நீ என்னுப் பெயர் இருதிணைக் கண்ணும் ஒருமை விளக்குதற்கு உரித்து: நீயிர் என்னும் பெயர். பன்மை விளக்கு தற்கு உரித்து, எ-று.

உ-ம் ; நீ வந்தாய், நீயிர் வந்தீர் என்ற வழிப் பால் விளங் காது ஒருமை பன்மை விளங்கியவாறு கண்டு கொள்க.

அன்ன பிறவாற் கொள்ளப்படுவன : முதியான் என்பது பிராயம் பற்றி வரும். அதுமுதியான் வந்தது, முதியான்வந்தான் என வரும். சுமையான் என்பது தொழில் பற்றி வந்தது. சுமை யான் வந்தது, சுமையான் வந்தான் எனவரும், பிறவும் அன்ன.

## நச்.

இது நீயிர் என்பது பாற்கு உரித்தாமாறு கூறுகின்றது.

இ-ள் : ஏனைக் கிளவி பன்மைக்கு உரித்தே—ஒழிந்த நீயிர் என்னும் பெயர் பல்லோர்க்கும் பலவற்றிற்கும் பொதுவாகிய பன்மைக்கு உரித்தாம், எ—று.

உ-ம் : நீயிர் வந்தீர் எனவரும்.

கல்.

என்-எனின், நீயிர் என்னும் சொல் இருதிணைப் பன்மைக்கும் உரித்தாமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள் : எஞ்சி நின்ற நீயிர் என்னும் சொல் இருதிணைப் பன்மைக்கும் உரித்தாம், எ-று.

உ-ம் : நீயிர் வந்தீர் என உயர்திணைப் பலர் மேலும் அஃறிணைப் பலவற்றின் மேலும் வந்தவாறு கண்டு கொள்க,

ஈண்டும் அஃறிணைப் பெண்பன்மையினையும் ஆண் பன்மையினையும் உயர்திணைப் பெண் பன்மையினையும் ஆண் பன்மையினையும் கொள்க......பெயர் ஆராய்ச்சியெனக் கொள்க.

ஆதி.

மற்றதாகிய நீயிர் என்னும் சொல் பன்மைக்கு உரியதாகும்,
நீயிர் வந்தீர்—நீர் வந்தீர்
நீங்கள் வந்தீர்கள்.

ஒருவர்

188. ஒருவ ரென்னும் பெயர்நிலைக் கிளவி
யிருபாற்கு முரித்தே தெரியுங் காலை. (37)

(ஒருவர் என்னும் பெயர் நிலைக் கிளவி
இருபாற்கும் உரித்துஏ தெரியும் காலை)

ஆ. மொ: இல.

The word 'oruvar' belongs to both
genders (masculine and feminine)

பி. இ. நூ:

அடுத்த சூத்திரத்துக் காண்க.

இளம்.

உரை : ஒருவர் என்னும் பெயர்ச்சொல் உயர்திணைப் பாலுள் ஒருபால் விளக்கா; ஒருவன் ஒருத்தி என்னும் இருபாற்கும் பொதுவாய் நிற்கும், எ-று.

வ-று : ஒருவர் வந்தார் என்பது பொதுவாய் நின்றவாறு கண்டு கொள்க.

இருபாற்கும் உரித்து என்னும் உம்மை முற்றும்மை,

சேனா.

இ-ள் : மேல் (பெய. 11) இன்றிவ ரென்னும் எண்ணியற் பெயரென்றோதப்பட்டவற்றுள், ஒருவர்என்னும் பெயர்ச்சொல் உயர்திணை முப்பாலுள் ஒருபால் விளக்காது, ஒருவன் ஒருத்தி என்னும் இருபாற்கும் பொதுவாய் நிற்கும், எ-று.

உ-ம் ; ஒருவர் வந்தார் எனப் பொதுவாய் நின்றவாறு கண்டு கொள்க.

இருபாற்கும் எனப் [1]பொதுப்படக் கூறினாரேனும், ஒருவர் என்னும் ஒருமைப் பெயரான் உணர்த்தப் படுதற் கேற்பன ஒருவன் ஒருத்தி என்பனவே யாகலான் அவையே கொள்ளப் படும். உயர்திணை யொருமைப்பால் இரண்டென்றறியப் பட்டமையான் இருபாற்கும் உரித்தென்னும் உம்மை முற்றும்மை.

[2]உயர்திணைப் பெயராயினும் பாலுணர்த்தாமையும் முன்னத்தாலுணர்த்தலும் இதற்கும் ஒக்குமாகலின் ஈண்டுக் கூறினார் என்பது.

தெய்.

உயர்திணைப் பொருட்கண் விரவுப் பெயர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : ஒருவர் என்று சொல்லப்படுகின்ற பெயர்ச் சொல் உயர்திணைக்கண் ஆண்பாற்கும் பெண்பாற்கும் உரித்து ஆராயுங் காலத்து, எ-று.

---

1. அஃறிணை உயர்திணையென்னாமல் பொதுவாகக் கூறினாரேனும்.
2. இசசூத்திரம் உயர்திணை ஆண் பெண் பால்களுக்குப் பொதுவான ஒருவர் பற்றியது. இதன் முன்னர் உள்ள சூத்திரங்கள் இரு திணைக்கும் பொதுவான பெயர்கள் பற்றியன· ஆதலின் இச்சூத்திரம் உயர்திணைப் பெயர்கள் பற்றிய சூத்திரங்களின் இறுதியில் ''அன்ன பிறவும்'' (பெயரியல் 12) என்னும் சூத்திரத்தின் பின்னர் வைக்கப்படல் வேண்டுவது. இருதிணைப் பொதுப் பெயர்கள் பற்றிய சூத்திரங்கனில் சேர வைப்பானேன்? என்னும் வினாவிற்கு விடையிது.

நச்.

இஃது உயர்திணை யதிகாரத்தின் ஒழிபு கூறுகின்றது. இது பொதுவாய் நிற்றலின், ஈண்டுக் கூறினார்.

இ-ள் : ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி — மேல் 'இன்றிவர் என்னும் எண்ணியற் பெயர்' (பெய. 11) என்றவற்றுள் ஒருவர் என்னும் பெயர் நிலைமையையுடைய சொல், தெரியுங்காலை இருபாற்கும் உரித்தே — ஆராயுங் காலத்து உயர்திணைப்பாலுள் ஒருபால் உணர்த்தாது ஒருவன் ஒருத்தி என்னும் இருபாற்கும் பொதுவாய் நிற்கும், எ-று.

உ-ம் : ஒருவர் வந்தார் என வரும்.

கல்.

என்-எனின், உயர்திணை அதிகாரத்தின் ஒழிபு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள்: ஒருவர் என்று சொல்லப்படுகின்ற பெயர்நிலையுடைய சொல் உயர்திணை ஆண்பாலும் பெண்பாலுமாகிய இருபாற்கும் உரிமையுடைத்து ஆராயுங்காலத்து, எ-று.

உ-ம்: ஒருவர் வந்தார் என்றால் இருபாற்கும் உரித்தெனக் கொள்க.

'இருபாற்கும் உரித்து' என்பது [3]ஒரு சொல்லதன் கண்ணேயோ எனின், [4]ஒன்று சொல்லுதற்கண்ணே எனக் கொள்க. மற்று இருவரைக் கூறும் பன்மைக் கிளவி எனவும் பிறவும் இருபாலினையும் ஒருகாலே தழுவியும் வருமால் எனின், ஆண்டுச் சொல்லிற்படுவது ஒருபாலே; மற்றைப்பால்...பாற் பெறப்படுகின்றது எனக் கொள்க. மற்று இருபால் என்றால் பன்மையொழிந்த இருபாலும் என்பது யாங்ஙனம் பெறுதும் எனின், ஒருவர் என நின்ற ஒருமை வாய்பாட்டான் பன்மை நீங்கிற்று எனக் கொள்க.

பாலதிகாரத்தே சொல்லாது ஈண்டுச் சொல்லியது என்னை எனின், ஒருபாற் குரித்தாகாது விரவி வருகின்ற நீர்மையால் ஈண்டுப் போந்தது எனக் கொள்க.

---

3. ஒரு சொல்லதன் கண்ணேயோ—ஒருவர் என்னும் இவ்வொரு சொல்லிலேயா

4. ஒன்று சொல்லுதற்கண்ணே - ஏதேனும் ஒரு பாலை (ஆண் அல்லது பெண்)ச் சொல்லுமிடத்தே.

ஆதி.

உ-ம்: ஒருவர் வேட்டையாடுகிறார் —ஆண்
ஒருவர் கோலம் போடுகிறார் —பெண்

(ஒருவன் ஒருத்தி என்பன சிறப்பாக ஒருவர் என்று கூறப்படுகின்றது)

பி. கு.

"உயர்திணைப் பெயராயினும்...ஈண்டுக்கூறினார் என்பது" என்னும் சேனாவரையர் கூற்றை யொட்டிப் பூவராகம்பிள்ளை எழுதுவதாவது:-

"அங்ஙனமாயின், "தெரிநிலையுடைய அஃறிணையியற் பெயர்" (பெய. 17) என்ற அஃறிணைப் பொதுப் பெயர் பற்றிய சூத்திரத்தையும் இங்கு வைக்கலாமே; அதனை அஃறிணையியற் பெயர் கூறப்பட்டவிடத்தே கூறியதென்னையெனின், அஃறிணையியற்பெயர் அத்திணையிருபாற்கும் பொதுப்பெயராயினும், வினை வந்தவிடத்து ஒருமைப்பன்மைப் பிரிவு உணர்த்தும்; ஒருவர் என்ற இச்சொல் வினையினாலும் ஆண் பெண் பிரிவு உணர்த்தாது; சொல்வான் குறிப்பினாலேயே உணரப்படுவது; ஆதலால் அஃறிணை யியற்பெயரை அஃறிணைப்பெயர் கூறப்பட்ட விடத்தே வைத்து, ஒருவர் என்பது பற்றிய இச்சூத்திரத்தை இங்கு வைத்தார் எனக் கொள்ளலாம்.

**189.** **தன்மை சுட்டின் பன்மைக் காகும்.** (38)

(தன்மை சுட்டின் பன்மைக்கு ஆகும்)

ஆ. மொ: இல.

When denoting its nature, it belongs to plural (verb)$

பி. இ. நூ:

நன். 289.

ஒருவர் என்பது உயர்இரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப.

---

$ Though 'oruvar' denotes a single person, it must end in plural verb in conformity which its suffix 'ar' which belongs to epicane plural—இல.

**இல. 191.**

ஒருவர் என்பது உயர்இரு பாற்றாய்ப்
பன்மையொடு முடியும் பாங்கிற் றென்ப.

**முத்து. பெ. 44**

ஒருவர் என்பது உயர்இரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்க.

## இளம்.

உரை : ஒருவர் என்னும் பெயரது இயல்பு கருதின் அஃது ஒருமைப் பெயராயினும் பல்லோரறியும் சொல்லொடு தொடர் தற்கு ஏற்கும், எ-று.

வ-று: ஒருவர் வந்தார், ஒருவர் அவர் எனவரும்.

## சேனா.

இ-ள்: ஒருவர் என்னும் பெயரது இயல்பு கருதின் அஃது ஒருமைப் பெயராயினும், பல்லோர் அறியும் சொல்லொடு தொடர்தற்கு ஏற்கும், எ-று.

உ-ம்: ஒருவர் வந்தார், ஒருவர் அவர் எனவரும்.

ஒருமைப்பெயர் பன்மை கொள்ளாதாயினும் இது வழு வமைதி யிலக்கணம் என்பது அறிவித்தற்குத் 'தன்மை சுட்டின்' என்றார்.

## தெய்.

மேலதற்கோர் முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ஒருவர் என்னும் பெயரின் தன்மையைக் கருதில் பன்மை வினைகோடற்குப் பொருந்தும், எ-று.

உ-ம்: ஒருவர் வந்தார்.

## நச்.

இஃது ஒருவர் என்பதன் முடிபு கூறுகின்றது.

இ-ள்: தன்மை சுட்டின்—முற்கூறிய ஒருவர் என்னுஞ்சொல் முடியுந்தன்மையைக் கருதில், பன்மைக்கு ஏற்கும்—தான் காட்டு கின்ற பொருண்மைக்கு ஏற்ப ஒருமைச்சொல்லோடு முடியாது ரகர ஈற்றதாய் நின்ற சொல்தன்மைக்கு ஏற்பப் பன்மைச்சொல் பெற்று முடியும், எ-று.

உ-ம்: ஒருவர் வந்தார், ஒருவர் அவர். இதுபால்பற்றிய மரபு வழுவமைதி.

**கல்.**

என்-எனின், இஃது ஒருவர் என்னும் சொற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: முற்கூறிய ஒருவர் என்னும் சொல்லினது சொல் முடியுந் தன்மையைக்கருதில், தான்காட்டுகின்ற பொருண்மைக்கு ஏற்ப ஒருமைச் சொல்லொடு முடியாது ஒருவர் என ரகர ஈற்ற தாய் நின்ற அச்சொல் தன்மைக்கு ஏற்பப் பன்மைச்சொல் கொண்டு முடியும், எ-று.

உ-ம்: ஒருவர் வந்தார் எனவரும்.

இதுவும் ஓர் பால்பற்றிய மரபு வழுவமைதி எனக்கொள்க.

**ஆதி.**

தகுதி (சிறப்பு) சுட்டி நிற்பின் (ஒருவன் ஒருத்தி) பன்மை யாக விகுதி பெற்று (ஒருவர் என) நிற்கும்.

ஒருவன் வந்தான்—ஒருவர் வந்தார்.
ஒருத்தி பாடினாள்—ஒருவர் பாடினார்.

ஒருவர் பெருந்தன்மையைக் குறிப்பின் அது பன்மைக்கு ஏற்புடைத்து என்றும் கூற இடம் உண்டு.

**190.** **இன்ன பெயரே யிவை யெனல் வேண்டின்**
**முன்னஞ் சேர்த்தி முறையி னுணர்தல்** (39)

(இன்ன பெயர்ஏ இவை எனல் வேண்டின்
முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல்)

**ஆ. மொ. இல.**

If we want to know the genders of those,
it is to be understood from the context.

**பி. இ. நூ:**

**முத்து. பெ. 45.**

இன்ன பெயரே இவையெனல் வேண்டின்
முன்னம் சேர்த்தி முறையான் உணர்க.

## இளம்.

உரை: நீயிர், நீ, ஒருவர் என்பனவற்றை இன்ன பாற் பெயர் என்று அறியலுறின் சொல்லுவான் குறிப்பொடுங் கூட்டி முறையால் உணர்க, எ-று.

வ-று: ஒரு சாத்தன் ஒருவனானும் ஒருத்தியானும் பலரானும் ஒன்றானும் பலவானும் தன்னுழைச் சென்றவழி 'நீ வந்தாய், நீயிர் வந்தீர்' என்னுமன்றே: ஆண்டு அது கேட்டான், இவன் இன்னபால் கருதிக் கூறினான் என்பது உணரும். இனி, [1]'ஒருவர் ஒருவரைச் சார்ந்தொழுக லாற்றின்' (நாலடி. 309) என்பது சொல்லுவான் ஆடூஉ ஒருமை குறித்தான் என்பது விளங்கும்.

ஏகாரம் தேற்றேகாரம். 'முறையின் உணர்தல்' என்பது பாதுகாவல்.

## சேனா.

இ-ள்: நீயிர் நீ ஒருவர் என்பனவற்றை இன்னபாற் பெயர் என்று அறியலுறின், சொல்லுவான் குறிப்பொடு கூட்டி முறையான் உணர்க, எ-று.

உ-ம்: ஒருசாத்தன், ஒருவனானும் ஒருத்தியானும் பலரானும் ஒன்றானும் பலவானும் தன்னுழைச் சென்றவழி, 'நீ வந்தாய், நீயிர் வந்தீர்' என்னுமன்றே? ஆண்டு அது கேட்டான் இவன் இன்ன பால் கருதிக் கூறினான் என்பது உணரும்.

இனி 'ஒருவர் ஒருவரைச் சார்ந்து. ஒழுகலாற்றின் (நாலடி. 309) என்றவழிச் [1]சொல்லுவானொடு கேட்டான் [2]இவன் ஆடூஉ ஒருமை குறித்தான் என விளங்கும். பிறவுமன்ன.

---

1. பொருள்: "ஒருவர் மற்றொருவரிடத்துச்சென்று அவர் நினைவின் படி நடக்க வல்லராய் அவர் மனம் கொள்ளும் படி நடத்தலைச் செய்யின்."
1. "சொல்லுவானொடு ...... விளங்கும்' என்பது 'சொல்லுவான் ஒருமை குறித்தான் என்பது கேட்டான் உணரும்' என்றிருப்பதுபொருத்தம்—பூவராகம்பிள்ளை சொல்லுவானோடு என்பதற்குச் 'சொல்லுவான் கருத்தொடு பொருந்த' எனப் பொருள் கொண்டால் இருப்பதே அமையும் — சிவ.
2. இவன் ஒருமை குறித்தான் பாடம்.

இனி இடமும் காலமும் பற்றிப் பால் விளங்கும் வழியும் அறிந்து கொள்க. ஏகாரம் தேற்றேகாரம். 'முறையின் உணர்தல்' என்பது பாதுகாவல்.

தெய்.

பெயரானும் வினையானும் பால் அறியப்படாத சொற்கள் பால் விளங்குமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள் : நீவிர் நீ ஒருவர் என்று சொல்லப்பட்ட பெயர்கள் இன்னபாற்குரிய என்று அறிய வேண்டின் சொல்லுவான் குறிப்பினோடு சேர்த்தி அவற்றின் [3]பின்வரும் சொல்லால் உணர்க, எ-று.

'முன்னம் சேர்த்தி முறையின் உணர்க' என்றமையால் குறிப்பினாலும் முறையினாலும் உணர்க என்றவாறாகக் கொள்க.

உ-ம் : 'நீயும் தவறிலை நின்னைப் புறங்கடைப் போதர விட்ட நுமரும் தவறிலர்' (கலி. 56) என்றவழி, நீ என்பது [1] பெண்பால் உணர நின்றது.

''நீயே பிறர்நாடு கொள்ளுங்காலை'' (புறம். 57) என்ற வழி [2] ஆண்பால் உணரப்பட்டது.

''எம்போல் இன்துணைப் பிரிந்தாரை உடையையோ நீ'' (கலி. நெய். 12) என்ற வழி [3] அஃறிணை என்பது உணரப்பட்டது. இவை குறிப்பினான் உணர நின்றன.

நீ அரசன், நீ குயத்தி, நீ கடல் என்பன முறைவந்த சொல்லினால் பால் விளங்கின.

நீயிர் என்பதற்கும் இவ்வாறே உதாரணம் வந்த வழிக் கண்டு கொள்க.

'ஒருவர் ஒருவரைச் சார்ந்து ஒழுகல் ஆற்றி வழிபடுதல் வல்லுதல் அல்லால்' என்ற வழி ஆண்பால் உணர நின்றது.

---

3. முறையின் என்பதற்கு முறையே (பின்னே) வருஞ் சொல் என்பது பொருள்.

1. தலைவி 2. அரசன்

3. கடல்

[4] 'வண்டுசுழல வருவார் ஒருவரைக் கண்டு கலங்கிற்று உயிர்' என்பது பெண்பால் உணர நின்றது. இவை குறிப்பி னான் உணர நின்றன.

[5] ஆயிழையார் ஒருவர், அயில்வேலார் ஒருவர் என்பவை சார்ந்த சொல்லாற் பாலுணரப்பட்டன. பிறவு மன்ன.

நச்.

இது நீயிர் நீ ஒருவர் என்பனவற்றிற்கு இலக்கணம் கூறு கின்றது.

இ-ள் : இன்ன பெயரே இவை எனல் வேண்டின் — நீயிர் நீ ஒருவர் என்பன இன்ன பாற் பெயர் என்று அறியலுறின், முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல் — இடமும் காலமும் பற்றிச் சொல்லுவான் குறிப்போடு கூட்டி மேல் ஓதின முறை யானே திணையும் பாலும் உணர்க, எ-று.

உ-ம் : விலங்கு வாராததோர் இடத்திருந்து நீயிர் வந்தீர் நீ வந்தாய் என்றால் உயர்திணை எனவும்; மக்கள் வாராத தோர் இடத்திருந்து அங்ஙனங் கூறினால் அஃறிணை எனவும் உணரப்படும்.

'நீயும் தவறிலை நின்னைப் புறங்கடை' (கலி.56) என்ற வழிப் பெண்பால் என்பதூஉம், 'நீயே பிறர் நாடு கொள்ளுங் காலை' (புறம். 57) என்ற வழி ஆண்பால் என்பதூஉம், 'இன் துணைப் பிரிந்தாரை உடையையோ நீ' (கலி. 126.) என்ற வழி அஃறிணை என்பதூஉம் உணரப்படும். ஒருவர் ஒருவரைச் சார்ந்தொழுகல் ஆற்றின் (நாலடி. 309) என்ற வழிச் சொல்லு வானொடு கேட்டான் ஆடூஉ ஒருமை குறித்தான் என்பது விளங்கும்.

---

4. வண்டு சுற்றும்படியாக வருவார் ஒரு பெண். கூந்தலில் மலர் பெய்து வந்தமையால் தேன் உண்ண வண்டுகள் சுழன்றன என்பதால் ஒருவர் என்பது பெண்பாலாயிற்று.
5. ஆயிழை — ஆய்ந்த அணிகலம். அணிகலம் அணிபவர் பெண்டிர் ஆதலின் ஒருவர் பெண்பாலாயிற்று. கூரிய வேலுடையார் ஆடவராதலின் ஒருவர் ஆண்பாலா யிற்று.

**கல்.**

என்-எனின், இவ்வொருவர் என்னும் சொற்கும் மேற்கூறிய நீயிர் நீ என்னும் சொற்கட்கும் எய்தியதோர் இலக்கணம் உணர்த்தல் நுதலிற்று.

இ-ள் : நீயிர் நீ என்னும் இவை இரண்டும் உயர்திணைக் குரித்து, அஃறிணைக் குரித்து என்றும், ஒருவர் என்பது ஆண் பாற் குரித்து பெண்பாற் குரித்து என்றும் பால் தெரிய நில்லாமையின், அவை ஈண்டு இன்ன பெயர் என்பது அறியல் வேண்டின் அச் சொற்களைக் கூறுவான் கருத்தினை அச்சொற்களோடு சேர்த்தி, நீயிர் நீ எனவும், ஒருவர் எனவும் மேலோதிய முறையானே திணையும் பாலும் உணர்ந்து கொள்க, எ-று.

விலங்கு வருதற் பாலது அல்லதோர் வழியிருந்து 'நீயிர் வந்தீர்' என்றானும், 'நீவந்தாய்' என்றானும் கூறின், ஈண்டு உயர்திணையெனவும்; இனி மக்கள் இல்வழி இருந்து அவை கூறின் அஃறிணை யெனவும்; இனிக் காட்டுக்கண் புகுதல்போகா நின்றுழி, 'ஒருவர் புகுந்தார், எனின் ஆண்பால் எனவும்; ஆண் மக்கள் புகுதற்பாலது அல்வழி 'ஒருவர் இருந்தார்' எனின் பெண் பால் எனவும் இடமும் காலமுமாகிய முன்னத்தான் உணர்ந்த வாறு கண்டு கொள்க.

மற்று இஃது அதிகாரத்தான் ஒருவர் என்னும் சொற்கே கூறியதன்றோ? நீயிர் நீ என்பதனையும் உடன் கூட்டியுரைத்த வாறு என்னையெனின், பன்மை கூறிய அதனானும் ஏற்புழிக் கோடல் என்பதனானும் இம்மூன்றற்குங் கொள்ளப்பட்டது.

**ஆதி.**

இப்பெயர்கள் இப்பாலன என விளக்கவேண்டின், குறிப்பு மொழிகள் சேர்த்துள்ள அம்முறையால் உணர்தல் வேண்டும்.

ஒருவர் ஆடுகின்றார்—ஒருவர்—ஆண் பெண் பொது.
சிலம்பு ஒலிக்க ஒருவர் ஆடுகின்றார்—பெண்
மீசையை முறுக்கி ஒருவர் ஆடுகின்றார்—ஆண்

ஒருவரின் தோளும் மற்றொருவரின் மார்பும் ஓங்கி விளக்க முறல் அழகு—இவர்கள் யார்? முன்னத்தின் உணர்க.

**பி. கு.**

**சிவ.**

முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல் என்பதற்கு இளம் பூரணரும் சேனாவரையரும், "சொல்லுவான் குறிப்பொடுங்

கூட்டி முறையால் உணர்க'' என்று பொருள் கூறி, ''ஒருவனுழை ஒருவன் வந்தவழி 'நீவந்தாய்' என்னும் போது நேரிலேயே பார்த்தலின் அதனைக் கேட்டவன் (படர்க்கையான்) முன்னின்றானை நீ என்றலின் நீ என்பது உயர்திணையையும் ஆண்பாலையும் குறிக்கும் என உணர்வான்'' என உதாரணமும் காட்டினர்.

நச்சினார்க்கினியர் ''இடமும் காலமும் பற்றிச் சொல்லு வான் குறிப்போடு கூட்டி மேல் ஓதின முறையானே திணையும் பாலும் உணர்க'' என்றார். இவர் இடம் என்றது தன்மை முன்னிலை படர்க்கை என்னும் இடம் அன்றி நிலமாகிய இடம் எனக்கொண்டு 'விலங்குவாராததோர் இடத்திருந்து நீயிர் வந்தீர் நீ வந்தாய் என்றால் உயர்திணை...என உணரப்படும்'... என்னும் உதாரணம் காட்டினார். காலம் பற்றிய குறிப்புக்கு அவர் காட்டிய உதாரணங்கள் காலத் தெளிவுடன் இல்லை. எனினும் சொன்னவனின் கருத்து நேரம் (சந்தர்ப்பம்) எனக் கொள்ளலாம். நச்சினார்க்கினியர் கூறிய இடமும் காலமும் பற்றிக் குறிப்பால் திணைபால் உணரப்படும் என்ற கருத்தைச் சேனாவரையர், 'இடமும் காலமும் பற்றிப் பால் விளங்கும் வழி யும் அறிந்து கொள்க' என்று பின்னர்க் குறித்தார். எல்லாக் குறிப்பும் இடமும் காலமும் பற்றியே வருமாதலின் நச்கினார்க் கினியர் கூறியதே பொருந்தும். கல்லாடனார் நன்கு விளக்கமாக ''விலங்கு வருதற்பாலது...முன்னத்தான் உணர்ந்தவாறு கண்டு கொள்க'' எனக்காட்டிய உதாரணங்கள் மிகப்பொருத்தமுடை யன.

இனித் தெய்வச்சிலையார் 'முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல்' என்றமையால் குறிப்பினாலும் முறையினாலும் உணர்க என்றவாறாகக் கொள்க'' என்றெழுதினார். குறிப்பி னால் உணர்வதற்கும் முறையினால் உணர்வதற்கும் தனித்தனி உதாரணங்கள் காட்டினார். முறை என்பதற்குப் பின்னர் வரும் சொல் எனப் பொருள் கொண்டார். அதனால் ''நீ அரசன் நீ குயத்தி, நீ கடல் என்பன முறை (பின்) வந்த சொல்லினால்பால் விளங்கின'' என்றார். அரசன், குயத்தி, கடல் என்பன நீ என்ப தைத் தத்தம் பாலுக்குரியதாக வெளிப்படுத்தலின் குறிப்பைக் கொண்டு உணர்தல் வேண்டுவதில்லையாதலின் முறை என்ப தற்குப் பின்வரும் சொல் எனத் தெய்வச்சிலையார் கொண்ட பொருள் சிறப்புடைத்தன்று.

இனி 'நிகழூஉ நின்ற பலர்வரை கிளவி' (பெய 19) என்னும் சூத்திரக் கருத்தையும் நாம் இங்கு இணைத்துக் கொள்ளலாம்.

அதாவது யாழ்எழூஉதல், சாந்தரைத்தல் போலும் சிறப்பு வினைகளால் பால்திணை அறியலாம் எனக் கொள்ளலாம். சாத்தன் என்னும் காளை மாடும், அதனை மேய்க்கும் சாத்தன் என்னும் பெயருடையவனும் ஒருங்கிருந்த வழி, ஒரு தலைவன் சாத்தா நீ மேய்க்கப்போ என்றால் சாத்தன் என்பது ஆண்பாலையும், சாத்தா நீ மேயப்போ என்றால் அது அஃறிணை ஒன்றன்பாலையும் உணர்த்துதலை உணர்வதும் முன்னஞ்சேர்த்தி முறையின் உணர்தலேயாம். மேய்த்தலும் மேய்தலும் ஆகிய வினைகள் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் தனித்தனி உரியன.

பெண் மகன்

**191.** **மகடூஉ மருங்கின் பாறிரி கிளவி**
**மகடூஉ வியற்கை தொழில்வயி னான** (40)

(மகடூஉ மருங்கின் பால்திரிகிளவி
மகடூஉ இயற்கை தொழில்வயின் ஆன)

**ஆ. மொ. இல.**

The word which deviates from its masculine from by denoting feminine gender stands in the nature of feminine while having predicates.

**பி. இ. நூ.**

**முத்து. பெ.** 46

பெண்மகன் என்னும் பெயர் வினை கொள்ளும்
காலதற் குரிய வினையொடு சிவணும்

**இளம்.**

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இனி ஒருசார் உயர்திணைப் பெயர்க்கும் எஞ்சி நின்ற இலக்கணம் கூறுகின்றார்.

உரை ; மகடூஉப் பொருண்மைக்கண் பால்திரிந்து வரும் பெண் மகன் என்னும் பெயர் வினை கொள்ளுமிடத்து மகடூஉவிற்குரிய வினை கொள்ளும், எ-று.

வ-று : பெண் மகன் வந்தாள் என வரும்.

பொருண்மை பற்றி மகடூஉ வினை கொள்ளுமோ, ஈறு பற்றி ஆடூஉ வினை கொள்ளுமோ என்று ஐயுற்றார்க்கு ஐயம் அகற்றியது.

**சேனா.**

இனி ஒருசார் உயர்திணைப் பெயர்க்கும் விரவுப்பெயர்க்கும் எஞ்சி நின்ற இலக்கணம் கூறுகின்றார்.

இ-ள்: மகடூஉப் பொருண்மைக்கண் பால் திரிந்து வரும் பெண்மகன் என்னும் பெயர், வினைகொள்ளுமிடத்து மகடூஉ விற்குரிய வினைகொள்ளும், எ-று.

உ-ம்: பெண்மகன் வந்தாள் எனவரும்.

பொருண்மைபற்றி மகடூஉ வினைகொள்ளுமோ, ஈறுபற்றி ஆடூஉ வினை கொள்ளுமோ என்று ஐயுற்றார்க்கு ஐயம்அகற்றிய வாறு.

'சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல்' என்ப தனால் 'தொழில்வயினான' என்றாராகலின், சிறப்பில்லாப் பெயர் வயினானும் 'பெண்மகன் இவள்' என மரூஉ வியற்கை யாம் என்பதாம்.

**தெய்.**

உயர்திணைப் பெண்பாற்கு உரியதோர் இலக்கணம் உணர்த் துதல் நுதலிற்று.

இ-ள்: மகடூஉ மருங்கின் பால் திரிந்த பெண்மகன் என்னும் சொல் தொழிற்படுங்கால் மகடூஉ இயற்கையாம், எ-று-

உ-ம்: பெண்மகன் வந்தாள் எனவரும்.

**நச்.**

இஃது உயர்திணை ஒழிபு கூறுகின்றது.

இ-ள்: மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி—மகடூஉப் பொருண்மைக்கண் பால்திரிந்து வரும் பெண்மகன் என்னும் பெயர், தொழில்வயினான மகடூஉ இயற்கை—தொழில் கொள்ளுமிடத்து மகடூஉவிற்குரிய தொழில் கொள்ளும், எ-று.

உ-ம்: பெண்மகன் வந்தாள் எனவரும், பொருள் பற்றி முடிபு கூறிற்று.

**கல்.**

என்-எனின், இதுவும் உயர்திணை ஒழிபு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள்: பெண்பாற்குரிய ஈற்றதாய்நில்லாப்பெண்மகன் எனப் பெண்பால் ஆண்பாலாகத் திரிந்து நின்ற சொல் சொற்கு முடிபாக அதன் தொழில் கூறுமிடத்து அப்பெண்பாற் பொருண்மையின் இயல்பிற்று, எ-று,

உ-ம்: பெண்மகன் வந்தாள் எனவரும்.

இதுவும் ஓர் மரபு வழுவமைதி எனக்கொள்க. இதுவும் அந் நீர்மைத்தாகலின் ஈண்டுப்போந்தது எனக்கொள்க.

ஆதி.

†பெண்பால் பெயரோடு மாற்றுப்பால் சேர்ந்தசொல் பெண் பால் வினைகொண்டு முடியும்.

பெண்பிள்ளை ஆடுகிறாள், பாடுகிறாள், படிக்கிறாள்.
பெண்பிள்ளை பள்ளிக்குப் போய்விட்டாள்.
பெண்மகன் கோலம் போடுகிறாள்,
ஆண்பெயர் பெண்பால் வினையுடன் முடிந்துள்ளது.

ஆ—ஓ ஆதல்

**192. ஆவோ வாகும் பெயருமா ருளவே**
**யாயிட னறிதல் செய்யு ளுள்ளே.** (41)

(ஆ ஓ ஆகும் பெயருமார் உள ஏ
அ இடன் அறிதல் செய்யுளுள் ஏ)

---

† உரை பொருந்துமேனும் உதாரணங்களில் 'பெண் பிள்ளை' என்பது பொருந்தாது: பிள்ளை என்பது ஆண் பெண் இளமைப் பெயர். காலப்போக்கில் ஆடவரையும் பெண்டிரையும் உணர்த்தும் பொதுச் சொல்லாயிற்று. இக்காலத்தும் பொதுச் சொல்லாகவே வழங்கப்படு கிறது. தமிழகத்தில் சிலவிடங்களில் பிள்ளை என்பது பெண் என்னும் பொருளிலும் சிலவிடங்களில் ஆண் என்னும் பொருளிலும் பலவிடங்களில் பொதுவிலும் வழங்கப்படுதல் காணலாம், 'பெண்பிள்ளை ஆடுகிறாள்' என்பதில் பெண் என்னும் சொல்லை மாற்றுப்பாற் சொல்லாகக் கொண்டதில்லை (பிள்ளை என்பது விலங்கு, புள், தென்னை முதலியன முதலியவற்றிற்கும் இளமைப் பெயராகும்—சிவ

ஆ மொ: இல.

There are nouns which have 'ā' changed into 'ō'
Such change can be seen in poems.

பி. இ. நூ:
**நேமி. சொ. 37.**

ஆய்ந்த உயர்திணைப்பேர் ஆ ஓவாம் செய்யுளிடை
எய்ந்த நிகழ்காலத் தியல்வினையால்—வாய்ந்த
உயர்திணைப்பால் ஒருமை தோன்றும் விரவுப்பேர்
இயலும் வழக்கி னிடத்து.

**நன். 353.**

பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல்
ஆ ஓ ஆகலும் செய்யுளுள் உரித்தே.

**இல. 326** ஷை ஷை

**முத்து. பெ. 47,**

பாப்பினுள் ஆ ஓ வாகலும் உளவே.

## இளம்.

உரை: ஆகாரம் ஓகாரமாய்த் திரியும் பெயரும் உள, அத் திரியும் இடம் அறிக செய்யுளுள்ளே, எ-று.

வ-று. "வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவும் சிலம்பே நல்லோர்
யார்கொல் அளியர் தாமே" (குறுந். 7)

என வரும்.

## சேனா.

இ-ள்: ஆகாரம் ஓகாரமாய்த் திரியும் செய்யுளும் உள: அத் திரியும் இடம் அறிக செய்யுளுள், எ-று.

உ-ம்: [1] வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவும் சிலம்பே நல்லோர்

---

1. பொருள்; வில்லுடைய இவ்விளைஞனின் கால்களில் கழல்கள் கட்டப்பட்டுள்ளன; தொடியணிந்தவளாகிய இப் பெணணின் மெல்லிய கால்களின் மேல் கிடப்பன

யார்கொல் அளியர் தாமே ஆரியர்
கயிறாடு பறைபிற் கால் மொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயில் அழுவம் முன்னி யோரே (குறுந் 7)

எனவும்,

[2]கழனி நல்லூர் மகிழ்நர்க்கென்
இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே (நற். 70)

எனவும் ஆகாரம் ஒகாரமாய்த் திரிந்தவாறு கண்டு ஜொள்க.

ஆன் ஆள் ஆர் ஆய் என்னும் ஈற்றவாகிய பெயர் அல்லது, சேரமான், மலையமான் என்னுந் தொடக்கத்தன அவ்வாறு திரியாமையின், 'ஆயிடனறிதல்' என்றார்.

உழாஅன், கிழாஅன் என்பனவோ வெனின், அவை [3]அன்னீற்றுப் பெயர் ஒருமொழிப் புணர்ச்சியான் அவ்வாறு நின்றனவென்பது. ஆனீறாயவழி, உழவோன், கிழவோன் எனத் திரியுமாறறிக.

---

சிலம்புகளாம் : பார்வைக்கு நல்ல குடியிற் பிறந்தார் போல் தோன்றும் இவர்கள் யாரோ? யாராயிருந் தாலும் இரக்கம் காட்டத் தக்கவர். ஆரியக் கூத்தாடி கள் கயிற்றில் ஏறி ஆடும் போது முழக்கப்படும் பறை யோசை போல, மேல் காற்று மோதுதலால் கலங்கி வாகையினது வெண்மையான நெற்றுகள் ஒலித்தற்கு இடமாகிய மூங்கில்கள் அடர்ந்த பாலை நிலத்தில் செல்லக் கருதிச் செல்வார் இவர்.

2. பொருள் : ''வயல்கள் சூழ்ந்த நல்ல ஊரில் இருக்கும் என் காதலர்க்கு என் அணிகலன்கள் உடல் மெலிவ தால் கழலுமளவிற்கு யான்படும் துன்பத்தை இது இதுவரையிலும் சொல்லாதிருக்கும் குருகே''

3. அளபெடைப் பெயரே அளபெடையில' (விளி மரபு. 18) என்னும் சூத்திரத்தில் ஆன்ஈறாகக் கொண்டவர் இங்கு அன்னீறாகக் கொண்டது மாறுபாடுடையது. உழாஅன் என்பது (உழ+அன்) அளபெடையியற் பெயர் எனக் கொண்டு அன் ஈறாகவும், உழவன் என்பது உழ+அன் → உழ + ழ+ன் → உழ + வ் + ஆன் → உழவான் எனத் திரிந்ததால் ஆன் ஈறாகவும் கொண்டு இவ்வாறு எழுதினார் எனக் கொள்க—சிவ.

## தெய்.

இஃது ஒருசார் பெயர்க்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : ஆகாரம் ஓகாரமாய்த் திரியும் பெயரும் உள ; அவ்வாறு வரும் இடம் செய்யுளகத்து அறிந்து கொள்க, எ-று.

உ-ம் : வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவும் சிலம்பே நல்லோர்
யார்கொல் அளியர் தாமே (குறுந். 7)

என்றவழி வில்லான், தொடியாள், நல்லார் என்பன ஓகாரம் பெற்று வந்தன.

உம்மை எச்சவும்மையாகலான் அகரம் ஓகாரமாகத் திரியும் பெயரும் உள என்றவாறு. கிழவன் கிழவள் என்பன நாடு கிழவோன் (பொருந. 248) கிழவோள்தேத்து எனவும் வரும். அஃறிணைப் பொருட்கண்ணும் இவ்வாறுவருவன அறிந்து கொள்க;

## நச்.

இது பெயரீறு செய்யுளுள் திரியும் என்கின்றது.

இ-ள்: ஆ ஓ ஆகும் பெருருமார் உள—ஆகாரம் ஓகாரமாய்த் திரியும் பெயரும் உள, ஆ இடன் அறிதல் செய்யுளுள்ளே—அத் திரியும் இடம் அறிக செய்யுளுள், எ-று.

உ-ம் : "வில்லோன் காலன கழலே, தொடியோள் மெல்லடி மேலவும் சிலம்பே, நல்லோர்யார் கொல் அளியர் தாமே" (குறுந். 7), கழனி நல்லூர் மகிழ்நர்க்கென் இழை நெகிழ் பருவரல் செப்பா தோயே" (நற். 70) என வரும்.

அழாஅன், கிழாஅன் என்னும் அளபெடைப் பெயர் அளபெடுத்தால் ஆ ஓவாகா.

## கல்.

என்-எனின், இது பெயரீறு செய்யுளுள் திரியும் என்பது உணர்த்தல் நுதலிற்று.

இ-ள் : ஆகாரம் ஓகாரமாகி நிற்கும் பெயரும் உள ; அவ் விடங்களை அறிக செய்யுளிடத்து, எ-று-

உ-ம் : 'வில்லோன் காலன கழலே' எனவும், 'தொடியோள் மெல்லடி மேலவும் சிலம்பே' எனவும் வரும்.

ஆயிடனறிதல் என்பதனால் ஆகாரமாதற்கு ஏலாத வழியே ஓகாரம் ஆவது இயல்பு எனக் கொள்க.

இனிக் கிழவோன் என்பது ஆகாரமாக வழக்கின்மையின் அது செய்யுள் விகாரம் அன்று; இயல்பாகிய ஈறு எனக் கொள்க.

இதுவும் செய்யுள் மரபு வழூவமைதி எனக் கொள்க.

ஆதி.

உ-ம் : நல்லாரே கேண்மின் — நல்லோரே கேண்மின்.
பெரியாரே வருக — பெரியோரே வருக.
கிழவா — கிழவோய்.

பி. கு.

முத்துச் சண்முகன்

ஆன் விகுதி போலவே ஓன் விகுதியும் உண்டு எனக்கொண்டு முத்துச் சண்முகன் கூறுவது வருமாறு:-

இரண்டு பேரும் (தொல்காப்பியர், நன்னூலார்) அகர ஆகாரத்தை முதலாகவுடைய விகுதிகளைக் கூறுகின்றனர். ஆனால் ஓகாரத்தை முதலாகவுடைய விகுதிகளைத் தனிவிகுதி களாகக் கூறவில்லை. ஆ ஓ ஆயிற்று என்கின்றனர். தொல்காப் பியர் ஆ ஓவாதல் பெயரில் நிகழும் என்கின்றார். ''ஆ ஓவாகும் பெயருமாருளவே, ஆயிடன் அறிதல் செய்யு ளுள்ளே.'' எனவே தொல்காப்பியர் ஓன் முதலியன வினையாலணையும் பெயருக் குரியன என்ற பழந்தமிழ் இயல்பை யுணர்ந்து அதற்கு இலக் கணம் கூறினார் என்று கூறத்தோன்றும். ஆனால் அவர் வினை முற்றுக்குரிய ஆன் ஆள் ஆர் ஆய் என்பன முறையே ஓன், ஓள், ஓர், ஓய் எனச் செய்யுளுள் மாறும் என்று கூறுகின்றார்-

பாலறி மரபின் அம்மூ வீற்றும்
ஆ ஓவாகுஞ் செய்யு ளுள்ளே (சொல். 211)

ஆயென் கிளவியும் அவற்றொடு கொள்ளும் (செய் 212)

நன்னூலாரும் இம்மாற்றம் பெயரிலும் வினையிலும் நிகழும் என்கின்றார்.

பெயர்வினையிடத்து ன ள ர ய ஈற்றயல்
ஆ ஓ வாகலும் செய்யுளுள் உரித்தே (நன். 353)

ஆனால் இதற்கு உரை கண்டார் அனைவரும், இம்மாற்றம் வினையாலணையும் பெயர்க்கண்ணேயே பெரும்பாலும் வரும் என்று கண்டு கூறினர்.

தொல்காப்பியர் ஒன் முதலிய விகுதிகள் பெயரிலும் வினையிலும் வரும் என்கின்றார். சங்க இலக்கியத்தில் ஒன் முதலியன வினையாலணையும் பெயருக்கே சிறப்பாக வருகின்றன. எனவே (1) தொல்காப்பியர் தனக்கு முன்பு இருந்த இந்த நிலையைக் கூறாது விட்டிருத்தல் வேண்டும். (2) இன்றேல் தொல்காப்பியத்திற்குப் பின்பு சங்க இலக்கியத்திற்கு முன்பு இந்நிலை தோன்றியிருத்தல் வேண்டும். (இக்காலத் தமிழ் பக். 128, 129.)

செய்யுளுள் விரவுப் பெயர்

**193. இறைச்சிப் பொருள்வயிற் செய்யுளுட் கிளக்கு**
**மியற்பெயர்க் கிளவி யுயர்திணை சுட்டா**
**நிலத்துவழி மருங்கில் தோன்ற லான** (42)

(இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுள் கிளக்கும்
இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கில் தோன்றலான் அ)

## ஆ. மொ: இல.

The nouns which belong to both high class and non-class ('uyarthiṇai' and 'aḵ riṇai') will not denote high clasl when used in poetry to denote things of 'ṛaicci'

## இளம்.

உரை: செய்யுளுள் கருப்பொருண்மேற் கிளக்கப்படும் இருதிணைக்கும் உரிய விரவுப் பெயர்கள் உயர்திணை உணர்த்தா, அவ்வந்நிலத்துவழி அஃறிணைப் பொருளாய் வழங்கப்பட்டு வருதலான், எ-று.

வ-று: "கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு
வதுவை வந்த வன்பறழ்க் குமரி"

என்புழிக் கடுவன் முதுமகன் குமரி என அஃறிணைப் பொருளவாயல்லது நிலத்துவழி மருங்கின் தோன்றாமையின் உயர்திணை சுட்டாதவாறு கண்டு கொள்க.

நில்மாவன முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்பன.

## சேனா.

இ-ள்: செய்யுளுட் கருப்பொருண்மேற் கிளக்கப்படும் இருதிணைக்கும் உரிய பெயர் உயர்திணை உணர்த்தா; அவ்வவ்

நிலத்துவழி அஃறிணைப் பொருளவாய் வழங்கப்பட்டு வருத லான், எ—று.

உ-ம்: ''கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு
வதுவை யயர்ந்த வன்பறழ்க் குமரி''

என்புழிக் கடுவன் மூலன் குமரி என்பன அஃறிணைப் பொருளவா யல்லது நிலத்துவழி மருங்கிற் றோன்றாமையின் உயர்திணை சுட்டாதவாறு கண்டு கொள்க.

நிலமாவன முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்பன.

அஃதேல், இவை உயத்திணை உணர்த்தாவாயின் அஃறி ணைப் பெயரேயாம்; ஆகவே இச்சூத்திரம் வேண்டா பிற வெனின், அற்றன்று; கடுவன் மூலன் என்பன அன்னீறு ஆண்மை யுணர்த்துமன்றே; அஃறிணைப் பெயர் அவ்வீற்றான் அப்பொரு ளுணர்த்தாமையின் அவை விரவுப் பெயரேயாம் என்பது. அலவன் கள்வன் என்பனவோ எனின், அவை சாதிப்பெயர் எனப் படுவதல்லது ஆண்மைப் பெயர் எனப்படா வென்க. குமரி யென்பது வடமொழிச் சிதைவாய் வடமொழிப் பொருளே உணர்த்தலின் விரவுப் பெயரேயாம்.

## தெய்.

ஒரு சார் இயற்பெயர்க்கு உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று,

இ-ள்: இறைச்சிப் பொருள் என்பது செய்யுளுள் உரைக்கப் படுகின்ற பொருட் புறத்ததாகிய கருப்பொருள். அஃதாவது மாவும் புள்ளும் மரமும் முதலாயின. அவற்றின் மேல் இடுகுறி யாகி வரும் இயற்பெயர் அவற்றின்கண் செய்யுளுள் கிளக்கும் இயற்பெயர்ச்சொல் உயர்திணைப் பொருண்மையைச் சுட்டா; நிலத்துவழித் தோன்றலான், எ-று.

வழியும் மருங்கும் ஒரு பொருட்கண் இருசொல் பிரிவின்றி வந்தன.

என்பது என் சொல்லியவா றெனின், இயற்பெயர் என் பதனை இருதிணைக்கும் பொதுவென ஓதினாராயினும், செய் யுளகத்துக் கருப் பொருள் ஆகி, நிலத்துவழித் தோன்றும் மாவும் புள்ளும் மரமும் முதலாயினவற்றின் மேல் இடுகுறியாகி வரும் இயற்பெயர் அஃறிணைப் பொருண்மையைச் சுட்டுமதல்லது உயர்திணைப் பொருண்மையைச் சுட்டா என எய்தியது விலக்கி யவா றாயிற்று.

செய்யுளகத்து இறைச்சிப் பொருட்கண் தோன்றும் இயற் பெயர் என ஓதல் வேண்டியது அஃறிணைப் பொருட்கண் சாத்தன் கொற்றன் எனவரும் இயற்பெயர் வழக்கின்கண் என்ப தூஉம், செய்யுட்கண், பொருட்பெயராகிய நிலத்துவழித்தோன் றும் பெயரே கூறுதல் வேண்டும் என்பதூஉம் அறிவித்தற்கெனக் கொள்க. அவையாவன மான், மரை, முயல், நாரை, அன்றில், புன்னை, ஞாழல் என்பன.

நச்.

இது விரவுப் பெயர் செய்யுளுள் வரும் முறைமை கூறு கின்றது.

இ-ள் : செய்யுளுள் இறைச்சிப் பொருள்வயின் கிளக்கும் இயற்பெயர்க் கிளவி—செய்யுளுள் கருப்பொருள் கூறும் வழிக் கிளக்கப்படும் இருதிணைக்கும் உரிய பெயர், நிலத்து வழிமருங் கின் தோன்றலான—நால்வகை ஒழுக்கங்களின் இடமாகிய இடத்தே அவற்றிற்கு உறுப்பாய்த் தோன்றலின், உயர்திணை சுட்டா—உயர்திணையை உணர்த்தாது அஃறிணையையுணர்த் தும், எ-று.

உ-ம் ; "கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு, வதுவை யயர்ந்த வன்பறழ்க் குமரி" என்புழிக் கடுவன், மூலன் என்பன, உயர்திணை ஆண்பால் உணர்த்தும் அன்னீற்றுப் பெயர் அஃறிணை ஆண்பாலையும் உணர்த்தி நிற்றலின் விரவுப் பெய ராயினும், ஈண்டுப் பொருட்கு உபகாரப்படும் இறைச்சிப் பொரு ளாய் நிற்றலின் அஃறிணைப் பெயராம். குமரி என்பதூஉம் விரவுப்பெயர்.

கல்.

என்-எனின், செய்யுளிடத்து விரவுப் பெயர் வருவது ஓர் முறைமை கூறுதல் நுதலிற்று.

இ-ள் : அச்செய்யுட்களில் கருப்பொருள் கூறும் வழி கிளக்கப்படும் இயற்பெயராகிய விரவுப் பெயர் உயர்திணை உணர்த்தாது அஃறிணைப் பொருள் உணர்த்தும்; அதற்குக் காரணம் என்னையெனின், அவ்வந் நிலங்களின் இடமாகிய இடத்து அவற்றுக்கு உறுப்பாய்த் தோன்றுதலான், எ-று.

உ—ம்: "கடுவன் முதுமகன் கல்லாமூலற்கு
வதுவை யயர்ந்த வன்பறழ்க் குமரி"

எனவரும். இவை அஃறிணையை நோக்கி நின்றன எனக் கொள்க.

மற்று இவ்விரவுப் பெயர்கள் கருப்பொருள்களுள் அந்நிலத்து மக்கட் பெயராய் உயர்திணை மேல் வரின் என்னை குற்றம் என்றார்க்கு அவ்வம்மக்களை இவ்விரவுப் பெயர்களால் கூறுதல் சான்றோர் செய்யுட்கண் கண்டிலாமையின் அது மரபு அன்று என்றார் எனக்கொள்க.

வெள்.

இஃது ஒருசார் இயற் பெயர்க்கு உரியதோர் மரபு உணர்த்து கின்றது. எய்தியது விலக்கியதுமாம்.

இ—ள்: செய்யுளுட் கருப்பொருள்மேற் கிளக்கப்படும் இருதிணைக்குமுரிய இயற்பெயர் உயர்திணை யுணர்த்தா: அவ்வந்நிலத்துவழி அஃறிணைப் பொருளவாய் வழங்கப்பட்டு வருதலான், எ—று.

இறைச்சிப் பொருள் என்பது செய்யுளிற் கூறப்படும் அகன் ஐந்திணைக்குரிய மாவும் புள்ளும் முதலாகிய கருப்பொருள். இயற்பெயர்க்கிளவி என்றது, அக்கருப்பொருள்களைக் குறித்து இடுகுறியாகி வழங்கும் பெயரை. நிலமாவன முல்லை குறிஞ்சி மருதம நெய்தல் என்பன. இயற்பெயர் என்பதனை இருதிணைக் கும் பொதுவென ஓதினாராயினும் செய்யுளகத்துக் கருப் பொருளாகி முல்லை முதலிய நிலத்து வழித்தோன்றும் மாவும் புள்ளும் மரமும் முதலாயினவற்றின்மேல் இடுகுறியாகி வரும் இயற்பெயர் அஃறிணைப் பொருளைச் சுட்டுவதல்லது உயர் திணைப் பொருண்மையைச் சுட்டமாட்டா என எய்தியது விலக்கியவாறு.

உ—ம்: ''கடுவன் முதுமகன் கல்லாமூலற்கு
வதுவை யயர்ந்த வன்பறழ்க் குமரி''

என்புழி, கடுவன், மூலன், குமரி என வரும் விரவுப் பெய ராகிய இயற்பெயர்கள் அஃறிணைப் பொருளவாயல்லது அந்நிலத்துவழி வழங்காமையின் அவை உயர்திணை சுட்டாமை கண்டு கொள்க. கடுவன், மூலன் என்னும் பெயர்களில் ஆண் பாலுணர்த்தும்அன்னீறும், குமரி என்பதில் பெண்பாலுணர்த்தும் இகரவீறும் அமைந்திருத்தலானும் இங்ஙனம் ஆணையும் பெண்ணையும் வரைந்துணர்த்தும் தன்மை அஃறிணைக்கின்மை யானும் இவை அஃறிணைப் பெயராகாது இருதிணைக்கும் உரிய பொதுப் பெயராதல் புலனாம், அலவன், கள்வன் என்பன னகர

வீற்றனவாயினும் அவை ஆண்பாலுணர்த்தாது நண்டு என்னும் இனத்தையுணர்த்தி நிற்றலின் அஃறிணைப் பெயராவதன்றி விரவுப் பெபராகாமை யுணர்க.

## ஆதி.

செய்யுளில் இறைச்சிப் பொருள்பற்றி வரும் இயற்பெயர் உயர்திணையாக இருத்தலாகாது. குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் நிலஞ்சார்ந்த அஃறிணைக் கருப்பொருளாக இருப்பன வாம்.

ஈண்டு இறைச்சிப் பொருள் என்பது யாது? ''இறைச்சி தானே பொருட்புறத் ததுவே'' (பொருளியல் 35) என்பது சூத்திரம். அகப்பொருளில் தான் கூறவேண்டிய பொருளை அதற்குப் புறம்பான பொருள்கொண்டு அறிவிப்பது என்பது பொதுவான பொருள் புறத்ததான அப்பொருள் தனித்த ஒரு குறிப்புப் பொருள் தந்து நிற்பின் இறைச்சியாம். அது பெரிதும் வன்மொழியாகும். (ஆறுதல் மொழியும் இறைச்சியாம்).

தலைவன் கற்பில் ஐயுற்ற தலைவி அவனைக் கடியச் ''சிலருக்கு வீட்டுக்கரும்பு கசக்கிறது; வெளிவேம்பு இனிக்கிறது'' என்று கூறுகிறாள். இது உள்ளுறை உவமம் எனப்படும், காரணம் பொதுப்பட நிற்பதனால். அவ்வாறன்றி 'வீட்டுக்கரும்பை நீக்கி வெளிவேம்பைச் சுவைக்கின்ற இவர்'' என்று குறித்துக் கடிந்து கூறின் இறைச்சி.

> அகன்மலியூடல் அகற்சிக் கண்ணும்
> வேற்றுமைக் கிளவி தோற்றவும் படுமே (கற்பியல் 18)

அகப்பொருளிற் சிறந்தஉரு தலைவி. சிறந்த இன்பம் ஊடல். ''ஊடல் காமத்துக்கு இன்பம்''. தலைவியால்அல்லது தலைவிக்கு ஊடல் காலத்தில் உரைக்கப்படுவது இறைச்சி. இறை—தலைமை இறைச்சி—தலைமையாயது என்பது எம்கருத்து.

இறை—இறைச்சி;பேய்—பேய்ச்சி, தாய்—தாய்ச்சி, காக்கா—காக்காச்சி, தடிச்சி, முலைச்சி, வலைச்சி, புலைச்சி போன்று இறைச்சியினும் பெண்மைச் சாயல் கருதற்பாலது; தலைவிக்கே யுரியது இறைச்சி.

(இறை—தலைமை) இக்கடிதல் முறை அந்தந்த நிலத்துக் கருப்பொருளை உவமித்தே கூறுதல் வேண்டும். உயர்திணைத் தனி ஒருவரைச் சுட்டி உவமித்தலாகாது.

194. திணையொடு பழகிய பெயரலங் கடையே (43)
(திணையொடு பழகிய பெயர் அலங்கடை ஏ)

ஆ. மொ. இல.

These nouns exclude those associated with the regions (so the nouns which are associated with the regions traditionally may denote both high class and non class)

இளம்.

உரை ; கருப்பொருள் உணர்த்தும் விரவுப் பெயர் உயர் திணை சுட்டாது, அஃறிணை சுட்டுவது அவ்வத்திணைக்குரிய வாய் வழங்கப்பட்டு வரும் பெயரல்லாத விடத்து, எ-று.

எனவே, திணைக்குரியவாய் வழங்கப்பட்டு வரும் பெயர் இரு திணையும் சுட்டி வரும் என்பதாம்.

வ-று : காளை, விடலை என்பன உயர்திணையினும்' அஃறிணையினும் வருமாதலின் விரவுப் பெயராயிற்று. பிறவு மன்ன.

ஐந்தாவது பெயரியல் முற்றிற்று.

சேனா.

இ-ள் : கருப் பொருளுணர்த்தும் விரவுப் பெயர் உயர் திணை சுட்டாது அஃறிணைசுட்டுவது அவ்வத்திணைக்குரியவாய் வழங்கப்பட்டு வரும் பெயரல்லாத விடத்து, எ--று.

எனவே, திணைக்குரியவாய் வழங்கப்பட்டுவரும் பெயர் இரு திணையும் சுட்டி வரும் என்பதாம். திணையொடு பழகிய விரவுப் பெயராவன காளை, விடலை என்னுந் தொடக்கத்தன.

உ-ம் : ''செரு மிகு மொய்ம்பிற் கூர் வேற்காளை'' (நற். 148) எனவும், ''திருந்து வேல் விடலையொடு வரும் எனத் தாயே'' (அகம் 195) எனவும் உயர்திணை சுட்டி வந்தவாறு கண்டு கொள்க.

இவை உயர்திணைப் பொருள் அன்றோ எனின், ஓர் எருத் தையும் காளை, விடலை என்ப வாகலின், விரவுப்பெயர் எனவே படும் என்பது.

கடுவன் மூலன் குமரி என்பனவும் கருப்பொருளுணர்த்தலின் திணையொடு பழகிய பெயராம்பிறஎனின், அற்றன்று: விலங்கும்

புள்ளும் முதலாகிய பொருள் உள்வழியெல்லாம் அவற்றிற்குரிய பெயர் செல்வதல்லது, பொருளுண்டாயினும் இந்நிலத்து இப் பொருள் இப்பெயரால் வழங்கப்படா என்னும் வரையறை யில்லை. தலைமக்கள் எந்நிலத்தும் உளராயினும் பாலை நிலத்துக் காளை மீளி என்னும் பெயர்செல்லா மருதநிலத்து: மருதநிலத்து மகிழ்நன், ஊரன் என்னும் பெயர் செல்லா பாலை நிலத்து. அதனாற் பொருள் வகையானன்றிப் பெயர் தந் திணைக்குரிமை பூண்டு நிற்றலின், அவற்றைத் 'திணையொடு பழகிய பெயர்' என்றார் என்பது.

பெயரியல் முற்றிற்று.

தெய்.

எய்தியது ஒரு மருங்கு விலக்குதல் நுதலிற்று.

இ-ள்: மேல் உயர்திணையைச் சுட்டா என ஓதப்பட்டன அவ்வாறு வருதல், உயர்திணையோடு பழகிப் போந்த பெயர் அல்லாத விடத்து, எ-று.

எனவே பழகிப் போந்த பெயர் இருதிணைக்கும் பொதுவாகி நிற்கும் என்று கொள்க, அவையாவன யானை, சிங்கம், அன்னம், மயில், மாலை என இவ்வாறு வருவன.

பெயரியல் முற்றிற்று.

நச்.

இஃது எய்தியது விலக்கிற்று.

இ-ள்: திணையொடு பழகிய பெயர் அலங்கடையே—கருப் பொருள் உணர்த்தும் விரவுப்பெயர் உயர்திணை சுட்டாது அஃறிணை சுட்டுவது திணைதோறும் உரிமை பூண்டு வழங்கப் பட்டு வரும் பெயர் அல்லாத இடத்து, எ—று.

எனவே, திணைதோறும் உரிமை பூண்டு வழங்கப்பட்டு வரும் பெயர், உயர்திணையும் சுட்டி வரும் என்பதாம்.

உ-ம்: "அவளும், செருமிகு மொய்ம்பிற் கூர்வேற்காளை யொடு" (நற். 184) "திருந்துவேல் விடலையொடு வருமெனத் தாயே" (அகம் 195) என வரும். ஓர் எருத்தையும் காளை விடலை எனப்படுதலின் விரவுப் பெயராயிற்று.

பெயரியல் முற்றும்

**கல்.**

என்-எனின், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

இ-ள்: செய்யுளுள் உயர்திணை உணர்த்தாது நிற்பது இவ்வைந்திணையோடும் அடிப்பட்டு அவ்வைந்திணையுடையானது உடைமைக் கிழமை உணர்த்தி நிற்கும் பெயர் அல்லாத இடத்துக் கண்ணே; ஆண்டாயின் உயர்திணையை உணர்த்தும், எ—று.

'கழனி ஊரன்' என்பது போல்வன செய்யுட்கண் இறைச்சிப் பொருட்டாய் வந்தும் உயர்திணையை நோக்கியவாறு கண்டு கொள்க.

மேல் உயர்திணை சுட்டா என்றது விரவுப் பெயர்க்கு அன்றே; இவை உயர்திணைப் பெயர் ஆயினமையின் எய்தியது வில...திணை சுட்டா என்று ஒழிவதன்றி 'நிலத்துவழி மருங்கிற் றோன்றலான' என்று காரணம் கூறினமையின் உயர்திணைப் பெயரானவற்றிற்கும் இவ்விதி எய்தும் கொல்லோ என்று மாணாக்கன் ஐயுறுவானாயினு......று போலும்.

ஐந்தாவது பெயரியல் முற்றிற்று.

**வெள்.**

இஃது எய்தியது ஒருமருங்கு விலக்குகின்றது.

இ-ள்: கருப்பொருளுணத்தும் விரவுப் பெயர் உயர்திணை சுட்டாது அஃறிணையைச் சுட்டுதல் அவ்வத்திணைக்குரியவாய் வழங்கப்பட்டு வரும் பெயரல்லாதவிடத்து, எ—று. எனவேதிணையொடு பழகி வழங்கப்பட்டு வரும் விரவுப்பெயர் இருதிணையும் சுட்டி வரும் என்பதாம்.

உ-ம்: ''செருமிகு முன்பிற் கூர்வேற் காளை'' எனவும் ''திருந்துவேல் விடலையொடு வருமெனத்தாயே'' எனவும் உயர்திணை சுட்டி வந்தவாறு காண்க. காளை, விடலை என்னும் தொடக்கத்தன பொருள் வகையானன்றிப் பாலை முதலிய நிலத்துக்கு உரிமை பூண்டு நிற்றலின் திணையொடு பழகிய பெயர் எனப்பட்டன.

**ஆதி.**

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் திணையோடுஉற்று இனப் பெயரன்றி உயர்திணைத் தனிப்பெயரைக் குறிப்பதில்லை.

குறிஞ்சித் திணையொடு பழகிய வேடர், வெற்பர்
முல்லைத் திணையொடு பழகிய ஆயர், இடையர்
மருதத்திணையொடு பழகிய உழவர், நாடர்
நெய்தல் திணையொடு பழகிய பரதவர், மீனவர்

இத்தகைய உயர்திணைப்பெயர் இறைச்சிப் பொருளில் வரலாமே யன்றித் தனிப்பெயர்வரலாகாது.

வேடன் முயலைப் பற்றியவன் இப்போது மானைத் துரத்துகிறான், பசுமெலிந்தால் புல்வைப்பதன்றி வேறு ஒரு பசு கொள்ள இடையன் எண்ணுகிறான். நாற்று நடுகையில் கொக்குபோல் நாடன் உறுமீனுக்குக் காத்திருக்கிறான். வாளைக்கும் இறாலுக்கும் வேறுபாடறியா மீனவன்.

இவ்வாறு உயர்திணை இனப்பெயரால், பொதுப்பெயரால் இறைச்சிப்பொருள் கற்பித்தல்வேண்டும். தனித்த ஒரு பெயரால் கூறலாகாது.

முற்றியது.

பி.கு.
சிவ.

''இறைச்சிப் பொருள்வயின்'' ''திணையொடு பழகிய'' என்னும் இவ்விரு சூத்திரங்களையும் இணைத்து விளக்கம் காணலாம்.

உயர்திணைக்கும் அஃறிணைக்கும் வழங்கப்படும் சில பொதுப் பெயர்கள் (இயற் பெயர்கள்) உலக வழக்கின்றிச் செய்யுள் வழக்கில் எவ்வாறு வழங்கப்படும் என்பதைக் குறிப்பன அச்சூத்திரங்கள்.

கடுவன், மூலன், குமரி, காளை, மீளி, விடலை முதலிய பெயர்கள் இருதிணைப் பொதுப் பெயர்கள். கடுவன், மூலன், என்பன உயர்திணை ஆண்பாலுக்குரியன ; குமரி என்பது உயர்திணைப் பெண்பாலுக்குரியது. (னகர ஈறும் இகர ஈறும் உயர்திணைக்குரியன) அப்பெயர்களே குரங்கின் ஆண் பெண்களுக்கும் வழங்கப்படும். (இங்கு னகர வீறு இகர வீறு கருதப்படா) இம்மூன்று பெயர்களும் அகப்பொருள் பற்றிய செய்யுளில் ஆளப்படும் போது பொதுப் பெயராகா ; அஃறிணைப் பெயராகும். ஏன் எனின் அகப் பொருட் செய்யுள்கள் ஐவகை நிலங்களைக் கொள்ளும். குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்பன அந் நிலங்கள். அந்தந்த நிலத்திற்கும் விலங்குகள் உரிமைப்படுத்தப்பட்டுள்ளன. அவ்விலங்குகளின் பெயர் பொதுப்

பெயராக இருந்தாலும் அகப் பொருட் செய்யுளில் நிலத்தொடர் பாக வரும்போது அஃறிணைப் பெயராகவே ஆளப்படும், கடுவன் மூலன் குமரி என்னும் பெயருடைய குரங்குகள் குறிஞ்சி நிலத்துக் கருப் பெருள்கள். அதனால் அப்பெயர்கள் செய்யுளில் அஃறிணையைக் குறித்த பெயராக வழங்கப்படுமேயன்றி உயர் திணையைக் குறிக்கும் பெயராக வழங்கப்படா.

காளை, மீளி, விடலை என்னும் பெயர்கள் ஆனினத்துக் கும் மக்களுக்கும் வழங்கப்படுவன. ஆதலின் அவை பொதுப் பெயர்கள். என்றாலும் அகப் பொருள் பற்றிய செய்யுள்களில் அவை ஆளப்படும் போது உயர்திணைப் பெயராகவே ஆளப் படும். ஏன் எனின் குறிஞ்சி முதலிய நிலங்களில் உள்ள மக்களுக்குப் பெயர்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. அதனால் அவை திணைப் பெயர்கள்—திணையொடு பழகிய பெயர்கள் எனப்படும். காளை, மீளி, விடலை என்னும் பெயர்கள் பாலைத் திணை மக்களுக்குரிமைப் படுத்தப்பட்ட பெயர்கள் (மகிழ்நன் என்பது மருதநிலத் திணைக்கு உரிமைப்படுத்தப்பட்ட பெயர் — இப்படிப் பிறவும்) அவை அகப் பொருட் செய்யுட்களில் ஆளப் படும்போது திணையோடு பழகிய மக்கட் பெயராகவே ஆளப் படும். அதனால் அவை உயர்திணையின் பாற்படுமேயன்றி அஃறிணையின் பாற்படா.

எனவே இருதிணைப் பொதுப் பெயர்கள் அகப் பொருள் பற்றிய செய்யுள்களில் ஆளப்படும் போது, அஃறிணைக்கே உரிமைப்படுத்தப்பட்ட பெயர்கள் அதாவது ஒவ்வொரு நிலத் துக்கும் உரிமைப்படுத்தப்பட்ட விலங்குப் பெயர்கள் அஃறிணை யையே சுட்டி வரும். கடுவன், மூலன், குமரிபோல்வன அவை.

உயர்திணைக்கே உரிமைப்படுத்தப் பட்ட பெயர்கள் —அதாவது குறிஞ்சி முதலிய நிலத்து மக்களுக்கே உரிமைப் படுத்தப் பட்ட பெயர்கள் அகப் பொருட் செய்யுட்களில் உயர் திணையையே சுட்டிவரும். காளை, மீளி, விடலை போல்வன அவை.

எனவே அகப்பொருட் செய்யுட்களில் கடுவன், மூலன், குமரி காளை, மீளி, விடலை போலும் இருதிணைப் பொதுப் பெயர் கள் திணைமக்கள் பெயராக வரும்போது மட்டும் உயர்திணை யைக்குறிக்கும், அல்லாதபோது உயர்திணையைக் குறிக்காமல் அஃறிணையையே குறிக்கும் எனக்கொள்ளலாம்.

இவ்வாறுகொண்டு இவ்விரு சூத்திரங்களின் பொருளைக் காண்போம்.

செய்யுளுட் கிளக்கும்—அகப் பொருட் செய்யுட்களில் சொல்லப் படும்,

இறைச்சிப் பொருள் வயின்—கருப் பொருள்கள் மேல் வருதற்குரிய,

இயற்பெயர்க் கிளவி—பொதுப் பெயர்ச் சொற்கள்,

திணையொடு பழகிய பெயர் அலங்கடை—குறிஞ்சி முதலிய திணைகளோடு பழக வழங்கப்பட்டுவரும் மக்கட் பெயர்கள் அல்லாவிடத்து,

நிலத்து வழி மருங்கில் தோன்றலான—அவ்வந் நிலத்தில் தோன்றிய உரிமை காரணத்தால்,

உயர்திணை சுட்டா—உயர்திணையைச் சுட்டா: அஃறிணையைச் சுட்டிவரும்.

பெயரியல் உரைவளம் முற்றும்.

## பயன்படுத்தப் பெற்ற நூல்கள்


1. தொல்காப்பியம்-சொல்லதிகாரம் இளம்பூரணம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1973.
2. தொல் - சொல் - சேனாவரையம் கு. சுந்தரமூர்த்தி தெற்குவீதி, திருப்பனந்தாள் 1966.
3. தொல்-சொல்-தெய்வச்சிலையார், சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை 1979.
4. தொல-சொல்-நச்சினார்க்கினியம், சைவசித்தாந்தநூற் பதிப்புக் கழகம் சென்னை 1974.
5. தொல்-சொல்-கல்லாடம், சைவ...கழகம், சென்னை 1964.
6. தொல் - சொல் - கல்லாடனார் விருத்தி, தமிழ்நாடு அரசினர் கீழ்த்திசைச் சுவடிவெளியீடு. சென்னை 1971.
7. தொல்-சொல்—சேனாவரையம் சி. கணேசய்யர் உரை விளக்கக் குறிப்புகளுடன், வடஇலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், சுன்னாகம், இலங்கை 1955
8. தொல் - சொல் - சேனாவரையம், பூவராகம் பிள்ளை விளக்கத்துடன், சைவ...கழகம், சென்னை 1970.
9. தொல்-சொல்-குறிப்பு, பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி யார், கணேச சாஸ்திரி 38 பாண்டியன் சந்து, தெப்பக் குளம், திருச்சிராப்பள்ளி 1930.
10. தொல்-நன்னூல்-சொல்லதிகாரம், க.வெள்ளைவாரண னார் 142. கனகசபை நகர், சிதம்பரம் 1971.
11. தொல்-சொல்-ஆதித்யம் C. L. S. கிறித்துவ இலக்கிய சங்கம், பூங்கா நகர், சென்னை 1971.
12. இலக்கணத்தொகை, ச.வே.சுப்பிரமணியன், ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், கோர்ட்டு ரோடு, நாகர்கோயில் 1. 1971.
13. காப்பிய நெறி—சொல்லியல் தே. ஆண்டியப்பன், முத்தும் பதிப்பகம் மதுரை 1971.
14. மொழியியல் 1983 அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சிதம்பரம்.
15. இக்காலத்தமிழ், முத்துச் சண்முகன், முத்துப்பதிப்பகம், ஆழ்வார் நகர், மதுரை 1980.
16. Tolkappiyam with critical studies, S. Ilakkuvanar Kural Neri Publishing house, Madurai-6, 1963

# சொல், தொடர் அகராதி

(எண் — பக்க எண்)


அடியார் 71
அடியாள் 71
அடியான் 71
அணியிலக்கணம் 19
அத்தன்மையள் 50
அத்தன்மையன் 50
அத்தன்மையாள் 50
அத்தன்மையான் 50
அத்தான் 53
அத்திகோசத்தார் 59, 60, 65
அத்தை 39, 52
அது 74, 75
அதுமன் 7, 29
அந்தணன் 61
அந்தணனைப் பிடித்தான் 61
அந்தணன் 61
அப்பெண்டு 48
அம்பர் — ஓரூர் 59
அம்பர்கிழான் 59, 60, 65
அம்பருடைச்சி 65
அம்மாட்டான் 48, 49, 52
அம்மாள் 52
அம்மை 52
அமைச்சர் 72
அரசர் 59, 60, 62
அரசி 65
அரிவை 52
அருவாட்டி 65
அருவாளன் 58, 60, 64
அவ் 74
அவ்வாட்டி 51
அவ்வாளன் 48, 49, 52
அவ்வை 52
அவள் 29, 35
அவன் 29, 34, 35, 41
அவன் இவன் உவன் 18, 20, 21
அவையத்தார் 59, 60, 61, 65
அழன் 43
அறுபத்துமூவர் 66
அன்னாள் 50
அன்னான் 39, 50
அனையாள் 50
அனையான் 50
ஆ 81, 86
ஆக்கள் 80, 81
ஆக்கி 57
ஆடூஉ 34, 35, 37, 48-50, 52, 54
ஆடையணிகலன் 22
ஆண்மகன் 48-52
ஆய் 128
ஆய்வுக்கோவை 35, 37
ஆயர் 59, 60, 65
ஆவந்தது 85, 86, 87
ஆவந்தன 85, 86, 87
ஆறு போயினார் எல்லாம் கூறை கோட்பட்டார் 90
இடா 21
இடுகுறி 6
இது 74 75
இந்தியப் பளகலைக் கழகத் தமிழாசிரியர்மன்றம் 35 37

இந்நிறத்தன் 52
இப்படியன் 52
இப்பெண்டு 48
இம்மாட்டான் 48, 49, 52
இராமகிருஷ்ணர் 46
இராமாயணம் 4
இயைபின்மை நீக்கல் 134
இலை 86
இவ் 74
இவ்வடிவான் 52
இவ்வாட்டி 51
இவ்வாள் வெட்டுதலைக் கருதியேயிருக்கும் 6
இவ்வாளன் 48, 49, 52
இவ்வுருவன் 52
இவ்வூராரெல்லாம் கல்வி யுடையார் 6
இவன் பசு 20
இவன் நெருப்பு 2
இளையாள் 53
இறிஞி 8
இறை—இறைச்சி 184
உச்சயினி 59
உது 74, 75
உப்பெண்டு 48
உம்மாட்டான் 48, 49, 52
உவ் 74, 75
உவ்வாட்டி 51
உவ்வாளன் 48, 49, 52
உறு 7
உறுகால் 7, 10, 12, 29
ஊரான் 66
எட்டி 69, 70, 71
எந்தை 131 132
எல்லாச்சான்றாரும் 156
எல்லாப் பார்ப்பாரும் 156
எல்லாரும் உண்டும் 159 160
எல்லாம் வந்தன 157
எல்லாம் வந்தார் 154 155
எல்லாம் வந்தீர் 154, 155, 157
எல்லாம் வந்தேம் 154, 155
எல்லேம் 71
எவ் 75
எழுகூறு 29
ஒட்டகம் 81, 84
ஒரு சொல்லடுக்கு 5
ஒருவர் ஆடுகின்றார் 175
ஒருவர் வந்தார் 18, 20, 166, 167, 168, 170, 171
ஒன்றென முடித்தல் 96
ஓதுவார் 66
கங்கை மாத்திரர் 59, 60, 65
கட்சியார் 56
கடல் 80, 81
கடான் 43
கடியென்கிளவி 10, 12, 13
கடுவன் 184-189, 192
கண்ணன்னான் 50
கண்போல்வான் 50
கண்ணிலி 119
கரியது 76 78
கரியன 76
கரியாள் 59, 60, 65
கரியான் 59, 61, 65
கருவிக்கருத்தா 7
கவிமரபாக வந்த இசைநிறை 26
கழனியூரன் 191
கள்ளன் 17, 39
கற்கறித்து நன்கட்டாய் 18, 21
கன்னி 117
கனி 24
காடன் 111
காடி 111
காய் 24
காரணக்குறி 6

கால்சட்டை 57
காவிதி 69—71
கிளவி-பொருள் 40
கிளவித்தலைவன் 4
கிளவியாக்கம் 1 2
குட்டி 57
குட்டுவன் 61, 62, 65
குருடு 9
குடுமியர் 66
குதிரை 81 85
குதிரைகள் 81
குதிரைக் கொம்பு 9
குமரி 184—189 192
குமாரி 52
குயின் 43
குரங்கன் 50
குரங்கி 50
குரிசில் 43
குருட்டுக் கிழங்கள் 121
குருட்டுச் சாத்தன் 121
குருட்டுச் சாத்தி 121
குருடன் 119
குருடி 119 128
குழவி 107, 108, 109, 111
குழையார் 61
குழையாள் 61
குளித்தலை 107
குறியன் 66
கேட்போன் 93
கையிழந்தது 147
கையிழந்தாள் 147
கையிழந்தான் 147
கையுடைய சாத்தன் 105
கொடும்புற மருதி 107, 108, 121, 148
கொடும்புற மருதி வந்தாள் 146—148
கொடும்புற மருதி வந்தான் 146—148
கொம்பன் 148
கொம்புடைய சாத்தன் வரும் 105
கொல்லன் 59, 60
கொல்லச்சி 65
கொற்கைப் பாண்டிநாடு 57
கொற்றன் 7, 107, 108
கோதை 117
கோதை வந்தது 146, 147, 148
கோதை வந்தாள் 146, 147, 148
கோதை வந்தான் 146, 147, 148
கோழி கூவியது 22
கோழி முட்டையிட்டது 20
சங்கரநமச்சிவாயர் 139
சண்முகம், செ. வை. 35, 37, 92, 102, 151
சதுரங்கக்காரர் 66
சந்நியாசி 46
சபையினர் 66
சமீன்தார் 66
சாத்தன் 7, 15, 34, 35, 107, 108, 117
சாத்தன் ஒருவன் 91, 92
சாத்தன் ஒன்று 91, 92
சாத்தன் கிடக்கும் 95
சாத்தன் நடக்கும் 95
சாத்தன் புற்றின்னும் 97, 98
சாத்தன் யாழ் எழுப்பி வரும் 104
சாத்தன் யாழ் எழூஉக 99
சாத்தன் யாழ் எழூஉம் 94, 95, 97, 98 99
சாத்தன் வந்தது 89, 90, 92, 129, 130, 131
சாத்தன் வந்தான் 10, 12, 16, 89, 90, 92, 129, 130, 131
சாத்தனொடுங் கிடக்கும் 99

சாத்தி 117
சாத்தி கன்றீனும் 97, 98
சாத்தி சாந்தரை 103
சாத்தி சாந்தரைக்கும் 94, 95 97, 98, 99
சாத்தி சாந்தரைத்து வரும் 104
சாத்தி வந்தது 125-128
சாத்தி வந்தாள் 125-128
சாந்தரைத்த சாத்தி வரும் 104
சான்றோர் 28
சிந்து 22
சில்லவை 83, 84
சிலம்புள 100
சிவஞான முனிவர் 140
சீத்தலை 107
சீத்தலைச் சாத்தன் 107, 108
சீமான்-சீமாட்டி 39
சுண்ணத்தான் 69-71
சுந்தர மூர்த்தி 96
சுந்தரி (பசு) வந்துவிட்டது 128
சுந்தரி வந்து விட்டாள் 128
சுப்பிரமணியன், ச. வே. 2
சுமையன் 111
சுழித்தலைச் சோம்பேறி 112
செந்தலை 107
செய்கென் எச்சம் 12
செய்தென் எச்சம் 12, 13
செய்யான் 59, 60, 65
செல்வி 52
செவிட்டுச் சாத்தன் 121
செவிடன் 112
செவியிலி 121
செவியிலி வந்தது 146-148
செவியிலி வந்தாள் 146-148
செவியிலி வந்தான் 146-148
சென்மதி 7
சென்னை 57
சேர்ப்பன் 59, 60, 65, 112
சேரமான் 58, 60, 64
சேரலன் 61
சேவகி 72
சொன்மை-சொல்லியல்பு 14
சோழ நாட்டார் 57
சோழன் 61
சோழிச்சி 65
சோழியன் 58, 60, 62
ஞாபக வகை 111
ஞாய் 127
தச்சன் 59, 60
தஞ்சக்கிளவி 10, 12, 13
தஞ்சைவாணன் கோவை 4
தட்டாத்தி 65
தடியன் 112
தந்தை 39, 107, 108, 123, 124
தந்தையர் 59, 60, 62, 65
தந்தை வந்தது 129 - 131
தந்தை வந்தான் 129 - 131
தரையன் 111
தலை முடிந்தது 135
தலை முடிந்தன 113
தலை முடிந்தாள் 135
தலை முடிந்தான் 135
தலைவன் 72
தலைவி 72
தவச்சேய் நாட்டார் 7
தன்னோடியையின்மைநீக்கிய விசேடணம் 149
தாம் வந்தார் 149
தாய் 107, 108, 123, 124
தாய்மார் 62
தாய் வந்தது 125-128
தாய் வந்தாள் 125-128
தாயர் 59, 60, 63, 65
தான் வந்தது 150
தான் வந்தாள் 150

தான் வந்தான் 150
திடா 21
திருக்கோவையார் 4
திரையன் 111
துவைக்கும் 29
துவைத்தல் 29
துறைவன் 122
தூங்கல் 122
தூங்கல் வந்தது 135
தூங்கல வந்தன 135
தூங்கல் வந்தாள் 135
தூங்கல் வந்தான் 135
தூத்துக்குடி 153
தெங்கு 80, 81, 86
தெங்குதின்றான் 18
தெ. பொ. மீ. 52
தெரிவை 52
தொண்டை நாட்டார் 57
தொடியோள் 180, 182
தோழி 43
தோன்றல் 52
நகரத்தான் 66
நங்கை 49, 51, 52, 54
நஞ்சுண்டது சாம் 38-40
நஞ்சுண்டன சாம் 83-40
நஞ்சுண்டார் சாவர் 38-40
நஞ்சுண்டாள் சாம 38-40
நஞ்சுண்டான் சாம் 36-42
ந்டராசன், சு. 152
நம்பி-நங்கை 39, 45, 49, 51, 52, 54
நல்லது 39
நல்லவை 39
நல்லன 39
நல்லாள் 39, 52
நல்லான் 39, 52
நல்லார் 39
நல்லோர் 180, 182
நற்றிணை 10
நன்மை செய்தீர் 20
நாட்டியக்காரர் 66
நாடன் 111
நாடி 111
நாம் 45
நாய் 61 81
நாய்கள் 80 81
நாலிரண்டெட்டு 77
நிலக்கிழார் 66
நிலம் 11
நிலம் நீர் தீவளி 20
நீ அரசன் 173
நீ கடல் 173
நீ குயத்தி 173
நீ தந்த காணம் ஆயிரம் 77
நீயிர் வந்தீர் 168, 162, 165 166
நீ யென் கிளவி 10
நீ வந்தாய் 161 162
நுந்தை 131 132
நெசவாளர் 66
நெடியன் 66
நெடியான் 61
நெடுங் கழுத்தல் 119
நெடுங் கழுத்தல் வந்தது 133—137
நெடுங்கழுத்தல் வந்தன 133—137
நெடுங் கழுத்தல் வந்தாள் 133—137
நெடுங் கழுத்தல் வந்தான் 133—137
நொண்டி 112, 119
நொண்டிக்காற் பெரியவர் 132
பட்டிக்காட்டான் 66
பட்டி புத்திரர் 59, 60, 65
பண்டுகாடுமன் 10
பந்து 22
பயின் 43
பரிமேலழகர் 14

புல்லவை 83, 84
பல்லன் 39
பல்லி 109
பலகை 22
பலா 80 81
பறழ் 109
பாகம்—பொருள் 28
பாட்டுடைத்தலைவன் 4
பாண்டியன் 61
பாணியும் தாளமும் ஒரு
பொருளன 108
பாம்பு 161
பாம்பைப் பிடித்தான் 61
பார்ப்பனி 36 38 65
பார்ப்பார் 59 60 62
பார்ப்பான் 36 37
பிரம்மச்சாரி 46
பிராட்டி 52
பிள்ளை 109
பிறிதின் இயைபு நீக்கல் 134
பிறிதோடியைபு நீக்கிய
விசேடணம் 140
புரவலர் 72
புல்—புல்லரிசி 97
புல்வாய் 8814
புலி 81 84
மாணிக்கவாசகர் 153
மாந்தர் 48, 49, 52
மாமன் 39
மாமி 39
மாமியார் 66
மாறோக்கத்தார் 55, 56, 57
மாறோக்கம்—கொற்கை
சூழ்ந்த நாடு 56
மிஞிறி 8
மீசைக்காரர் 22
முடக்கொற்றன் 121 129-131
முடக்கொற்றன் வந்தான்
129—131
முடக்கொற்றி 121
முடக்கொற்றி வந்தது 125-
128
முடக்கொற்றி வந்தாள் 125-
128
முடத்தி 119
முடத்தி வந்தது 125-128
முடத்தி வந்தாள் 125-128
முடவன் 112, 119
முடவன் வந்தது 89—92, 129-
131
முடவன் வந்தாள் 39, 90, 92
முடவன் வந்தான் 12-131
முடியான் 51
முத்துச்சண்முகன் 182
முதியாள் 111
முயற்கோடு 4, 5, 7, 8
முலை 119
முலையெழுந்தது 126, 127
முற்கூறியதிற் பிற்கூறியது
வலியுறும் 13
மூக்கர் 66
மூத்தாள் 53
மூலன் 184—189 192
மெய்ப்பொருள் 4
மேரிராணி கல்லூரி 22
மேனியெல்லாம் பசலை
பாய்ந்தது 154, 155
மொட்டையன் 132
மொழியியல் 93, 109
மோவாய்—தாடி 119
மோவாய் எழுந்தான் 130
மோவாய் ஏற்றை 130
யாது 74, 75
யாப்புறவு 2
யாம் 45
யாமைமயிர்க் கம்பலம் 4
யாய் 127
யாவ் 75
யாவை 74, 75

யாழ் மூளபிக்ய சாத்தன்வரும் 104
யான் 44, 45
யானை 86, 87, 117
யானைப்போலி 77
யானை வந்தது 133-137
யானைவந்தன 133-137. 140
யானை வந்தாள் 133-137 140
யானை வந்தான் 133-137 140
லயோலா 22
வண்ணத்தான் 69—71
வண்ணாத்தி 65
வணிகர் 59, 60, 62
வந்தது கொண்டு வாராதது முடித்தல் 61
வயான் 43
வயிற்றர் 66
வயிறன் 132
வல்லிகள் 117
வல்லேம் 71
வலைஞர் 66
வாணிச்சி 65
வாய்ப்பாட்டுக்காரர் 66
வாயிலான் 69—71
வாழ்வீராத 20
விக்கிரமாதித்தன் 59
விடலை 43, 52
வில்லி 61
வில்லோன் 180, 182
விளிமரபு 1, 2
வீரன் 52
வெள்ளாட்டிச்சி 65
வெற்பன் 59, 60, 65
வேங்கை 22
வேட்டுவர் 59, 60, 65
வேட்டுவன்—ஒரு புழு 67
வேந்தர் 81
வேலான் 61
வேளாளர் 59, 60, 62
வேறென் கிளவி 12, 13
வேனிலான் 71
பூ 24, 86
பூதம் 11
பூயிலான் 69 70, 71
பூவராகம் பிள்ளை 9, 67, 100
பூழியன் 61, 62, 65
பெண்டு 51, 53
பெண்டுகள் 71
பெண்டாட்டி 34, 35, 43, 45 48, 49, 52
பெண்மகள் 48, 49, 51, 52
பெண்மகன் 34, 35, 41, 55, 56, 57, 177, 178, 179
பெட்டைப் பையன் 57
பெரியாழ்வார் 153
பெருங்கால் யானை 121
பெருங்கால் யானை வந்தன 133, 135, 136, 137,
பெருங்கால் யானை வந்தாள் 133, 135, 136, 137
பெருங்காலர் 59, 60, 65
பெருங்காலன் 107, 108
பெருந்தோளர் 59, 60, 65
பெருமாட்டி 52
பெருமான் 52
பேசுவோன் 93
பேயன்-பேய்ச்சி 39
பேரன்—பேர்த்தி 39
பேரூர் கிழத்தி 65
பேரூர் கிழான் 59, 60, 65
பொய்ப்பொருள் 4
பொருண்மை - பொருளியல்பு 14
பொன்போல்வது 77
பொன்னன்னது 76, 78
பொன்னன்ன 76. 78
பொன்னன்னார் 48, 52
பொன்னன்னாள் 48, 52

பொன்னன்னான் 48, 52
பொன்னனையது 77
பொன்னனையான் 50
போண்டா 138
மக்கள் 35, 48, 49, 52
மக 107, 108, 109, 111
மகள் 35, 48, 52
மகன் 48, 52
மகடூஉ 34, 35, 37
மங்கை 52
மடந்தை 52
மடவரல் 52
மணி 61 112
மணிக்கிராமத்தார் 65
மதி 7
மயில் 9
மயிலை 148
மரம் 87
மரம் — இடுகுறிப் பெயர் 14
மலை 80, 81
மலையமான் 58, 60, 64
மலையன் 111
மலையாட்டி 65
மறுத்தல் என்னும் மதம் 140
மன் 7
மன்றத்தார் 66
மன்னன் — மன்னி 39

# சூத்திர முதற்குறிப் பகராதி

(எண்—பக்க எண்)


அது இது உது 72
அவ்வழி, அவனிவ 43
அவற்றுள், பெயரெனப் 30
,, நான்கேயியற் 112
,, நீயென் 162
அவைதாம், பெண்மையியற் 115
அன்னபிறவு மஃறிணை 82
அன்ன பிறவு முயர் 67
ஆண்மை சுட்டிய 128
ஆண்மையடுத்த 47
ஆவோவாகு 179
இடைச்சொற்கிளவி 26
இயற்பெயர்சினை 106
இருதிணைச் சொற்கும் 88
இருதிணைப்பிரி 34
இறைச்சிப் பொருள் 184
இன்னபெயரே 171
எல்லாச் சொல்லும் 3
எல்லாமென்னும் 153
எல்லாருமென்னும் 54
ஏனைக்கிளவி 164
ஒருமை சுட்டிய வெல்145
ஒருவரென்னும் 166
கள்ளொடு சிவணு 79
சொல்லெனப்படுப 24
தன்மை சுட்டின் 169
தன்னுள்ளுறுத்த 155
தாமென் கிளவி 148
தானென்கிளவி 150
திணையொடு 189
தெரிநிலையுடைய 85
தெரிபுவேறு 16
நிகழூஉ நின்ற 94
நிலப்பெயர் குடிப் 58
நீயிர் நீ யென 160
பல்லபல சில 76
பன்மை சுட்டிய வெல்லா 132
பெண்மைச்சினைப் 118
பெண்மை சுட்டிய சினை 120
பெண்மை சுட்டிய வெல்லாம் 124
பெண்மை முறைப் 122
பொருண்மை தெரி 9
மகடூஉ மருங்கின் 177

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | தமிழர் தோற்கருவிகள் | ... ரூ. 10-00 |
| 2. | தமிழும் தமிழரும் | ... ரூ. 5-00 |
| 3. | தமிழர் எண்ணங்கள் | ... ரூ. 16-00 |
| 4, | தமிழர் அளவைகள் | ... ரூ. 8-00 |
| 5. | உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்? | ... ரூ. 6-00 |
| 6. | தமிழ் இலக்கியக் கொள்கை-7 | ... ரூ. 15-00 |
| 7. | தமிழ் இலக்கியக் கொள்கை-8 | ... ரூ. 20-00 |
| 8. | எண்பத்தொன்றில் தமிழ் | ... ரூ. 65-00 |
| 9. | திவ்வியப்பிரபந்தத்தில் மனம் | ... ரூ. 12-00 |
| 10. | பாரதியார் வாழ்க்கை கொள்கைகள் | ... ரூ. 8-00 |
| 11. | ம. பொ. சி. யின் இலக்கிய நூல்கள் ஓர் மதிப்பீடு | ... ரூ. 20-00 |
| 12. | தொல்காப்பியம் புணரியல் | ... ரூ. 10-00 |
| 13. | தொல்காப்பியம் - தொகை மரபு | ... ரூ. 8-00 |
| 14. | தொல்காப்பியம் - புள்ளிமயங்கியல் | ... ரூ. 15-[illegible] |
| 15. | தொல்காப்பியம் - குற்றியலுகரப்புணரியல் | ... ரூ. 11-[illegible] |
| 16. | தொல்காப்பியம் - வேற்றுமையியல் | ... ரூ. 14-00 |
| 17. | வேற்றுமை மயங்கியல் | ... ரூ. 12-00 |
| 18. | தொல்காப்பியம் - விளிமரபு | ... ரூ. 6-00 |
| 19. | தந்திவனப்புராணம் | ... ரூ. 15-00 |
| 20. | திருமயிலை உலா | ... ரூ. 7-[illegible] |
| 21. | ஊஞ்சல் இலக்கியம் | ... ரூ. 10-[illegible] |
| 22. | மீனாட்சியம்மன் திருப்புகழ் | ... ரூ. 10-[illegible] |
| 23. | வெள்ளைக்காரன் கதை | ... ரூ. 7-00 |
| 24. | சிந்து இலக்கியம் | ... ரூ. 8-00 |
| 25. | மெய்க்கீர்த்திகள் | ... ரூ. 20-00 |
| 26. | பிரபந்த தீபிகை | ... ரூ. 12-00 |
| 27. | திராவிடமொழி இலக்கியங்கள் | ... ரூ. 35-00 |
| 28. | தமிழில் விடுகதைகள் | ... ரூ. 12-00 |
| 29. | இஸ்லாம் வளர்த்த தமிழ் | ... ரூ. 15-00 |
| 30. | தஞ்சைமாவட்ட ஊர்ப்பெயர்கள் | ... ரூ. 12-00 |
| 31. | சித்திரக்கவிகள் | ... ரூ. 25-00 |
| 32. | இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் | ... ரூ. 15-00 |
| 33. | தமிழரின் தாயகம் | ... ரூ. 10-00 |
| 34. | Language and Grammar-Heritage of the Tamils | ... Rs 22-00 |
| 35. | Cultural Heritage of the Tamils | ... Rs. 20-00 |
| 36. | Literary Heritage of the Tamils | ... Rs. 50-00 |
| 37. | Philosophical Heritage of the Tamils | ... Rs. 22-00 |
| 38. | Heritage of the Tamils - Art & Architecture | ... Rs. 25-00 |
| 39. | Epigraphical Evidences for Tamil studies | ... Rs. 10-00 |
| 40. | Papers on Tamil Studies | ... Rs. 15.00 |
| 41. | Tamil Drama | ... Rs. 20-00 |
| 42. | Folk Arts of the Tamils | ... Rs. 10-00 |
| 43. | A Study of Perunkatai | ... Rs. 12-00 |
| 44. | Thiru Murugan | ... Rs. 5-00 |
| 45. | Dr. Mu. Va. | ... Rs. 20-00 |
| 46. | Tamil Research through Journals | ... Rs. 7-50 |
| 47. | Dissertations on Tamilology | ... Rs. 10-00 |
| 48. | Tamil writers Directory | ... Rs. 10-00 |
| 49. | Bibliography on Translations Tamil | ... Rs. 35-00 |
| 50. | Tamil-Text | ... Rs. 25-00 |
| 51. | Heritage of the Tamils-Siddha Medicine | ... Rs. 45-00 |
| 52. | Siddha Medical Manuscripts in Tamil | ... Rs. 8-00 |

Japonica - Dial 441913